(தா-ம்.) இந்த ஜீவன் காணத்தகாதவனும், சிந்திக்கத்தகாதவனும், விகாரத்தை அடையாதவனாகவும் சொல்லப்படுகிறான். ஆனபடியால், இவனை இப்படியாக அறிந்து துக்கிப்பதற்கு நீ தகுந்தவனன்று. (வி.) அவிகார்ய:-விகாரமடையாதவன். (௨௫)

𑌅𑌥 𑌚𑍈𑌨𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌜𑌾𑌤𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌵𑌾 𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 𑌮𑍃𑌤𑌮𑍍 ।
𑌤𑌥𑌾𑌪𑌿 𑌤𑍍𑌵𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌨𑍈𑌵𑌂 𑌶𑍋𑌚𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥

(ப-ம்.) அதச - இல்லாவிட்டால், ஏநம்-இந்த (ஆத்மாவை), நித்ய ஜாதம் - எப்போதும் பிறந்து, நித்யம் ம்ருதம்வா-எப்போதும் இறந்தவனாகவாகிலும், மந்யஸே - மதிக்கிறாயோ, ததாபி - ஆனபோதிலும், மஹாபாஹோ - ஓ பெருந்தோளுடையாய்! த்வம்-நீ, எவம்-இப்படி, சோசிதும்-துக்கிப்பதற்கு, ந அர்ஹஸி-தகாது. (௨௬)

(தா-ம்.) நல்ல கைகளையுடைய அர்ஜ்ஜுனா! இந்த ஆத்வை நித்திய முண்டாகிறவனையும், நித்திய மரணத்தை யடைகிறவனையும், எண்ணுகிறாயோ, அப்படியிருந்தாலும் இதைக்குறித்து நீ துக்கிப்பதற்கு யோக்கியனன்று. (௨௬)

𑌜𑌾𑌤𑌸𑍍𑌯 𑌹𑌿 𑌧𑍍𑌰𑍁𑌵𑍋 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌧𑍍𑌰𑍁𑌵𑌂 𑌜𑌨𑍍𑌮 𑌮𑍃𑌤𑌸𑍍𑌯 𑌚 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌪𑌰𑌿𑌹𑌾𑌰𑍍𑌯𑍇𑌽𑌰𑍍𑌥𑍇 𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌶𑍋𑌚𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥ ௨௭ ॥

(ப-ம்.) ஜாதஸ்ய-பிறந்ததற்கு, ம்ருத்யு: - அழிவு, த்ருவ: - நிச்சயம், ம்ருதஸ்யச - அழிவுற்றதற்கு, ஜந்ம த்ருவம்ஹி-பிறப்

பும் நிச்சயமே ? தஸ்மாத் - ஆகையால், அபரிஹார்யே-பரிஹரிக்கத்தகாத, அர்த்தே - விஷயத்தில், த்வம் சோசிதும் - நீ துக்கிப்பதற்கு, நார்ஹஸி - தகாதவனாயிருக்கிறாய். (உஎ)

(தா-ம்.) பிறப்பவனுக்கோ வென்றால் மரணம் நிச்சயம், மரணத்தை அடைந்தவனுக்கும் பிறப்பு நிச்சயம். ஆகையாலே நீ நீக்கத்தகாத விஷயத்தில் துக்கிப்பதற்கு தக்கவனல்லன். (உஎ)

𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌦𑍀𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌨𑌿𑌧𑌨𑌾𑌨𑍍𑌯𑍇𑌵 𑌤𑌤𑍍𑌰 𑌕𑌾 𑌪𑌰𑌿𑌦𑍇𑌵𑌨𑌾 ॥ உஅ ॥

(ப-ம்.) ஹே பாரத - ஓ பாண்டவா ! பூதாநி - சரீரங்கள், அவ்யக்த ஆதீநி - அறியப்படாத பூர்வ (அவஸ்தையுடையன), வ்யக்த மத்யாநி - புலப்பட்ட நடுவில் நிலையுடையன, அவ்யக்த நிதநாநி ஏவ - புலப்படாத அழிவுடையனவைகளே ! தத்ர-அவ் விஷயத்தில், பரிதேவநா கா - சோக மென்ன ? (உஅ)

(தா - ம்.) பரதவம்சத்திற் பிறந்தவனே! இப்படி முடிவாய்ச் சொல்லியிருப்பதால் இப்படித் தெளிந்த உனக்கு அது நிமித்தம் துக்கம் வேண்டியதில்லை. பிராணிகள் மூலப்ரகிருதியிலே, முதலில் உண்டாய், நடுக்காலத்தில் மனுஷ்யாதி சரீரங்களோடு காணப்பட்டுக் கடைசியில் மூலப்ரகிருதியிலேயே மறைந்திருக்கிறதுகள்.அது விஷயத்தில் என்ன துக்கம். (ஶம்-ரா) அவ்யக்தாதீநி - பிறவிக்கு முன் காணப்படாதது. (உஅ)

𑌆𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌵𑌤𑍍𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍇𑌨𑌮𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌵𑌦𑍍𑌵𑌦𑌤𑌿 𑌤𑌥𑍈𑌵
𑌚𑌾𑌨𑍍𑌯𑌃 । 𑌆𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌵𑌚𑍍𑌚𑍈𑌨𑌮𑌨𑍍𑌯𑌃 𑌶𑍃𑌣𑍋𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾𑌪𑍍𑌯𑍇
𑌨𑌂 𑌵𑍇𑌦 𑌨 𑌚𑍈𑌵 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 ॥ உகூ ॥

(ப-ம்.) ஆச்சர்யவத் - ஆச்சரியம்போல் (இருக்கிற) ஏநம் - இவனை, கச்சித் பச்யதி - ஒருவன் பார்க்கிறான்; ததைவச - அப்படியே, அந்ய: - மற்றொருவன், ஆச்சர்யவத் - ஆச்சிரியமான, (இவனை) வததி - சொல்லுகிறான், ஆச்சர்யவத்-ஆச்சரியம்போலிருக்கும், ஏநம் - இவனை, அந்ய: கச்சித் ஏவ-எவனோ ஒருவன்தான், ச்ருணோதி - கேட்கிறான்; கச்சித் ச - ஒருவனும், ஏநம் - இவனை, ச்ருத்வாபிச - கேட்டும், நவேத ஏவ - அறியவேயில்லை. ()

(தா-ம்.) இந்த ஆத்ம சுவபாவத்தை ஒரு புண்ணியசாலியானவன் ஆச்சரியம்போல் பார்க்கிறான். இந்த ஆத்மாவை மற்றொருவன் அயலாருடன் ஆச்சரியம்போலப் பேசுகிறான். அப்படியே வேறொருவனும் ஆச்சரியம்போல்கேட்கிறான். அப்படிக் கேட்டும் இந்தஜீவனை தத்வமாய் அறிந்தவன் ஒருவனுமில்லை. ()

𑌦𑍇𑌹𑍀 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌵𑌧𑍍𑌯𑍋𑌽𑌯𑌂 𑌦𑍇𑌹𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌭𑌾𑌰𑌤 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌶𑍋𑌚𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥ ௩௦ ॥

(ப-ம்.) ஹேபாரத - ஓ அர்ச்சுன! ஸர்வஸ்ய தேஹே-எல்லாருடைய தேஹத்திலும், (இருக்கிற) அயம்தேஹீ - இவ்வாத்மா, நித்யம் - எப்போதும், அவத்ய: - கொல்லத்தகுந்தவனல்லன், தஸ்மாத் - ஆகையாலே, ஸர்வாணி பூதாநி ப்ரதி - ஒருப்பிராணிகளைக் குறித்தும், த்வம் சோசிதும்-சோகிக்க, நார்ஹஸி-தகாதவனாயிருக்கிறாய். (௩௦)

(தா-ம்.) ஓ அர்ஜ்ஜுனா! எல்லா சரீரமும் கொல்லப்பட்டபோதிலும் அந்த ஆத்மாவானவன் கொல்லத் தகுந்தவனல்லன். ஆகையால் சகல ப்ராணிகளைக் குறித்து நீ துக்கத்தை யடைய வேண்டியதில்லை. (௩௦)

𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌮𑌪𑌿 𑌚𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌨 𑌵𑌿𑌕𑌮𑍍𑌪𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ।
𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌦𑍍𑌧𑌿 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥௩௧॥

(ப-ம்.) ஸ்வதர்மம் - தன் தருமத்தை, அவேக்ஷ்யாபி-பார்த்தும், விகம்பிதும் - சலிக்க, நார்ஹஸி-(உனக்குத்) தகாது, ஹி - ஏனென்றால், க்ஷத்ரியஸ்ய - க்ஷத்திரியனுக்கு, தர்ம்யாத் - நியாயமாய்க்கிடைத்த,யுத்தாத் அந்யத்-யுத்தத்தைவிட வேறு, ஶ்ரேய: நவித்யதே - நன்மை யில்லை. (௩௧)

(தா-ம்.) நீ, உன் க்ஷத்திரிய தர்மத்தை ஆலோசித்து நடுங்க யோக்கியனல்லை, க்ஷத்திரியனுக்குத் தர்மமாயிருக்கிற யுத்தத்தைக் காட்டிலும் வேறு ச்ரேயஸ்ஸு இல்லை. (௩௧)

𑌯𑌦𑍃𑌚𑍍𑌛𑌯𑌾 𑌚𑍋𑌪𑌪𑌨𑍍𑌨𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌦𑍍𑌵𑌾𑌰𑌮𑌪𑌾𑌵𑍃𑌤𑌮𑍍 ।
𑌸𑍁𑌖𑌿𑌨𑌃 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌲𑌭𑌨𑍍𑌤𑍇 𑌯𑍁𑌦𑍍𑌧𑌮𑍀𑌦𑍃𑌶𑌮𑍍 ॥௩௨॥

(ப-ம்.) ஹே பார்த்த - ஓ அருச்சுன! யத்ருச்சயா - ப்ரயத்நமில்லாமலே, உபபந்நம் - வந்ததும், அபாவ்ருதம்-திறந்திருக்கிற, ஸ்வர்க த்வாரம் - சுவர்க்க வழியாயிருக்கின்ற, ஈத்ருசம் யுத்தம்-இவ்விதப்போரை, ஸுகிந:-பாக்யவான்களான, க்ஷத்ரியா: - க்ஷத்திரியர்கள், லபந்தே - அடைகின்றார்கள். (௩௨)

(தா-ம்.) ஓ அர்ஜ்ஜுனா! தானாய் வந்தும் திறக்கப்பட்ட ஸ்வர்க்கத்து வழியாயிருக்கிற இந்த யுத்தத்தை, சுகிகளாயிருக்கிற க்ஷத்திரியர்கள் அடைவார்கள். (௩௨)

𑌅𑌥 𑌚𑍇𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌮𑌂 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌸𑌂𑌗𑍍𑌰𑌾𑌮𑌂 𑌨 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 ।
𑌤𑌤𑌃 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌂 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌪𑌾𑌪𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 ॥௩௩॥

(ப-ம்.) அத - இல்லாவிட்டால், த்வம் - நீ, தர்ம்யம்-நியாயமாய்க் கிடைத்த, இமம் ஸங்க்ராமம் - இந்த யுத்தத்தை, நகரிஷ்யஸி சேத் - செய்யா யாகில், தத: - அக்காரணத்தால், ஸ்வதா

மம் - தன் தருமத்தையும், கீர்திம் ச - கீர்த்தியையும், ஹித்வா - விட்டு, பாபம்-பாவத்தை, அவாப்ஸ்யஸி-அடையப்போகிறாய்.

(தா-ம்.) இனியாவது நீ தர்மத்தால் வந்திருக்கிற இந்த யுத்தத்தைப்பண்ணாமல் போவாயேயாகில், பிறகு உன் தர்மத்தையும் கீர்த்தியையும் போக்கடித்துக்கொண்டு பாபத்தை அடைவாய். (௩௩)

𑌅𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌕𑌥𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇𑌽𑌵𑍍𑌯𑌯𑌾𑌮𑍍 |
𑌸𑌂𑌭𑌾𑌵𑌿𑌤𑌸𑍍𑌯 𑌚𑌾𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌰𑍍𑌮𑌰𑌣𑌾𑌦𑌤𑌿𑌰𑌿𑌚𑍍𑌯𑌤𑍇 || ௩௪ ||

(ப-ம்.) (கிம்) ச - மேலும், பூதாநி-பிராணிகள், தே - உனக்கு, அவ்யயாம் - அழிவில்லாத, அகீர்திம் ச - அபயசஸ்ஸையும், கதயிஷ்யந்தி - சொல்லப்போகின்றன; ஸம்பாவிதஸ்ய ச-எல்லாம் நேர்ந்திருக்கிற (புருஷனுக்கோ), அகீர்த்தி: - அபகீர்த்தியானது, மரணாத் - மரணத்தைக் காட்டிலும், அதிரிச்யதே - அதிகமானது. (௩௪)

(தா-ம்.) க்ஷத்திரிய தர்மத்தை விடுகிறதால் உனக்கு அதிகமான அபகீர்த்தியை சகல ப்ராணிகளும் சொல்லுவார்கள். அப்படிப்பட்ட அபகீர்த்தியானது மரணத்தைக் காட்டிலும் அதிகம் (௩௪)

𑌭𑌯𑌾𑌦𑍍𑌰𑌣𑌾𑌦𑍁𑌪𑌰𑌤𑌂 𑌮𑌂𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌮𑌹𑌾𑌰𑌥𑌾𑌃 |
𑌯𑍇𑌷𑌾𑌂 𑌚 𑌤𑍍𑌵𑌂 𑌬𑌹𑍁𑌮𑌤𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌯𑌾𑌸𑍍𑌯𑌸𑌿 𑌲𑌾𑌘𑌵𑌮𑍍 || ௩௫ ||

(ப-ம்.) மஹாரதா:-மகாரதர்களான (கர்ணாதிகள்,) த்வாம் - உன்னை, பயாத் - பயத்தினால், ரணாத் - யுத்தத்தினின்றும், உபரதம் - கைவாங்கினதாக, மம்ஸ்யந்தே - நினைப்பார்கள்; த்வம்-நீயோ, ஏஷாம்-இந்த (கர்ணாதிகளுக்கு) பஹுமத: - வெகுமதிக்கப்பட்டவனாயிருந்து, லாகவம் - (இப்பொழுது) இலேசான தன்மையை, யாஸ்யஸி - அடையப்போகிறாய். (௩௫)

(தா-ம்.) கர்ணன் முதலானவர்களால் நீ பஹுமானம் பண்ணப்பட்டவனாக இருந்து, இப்படி அல்பஸ்வபாவத்தை அடைவாயேயாகில், அந்த மஹாரதர்கள் உன்னைச் சண்டையிலிருந்து பயத்தால் மறைந்தவனாக நினைப்பார்கள். (௩௫)

𑌅𑌵𑌾𑌚𑍍𑌯𑌵𑌾𑌦𑌾𑌂𑌶𑍍𑌚 𑌬𑌹𑍂𑌨𑍍𑌵𑌦𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑌵𑌾𑌹𑌿𑌤𑌾𑌃 |
𑌨𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑌵 𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌂 𑌤𑌤𑍋 𑌦𑍁𑌃𑌖𑌤𑌰𑌂 𑌨𑍁 𑌕𑌿𑌮𑍍 || ௩௬ ||

தவ அஹிதா: - உன் சத்ருக்கள், தவ ஸாமர்த்யம் - உன் சாமர்த்தியத்தை, நிந்தந்த: - நிந்திப்பவர்களாய், பஹூந் - அனேகமான, அவாச்ய வாதாந் - சொல்லத்தகாத வார்த்தைகளை, வதி

ஷ்யந்தி - சொல்லப்போகிறார்கள், தத: - அதைக்காட்டிலும், து:கதரம் கிந்நு - அதிகதுக்கதரம் என்ன இருக்கிறது? (௩௬)

(தா-ம்.) உன்னுடைய சத்துருக்கள், உன் சாமர்த்யத்தை நிந்தித்து, அதிகமாகத் தூஷணைகளைச் சொல்லுவார்கள். அதைக் காட்டிலும் உனக்குத் துக்கமானது என்னயிருக்கிறது? (௩௬)

𑌹𑌤𑍋 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌜𑌿𑌤𑍍𑌵𑌾 𑌵𑌾 𑌭𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇 𑌮𑌹𑍀𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌯 𑌕𑍃𑌤𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃 ॥௩௭॥

(ப-ம்.) ஹே கௌந்தேய-ஓ குந்தியின் மைந்த! ஹத:வா - கொல்லப்பட்டாயாகிலும், ஸ்வர்க்கம் - சுவர்க்கத்தை, ப்ராப்ஸ்யஸே - அடைவாய்; ஜித்வா வா-ஜெயித்தா யாகிலும், மஹீம் போக்ஷ்யஸே - பூமியை அனுபவிக்கப்போகிறாய், தஸ்மாத் - ஆகையாலே, க்ருத நிச்சய: (நிச்சயம் க்ருத்வா) - (நீ) நிச்சயம் பண்ணிக்கொண்டு, யுத்தாய உத்திஷ்ட - யுத்தம் செய்ய வெழுந்திரு (௩௭)

(தா-ம்.) ஓ அர்ஜுனா! மரணத்தை யடைந்தாலும் வீரஸ்வர்க்கத்தை யடைவாய். ஜெயித்தாலும் பூமியை யாளுவாய். ஆகையால் யுத்தத்தில் பிடிவாதமுள்ளவனாய் எழுந்திரு. (௩௭)

𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑍇 𑌸𑌮𑍇 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌲𑌾𑌭𑌾𑌲𑌾𑌭𑍌 𑌜𑌯𑌾𑌜𑌯𑍌 ।
𑌤𑌤𑍋 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌯 𑌯𑍁𑌜𑍍𑌯𑌸𑍍𑌵 𑌨𑍈𑌵𑌂 𑌪𑌾𑌪𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 ॥௩௮॥

(ப-ம்.) ஸுகதுக்கே-சுகதுக்கங்களை, ஸமே க்ருத்வா - ஸமமாகச் செய்து, லாபாலாபௌ - லாபாலாபங்களையும், ஜயாஜயௌ - ஜயா ஜயங்களையும், (ஸமௌ க்ருத்வா)-சமமாக வெண்ணி, தத:-அதன்பிறகு, யுத்தாய - யுத்தத்தின் பொருட்டு, யுஜ்யஸ்வ - கூடு; ஏவம் - இப்படியானால், பாபம் - பாவத்தை, ந அவாப்ஸ்யஸி - அடையமாட்டாய். (௩௮)

(தா-ம்.) சுகதுக்கங்களையும், லாபநஷ்டங்களையும், ஜயாபஜயங்களையும், சரியாகச்செய்து அதின் பிறகு யுத்தம் செய்வதற்காக பிரயத்தனப்படு. இப்படிச் செய்யும்பக்ஷத்தில் பாபத்தை அடையமாட்டாய். (௩௮)

𑌏𑌷𑌾 𑌤𑍇𑌽𑌭𑌿𑌹𑌿𑌤𑌾 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑍇 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌯𑍋𑌗𑍇 𑌤𑍍𑌵𑌿𑌮𑌾𑌂 𑌶𑍃𑌣𑍁 ।
𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌯𑌯𑌾 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌕𑌰𑍍𑌮𑌬𑌨𑍍𑌧𑌂 𑌪𑍍𑌰𑌹𑌾𑌸𑍍𑌯𑌸𑌿 ॥ ௩௯ ॥

(ப-ம்.) ஹே பார்த்த-ஓ அர்ச்சுனா! ஸாங்க்யே-ஸாங்க்யத்திலுள்ள (ஆத்ம) விஷயத்தில், ஏஷா புத்தி: - இதுவரையிலும் சொன்ன புத்தியானது, தே-உனக்கு, அபிஹிதா - சொல்லப்பட்டது. யோகே - (கர்ம) யோகவிஷயத்தில், இமாம் - இந்த (புத்தி

யை), ச்ருணு-கேள்; யயா புத்யா-யாதொரு(அந்த) புத்தியோடு, யுக்தஃத்வம்-கூடிஞ (யாகில்) நீ, கர்ம பந்தம் - கர்மத்தால் வரும் ஸம்ஸாரத்தை, ப்ரஹாஸ்யஸி - விட்டுவிடுவாய். (௩௯)

(தா-ம்.) ஓ அர்ஜுநா ! இந்தப் புத்தியானது ஸாங்கியத்தில் சொல்லப்பட்டது. யாதொரு புத்தியோடு கூடினவனாய் கர்மத்தாலுண்டான கட்டை விட்டுப்போகிறாயோ, அப்போர்க்கொற்ற யோகவிஷயமாகிய புத்தியைக்கேள். (௩௯)

नेहाभिक्रमनाशोऽस्ति प्रत्यवायो न विद्यते ।
स्वल्पमप्यस्य धर्मस्य त्रायते महतो भयात् ॥ ४० ॥

(ப-ம்.) இஹ - இதில் (கர்மயோகத்தில்) அபிக்ரம நாசஃ-ஆரம்ப மாத்திரத்திற்கும் அழிவு, நாஸ்தி - இல்லை, (இடையில் விட்டாலும்), ப்ரத்யவாயஃ-தோஷமும், நவித்யதே-இல்லை; அஸ்ய தர்மஸ்ய - இந் தருமத்தினுடைய, ஸ்வல்பம் அபி - அற்பமாகமும், மஹதஃ பயாத் - பெரும் பயத்தினின்றும், த்ராயதே - காப்பாற்றும். (௪௦)

(தா-ம்.) இந்தக் கர்மயோக விஷயத்திலே, ஆரம்பித்து நிர்விக்கினமில்லாமல் போனாலும் பாதகமில்லை. அதனால் தோஷமில்லை; இந்தக் கர்மயோகத்தினுடைய ஸ்வல்பபாகங்கூட அதிகப்பட்ட பயத்தில் நின்றும் ரக்ஷிக்கிறது. (௪௦) இந்தக் கர்மயோகமானது செய்யும் வரைக்கும் லாபம். முடியாத பக்ஷத்தில் பாதகமில்லை. (௪௦)

व्यवसायात्मिका बुद्धिरेकेह कुरुनन्दन ।
बहुशाखा ह्यनन्ताश्च बुद्धयोऽव्यवसायिनाम् ॥ ४१ ॥

(ப-ம்.) ஹே குருநந்தந - ஓ குருநந்தனா ! இஹ - இதில் (கர்மயோகத்தில்), வ்யவஸாயாத்மிகா - நிச்சயரூபமான, புத்திஃ-புத்தியானது, ஏகா ஏவ - ஒரேவிதம்; அவ்யவ ஸாயிநாம் - (ஆத்மஸ்வரூப) நிச்சயமில்லா தவருடைய, புத்தயஃ-புத்திகளோ, பஹு சாகாஃ - அனேகப் பிரகாரங்கள், அநந்தாஸ்ச - முடிவில்லாதனவுமாயிருக்கின்றன. (௪௧)

(தா-ம்.) வாராய் குருநந்தனனே ! இந்தக் கர்மயோகத்தில் நித்திய கர்மமென்றும், காம்ய கர்மமென்றும் இரண்டு பாகமுண்டு. இதுகளில் பரமாத்மா சுதந்திரனென்றும், ஜீவாத்மா தாஸனென்றும், பரமாத்மாவினுடைய கைங்கரியமே ஜீவனுக்குப் புருஷார்த்தமென்றும், நிச்சியமாகிற வ்யவசாயமென்று சொல்லப்படுகின்ற முன்சொன்ன ஜீவபரமாத்மா விவேக மில்லாமையால் ஸ்வர்க்காதிகளான பலன்களைக்கோருகின்ற ஜீவவர்க்கங்களுடைய புத்தி விசேஷங்கள், பல பேதங்களாலே அநேகமுகங்களாகவும்,

அதிகமாகவு மிருக்கு மாகையால் இவ்விரண்டு கர்மங்களில் காமிய கர்மங்களைக் காட்டிலும் மோக்ஷகரமான நித்திய கர்மங்களே ஶ்ரேஷ்டம். (ஸப) பரமாத்மா ஜீவாத்மா ஒன்று. (௪௧)

𑌯𑌾𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌿𑌤𑌾𑌂 𑌵𑌾𑌚𑌂 𑌪𑍍𑌰𑌵𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌃 ।
𑌵𑍇𑌦𑌵𑌾𑌦𑌰𑌤𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌨𑌾𑌨𑍍𑌯𑌦𑌸𑍍𑌤𑍀𑌤𑌿 𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 ॥ ௪௨ ॥

𑌕𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌃 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌪𑌰𑌾 𑌜𑌨𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌪𑍍𑌰𑌦𑌾𑌮𑍍 ।
𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌬𑌹𑍁𑌲𑌾𑌂 𑌭𑍋𑌗𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌗𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 ॥ ௪௩ ॥

𑌭𑍋𑌗𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌤𑌯𑌾𑌪𑌹𑍃𑌤𑌚𑍇𑌤𑌸𑌾𑌮𑍍 ।
𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑌮𑌾𑌧𑍌 𑌨 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥ ௪௪ ॥

(ப-ம்.) ஹே பார்த்த ! - ஓ பார்த்தனே ! வேத வாதரதாஃ- வேதவாக்யங்களில் ஆஸக்தியுள்ளவர்களும், காம ஆத்மாநஃ - காம (புருஷார்த்த)த்தில் மனமுள்ளவர்கள், ஸ்வர்கபராஃ-சுவர்க்கத்தில் நாட்ட முடையராய், அந்யத் நாஸ்தி - வேறு இல்லை, இதி வாதிநஃ - என்று வாது செய்துக்கொண்டு, அவிபச்சிதஃ - அற்பமதிகளா (கையால்), போக ஐசுவர்ய கதிம் பிரதி-(சுவர்க்கா) னுபவ ஐசுவரிய கதியைக்குறித்து, புஷ்பிதாம் - பூத்துமாத்திர மிருக்கின்ற, ஜந்ம கர்ம பல ப்ரதாம் - பிறப்பென்னும் கருமபல த்தைத் தருகின்றதாய், க்ரியா விசேஷ பஹுளாம் - கருமவிசேஷத்தால் பிரசுரமாயிருக்கின்ற, யாம் இமாம் வாசம் - யாதொரு இந்த வாக்கை, ப்ரவதந்தி - சொல்லுகிறார்களோ, தயா - அந்த வாக்கினால், அபஹ்ருத சேதஸாம் - அபஹரிக்கப்பட்ட மனதை யுடையரும், போக ஐசுவர்ய ப்ரஸக்தாநாம் - (சுவர்க்கமுதலிய வற்றை) அநுபவிப்பதென்கிற ஐசுவரியத்தில் ஆஸக்தியுள்ளவர்க ளுடைய (ஜனங்களின்), ஸமாதௌ - மனதில், வ்யவஸா யாத்மிகா - நிச்சயரூபமான, புத்திஃ - புத்தியானது, நவிதீயதே - உண் டாகிறதில்லை. (௪௨-௪௩-௪௪)

(தா-ம்.) ஓ ! அர்ஜ்ஜுனா ! வேதத்தில் பலனைச் சொல்லுகிற முக்கியமான அர்த்தவாததத்தில் ப்ரீதியுடையவர்களும், வேறே விசேஷ பலனில்லை என்று சொல்லுகிறவர்களும், ஸ்வர்க்கமே மேலான ப்ரயோஜன மென்று எண்ணி யிருக்கிறவர்களுமாகிய அவிவேகிகள், பிறப்பையும் கர்மத்தையும் கொடுக்கிறதாயும், அதிக வ்யாபாரத்தையுடைய போகைஶ்வர்யங்களைக் குறித்து, எந்த வார்த்தையைப் பேசுகிறார்களோ, அந்த வார்த்தையால் அபகரிக்கப்பட்ட மனதையுடையவர்களும், போகத்தி லாசையுள் ளவர்களுமிட வ்யவசாய ரூபமான புததியானது, யோகத்தில் வைக்கப்படமாட்டாது. (ஸப-ரா.) ஸமாதௌ - அந்தக் கரணத் தில். (௪௨-௪௩-௪௪)

𑌤𑍍𑌰𑍈𑌗𑍁𑌣𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑌾 𑌵𑍇𑌦𑌾 𑌨𑌿𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌗𑍁𑌣𑍍𑌯𑍋 𑌭𑌵𑌾𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌨𑌿𑌰𑍍𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌥𑍋 𑌨𑌿𑌰𑍍𑌯𑍋𑌗𑌕𑍍𑌷𑍇𑌮 𑌆𑌤𑍍𑌮𑌵𑌾𑌨𑍍 ॥௪௫॥
𑌯𑌾𑌵𑌾𑌨𑌰𑍍𑌥 𑌉𑌦𑌪𑌾𑌨𑍇 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 𑌸𑌂𑌪𑍍𑌲𑍁𑌤𑍋𑌦𑌕𑍇 ।
𑌤𑌾𑌵𑌾𑌨𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌵𑍇𑌦𑍇𑌷𑍁 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯 𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌃 ॥௪௬॥

(ப-ம்.) வேதா: - வேதங்கள், த்ரைகுண்ய விஷயா:-ஸத்வரஜஸ்தமோ குணங்கள் விஷயமானவைகள்; ஹே அர்ஜுந - ஓ அர்ச்சுனா!, த்வம்து - நீயோ, நிஸ் த்ரைகுண்ய: - முக்குணங்களு மற்றவனாய், பவ-ஆகு; நிர் த்வந்த்வ: - (சீதம் உஷ்ணம் முதலிய) த்வந்த்வ மற்றவனாய், (பவ) - ஆகு; நித்ய ஸத்வ ஸ்த்த: - நித்தியமும் ஸத்துவகுணத்தில் இருந்து, நிர் யோக க்ஷேம: - யோக க்ஷேமங்க ளற்று, ஆத்மவாந் - ஆத்மஸ்வரூபத்தைத் தேடிக் கொண்டிரு, ஸர்வதா - முழுதும், ஸம்ப்லுத உதகே - நிறைந்த நீர்கொண்ட, உதபாநே - கிணறு ஜலஸ்த்தானத்தில், யாவாந் அர்த்த: - (நாநமெடுத்தவனுக்கு) எவ்வளவுப் பிரயோஜனமோ, (அப்படி) உண்டாகிறது, ஸர்வேஷு வேதேஷு, எல்லா வேதங்களிலும், விஜாநத:-ஞானியான (மோக்ஷார்த்தியான), ப்ராம்ஹணஸ்ய-ப்ரஹ்மஜ்ஞாநநிஷ்டனுக்கு, ப்ரதி-உண்டாகிறது. (௪௫-௪௬)

(தா-ம்.) ஹே! அர்ஜ்ஜுனா! வேதங்கள் மாயா விஷயமாயிருக்கிறதுகள். நீமாயா ஸ்வரூபத்தைவிட்டு, ஸத்வகுணத்தை யடைந்து, சுகதுக்கங்களைவிட்டு, யோகக்ஷேம மில்லாதவனாயும், ஸத்வஸ்வரூபத்தை யடைந்தவனாயு மாகக்கடவாய். நாலுபக்கத்திலும் ஜலத்தால் நிறைந்தகிணற்றில் எவ்வளவு பிரயோஜனமோ, தெரிந்த பிராம்மணனுக்கு எல்லா வேதங்களிலேயும் அவ்வளவு தான் பிரயோஜனம். (௪௫-௪௬)

𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑍇𑌵𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑍇 𑌮𑌾 𑌫𑌲𑍇𑌷𑍁 𑌕𑌦𑌾𑌚𑌨 ।
𑌮𑌾 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌹𑍇𑌤𑍁𑌰𑍍𑌭𑍂𑌰𑍍𑌮𑌾 𑌤𑍇 𑌸𑌙𑍍𑌗𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 ॥௪௭॥

(ப-ம்.) தே - (மோக்ஷார்த்தியான) உனக்கு, கர்மணி ஏவ - கர்மஸ்வரூப மாத்திரத்திலே, அதிகார: - அதிகாரம், பலேஷு - பலங்களில், கதாசந - ஒருக்காலும், மா - வேண்டாம், கர்ம பல ஹேது: - கருமத்துக்கும் பலத்துக்கும் ஹேதுவாக, மாபூ: - ஆகாதே; அகர்மணி - கர்மம் செய்யாமலிருப்பதில், தே ஸங்க: - உனக்கு ஸம்பந்தம், மாஸ்து - வேண்டாம். (௪௭)

(தா-ம்.) முமுக்ஷுவான உனக்கு உன்னுடைய க்ஷத்திரிய ஜாதிக்குரிய கர்மங்களில், அதிகாரமே தவிர, அந்த கர்ம பலங்களில் ஒருக்காலும் அதிகாரமில்லை. கர்ம பலங்களுக்கு காரணனாகாதே யுத்தம் செய்யா விஷயத்தில் ஸங்கத்தை விட்டுவிடு. (௪௭)

𑌯𑍋𑌗𑌸𑍍𑌥𑌃 𑌕𑍁𑌰𑍁 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌸𑌙𑍍𑌗𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯 ।
𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍋𑌃 𑌸𑌮𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌸𑌮𑌤𑍍𑌵𑌂 𑌯𑍋𑌗 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥௪௮॥

(ப-ம்.) ஹே தநஞ்சய - ஓ அர்ச்சுனா! ஸங்கம் த்யக்த்வா - அபிமானத்தைவிட்டு, ஸித்தி அஸித்யோ:-(பல) ஸித்தியிலும் அஸித்தியிலும், ஸம: பூத்வா - ஸமமாயிருந்து, யோக ஸ்த்த: - யோக நிஷ்டனாய்க்கொண்டு, கர்மாணி குரு-கருமங்களைச்செய், ஸமத்வம் - ஸமமாயிருப்பதே, யோக: (இதி) உச்யதே - யோகமென்று சொல்லப்படும். (௪௮)

(தா-ம்.) ஓ! அர்ஜ்ஜுனா! பற்றைவிட்டு ஸித்தித்தாலும் ஸித்திக்காமல் போனபோதிலும் இதுகளில் சமமாகி, யோகத்திலிருந்து கர்மங்களைச் செய். ஸமமாயிருக்கிற தன்மையானது, யோகமாக சொல்லப்படுகிறது. (௪௮)

𑌦𑍂𑌰𑍇𑌣 𑌹𑍍𑌯𑌵𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌾𑌦𑍍𑌧𑌨𑌞𑍍𑌜𑌯 ।
𑌬𑍁𑌦𑍍𑌧𑍌 𑌶𑌰𑌣𑌮𑌨𑍍𑌵𑌿𑌚𑍍𑌛 𑌕𑍃𑌪𑌣𑌾𑌃 𑌫𑌲𑌹𑍇𑌤𑌵𑌃 ॥௪௯॥

(ப-ம்.) ஹேதநஞ்சய! - ஓ அர்ச்சுனா!, புத்தியோகாத் - சமத்வ புத்தியுடன் கூடிய (கருமத்)தைக்காட்டிலும், கர்ம-(காமிய) கருமமானது, தூரேண அவரம்-மிகவும் இழிவானது, அத:-ஆகையால், புத்தௌ-ஜ்ஞாநத்தில், சரணம் அந்விச்ச-ரக்ஷகத்தை கோரு, பல ஹேதவ: - பலத்துக்கு ஹேதுவானவர்கள், க்ருபணா: - ஸம்ஸாரிகளாவார். (௪௯)

(தா-ம்.) ஓ! அர்ஜ்ஜுனா! ஸமரூபமான புத்தியோகத்தாலுண்டாகிய கர்மத்தைக் காட்டிலும் மற்றக் கர்மம் மிகவும் தாழ்ந்தது; புத்தியோகத்தாலுண்டான கர்மம், ஸம்ஸார துக்கத்தைப்போக்கி மோக்ஷத்தையடையச் செய்கிறது. மற்றொருகர்மம், ஸம்ஸாரத்தை யுண்டுபண்ணுகிறது. ஆகையால் மோக்ஷோபயோகியான புத்தியோகத்தை உடையவனைக்கெடுக்கின்ற கர்மங்களைச் செய்யாதே. (௪௯)

𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌜𑌹𑌾𑌤𑍀𑌹 𑌉𑌭𑍇 𑌸𑍁𑌕𑍃𑌤𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑍇 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑍋𑌗𑌾𑌯 𑌯𑍁𑌜𑍍𑌯𑌸𑍍𑌵 𑌯𑍋𑌗𑌃 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌕𑍌𑌶𑌲𑌮𑍍 ॥௫௦॥

(ப-ம்.) புத்தியுக்த: - புத்தியுடன் கூடியவன், இஹ - இந்த (ஜன்மத்தில்) ஸுக்ருத துஷ்க்ருதே உபே - புண்ணியம் பாவம் இரண்டையும், ஜஹாதி-விடுகிறான்; தஸ்மாத்-ஆகையால், யோகாய-(முன் சொன்ன புத்தி) யோகத்துக்காக, யுஜ்யஸ்வ - யத்தனம் செய்; யோக:-யோகந்தான், கர்மஸு-கருமங்களில், கௌசலம் - ஸாமர்த்தியம். (௫௦)

(தா-ம்.) புத்தியோகத்தோடு கூடியவனாய்க் கருமத்தைச் செய்பவன் புண்ணியபாவங்கள் இரண்டையும் விடுகிறானாகை

யால், புத்தியோகத்திற்காக யத்தினம்பண்ணு. கருமங்கள் (௫௦) ஸ்வதர்மமாகிய கர்மங்கள் செய்து வரும்போது இந்தப் புத்தி யோகமானது, மிகவும் ஸாமர்த்தியத்தினால் ஸாதிக்கத்தக்கது. ()

𑌕𑌰𑍍𑌮𑌜𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌹𑌿 𑌫𑌲𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑌃 ।
𑌜𑌨𑍍𑌮𑌬𑌨𑍍𑌧𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌪𑌦𑌂 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍍𑌯𑌨𑌾𑌮𑌯𑌮𑍍 ॥ ௫௧ ॥

(ப-ம்.) மநீஷிண: - ஞானிகள், புத்தி யுக்தா: - (முன்சொன்ன) புத்தியுடன் கூடி, கர்ம ஜம் - கர்மத்தாலுண்டான, பலம் த்யக்த்வா - பலனைவிட்டு, ஜந்ம பந்த விநிர்முக்தா: - ஜந்மமென்கிற பந்தத்தால் விடுபட்டவர்களாய், அநாமயம்-உபத்திரவ மற்ற, பதம் கச்சந்தி - பதவியை அடைகின்றார்கள். (௫௧)

(தா-ம்.) புத்தியோகத்தையுடைய பண்டிதர்கள், கர்மத்தாலுண்டாகும் பயனை விட்டு, ஜநநமரண ரூபமான ஸம்ஸாரத்தைக் கடந்தவர்களாய், துக்கமில்லாத மோக்ஷத்தை அடைகிறார்கள். (௫௧)

𑌯𑌦𑌾 𑌤𑍇 𑌮𑍋𑌹𑌕𑌲𑌿𑌲𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌤𑌿𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ।
𑌤𑌦𑌾 𑌗𑌨𑍍𑌤𑌾𑌸𑌿 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌂 𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍁𑌤𑌸𑍍𑌯 𑌚 ॥ ௫௨ ॥

(ப-ம்.) யதா - எப்பொழுது, தே - உனக்கு, புத்தி: - மனதானது, மோஹ கலிலம் - மோஹ (மென்னும்) தோஷத்தை, வ்யதிதரிஷ்யதி - தாண்டுகிறதோ, ததா - அப்பொழுது, ஶ்ருதஸ்ய-கேட்டதற்கும், ஶ்ரோதவ்யஸ்யச-கேட்கவேண்டிய அர்த்தத்துக்கும், நிர்வேதம் - வைராக்கியத்தை, கந்தா அஸி-அடைவாய். (௫௨)

(தா-ம்.) இவ்விதமான கர்மத்திலிருக்கின்ற உன் புத்தியானது, எப்பொழுது யோகத்தாலுண்டாகிய கலக்கத்தை விடுகிறதோ, அப்பொழுதுதான் எம்மிடத்தில் இதுவரையிலும் கேட்டதாயும், இனி கேட்கப்போகிறதுமான, அம்சத்தில் நீ தானாகவே வைராக்கியத்தை அடைவாய். (௫௨)

𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌨𑍍𑌨𑌾 𑌤𑍇 𑌯𑌦𑌾 𑌸𑍍𑌥𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑌾 ।
𑌸𑌮𑌾𑌧𑌾𑌵𑌚𑌲𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌸𑍍𑌤𑌦𑌾 𑌯𑍋𑌗𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 ॥ ௫௩ ॥

(ப-ம்.) ஶ்ருதி விப்ரதிபந்நா - (என்னிடத்தில்) கேட்பதனால் மிகவும் தெளிவுற்றதாய், அசலா-ஏகரூபமாயிருக்கிற, தே புத்தி: - உன் புத்தியானது, ஸமாதௌ-மனதில், யதா நிச்சலா - எப்பொழுது அசைவுறாமல், ஸ்தாஸ்யதி-நிலைக்கின்றதோ, ததா - அப்பொழுது, யோகம்-ஆத்மஜ்ஞானத்தை, அவாப்ஸ்யஸி- அடைவாய். (௫௩)

(தா-ம்.) (எமது) உபதேசத்தால் விசேஷமாய் ஸூக்ஷ்ம மார்த்தத்தை அறிந்து, ஒரே ரூபமாயிருக்கிற உன் புத்தியானது எப்பொழுது மனஸ்ஸில் ஆசையில்லாமல் நிற்கிறதோ அப்பொழுது ஆத்மக்ஞானமாகிய யோகத்தை அடைவாய். (௫௩)

அர்ச்சுனன் சொல்லுகிறான்.

ஸ்திதப்ரஜ்ஞஸ்ய கா பாஷா ஸமாதிஸ்தஸ்ய கேஶவ ।
ஸ்திததீ꞉ கிம் ப்ரபாஷேத கிமாஸீத வ்ரஜேத கிம் ॥ ௫௪ ॥

(ப-ம்.) ஹே கேசவ - வாரீர் கேசவனே, ஸமாதிஸ்தஸ்ய - ஸமத்திருக்கிற, ஸ்திதப்ரஜ்ஞஸ்ய-ஸ்திதப்ரக்ஞனுக்கு, கா பாஷா- என்ன பெயர்? ஸ்திததீ꞉, நிச்சலப் பிரக்ஞையுள்ளவன், கிம் ப்ரபாஷேத - என்ன பேசுவான்? கிம் ஆஸீத - எப்படி ஆஸனமாகக்கொள்ளுவன்? கிம் வ்ரஜேத-என்னமாய் நடப்பன்? (௫௪)

(தா-ம்.) ஓ கேசவா! யோகத்திலிருக்கும் நிலைத்த புத்தியையுடையவனுக்கு என்ன குறிகள்? நிலைத்த புத்தியையுடையவன் எப்படிப்பேசுவன்? எப்படி யிருப்பன்? எப்படி நடப்பன்? (௫௪)

ஸ்ரீபகவான் சொல்லுகிறார்.

ப்ரஜஹாதி யதா காமாந் ஸர்வாந் பார்த மநோகதாந் ।
ஆத்மந்யேவாத்மநா துஷ்ட꞉ ஸ்திதப்ரஜ்ஞஸ்ததோச்யதே ॥ ௫௫ ॥

(ப-ம்.) ஹே பார்த்த - ஓ அர்ச்சுனா, ஆத்மநா - மனதினால், ஆத்மநி ஏவ - தனக்குள் தானே, துஷ்ட꞉ - ஸந்துஷ்டியடைந்தவனாய், மநோ கதாந் - மனதிலுள்ள, ஸர்வாந் காமாந் - ஸமஸ்தமான காமங்களை, யதா ப்ரஜஹாதி - எப்பொழுது விடுகிறனோ, ததா - அப்பொழுது, ஸ்திதப்ரஜ்ஞ꞉ இதி உச்யதே - சலிக்காத ப்ரஜ்ஞையுள்ளவனென்று, என்று சொல்லப்படுகிறன். (௫௫)

(தா-ம்.) வாராய்! அர்ஜ்ஜுனா! எவன் எப்பொழுது மனதினால் ஆத்மக்ஞானத்தை அறிந்து சந்தோஷத்தையுடையவனாய், மனதிலிருக்கிற எல்லாக்காமங்களையும் விடுகிறனோ, அவன் அப்பொழுது நிலைபெற்ற புத்தியை யுடையவனாகச் சொல்லப்படுகிறன். (௫௫)

து꞉கேஷ்வநுத்விக்நமநா꞉ ஸுகேஷு விகதஸ்ப்ருஹ꞉ ।
வீதராகபயக்ரோத꞉ ஸ்திததீர்முநிருச்யதே ॥ ௫௬ ॥

(ப-ம்.) து꞉கேஷு-துக்கங்களில், அநுத்விக்நமநா꞉-க்ஷோபத்தையடையாததான மனமுடையனாய், ஸுகேஷு - இன்பங்களில், விகத ஸ்ப்ருஹ꞉ - ஆசையற்று, வீதராகபய க்ரோத꞉ - ரா

கம் பயம் கோபம் அற்றவனாய், முநி: - (ஆத்மாவை) மனனஞ் செய்பவன், ஸ்திர தீ: உச்யதே - ஸ்திரதீ யென்னப்படுவான். ()

(தா-ம்.) துக்கங்களில் கலங்காத மனதை யுடையவனும், சுகங்களில் ஆசையற்றவனும், இராகத்வேஷ பயங்களைத் துறந்தவனுமாகிய புருஷன், நிலைத்த புத்தியையுடைய முனியாகச் சொல்லப்படுகிறான். (௫௬)

𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌾𑌨𑌭𑌿𑌸𑍍𑌨𑍇𑌹𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌶𑍁𑌭𑌾𑌶𑍁𑌭𑌮𑍍 ।
𑌨𑌾𑌭𑌿𑌨𑌨𑍍𑌦𑌤𑌿 𑌨 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌿 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾 ॥ ௫௭ ॥

(ப-ம்.) ய: எவன், ஸர்வத்ர - ஸமஸ்த வஸ்துக்களிலும், அநபிஸ்நேஹ: - அதிகச் சிநேக மற்றவனோ? தத் தத் சுபா சுபம் - அந்தந்த சுபா சுபத்தை, ப்ராப்ய - அடைந்து, நாபி நந்ததி - சந்தோஷிக்கமாட்டானோ, ந த்வேஷ்டி - த்வேஷிக்கமாட்டானோ, தஸ்ய - அவனுக்கு, ப்ரஜ்ஞா - பிரக்ஞையானது, ப்ரதிஷ்டிதா - நிலைபெற்றதாம். (௫௭)

(தா-ம்.) யாதொருவன் எல்லா வஸ்துக்களிலும் (௱௦) (தேகங்களிலும் அதிகபாசம்) வைக்காதவனாய், அந்தந்த நன்மை தீமைகளுக்குரிய பயன்களை யடைந்து சந்தோஷிக்காமலும், த்வேஷத்தை அடையாமலும் இருக்கிறானோ, அவனுடைய புத்தியானது நிலைபெற்றது. (௫௭)

𑌯𑌦𑌾 𑌸𑌂𑌹𑌰𑌤𑍇 𑌚𑌾𑌯𑌂 𑌕𑍂𑌰𑍍𑌮𑍋𑌽𑌙𑍍𑌗𑌾𑌨𑍀𑌵 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌥𑍇𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾 ॥ ௫௮ ॥

(ப-ம்.) யதா அயம் - எப்பொழுது இந்தப்புருஷன், இந்த்ரியாணி - இந்திரியங்களை, கூர்ம: - ஆமையானது, அங்காநி இவ - அவயவங்களைப்போல், ஸர்வச: - ஸமஸ்தமான, இந்த்ரியார்த்தேப்ய: - (சப்தாதி) விஷயங்களினின்றும், ஸம்ஹரதே - இழுக்கிறானோ, ததா - அப்பொழுது, தஸ்ய - அவனுடைய, ப்ரஜ்ஞா - பிரக்ஞையானது, பிரதிஷ்டிதா - நிலைபெற்றதாம். (௫௮)

(தா-ம்.) இந்த ஜீவனானவன், (௱௦) ஜ்ஞானநிஷ்டையில் ப்ரவர்த்திருக்கிற, ஆமை தன் அவயவங்களை யடக்குவதுபோல், இந்திரியங்களை விஷயங்களில் செல்லாமல் எப்பொழுது நன்றாய் அடக்குகிறானோ அப்பொழுது அவனுடைய புத்தியானது நிலைபெற்றது. (௫௮)

𑌵𑌿𑌷𑌯𑌾 𑌵𑌿𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌨𑌿𑌰𑌾𑌹𑌾𑌰𑌸𑍍𑌯 𑌦𑍇𑌹𑌿𑌨𑌃 ।
𑌰𑌸𑌵𑌰𑍍𑌜𑌂 𑌰𑌸𑍋𑌽𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑌰𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥ ௫௯ ॥

(ப-ம்.) நிராஹாரஸ்ய - ஆகாரமற்ற, தேஹிந꞉ - புருஷனுக்கு, விஷயா꞉ - சப்தாதிகள், ரஸவர்ஜம் - ஆசை நீங்கலாக, விநிவர்த்தந்தே - திரும்புகின்றன; அஸ்ய - இவனுக்கு, ரஸோபி - (அந்த) ஆசையும், பரம் த்ருஷ்ட்வா - ஆத்மஸ்வரூபத்தைப்பார்த்து, நிவர்ததே - நிங்குகின்றது. (௫௯)

(தா-ம்) (இந்திரியங்களுக்கு விஷயங்கள் ஆகாரமாகையாலே) அப்படிப்பட்ட ஆகாரத்தில் விமுகமான இந்திரியங்களையுடைய தேஹிக்கு ஆசை ஒன்று தவிர மற்ற விஷயங்கள் நீங்கிவிடுகின்றன. அப்படிப்பட்ட ஆசையும் ஆத்ம ஸ்வருபமான சுகத்தை அடைந்த பிறகு நீங்கிவிடுகிறது. (மூ) த்ருஷ்ட்வா - அறிந்து. (௫௯)

𑌯𑌤𑌤𑍋 𑌹𑍍𑌯𑌪𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌃 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌮𑌾𑌥𑍀𑌨𑌿 𑌹𑌰𑌨𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌸𑌭𑌂 𑌮𑌨𑌃 ॥ ௬௦ ॥

(ப-ம்.) ஹே கௌந்தே - ஓ அர்ச்சுன !, யததோபி - (ஆத்மதரிசனத்துக்காக) யத்தனம் செய்தாலும், விபஸ்சித꞉ - ஜ்ஞானமுள்ளவனும், ப்ரமாதீநி - பலவத்துக்களான, இந்த்ரியாணி-இந்திரியங்கள், மந꞉ - மனதை, ப்ரஸபம் - பலாத்காரமாக, ஹரந்தி-இழுக்கின்றன. (௬௦)

(தா-ம்.) ஆத்மக்ஞான மில்லாதவனுக்கு விஷயத்தில் ஆசை ஒழிகிறதில்லை. அந்த ஆசைப்பற்றுமல் இந்திரியங்களை ஜயிக்க யத்தினிக்கின்ற புருஷனுடைய இந்திரியங்கள் கெட்ட சுபாவமுடையவைகளாய்மனதை பலாத்கரித்து அபகரித்துவிடுகின்றன.

𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌸𑌂𑌯𑌮𑍍𑌯 𑌯𑍁𑌕𑍍𑌤 𑌆𑌸𑍀𑌤 𑌮𑌤𑍍𑌪𑌰𑌃 ।
𑌵𑌶𑍇 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾 ॥ ௬௧ ॥

(ப-ம்.) தாநி ஸர்வாணி-அவைகளை யெல்லாம், ஸம் யம்ய - நன்றாய் அடக்கி, மத்பர꞉ - நானே இலக்காக, யுக்த꞉ - (ஸமத்வமென்னும்) யோகநிஷ்டனாய்க்கொண்டு, ஆஸீத - வஸிக்கக்கடவன்; யஸ்ய - எவனுக்கு, இந்த்ரியாணி - இந்த்ரியங்கள், வசே - வசத்தில் (இருக்கின்றனவோ) தஸ்ய ப்ரஜ்ஞா-அவனுக்கு (த்தான்) பிரக்ஞை, ப்ரதிஷ்டிதா - நிலைபெற்றிருக்கும். (௬௧)

(தா-ம்.) அப்பப்பட்ட இந்திரியங்களை யெல்லாம் கட்டி யோகியாகி என்னையே முக்கியமா யடைந்திருக்கவேண்டும். எவனுக்கு இந்திரியங்கள் ஸ்வாதீனமா யிருக்கின்றனவோ, அவன் நிலைபெற்றவன். (௬௧)

𑌧𑍍𑌯𑌾𑌯𑌤𑍋 𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍𑌪𑍁𑌂𑌸𑌃 𑌸𑌙𑍍𑌗𑌸𑍍𑌤𑍇𑌷𑍂𑌪𑌜𑌾𑌯𑌤𑍇 ।
𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍𑌸𑌞𑍍𑌜𑌾𑌯𑌤𑍇 𑌕𑌾𑌮𑌃 𑌕𑌾𑌮𑌾𑌤𑍍𑌕𑍍𑌰𑍋𑌧𑍋𑌽𑌭𑌿𑌜𑌾𑌯𑌤𑍇 ॥ ௬௨ ॥

𑌕𑍍𑌰𑍋𑌧𑌾𑌦𑍍𑌭𑌵𑌤𑌿 𑌸𑌮𑍍𑌮𑍋𑌹𑌃 𑌸𑌮𑍍𑌮𑍋𑌹𑌾𑌤𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑌃 ।
𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌭𑍍𑌰𑌂𑌶𑌾𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌨𑌾𑌶𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌨𑌾𑌶𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌤𑌿 ॥௬௩

(ப-ம்.) விஷயாந் - (சப்தாதி) விஷயங்களை, த்யாயத: - சிந்தித்திருக்கின்ற, பும்ஸ: - புருஷனுக்கு, தேஷு - அவைகளில், ஸங்க: ஜாயதே - பற்று உண்டாகின்றது; ஸங்காத்-ஸங்கத்தால், காம: - ஆசையானது, ஸஞ்ஜாயதே - உண்டாகின்றது, காமாத் - ஆசையினால், க்ரோத: - கோபம், அபிஜாயதே-உண்டாகின்றது. க்ரோதாத்-கோபத்தினால், ஸம்மோஹாத்-அவிவேகத்தால், ஸ்ம்ருதி விப்ரம: நினைவுக்கு நழுவுத (லுண்டாம்), ஸ்ம்ருதி ப்ரம்சாத்-நினைவு நழுவினால், புத்தி நாச: - (வியவஸாய) புத்திநாசம் (பிறக்கும்); புத்தி நாசாத் - புத்தி நாசத்தால், ப்ரணச்யதி - ஸம்ஸாரத்துக்குள்ளே யகப்படுகின்றான். (௬௨) (௬௩)

(தா-ம்.) (விஷயங்களின் ஆசையைவிடாமலும், என்னிடத்தில் மனம் வைக்காமலும்) இந்திரியங்களைக் கட்டுகிறவனுக்கு, விஷய நினைவு விடமுடியாது. அதெப்படியென்றால் விஷயங்களைக் கோருகிற புருஷனுக்கு அவற்றில் பற்று உண்டாகிறது; பற்றினால் ஆசைபிறக்கிறது: ஆசையால் கோபமுண்டாகிறது; கோபத்தால் மோகம் பிறக்கிறது; மோகத்தால்நினைவுமாறுகிறது; நினைவுமாறுதலால் புத்தி கெடுகிறது: புத்திகெடுவதால் ஸம்ஸாரத்தில் விழுந்து கெட்டுப்போகிறான்: யுக்தியானது ஆத்மஞான நிச்சயம். (௬௨-௬௩)

𑌰𑌾𑌗𑌦𑍍𑌵𑍇𑌷𑌵𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑍈𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍈𑌶𑍍𑌚𑌰𑌨𑍍 ।
𑌆𑌤𑍍𑌮𑌵𑌶𑍍𑌯𑍈𑌰𑍍𑌵𑌿𑌧𑍇𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥ ௬௪ ॥

(ப-ம்.) ராகத்வேஷ வியுக்தைஸ்து - ராகமும் துவேஷமும் அற்ற, ஆத்மவச்யை:-தனக்கு ஸ்வாதீநங்களானவையும் ஆகிய இந்த்ரியை:-இந்த்ரியங்களால், விஷயாந்-விஷயங்களை, சரந்-திரஸ்கரிப்பவனும், விதேய ஆத்மா - வசப்பட்ட மனதோடு (கூடியவன்), ப்ரஸாதம்-தெளிவை, அதிகச்சதி-அடைகின்றான். (௬௪)

(தா-ம்.) (ஒருவன் கீழே சொல்லியவிதமாய்ச் சர்வேச்வரனாகிய என்னிடத்தில் மனம் வைத்து) இராகத்வேஷங்களற்று தனக்கு சுவாதீனப்பட்ட இந்திரியங்களைக்கொண்டு, விஷயங்களை அறிந்தவனாயினும் மனஸ்வாதீன முடையவன் தெளிவை அடைகிறான். (௬௪)

𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍇 𑌸𑌰𑍍𑌵𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑌾𑌂 𑌹𑌾𑌨𑌿𑌰𑌸𑍍𑌯𑍋𑌪𑌜𑌾𑌯𑌤𑍇 ।
𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌚𑍇𑌤𑌸𑍋 𑌹𑍍𑌯𑌾𑌶𑍁 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌪𑌰𑍍𑌯𑌵𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇 ॥௬௫॥

(ப-ம்.) ப்ரஸாதே - தெளிவுண்டானல், அஸ்ய - இவனுக்கு, ஸர்வ துக்காநாம் - எல்லாத் துயரங்களுக்கும், ஹாநி:

உபஜாயதே - நாசம் பிறக்கிறது, ப்ரஸந்ந சேதஸ: - தெளிவுற்ற மனத்தனுக்கு, ஆசு - விரைவில், புத்தி:-பிரக்ஞையானது, பர்யவதிஷ்டதே - நிலைபெறுகின்றது. (௬௫)

(தா-ம்) கீழ்ச்சொன்னபடி மனம்தெளியும் பக்ஷத்தில் இவனுக்கு ப்ரக்ருதி ஸம்பந்தத்தாலுண்டாகிய எல்லாத் துக்கங்களும் அழிந்துவிடுகின்றன: தெளிந்த மனத்தை யுடையவனுக்குப் புத்தியும் சீக்கிரத்தில் நிலைபெறும். (௬௫)

நாஸ்தி புத்திரயுக்தஸ்ய நசாயுக்தஸ்ய பாவநா ||
நசாபாவயத: ஶாந்திரஶாந்தஸ்ய குத: ஸுகம் || ௬௬ ||

(ப-ம்.) அயுக்தஸ்ய - (என்னிடத்தில்) மனம் வையாதவனுக்கு, புத்தி: நாஸ்தி-சுத்தாத்ம ஸ்வரூபஜ்ஞானம் இல்லை, அயுக்தஸ்ய - அப்படி மனம் வையாதவனுக்கு, பாவநா நாஸ்தி-பாவனையில்லை:—ஆத்மாவிஷயத்தில் பகுத்தறிய வேண்டுமென்னுஞ் சிந்தையில்லை, அபாவயத: - பாவனை யற்றவனுக்கு, சாந்தி:ச ந - வைராக்கியமுமில்லை, அஶாந்தஸ்ய - அந்த சாந்தி யில்லாதவனுக்கு, ஸுகம் குத: - சுகம் ஏது? (௬௬)

(தா-ம்.) என்னிடத்தில் மனம் வைக்காதவனுக்கு (ஶாந்தி) திருப்தி யில்லாதவனுக்கு ஆத்மவிஷயக் ஞானமானது ஸித்திக்கிறதில்லை: அப்படிப்பட்டவனுக்குப் பாவனையுமில்லை: அப்படிப் பாவனை வரப்பெறாதவனுக்கு ஶாந்தியு முண்டாகிறதில்லை; ஶாந்தியில்லாதவனுக்குச் சுகம் எப்படிக் கிடைக்கும். (௬௬)

இந்த்ரியாணாம் ஹி சரதாம் யந்மநோऽநுவிதீயதே ।
ததஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுர்நாவமிவாம்பஸி || ௬௭ ||

(ப-ம்.) சரதாம் - விஷயங்களில் ப்ரவேசிக்கிற, இந்த்ரியாணாம் - இந்த்ரியங்களுக்கு, யத் மந: - எந்த மனமானது, அநுவிதீயதே - அநுஸரிப்பிக்கப்படுகிறதோ, தத் மந: - அந்த மனமானது, அஸ்ய ப்ரஜ்ஞாம் - இவன் புத்தியை, வாயு: - எதிர்காற்றானது, அம்பஸி நாவம் இவ - நீரில் ஓடத்தைப்போல், ஹரதி - அடித்துக்கொண்டு போகிறது. (௬௭)

(தா-ம்.) விஷயங்களில் சஞ்சரிக்கும் சுவபாவமுடைய இந்திரியங்களை (ஶா) சுகமில்லை எவன் மனது அனுசரித்துச் செல்கிறதோ, அப்படிப்பட்டவனுடைய மனதானது ஆத்மஜ்ஞானத்தில் போகிற புத்தியை ஜலத்தில் போகிற கப்பலை எதிர்க்காற்றானது திருப்புவதுபோல் தடுத்துத்திருப்பி விடுகிறது. (௬௭)

தஸ்மாத்யஸ்ய மஹாபாஹோ நிக்ருஹீதாநி ஸர்வஶ: ।
இந்த்ரியாணீந்த்ரியார்தேப்யஸ்தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா || ௬௮ ||

(ப-ம்.) தஸ்மாத் - ஆகையினால், ஹே மஹாபாஹோ - ஓ பெருந்தோளாய்! யஸ்ய - எவனுடைய, ஸர்வச: இந்த்ரியாணி - எல்லா இந்த்ரியங்களும், இந்த்ரியார்த்தேப்ய:-விஷயங்களினின்றும், ஸர்வச: - எல்லாப்ரகாரங்களாலும், நிக்ருஹீதாநி - விடுவிக்கப்படுகின்றனவோ, தஸ்ய - அவனுக்கு (த்தான்), ப்ரஜ்ஞா - பிரக்ஞை, ப்ரதிஷ்டிதா பவதி - நிலைபெற்றதாகிறது. (சஅ)

(தா-ம்.) ஓ! மாஹாபாஹோ! எவனுடைய இந்திரியங்கள் விஷயங்களிலிருந்து நன்றாய் விடுவிக்கப்படுகின்றனவோ, அவனுடைய புத்தியே நிலையுடையது. (சஅ)

யா நிசா ஸர்வபூதாநாம் தஸ்யாம் ஜாகர்தி ஸம்யமீ |
யஸ்யாம் ஜாக்ரதி பூதாநி ஸா நிசா பச்யதோ முநே:||சகூ||

(ப-ம்) யா-எந்த:—ஆத்மவிஷயமான புத்தியானது, ஸர்வபூதாநாம்.- எல்லாப் பிராணிகளுக்கும், நிசா - இரவோ, தஸ்யாம்- அதில், ஸம்யமீ - யோகியானவன், ஜாகர்தி - விழித்திருக்கிறான், யஸ்யாம் - எந்த (சப்தாதிவிஷய புத்தியில்) ஸர்வாணி பூதாநி - எல்லாப்பிராணிகளும், ஜாக்ரதி - விழித்திருக்கின்றனவோ, ஸா - அது, பச்யத: - (ஆத்மஞானியான, முநே:-முனிக்கு,நிசா - இரவு (ராத்திரிபோல்). (சகூ)

(தா-ம்.) எந்த ஆத்மக்ஞானம் (சாமானியரான) எல்லாப் பிராணிகளுக்கும் இரவுபோல் பிரகாசிக்கவில்லையோ, அப்படிப்பட்ட ஆத்மக்ஞானத்திலும் இந்திரியக் கட்டை யுடையவன் தெளிவுடன் பிரகாசிக்கிறான்; எந்தப் புத்தியில் எல்லாப் பிராணிகளும் பிரகாசிக்கின்றனவோ, அந்தப் புத்தியானது (ஈசுவரனிடத்தில் மனப்பற்றுடைய) முனிக்கு இரவுபோல் பிரகாசிக்காது. (சகூ)

ஆபூர்யமாணமசலப்ரதிஷ்டம் ஸமுத்ரமாப: ப்ரவிசந்தி யத்வத் | தத்வத்காமா யம் ப்ரவிசந்தி ஸர்வே ஸ சாந்திமாப்நோதி ந காமகாமீ ||எ0||

(ப-ம்.) யத்வத் - எப்படியானால், ஆபூர்யமாணம் - (தனக்குத்தானே)பூர்ணமாய்க்கொண்டு, அசலப்ரதிஷ்டம் - ஒரேமாதிரியாய் நிலைத்திருக்கும், ஸமுத்ரம் - கடலை, ஆப: ப்ரவிசந்தி - தண்ணீர் (நதிகள்)ப்ரவேசிக்கின்றனவோ, தத்வத்-அப்படியே, ஸர்வே காமா: - எல்லாககாமங்களும், யம் - இந்த யோகியை, ப்ரவிசந்தி- ப்ரவேசிக்கின்றனவோ, ஸ: எவ-அவன், சாந்திம் - வைராக்கியத்தை, ஆப்நோதி-அடைகிறான், காமகாமீ-விஷயந்தை யபேக்ஷிப்பவன், ந - சாந்தியை அடையமாட்டான். (எ0)

(தா-ம்.) தானாய் நிறைந்து தன்னிலையைக்கடவாத சமுத்திரத்தை; ஆற்றின் ஜலங்கள் எப்படிப் பிரவேசிக்கின்றனவோ, அதுபோல் எல்லாக்காமங்களும் ஆத்மக்ஞானத்தால் சந்துஷ்டனான, எவனை யடைகின்றனவோ அவன்தான், ஆத்மக்ஞானத்தாலுண்டாகிய திருப்தியை அடைகின்றான்; காமத்தில் விருப்பமுடையவன் சாந்தியை யடையமாட்டான். (௭௦)

𑌵𑌿𑌹𑌾𑌯 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌪𑍁𑌮𑌾𑌂𑌶𑍍𑌚𑌰𑌤𑌿 𑌨𑌿𑌃𑌸𑍍𑌪𑍃𑌹𑌃 |
𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑍋 𑌨𑌿𑌰𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌃 𑌸 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 || ௭௧ ||

(ப-ம்.) ய:புமாந் - எந்த புருஷன், ஸர்வாந் காமாந்-எல்லா விஷயங்களையும், விஹாய - விட்டு, நிஸ்ப்ருஹ: - ஆசையற்றவனும், நிர் மம: - மமகார மற்றவனும், நிரஹங்கார: - அஹங்காரமற்றவனும், சரதி - திரிகின்றானோ, ஸ: - அவன், சாந்திம் அதிகச்சதி - சாந்தியை அடைவான். (௭௧)

(தா-ம்,) எந்தப் புருஷன் சப்தாதிகளான எல்லா விஷயங்களையும்விட்டு அவற்றில் ஆசையும், மமதையும் மில்லாதவனும் இருக்கிறானோ அவன்தான் சாந்தியை அடைகிறான். (௭௧)

𑌏𑌷𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌨𑍈𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌵𑌿𑌮𑍁𑌹𑍍𑌯𑌤𑌿 |
𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇𑌽𑌪𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑌿 || ௭௨ ||

(ப-ம்.) ஹே பார்த்த! - ஓ பார்த்தனே! ஏஷா - இது, ப்ராம்ஹீ - பிரம்மத்தை யடைவிக்குமதான, ஸ்திதி:-(ஞாந) நிஷ்டை, ஏநாம் பராப்ய-இதையடைந்து, (புமாந்-புருஷன்), நவிமுஹ்யதி-மயக்கமுடன் (ஸம்ஸாரத்திலகப்படான்), அஸ்யாம் - இந்த (நிஷ்டையில்தானே), அந்தகாலே-அந்தரூபமான, ப்ரஹ்ம நிர்வாணம் (தன்) ஆத்மாவை, ருச்சதி - அடைகிறான். (௭௨)

(தா-ம்.) ஓ! அர்ஜுனா! இந்தப்பற்றில்லாத ஸ்திதியே ப்ரஹ்மத்தை யடையச் செய்கிறது. இந்த ஸ்திதியை அடைந்தவன் ஸம்சாரத்தை யடையமாட்டான். நீ இந்த ஸ்திதியிலேயே கடைசிவரையிலு மிருந்தால் நித்தியானந்த ரூபமாகிய பிரஹ்மத்தை அடைவாய். (௭௨)

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌃 ||

மூன்றும் அத்தியாயம்.

அர்ஜ்ஜுன வாக்கியம்.

𑌜𑍍𑌯𑌾𑌯𑌸𑍀 𑌚𑍇𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌣𑌸𑍍𑌤𑍇 𑌮𑌤𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 |
𑌤𑌤𑍍𑌕𑌿𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌘𑍋𑌰𑍇 𑌮𑌾𑌂 𑌨𑌿𑌯𑍋𑌜𑌯𑌸𑌿 𑌕𑍇𑌶𑌵 || ௧ ||

(ப-ம்.) ஹே ஜநார்தந - ஓ கிருஷ்ணா! கர்மண: - கர்மத்தைக்காட்டிலும், புத்தி - ஞாநநிஷ்டையானது, ஜ்யாயஸீ-சிரேஷ்டை(யென்று), தே மதா சேத் - உமது திருவுள்ளமானால், தத்-அப்பொழுது, ஹே கேசவ - ஓ கேசவனே, கோரே - பயங்கரமான, கர்மணி - கருமத்தில், மாம் - என்னை, கிம் நியோஜயஸி - ப்ரவர்த்திக்கச் செய்கிறாய்? (௧)

(தா-ம்.) ஓ! கிருஷ்ணா! கர்மத்தைக்காட்டிலும் க்ஞானமே சிறந்ததன்று. உமக்கு திருவுள்ளமானால் ஹே! கேசவா! ஏன் என்னை பயங்கரமான கர்மத்தில் பிரவேசிக்கச் செய்கிறீர். (௧)

𑌵𑍍𑌯𑌾𑌮𑌿𑌶𑍍𑌰𑍇𑌣𑍇𑌵 𑌵𑌾𑌕𑍍𑌯𑍇𑌨 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌮𑍋𑌹𑌯𑌸𑍀𑌵 𑌮𑍇 ।
𑌤𑌦𑍇𑌕𑌂 𑌵𑌦 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌯 𑌯𑍇𑌨 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌹𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌮𑍍 ॥ ௨ ॥

(ப-ம்.) வ்யாமிஸ்ரேண - கலப்பான, வாக்யேந - வாக்கியத்தினால், மே புத்திம் - என்மனதை, மோஹயஸி இவ-மோஹிக்கச்செய்கிறாயென்று தோன்றுகின்றது; தத் - ஆகையால், ஏகம்-ஒரு(வார்த்தையாய்), வத - சொல்லும்; யேந-எதினால், அஹம் நிச்சித்ய - நான் நிச்சயித்துக்கொண்டு, ஸ்ரேய: - பரமபுருஷார்த்தத்தை, ஆப்நுயாம் - அடைவேன். (௨)

(தா-ம்.) சந்தேகமாயிருக்கிற வார்த்தையால், என்புத்தியை மோகிக்க செய்கிறீர்போல் தோன்றுகிறது. எதனால் நான் நன்மையை அடைவேனோ, அப்படிப்பட்ட ஒன்றையே நிச்சயம் செய்து சொல்லும். (௨)

ஸ்ரீகிருஷ்ணவாக்கியம்.

𑌲𑍋𑌕𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌾 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌪𑍁𑌰𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌮𑌯𑌾𑌨𑌘 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑍇𑌨 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍇𑌨 𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌮𑍍 ॥ ௩ ॥

𑌨 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑌨𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌨𑍍𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌽𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 ।
𑌨 𑌚 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑌨𑌾𑌦𑍇𑌵 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌸𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥ ௪ ॥

(ப-ம்) ஹே அநக - ஓ குற்றமற்றவனே! அஸ்மிந்லோகே - இவ்வுலகத்தில், மயா - என்னால், த்வி விதா - இரண்டு விதமான, நிஷ்டா - நிஷ்டை, புரா - முன்னே, ப்ரோக்தா - சொல்லப்பட்டது, ஸாங்க்யாநாம்-ஞானமோதிகாரிகளுக்கு, ஜ்ஞாநயோகேந-ஞானயோகத்தாலும், யோகிநாம் - கர்மயோகாதி காரிகளுக்கு, கர்மயோகேந - கருமயோகத்தாலும், இதி - என்று, புருஷ: - புருஷன், கர்மாணாம் - கருமங்களை, அநாரம்பாத் - ஆரம்பியாமற்போவதினாலேயே, நைஷ்கர்ம்யம் - ஞாநநிஷ்டையை, நாச்நுதே-அடைகிறதில்லை; ஸந்யஸநாத் ஏவ - விட்டுவிடுவதனாலேயே, ஸித்திம் - நிஷ்டையை, நஸமதிக்ச்சதி ச - அடையமாட்டான்.(௩-௪)

(தா-ம்.) ஓ, தோஷமற்றவனே! முன்னாலேயே, இவ்வுலகத்தில் ஞானயோகத்தால் சாங்கியர்களுக்கும், கர்ம யோகத்தால் யோகிகளுக்கும், இரண்டு நிஷ்டைகள் என்றால் சொல்லப்பட்டிருக்கின்றன. புருஷன் கர்மங்களை ஆரம்பிக்காமலிருப்பதினால் மாத்திரம் ஞானநிஷ்டையை யடையமாட்டான். ஆரம்பித்த கர்மத்தை விடுவதினாலேயே சித்தியை "மோக்ஷத்தை" அடையமாட்டான். (௩) நிஷ்டா - அநுஷ்டான கர்மத்தை. (ந-ஃ)

நஹி கஶ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத் |
கார்யதே ஹ்யவஶ: கர்ம ஸர்வ: ப்ரக்ருதிஜைர்குணை: || ௫ ||

(ப-ம்.) கஶ்சித்-எவனும், ஜாது-ஒருக்காலும், க்ஷணம் அபி-ஒரு க்ஷணமும், அகர்ம க்ருத்-கருமத்தைச் செய்யாதவனாய், ந திஷ்டதி ஹி - இருக்கிறானில்லை யன்றோ? ஹி - யாதொரு காரணத்தால், ஸர்வோபி - எல்லா புருஷனும், ப்ரக்ருதிஜை: - பிரகிருதியாலுண்டான குணை: - குணங்களால், அவஶ: - பரவசனாய்க்கொண்டு, கர்ம - கருமத்தை, கார்யதே - செய்விக்கப்படுகிறான். (௫)

(தா-ம்.) இவ்வுலகில் எவனாவது, எந்த காலத்திலாவது, க்ஷணங்கூட கர்மஞ்செய்யாமலிருக்கமாட்டான். ஒவ்வொருவரும் பிரகிருதி குணத்தால் சுவாதீனமில்லாதவர்களாய் (பலவந்தமாய்) கர்மத்தை செய்விக்கப் படுகிறார்கள். (௫)

கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மனஸா ஸ்மரன் |
இந்த்ரியார்த்தான் விமூடாத்மா மித்யாசார: ஸ உச்யதே || ௬ ||

(ப-ம்.) ய: - எவன் (ஞானயோகத்திலிருந்தவன்), கர்ம இந்த்ரியாணி - கருமேந்திரியங்களை, ஸம்யம்ய - அடக்கி, விமூடாத்ம - ஸ்வரூப ஞானமின்றி, மநஸா-மனதினால், இந்த்ரியார்த்தாந் - இந்த்ரிய விஷயங்களை, ஸ்மரந் - நினைத்துக்கொண்டு, ஆஸ்தே - இருக்கிறானோ, ஸ: - அவன், மித்யாசார:-பொய்யாசாரக்காரன், (இதி-என்று) உச்யதே - சொல்லப்படுவான். (௬)

(தா-ம்.) எவன் கர்மேந்த்ரியங்களைக் கட்டி மனதில் விஷயங்களை நினைத்துக்கொண்டிருக்கிறானோ, அப்படிப்பட்டவன் கள்ளாசாரமுடையவனென்று சொல்லப்படுகிறான். (௬)

யஸ்த்விந்த்ரியாணி மனஸா நியம்யாரபதேர்ஜுன |
கர்மேந்த்ரியை: கர்மயோகமஸக்த: ஸ விஶிஷ்யதே || ௭ ||

(ப-ம்.) ஓ அர்ஜுந-ஹே அர்ஜுனா! ய: து - எந்தக்ருஷ்ணனால், இந்த்ரியாணி - இந்த்ரியங்களை, மநஸா நியம்ய - மனதினால் அடக்கி, அஸக்த: - பலாபேக்ஷையற்றவனாய், கர்மேந்த்ரியை: - கர்மேந்த்ரியங்களால், கர்மயோகம் - கர்மயோகத்தைச்(செய்ய),

ஆரபதே-தொடங்குகிறானோ! ஸ: விசிஷ்யதே - அவன் சிறந்தவனாகிறான். (௭)

வாராய் அர்ஜுனா! யாதொருவன் இந்திரியங்களை மனதால் கட்டி கர்மேந்திரியங்களினால், பலத்தில் ஆசைவைக்காமல் கர்மயோகத்தை ஆரம்பிக்கிறானோ அவனே சிரேஷ்டனாகிறான். (௭)

𑌨𑌿𑌯𑌤𑌂 𑌕𑍁𑌰𑍁 𑌕𑌰𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌜𑍍𑌯𑌾𑌯𑍋 𑌹𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 ।
𑌶𑌰𑍀𑌰𑌯𑌾𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌚 𑌤𑍇 𑌨 𑌪𑍍𑌰𑌸𑌿𑌧𑍍𑌯𑍇𑌦𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 ‖ ௮ ‖

(ப-ம்.) த்வம்-நீ, நியதம் கர்ம - வகுத்த (நித்திய நைமித்திகாதி) கருமத்தை, குரு - செய், ஹி-ஏனென்றால்:—அகர்மண:-ஞானயோகத்தைக் காட்டிலும், கர்ம - (பலாபேக்ஷையற்ற) கருமமே, ஜ்யாய:-ச்ரேஷ்டம்; கிஞ்ச - மேலும், அகர்மண:-கருமத்தை விட்ட, தே - உனக்கு, சரீர யாத்ராபி-(ஞானஸம்பாதனத்துக்கு உபயோகமான) தேஹ காரணமும், ந ப்ரஸித்யேத்-ஸித்திக்கமாட்டாது. (௮)

(தா-ம்.) நீ ப்ரக்ருதி சம்பந்தத்தை, விடாமல் காமத்தைச் செய்யக்கடவாய்;ஞானத்தைக்காட்டிலும் கர்மமேஉத்தமமானது. ஞானநிஷ்டையை அடைபவனுக்கு (அதற்குபயோகமான சரீர சம்ரக்ஷணை கூடசித்திக்கமாட்டாது. (௮)

𑌯𑌜𑍍𑌞𑌾𑌰𑍍𑌥𑌾𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌲𑍋𑌕𑍋𑌽𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮𑌬𑌨𑍍𑌧𑌨𑌃 ।
𑌤𑌦𑌰𑍍𑌥𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑌙𑍍𑌗𑌃 𑌸𑌮𑌾𑌚𑌰 ‖ ௯ ‖

(ப-ம்.) யஜ்ஞார்த்தாத் - விஷ்ணுவாராதனரூபமான, கர்மண: - கருமத்தைக் காட்டிலும், அந்யத்ர - மற்ற காம்ய(கருமங்களில்), அயம் லோக:-இந்த ஜனனமானது, கர்ம பந்தந:-கருமத்தை பந்தகமாக உடையது; ஹே கௌந்தேய-ஓ அர்ச்சுனா! ததர்த்தம்-அந்த விஷ்ணுவாதாரமான, கர்ம-கருமத்தை, முக்தஸங்க:-பலாபேக்ஷையைவிட்டு, ஸமாசர - செய். (௯)

(தா-ம்) இவ்வுலகத்திற்கு யஞ்ஞார்த்தமானகர்மத்தைக்காண்டிலும், வேறுவிதமான (தன்பிரயோஜனமான) கர்மம்! பந்தத்தை யுண்டுபண்ணுகிறது (பந்தம் ஸம்ஸாரத்தை யுண்டாக்குகிறது) ஓ குந்திஸுதனே! யஞ்ஞத்தில் உபயோகமாகிய கர்மத்தையும் பலாபேக்ஷையில்லாமல் செய். (௯)

𑌸𑌹𑌯𑌜𑍍𑌞𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑍁𑌰𑍋𑌵𑌾𑌚 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃 ।
𑌅𑌨𑍇𑌨 𑌪𑍍𑌰𑌸𑌵𑌿𑌷𑍍𑌯𑌧𑍍𑌵𑌮𑍇𑌷 𑌵𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌷𑍍𑌟𑌕𑌾𑌮𑌧𑍁𑌕𑍍 ‖ ௧௦ ‖

(ப-ம்.) ப்ரஜாபதி:-பரமாத்மா, புரா-முன்பு, ஸஹ யஜ்ஞா:-யக்ஞங்களோடு கூடிய, ப்ரஜா:-பிரஜைகளை, ஸ்ருஷ்ட்வா - படை

த்து, ஹே ப்ரஜா: - ஓ பிரஜைகளே! அநேந - இந்தயக்ஞத்தால், ப்ரஸவிஷ்யத்வம் - விருத்தி அடையுங்கள்; ஏஷ: - இது, வ: - உங்களுக்கு, இஷ்ட காம துக் அஸ்து - இஷ்டமான பயன்களை நிறைக்கட்டும், (இதி உவாச - என்று சொன்னார். (கo)

(தா-ம்) சிருஷ்டி காலத்தில், ஸர்வேஸ்வரன் யஞ்ஞங்களுடன் பிரஜைகளை (ஜீவான்மாக்களை) தோன்றுவித்து, ஜீவர்காள், இந்த யக்ஞங்கள் உங்கள் அபீஷ்டத்தை (மோக்ஷத்தை) கொடுக்கக்கடவது என்று அருளினார். (கo)

𑌦𑍇𑌵𑌾𑌨𑍍𑌭𑌾𑌵𑌯𑌤𑌾𑌨𑍇𑌨 𑌤𑍇 𑌦𑍇𑌵𑌾 𑌭𑌾𑌵𑌯𑌨𑍍𑌤𑍁 𑌵𑌃 ।
𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌂 𑌭𑌾𑌵𑌯𑌨𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌪𑌰𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌥 ॥ கக ॥

(ப-ம்.) ஹேப்ரஜா:-ஓ பிரஜைகளே! அநேந-இந்த (யக்ஞத்)தால், தேவாந் - தேவர்களை, பாவயத-ஆராதியுங்கள்; தே தேவா:- அத்தேவர்கள், வ: பாவயந்து - உங்களை போஷித்துக் கொண்டிருப்பார்களாக, பரஸ்பரம் - ஒருவர்க்கொருவர், பாவயந்த: - உபகரித்துக்கொண்டு, பரம்ஸ்ரேய: - மேலான க்ஷேமத்தை, அவாப்ஸ்யத - அடையுங்கள். (கக)

(தா-ம்.) யக்ஞத்தால் தேவர்களை திருப்திசெய்வீர்களானால், அவர்கள் உங்களை இரக்ஷிக்கக்கடவர்கள். இவ்விதம் பரஸ்பரம் விருத்தி பண்ணிக்கொண்டு நீங்கள் மேலான சிரேயஸ்ஸை (மோக்ஷத்தை) அடைவீர்கள். (கக)

𑌇𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌭𑍋𑌗𑌾𑌨𑍍𑌹𑌿 𑌵𑍋 𑌦𑍇𑌵𑌾 𑌦𑌾𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌯𑌜𑍍𑌞𑌭𑌾𑌵𑌿𑌤𑌾𑌃 ।
𑌤𑍈𑌰𑍍𑌦𑌤𑍍𑌤𑌾𑌨𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑍈𑌭𑍍𑌯𑍋 𑌯𑍋 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 𑌸𑍍𑌤𑍇𑌨 𑌏𑌵 𑌸𑌃 ॥ கஉ ॥

(ப ம்.) யஜ்ஞ பாவிதா: - யக்ஞத்தால் ஆராதிக்கப்பட்ட, தேவா:-தேவர்கள், வ: - உங்களுடைய, இஷ்டாந்-இஷ்டமான, போகாந் - போகங்களை, தாஸ்யந்தே - கொடுக்கப் போகிறார்கள்; தை: தத்தாந் - அவர்களால் கொடுக்கப்பட்டவைகளை, ஏப்ய: அப்ரதாய - இவர்களுக்குக் கொடாமல், ய: புங்க்தே - எவன் புசிக்கிறானோ, ஸ: ஸ்தேந ஏவ - அவன் திருடனே யாவான். (கஉ)

(தா-ம்.) யக்ஞத்தால் புஜிக்கப்பட்ட தேவர்கள், (மேன்மேலும் தம்மாராதனத்திற் குபயோகப்படும்படி) உங்களுக்கிஷ்டமான, போகங்களைக் கொடுப்பார்கள். அவர்கள்கொடுத்த போகங்களை, அவர்களுக்குக்கொடாமல் (அவர்களைப் பூஜிக்காமல்) தானே புசிப்பவனெவனோ அவனே திருடன். (கஉ.)

𑌯𑌜𑍍𑌞𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌶𑌿𑌨𑌃 𑌸𑌨𑍍𑌤𑍋 𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑍈𑌃 ।
𑌭𑍁𑌞𑍍𑌜𑌤𑍇 𑌤𑍇 𑌤𑍍𑌵𑌘𑌂 𑌪𑌾𑌪𑌾 𑌯𑍇 𑌪𑌚𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑌾𑌰𑌣𑌾𑌤𑍍 ॥ கங ॥

(ப-ம்.) யக்ஞ சிஷ்ட சிநஃ - (பரமபுருஷாராதனமான) யாகத்தில் மீதியை புசிப்பவர்களான, ஸந்தஃ-ஸத்துக்கள் ஸர்வ கில்பிஷைஃ-ஆத்மஜ்ஞாநத்துக்கு ஸகல பாவங்களாலும், முச்யந்தே - விடுபடுகிறார்கள்; யேது - எவர்களானால், ஆத்ம காரணாத் - ஆத்மார்த்தமாக, பசந்தி - பாகம் செய்கிறார்களோ, தே பாபாஃ-அப்பாவிகள், அகம் - பாவத்தை, புஞ்ஜதே - அநுபவிக்கிறார்கள். ()

(தா-ம்.) "பகவதாராதனரூபமாகிய" யக்ஞத்தைச் செய்து, அதின் மிச்சத்தை புசிக்கின்ற சத்புருஷர்கள், (ஆத்மஞானவிரோதிகளால்) எல்லா பாபங்களில் நின்றும் விடுபடுகிறார்கள். தனக்காகவே (பகவதாராதனத்திற்கென்று நினைக்காமல்) சமையல் செய்பவர்களெவர்களோ, அந்த பாபிகள் பாபத்தையே புசிக்கிறார்கள். இந்த போஜனம் பாபரூபமாய் முடிவதினால், அது பாபமாகவே சொல்லப் படுகிறது. அப்படிப்பட்டவர்கள் ஆத்ம ஞானமில்லாமல், நரகத்திற் கிடமாவார்கள் என்று கருத்து. (௧௩)

அன்னாத்பவந்தி பூதாநி பர்ஜந்யாதன்னஸம்பவஃ |
யஜ்ஞாத்பவதி பர்ஜந்யோ யஜ்ஞஃ கர்மஸமுத்பவஃ || ௧௪ ||

(ப - ம்.) அந்தாத் - அன்னத்தால், பூதாநி-ஸகலப் பிராணிகளும், பவந்தி - உண்டாகின்றன; அந்ந ஸம்பவஃ - அன்னம் உண்டாகிறது, பர்ஜந்யாத்-மழையினால், பர்ஜந்யஃ-மேகத்தின்மூலமாய் மழையானது, யஜ்ஞாத்-யஜ்ஞத்தினின்றும்; யஜ்ஞஃ-யஜ்ஞமோ, கர்ம ஸமுத்பவஃ-கருமத்தினின்றுமுண்டானது. (சக)

(தா - ம்.) அன்னத்தில் நின்றும் பிராணிகளுண்டாகிறது கள். வருஷத்தில் நின்றும் அன்னமுண்டாகிறது. யக்ஞத்தில் நின்றும் வருஷமுண்டாகிறது. கன்மத்தில் நின்றும் யக்ஞமுண்டாகிறது. (௧௪)

கர்ம ப்ரஹ்மோத்பவம் வித்தி ப்ரஹ்மாக்ஷரஸமுத்பவம் |
தஸ்மாத்ஸர்வகதம் ப்ரஹ்ம நித்யம் யஜ்ஞே ப்ரதிஷ்டிதம் ||௧௫||

(ப-ம்.) கர்ம-அக்ஷரமென்று சொல்லப்படுகிற கருமமானது ப்ரஹ்ம உத்பவம்-(பிரகிருதி பரிணாமரூபமான) சரீரத்தாலுண்டானதென்று, வித்தி-அறி; ப்ரஹ்ம-சரீரமானது, அக்ஷர ஸமுத்பவம்-ஜீவனால் உண்டானது; தஸ்மாத் - ஆகையால், ஸர்வ கதம்-ஸர்வ புருஷார்த்தங்களுக்கும் ஸாதகமான, ப்ரதிஷ்டிதம் - நின்றிருக்கின்றது யஜ்ஞத்துக்கு மூலமாயிருக்கின்றது. (௧௫)

(தா-ம்.) பிரஹ்ம (பிரகிருதிவிகார ரூபமான சரீரம்) த்தில் நின்றும் கர்மமுண்டாகிறது. அந்த சரீரம் அக்ஷரமென்று சொல்லப்படுகிற ஜீவாத்மாவில் நின்றுமுண்டாகின்றது (என்பதுவல்

ஜீவனில்லாத சரீரம் எவ்வித் கர்மத்துக்கு முபயோகப் படாதாகையால் சன்மத்திற்குச் சாதனமாகிய சரீரம் ஜீவாத்மாவினிடத்திலேயே உண்டாகின்றதெப்படி) ஆகையால் எலேலாரிடத்திலும் வியாபித்திருக்கிற பிரகிருதி ரூபமான சரீரம் எப்பொழுதும் யக்ஞத்தையே ஆதாரமாயுடையது. (கரு)

𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌂 𑌚𑌕𑍍𑌰𑌂 𑌨𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌯𑌤𑍀𑌹 𑌯𑌃 |
𑌅𑌘𑌾𑌯𑍁𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑌾𑌮𑍋 𑌮𑍋𑌘𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸 𑌜𑍀𑌵𑌤𑌿 || கசு ||

(ப-ம்.) ஹே பார்த்த - வாராய் அர்ச்சுனா! ஏவம் - இந்தப் பிரகாரம், ப்ரவர்திதம் - (பரமபுருஷனால்) ஏற்படுத்தப்பட்ட, சக்ரம் - சக்கிரத்தை, இஹ - லோகத்தில், யஃ எவன், நாநுவர்தயதி - பிரவர்த்திப்பிக்கிற தில்லையோ, ஸஃ - அவன், அகாயுஃ-பாப (ஸ்வரூபமான) ஜீவனமுடையவன், இந்த்ரிய ஆராமஃ-இந்த்ரியங்களால் ரமித்துக்கொண்டு, மோகம் - வியர்த்தமாய், ஜீவதி-ஜீவிக்கிறான். (கசு)

(தா-ம்,) இப்படி உண்டுபண்ணப் பட்டிருக்கிற இச்சக்கிரத்தை, எவன் அநுசரிக்க வில்லையோ, அப்படிப்பட்டவன் பாபத்திற்கிடமாகிய ஆயுளையுடையவன். இந்திரியங்களே இவனுக்கு யோகஸ்தானங்கள். ஓ பார்தா! ஆத்மார்த்தமான, ஞானயோகாதி கன்மங்களில் விடாமுயற்சியாகவிருந்து நற்பயனையடையாதவன் வீணாகப்பிழைத்திருக்கிறான். (கசு)

𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌰𑌤𑌿𑌰𑍇𑌵 𑌸𑍍𑌯𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑌤𑍃𑌪𑍍𑌤𑌶𑍍𑌚 𑌮𑌾𑌨𑌵𑌃 |
𑌆𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌵 𑌚 𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 || கஎ ||

(ப-ம்.) யஃது மாநவஃ-எந்த மனிதனால், ஆத்மரதிரேவ-தனக்குள்ளே ரமித்துக்கொண்டும், ஆத்ம த்ருப்தஃ-ஆத்மாவில்தானே திருப்தியடைந்தும், ஆத்மந்யேவ ஆத்மா, ஸந்துஷ்டச-ஸந்தோஷமுற்றவனாயும், ஸ்யாத-ஆவனோ, தஸ்ய-அவனுக்கு, கார்யம்-செய்யவேண்டுவது, நவித்யதே-ஸாதன (ஒன்று)மில்லை. (கஎ)

(தா-ம்) யாதொருவ னானவே ஆத்மவிலாசமுண்டாய் (அன்னபானாதிகளி லாசையில்லாமல் ஆத்மாவினிடத்திலேயே சுகமடைந்திருக்கிறானோ, அப்படிப்பட்டவனுக்கு ஆத்மஞானத்தின் பொருட்டுசெய்யவேண்டிய ஸாதனமொன்றுமில்லை. (கஎ)

𑌨𑍈𑌵 𑌤𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑍇𑌨𑌾𑌰𑍍𑌥𑍋 𑌨𑌾𑌕𑍃𑌤𑍇𑌨𑍇𑌹 𑌕𑌶𑍍𑌚𑌨 |
𑌨 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑌰𑍍𑌥𑌵𑍍𑌯𑌪𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 || கஅ ||

(ப-ம்.) தஸ்ய-அவனுக்கு, க்ருதேந-செய்யப்பட்ட, கர்மணா-கருமத்தால், அர்த்தஃ - பிரயோஜனம், ந ஏவ-இல்லை; அக்ருதேந - செய்யப்படாததினால், கஃசந-யாதொரு, அனர்த்தஃச ந-கேடுமில்லை,

இஹ - லோகத்தில், அஸ்ய - இவனுக்கு, ஸர்வ பூதேஷு - ஸகல பூதங்களிலும், அர்த்த வ்யபாஶ்ரயஃ - (ஒரு) ப்ரயோஜனத்துக் காகப் பற்றவேண்டியதாய், கஶ்சித் - யாதொரு, பதார்த்தஃ அபி - வஸ்துவும், ந ச - இல்லை. (௧௮)

(தா-ம்) அப்படிப்பட்டவனுக்கு (தானாகவே ஆத்ம தரிசன முடையவனுக்கு) ஆத்ம தரிசனத்திற்காக ஸ்தானஞ்செய்தபோதிலும் செய்யாமலிருந்தபோதிலும் எவ்வித சாதகமுமில்லை, பாதகமுமில்லை. அவனுக்கு ஆத்மாவைக்காட்டிலும் வேறு ப்ரகிருதி விகாரமான வஸ்துக்களெல்லாவற்றிலும் பிரயோஜன ரூபமாகிய விஷமேதுமில்லை. (ஆகையாலதுகளை விலக்கத்தக்க ஸ்தானம் அப்படிப்பட்டவனுக்கு நிஷ்பலமென்படி.) (௧௮)

தஸ்மாதஸக்தஸ்ஸததம் கார்யம் கர்ம ஸமாசர |
அஸக்தோ ஹ்யாசரந்கர்ம பரமாப்நோதி பூருஷஃ || ௧௯ ||

(ப-ம்.) தஸ்மாத் - ஆகையால், அஸக்தஃ - ஒட்டாமலிருந்து கொண்டு, ஸததம் - எப்போதும், கார்யம் - (அவசியம்) செய்ய வேண்டிய, கர்ம ஸமாசர - கருமத்தைச்செய், அஸக்தஃ - பற்றில்லாதவனாய், கர்ம ஆசரந் - கருமஞ்செய்யும், புருஷஃ - புருஷன், பரம் - பரமாத்துமாவை, ஆப்நோதி - அடைகிறான். (௧௯)

தா-ம். ஆகையால் (தானாயாத்மஜ்ஞான முண்டானவனுக்கு மாத்திரம் ஸாதனத்தைத் தேடவேண்டியதில்லை) ஸாதனுபேக்ஷையை யுடையவனுக்கு, ஆத்மஜ்ஞானத்தோடு கூடிய கர்மயோகமே சுகமான ஸாதனம். பலத்திலாசை யில்லாதவனாய் எப்பொழுதும் கர்மத்தைச்செய். பலத்திலாசை யில்லாமல், கர்மத்தைச் செய்பவன் ஆத்மாவையடைந்து விடுகின்றான். (௧௯)

கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதயஃ |
லோகஸங்க்ரஹமேவாபி ஸம்பஶ்யந்கர்துமர்ஹஸி || ௨௦ ||

(ப-ம்.) ஜநகாதயஃ - ஜநகர் முதலானோர், கர்மணைவ - கர்மயோகத்தாலேயே, ஸம்ஸித்திம்- (மோக்ஷரூப) ஸித்தியை, ஆஸ்த்திதாஃ - அடைந்தார்கள்; ஹி - அல்லவா? லோக ஸங்க்ரஹம்- ஜனங்களுக்கு (தர்மப் பிரவர்த்தன ரூபமான) அனுக்கிரகத்தை, ஸம்பஶ்யந் அபி - (தன்பயனைக்) பார்த்தாவது, கர்துமேவ அர்ஹஸி - செய்வதற்கு யோக்யனாகவிருக்கிறான். (௨௦)

(தா-ம்.) கர்மயோகத்தினாலேயே ஜனகர் முதலானவாள் ஆத்மதிருப்தி ரூபமாகிய சித்தியை யடைந்தார்கள். உலக நடவடிக்கையைத் தள்ளக்கூடா தென்பதையோ சிந்தித்து, நீ கர்மத்தைச் செய்யத்தக்கவன். (௨௦)

யத்யதாசரதி ச்ரேஷ்டஸ்தத்ததேவேதரோ ஜந꞉ ।
ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்ததநுவர்த்ததே ॥ உக ॥

(ப-ம்) ச்ரேஷ்ட꞉ - பிரஸித்த (புருஷன்), யத் யத் கர்ம - எந் தெந்த கருமத்தை, ஆசரதி - செய்கிறானோ, இதர꞉ - முழுது ந்தெரிந்ததல்லாத, ஜந꞉ - ஜனமும், தத் தத் ஏவ - அவ் வவற்றை யே, (ஆசரதி) - செய்கிறது; ஸ꞉ - அந்தச் (சிரேஷ்டன்), யத் ப்ரமாணம் - எவ்வளவு அங்கதோடு, குருதே - செய்கிறானோ, லோக꞉ - (இதர) ஜனமும, தத ஏவ - அவவளவு அங்கதோடு கூடியே, அநுவர்த்தே - அநுட்டிக்கின்றது. (உக)

(தா-ம்.) ஞானநுஷ்டானததிற் சிறநதவனெதைச செய்கிறானோ அதையேதான மறறவாகளும செய்வார்கள. அவனெப பிரமாணததைக் கொண்டு கர்மததைச செய்கிறானோ, அவைக ளெல்லாவற்றையும உலகமநுசரிக்கும், ஞானவான்கூட உலகத் திற்காக கர்மததைச செய்யவேண்டியதென்று கருதது. (உக)

ந மே பார்தாஸ்தி கர்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சந ।
நாநவாப்தமவாப்தவ்யம் வர்த்த ஏவ ச கர்மணி ॥ உஉ ॥

(ப-ம.) ஹே பார்த்த! - ஓ அர்ச்சுனா! மே - எனக்கு, கர்தவ்யம - செய்யவேண்டும கருமம, நாஸ்தி-இல்லை; த்ரிஷு லோகேஷு-மூவுலகங்களிலும, அநவாப்தம - அடையப்படாததும், அவாப்தவ்யம - அடையவேண்டுவதும, கிஞ்சந - கொஞ்சமும் இல்லை (அப்படியிருக்கச்செய்தே,) கர்மணி - கருமத்தில், வர்த்த ஏவ - இருக்கவே இருக்கிறேன். [அநுட்டிக்கிறே னென்றபடி.] (உஉ)

(தா-ம.) ஓ பரதனே! ஸர்வேச்வரனாயும், அவாப்த ஸமஸ்த காமனாயும், ஸர்வஜ்ஞனாயுமிருக்கிற எனக்கு இம்மூவ்வுலகிலும் செய்யததக்கதது கொஞசமாவது இல்லை. இதுவரையிலு மடையாமல் (காமததால) கர்மததிலேயே இருக்கின்றேன். (உஉ)

யதி ஹ்யஹம் ந வர்த்தேயம் ஜாது கர்மண்யதந்த்ரித꞉ ।
மம வர்த்மாநுவர்த்தந்தே மநுஷ்யா꞉ பார்த்த ஸர்வச꞉ ॥ உங ॥

(ப-ம்.) ஹே பார்த்த! - வாராய் பார்த்தனே! அஹம்-நான், ஜாது - ஒருககால, அதந்த்ரித꞉ - ஆலஸ்யமில்லாதவனாய், கர்மணி - கர்மத்தில், நவர்த்தேயம யதி - இல்லாமற் போவேனே யாகிலும், ஸர்வச꞉ மநுஷ்யா꞉ - எல்லாமனுஷ்யரும், மம - என்னுடைய, வர்த்ம - மார்க்கத்தை, அநுவர்த்தந்தே - அநுஸரிப்பார்கள். (உங)

(தா-ம்.) ஓ பார்த்த! சர்வேஸ்வரனை யான் - ஒரு வேளை [illegible]; சோம்பலில்லாமல் (அந்தந்த ஜாதிக்குரிய) [illegible]

விருப்பேனேயாகில் மனிதர்கள எவ்விதத்திலும் என்வழியை அநுசரித்து விடுவார்கள். (உ௩)

உத்ஸீதேயுரிமே லோகா ந குர்யாம் கர்ம சேதஹம் |
ஸங்கரஸ்ய ச கர்த்தா ஸ்யாமுபஹந்யாமிமா: ப்ரஜா: ||உச||

(ப-ம்.) அஹம் - நான், கர்ம-(குலோசிதமான) கருமத்தை, நகுர்யாம சேத் - செய்யேனே யாகில, இமே லோகா: - இப்பிராணிகள், உத்ஸீதேயு: - நசித்துப்போவார்கள்; ஸங்கரஸ்ய - அவ்யவஸ்தைக்கும், கர்த்தா ஸ்யாம - கர்த்தா வாகுவேன்; இமா: ப்ரஜா: - இந்தப் பிரஜைகளை, உபஹந்யாம - கெடுத்தவனுவேன். ()

(தா-ம்.) யான் ஜாதிக்குரிய காமத்தைச் செய்யாமற் போவேனேயாகில, உலகமெல்லாம். கெட்டுவிடும். ஜாதிபேதமில்லாத ஸாங்கரியத்தையு முண்டு பண்ணினவனுகிறேன்; இந்த ஜனங்களைக் கெடுத்தவனுகவுமாகிறேன். (உச)

ஸக்தா: கர்மண்யவித்வாம்ஸோ யதா குர்வந்தி பாரத |
குர்யாத்வித்வாம்ஸ்ததாஸக்தஸ்சிகீர்ஷுர்லோகஸங்க்ரஹம் ||உரு||

(ப-ம.) அவித்வாம்ஸ: - அற்பஞானிகள், காமணி - கருமத்தில், ஸக்தாஸ்ஸந்த: - பற்றின வர்களாய, யதா குர்வந்தி - எப்படிச் செய்கிறார்களோ, ததா - அப்படி, வித்வாந் - ஆத்மஞானியும், அஸக்த: - பற்றில்லாதவனுய; லோக ஸங்க்ரஹம - லோக அநுக்கிரஹத்தை, சிகீர்ஷு: - செய்யக்கோரியவனுய், குர்யாத் - (கர்ம யோகம) செய்யக்கடவன. (உரு)

(தா-ம்.) ஓ பாரதவம்சத்திற் பிறந்தவனே! ஆத்ம ஞானமில்லாத அவித்துவான்கள் காமத்தில் அதிகார முள்ளவர்களாய் கர்மயோகத்தையே ஆத்மதரிசனத்திற்குச் சாதனமாகவெண்ணி எப்படிச் செய்துவருகிறார்களோ' அப்படியே (ஆத்மஸ்வரூபத்தை நன்றாயறிந்து காமயோக மவசியமில்லாத ஞானயோகாதிகாரியான) வித்துவானும, உலக க்ஷேமத்திற்காகக் கர்மயோகத்தைச் செய்யவேண்டும. (உரு)

ந புத்திபேதம் ஜநயேதஜ்ஞாநாம் கர்மஸங்கிநாம் |
ஜோஷயேத்ஸர்வகர்மாணி வித்வாந் யுக்த: ஸமாசரந் ||உசு||

(ப-ம்.) அஜ்ஞாநாம - ஆத்மஞான ஹீனர்களான, கர்ம ஸங்கிநாம் - கருமாதிகாரிகளுக்கு, புத்தி பேதம-புத்தி வித்தியாஸத்தை, ந ஜநயேத்-உண்டுபண்ணக்கடவனல்லன;வித்வாந்-ஞானியா (யிருந்தபோதிலும்), யுக்த: - (அவசியம் செய்யவேண்டுமென்கிற புத்தியோடு) கூடியவனுய், கர்மாணி - கருமங்களை,ஸமாசரந் - நன்றாய்ச் செய்துகொண்டு, ஜோஷயேத் - பிரீதி பண்ணக்கடவன். (உசு)

(தா-ம்.) ஆத்மஞானத்தை நன்றாய் அறியாமல் கர்மயோகத்திலேயே அன்புடைய சிஷ்டர்களுக்கு, கர்மயோகத்தைக்காட்டிலும் ஆத்மஞானத்திற்கு வேறு சாதனமிருக்கிறதென்று கூறி புத்தி பேதத்தை யுண்டுபண்ணக்கூடாது; ஞானயோக சாதனமுள்ளவன் கூட கர்மயோகமே ஆத்மஞானத்திற்குச் சாதனமென்கிற எண்ணத்துடன் கர்மங்களைச் செய்துகொண்டு அவ்வருக்கும் கர்மத்தி லன்பை யுண்டு பண்ணவேண்டும். (௨௬)

ப்ரக்ருதே: க்ரியமாணானி குணை: கர்மாணி ஸர்வஶ: ।
அஹங்கார விமூடாத்மா கர்தாஹமிதி மன்யதே ॥ ௨௭ ॥

(ப-ம்.) அஹங்கார விமூடாத்மா - அஹங்காரத்தால் மறைந்த ஸ்வரூபத்தையுடையவன், ப்ரக்ருதே: - பிரகிருதியினது, குணை: - குணங்களால், க்ரியமாணானி - செய்யப்படுகிற, ஸர்வஶ: கர்மாணி - ஸகல கருமங்களையும், அஹம் கர்தா - 'நானே செய்கிறேன்' இதி மந்யதே - என்று மதிக்கிறான். (௨௭)

(தா-ம்.) ஸத்துவரஜஸ்தமோ ரூபமாகிய பிரகிருதியின் குணத்தாலுண்டு பண்ணப்படுகின்ற கர்மங்களைக்குறித்து, அகங்காரத்தால் மதிகெட்டவன், நானே செய்கிறேனென்று நினைக்கின்றான். (௨௭)

தத்த்வவித்து மஹாபாஹோ குணகர்ம விபாகயோ: ।
குணா குணேஷு வர்தந்த இதி மத்வா ந ஸஜ்ஜதே ॥ ௨௮ ॥

(ப-ம்.) ஹே மஹா பாஹோ - ஓ பெருந்தோளாய்! குண கர்ம விபாகயோ: - குணகருமங்களின் பிரிவுகளின், தத்வ வித் - உண்மை யறிந்தவனோ, குணா: - குணங்கள், குணேஷு - (தம்) காரியங்களில், வர்தந்தே - பிரவர்த்திக்கின்றன, இதி மத்வா - என்று நினைத்து, ந ஸஜ்ஜதே - பற்றுகிறதில்லை. (௨௮)

(தா-ம்.) வாராய் பெரிய புஜமுடையவனே! ஸத்துவமுதலான குணங்களுடையவும், அதற்குரிய கர்மங்களுடையவுமான தாரதம்மியங்களில் தத்துவத்தை யறிந்தவன் அந்தந்த ஸத்துவாதி முக்குணங்கள் தம்தம்மிட குணரூப காரியங்களிலிருக்கிறதென்று நினைத்து அகங்காரத்தை யடையமாட்டான். (௨௮)

ப்ரக்ருதேர்குணஸம்மூடா: ஸஜ்ஜந்தே குணகர்மஸு ।
தானக்ருத்ஸ்னவிதோ மந்தான் க்ருத்ஸ்னவின்ன விசாலயேத் ॥ ௨௯ ॥

(ப-ம்.) ப்ரக்ருதே: - பிரகிருதியின் — சரீரத்தின், குண ஸம்மூடா: - குணங்களால் மயங்கினவர்களோ, குண கர்மஸு - குணத்தால் (வரும்) கர்மங்களிலே, ஸஜ்ஜந்தே - பற்றுவார்கள்; அத: - ஆகையால், அக்ருத்ஸ்ந வித:-முழுதும் அறிந்தவரல்லாத,

நாக்மந்தாந் - அந்த மந்த மதிகளை; க்ருத்ஸ்நவித் - முழுவதும் (ஆத்மஸ்வரூபத்தை) அறிந்தவன், ந விசாலயேத் - கலக்கச்செய்யக்கடவனல்லன். (௨௯)

(தா-ம்.) பிரகிருதியின் குணத்தால் பிரமித்து, கர்மாதிகாரிகளாயிருக்கிறார்கள். அப்படி நன்றாயறியாத மந்தர்களை, நன்றாய் தெரிந்தவன், தன்ஞானத்தால் சலிப்பிக்கக்கூடாது. (௨௯)

𑌮𑌯𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌚𑍇𑌤𑌸𑌾 ।
𑌨𑌿𑌰𑌾𑌶𑍀𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌯𑍁𑌧𑍍𑌯𑌸𑍍𑌵 𑌵𑌿𑌗𑌤𑌜𑍍𑌵𑌰𑌃 ॥௩௦॥

(ப-ம்.) அத்யாத்ம சேதஸா - ஆத்மாவையே நாடிய மனதினால், ஸர்வாணி கர்மாணி-எல்லாக் கருமங்களையும், மயி ஸந்ந்யஸ்ய-என்னிடத்தில் ஸமர்ப்பித்து, நிராசீஃ - நிஷ்காமனாய்,நிர்மமஃ-மமகார மற்றவனாய், விகதஜ்வரஃ பூத்வா - தாபத்தை (விசனத்தை) விட்டவனாய், யுத்யஸ்வ – யுத்தம்செய். (௩௦)

(தா-ம்.) ஆத்மஞானத்துடன் கூடிய மனதோடு [எல்லா ப்ராணிகளுக்கும்] அந்தர்யாமியாகிய என்னிடத்தில் கர்மங்களை யெல்லாம் சமர்பணம் செய்து [என்றால் கர்மங்களுக் கெல்லாம் ஈசுவரனே கர்த்தா காரயிதாவென்று நினைத்து] பயனை விரும்பாமல் கர்மத்தில் மமதையை விட்டு துக்கமில்லாதவனாய், யுத்தம் செய். (௩௦)

𑌯𑍇 𑌮𑍇 𑌮𑌤𑌮𑌿𑌦𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌨𑍁𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌾𑌃 ।
𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌵𑌨𑍍𑌤𑍋𑌽𑌨𑌸𑍂𑌯𑌨𑍍𑌤𑍋 𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑍇𑌽𑌪𑌿 𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃 ॥

(ப-ம்.) யே - எந்த, மாநவாஃ - மனிதர்கள், இதம் - இந்த, மே மதம் - என் ஸித்தாந்தத்தை, நித்யம் - எப்போதும், அநுதிஷ்டந்தி - அனுஷ்டிக்கிறார்களோ; (யேச) - பின்னும் எவர்கள், ஶ்ரத்தாவந்தஃ - சிரத்தையுடையர்களோ; (யேச) பின்னுமெவர்கள், அநஸூயந்தஃ - அசூயை கொள்ளார்களோ; தே அபி - அவர்களும், கர்மபிஃ-கருமங்களால், முச்யந்தே-விடுபடுகிறார்கள்.

(தா-ம்.) எந்த மனிதர்கள் என்னிட இந்தஅபிப்பிராயத்தை அநுஷ்டிக்கின்றார்களோ, எவர்கள் அநுஷ்டிக்காவிடினும் இந்த சாஸ்திரப்பொருளில் சிரத்தையுடையவர்களா யிருக்கிறார்களோ, எவர்கள் சிரத்தை யில்லாவிடினும் இஃது சாஸ்திரத்தின் பொருளல்லவென்று தோஷத்தையாவது சொல்லாம லிருக்கிறார்களோ, அவர்களெல்லாம் ஸம்சாரத்துக்குக் காரணமாகிய புண்ணிய பாப கர்மங்களெல்லாவற்றிலும் விடுபடுகிறார்கள். (௩௧)

𑌯𑍇 𑌤𑍍𑌵𑍇𑌤𑌦𑌭𑍍𑌯𑌸𑍂𑌯𑌨𑍍𑌤𑍋 𑌨𑌾𑌨𑍁𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌮𑍇 𑌮𑌤𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌮𑍂𑌢𑌾𑌂𑌸𑍍𑌤𑌾𑌨𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑌷𑍍𑌟𑌾𑌨𑌚𑍇𑌤𑌸𑌃 ॥௩௨॥

(ப-ம்.) யே மாநவா: - எந்தமனிதர்கள், மம இதம் மதம் - எனது இச் சித்தாந்தத்தை, ந அநுதிஷ்டந்தி - அநுட்டிக்கிறார்களில்லையோ, யேச - பின்னும் எவர்களானால், அப்யஸூயந்த: - அசூயை கொண்டவராய், வர்தந்தே - இருக்கிறார்களோ, தாந் - அந்த, ஸர்வஜ்ஞாந விமூடாந் - ஒரு ஞானமு(மில்லாத) மூடர்களை, நஷ்டாந் - ஸத்தை யிழந்து; அசேதஸ:-புத்தியில்லாதவர்களாய், வித்தி - அறி. (௩௨)

(தா-ம்.) எவர்கள் இந்த என்னிடமதத்தை அநுஷ்டிக்காமலும், சித்தை யில்லாமலும், அஸூயையைப் படுகிறார்களோ, அப்படிப்பட்டவர்களை, எல்லாஞ் ஞானவிஷயங்களிலும் மூடர்களாயும், நஷ்டர்களாயும், புத்தியற்றவர்களாயும், "மனதின் பிரயோஜனமானது வஸ்துக்களின் தத்துவத்தை யறிதல், அதில்லாமையால் மனமில்லாத வர்களாயும், வேறுவிதமான ஞான முடையவர்களாயு மிருக்கிறார்கள். (௩௨)

𑌸𑌦𑍃𑌶𑌂 𑌚𑍇𑌷𑍍𑌟𑌤𑍇 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌾𑌨𑌪𑌿 ।
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 𑌕𑌿𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥ ௩௩ ॥

(ப-ம்.) ஜ்ஞாநவாந் அபி - ஞானவானான போதிலும், ஸ்வஸ்யா: - தனது, பிரக்ருதே: - (பழைய) வாஸனைக்கு, ஸத்ருசம் - தக்கபடி (விஷயங்களில்) சேஷ்டதே - வியாபிரிக்கிறான்; (ஏனெனில்) பூதாநி - (தேவர் மனிதர் முதலிய) பூதங்கள், ப்ரக்ருதிம் - (பழைய) வாஸனையையே, யாந்தி - அநுஸரிக்கின்றன; நிக்ரஹ:- (சாஸ்திரத்தால் பண்ணும்) நிர்பந்தம், கிம் கரிஷ்யதி-என் செய்யமாட்டும்? (௩௩)

(தா-ம்.) ஞானத்தை யுடையவன்கூட தன் பிரகிருதிக்கு தக்கபடி விஷயத்தில் பிரவேசித்து விடுகிறான். (பிரகிருதியுடன் சேர்ந்திருக்கிற) ஜந்துக்கள் (அநாதிகாலத்தால் கிட்டின) வாஸனையை யநுசரித்திருக்கிறது. அதைக் குறித்து சாஸ்திரங்களின் நிஷேதம் என்னசெய்யும். (௱0) நிக்ர:-சாஸ்திர நிஷேதமானது.

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇 𑌰𑌾𑌗𑌦𑍍𑌵𑍇𑌷𑍌 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 ।
𑌤𑌯𑍋𑌰𑍍𑌨 𑌵𑌶𑌮𑌾𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍𑌤𑍌 𑌹𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑌰𑌿𑌪𑌨𑍍𑌥𑌿𑌨𑍌 ॥ ௩௪ ॥

(ப-ம்.) இந்த்ரியஸ்ய-ஞானேந்திரியத்தினுடையவும், இந்த்ரியஸ்ய - கர்மேந்திரியத்தினுடையவும், அர்த்தே - (சப்தாதி) விஷயத்தில், ராக த்வேஷௌ - காமக்குரோதங்கள், வ்யவஸ்த்திதௌ - நியமேந உண்டாகின்றன; தயோ: - அவைகளுக்கு, வசம்-வசமாயிருக்கையை, நஆகச்சேத் - அடையக்கடவனல்லன்; ஹி - ஏனெனில், தௌ - அவைகள், அஸ்ய - இந்த (ஞானிக்கு), பரிபந்திநௌ - விரோதிகள். (௩௪)

(தா-ம்.) சப்தம் முதலான ஞானேந்திரிய விஷயங்களிலாவது, வாக்கு முதலான கர்மேந்திரிய விஷயங்களில் இராகமும், உலோபமும், பரிகரிக்கப்பட்டிருக்கிறதுகள். அந்தக் காமக்குரோதங்களுக்கு வசப்படக்கூடாது. அவ்விரண்டுகளு மிவனுக்குச் சத்துருக்கள். (௩௪)

ஶ்ரேயாந் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத்ஸ்வநுஷ்டிதாத் |
ஸ்வதர்மே நிதநம் ஶ்ரேய: பரதர்மோ பயாவஹ: || ௩௫ ||

(ப-ம்.) ஸ்வ தர்ம:-தன் தருமமான (கர்மயோகம்), விகுண: அபி - அங்கமழிந்ததானாலும், ஸ்வநுஷ்டிதாத் - நன்கு அநுட்டிக்கப்பட்ட, பர தர்மாத் - பிறரின்தருமமான (ஞானத்தைக்காட்டிலும்), ஶ்ரேயஃ - சிறந்தது; பரதர்ம: - பிறரின் தரும (மான ஞாநயோக) மோ, பயாவஹ: - பயங்கரமானது. (௩௫)

(தா-ம்.) நன்றாய்ச் செய்யப்படுகின்ற வேறு தர்மத்தைக் காட்டிலும் ஸ்வதர்மம் குணமில்லாம லிருந்தபோதிலும், சிறந்தது. தன் தருமத்திலிருந்து ஒரே ஜன்மத்தில் பலத்தை யடையாவிடினும் அது கூட மேலானது. பரதர்மம் பயத்திற்குக் காரணமாகும். (௩௫)

அர்ஜ்ஜுன வாக்கியம்.

அத கேந ப்ரயுக்தோऽயம் பாபம் சரதி பூருஷ: |
அநிச்சந்நபி வார்ஷ்ணேய பலாதிவ நியோஜித: || ௩௬ ||

(ப-ம்.) ஹே வார்ஷ்ணேய - ஓ விருஷ்ணி வம்சத்தில் பிறந்தவரே!, அத - அனந்தரம், அயம் புருஷ:-இந்த புருஷன், அநிச்சந் அபி - நினைக்கவும் நினையாமல், கேந-என்னகாரணத்தால், ப்ரயுக்த: - ஏவப்பட்டவனுய்க்கொண்டு, பலாத் - வலுவில், நியோஜித: இவ - நியமிக்கப்பட்டவன்போல், பாபம் - அநர்த்தத்தை, சரதி - அனுட்டிக்கிறுன். (௩௬)

(தா-ம்.) ஓ விருஷ்ணி குலத்தில்ஜனித்தவனே! இந்தப்புருஷன், ஞானயோகத்தில் பிரவர்த்தித்தவன் தான் விரும்பாமலே, எதனுல் பலவந்தமாய் ப்ரேரேபிக்கப் பட்டவன்போல பாபத்தை விஷயாநுபவத்தைச் செய்கிறுன. (௩௬)

ஸ்ரீகிருஷ்ணவாக்கியம்.

காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகுணஸமுத்பவ: |
மஹாஶநோ மஹாபாப்மா வித்த்யேநமிஹ வைரிணம் || ௩௭ ||

(ப-ம்.) ஏஷ: - (நீகேட்ட) இந்த (காரணமானது), ரஜோகுண ஸமுத்பவ: - ரஜோகுணத்தால் உண்டான,காமஏவ-காமமே; ஏஷ: - இதுதான், க்ரோத: - கோப (மாவதும்), (அது) மஹா

அசநஃ - பெரும் ஆஹாரங்கொள்ளும், மஹா பாப்மா-பெரிய பாவியானது; அதஃ - ஆகையால், ஏநம் - இந்த (காமத்தையே), இஹ - (இந்த ஞானயோகத்தில்) வைரிணம்-விரோதியாக, வித்தி-அறி. (௩௭)

(தா-ம்.) இரஜோ குணத்தாலுண்டு பண்ணப்படுகிற, காமம் இது. (விஷயத்திலாசை) இதுவே. குரோதம் விஷயபோகத்திற்குத் தடை நேரிட்டபோது காமமே கோபமாக முடிகிறது. எல்லாவற்றையும் புசித்து விடுகின்ற மஹாபாபம். இதையே இவ்விடத்தில் சத்துருவென்று தெரிந்துகொள். (௩௭)

[illegible]
[illegible] ‖௩௮‖

(ப-ம்.) யதா வஹ்நிஃ - எப்படி நெருப்பானது, தூமேந ஆவ்ரியதே - புகையால் சூழப்படுகிறதோ; யதா ஆதர்சஃ - எப்படி கண்ணாடியானது, மலேந - அழுக்காலும் (மறைக்கப்படுகிறதோ); யதா கர்ப்பஃ - எப்படி கருவானது, உல்பேந - பையினால், ஆவ்ருதஃ - மூடப்பட்டிருக்கிறதோ; ததா - அப்படி, இதம் - இந்த (பிராணிஸமூகமானது), தேந - அக் (கருமத்தால்), ஆவ்ருதம் - சூழப்பட்டிருக்கிறது. (௩௮)

(தா-ம்.) நெருப்புப் பொகையினாலும், கண்ணாடி அழுக்கினாலும், கருவு "குழந்தை" ஜராயுவினாலும், மறைக்கப் பட்டிருக்கிறதுபோல், காமத்தினால் இந்தப் பிராணி வர்க்கம் மறைக்கப் பட்டிருக்கின்றது. (௩௮)

[illegible]
[illegible] ‖௩௯‖

(ப-ம்.) ஹேகௌந்தேய - ஓ குந்திபுத்திர! ஜ்ஞாநிநஃ-ஞான (குணமான) ஜந்துவின், ஜ்ஞாநம் - (ஆகம) ஞானமானது, துஷ்பூரேண - நிறைக்க முடியாததும், அநலேந-திருப்தியடையாததுமான, காமரூபேண - காமமென்னும், நித்ய வைரிணா - (இந்த) நித்திய விரோதியாலே, ஆவ்ருதம்-மூடப்பட்டிருக்கிறது. (௩௯)

(தா-ம்.) ஓ குந்திசுதனே! துர்லபமான விஷயங்களை யடைவது திருப்தியில்லாத, காமமாகிய இந்த நித்திய சத்துருவினால், ஞானியினுடைய ஆத்ம ஞானமானது மறைக்கப்பட் டிருக்கின்றது. (௩௯)

[illegible]
[illegible] ‖௪௰‖

(ப-ம்.) அஸ்ய-இதற்கு, இந்த்ரியாணி - புலன்களும், மநஃ - மனதும், புத்திஃ - அத்யவஸாயமும், அதிஷ்டாநம் - அதிஷ்ட

டான உபகரணமென்று, உச்யதே - சொல்லப்படுகிறது; ஏஷ: - (இக்கர்மமானது) ஏதை: - இவைகளைக்கொண்டு, ஜ்ஞாநம் - (ஆத்ம ஞானத்தை, ஆவ்ருத்ய - மறைத்து, தேஹிநம் - சரீரமெடுத்தவனை, விமோஹயதி - பல்படி மயக்குகிறது. (ச0)

(தா-ம்.) இந்திரியங்கள் மனது, புத்தி, இதுகள் காமத்திற்கு வழியாகச் சொல்லப்படுகின்றது. இதுகளால், ஞானத்தை மறைத்துக் கொண்டு இந்தக் காமம், புருஷனை மோகிக்கும்படி செய்கிறது. (ச0)

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍍𑌯𑌾𑌦𑍌 𑌨𑌿𑌯𑌮𑍍𑌯 𑌭𑌰𑌤𑌰𑍍𑌷𑌭 ।
𑌪𑌾𑌪𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌜𑌹𑌿 𑌹𑍍𑌯𑍇𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ॥சக॥

(ப-ர்.) ஹே பரதர்ஷப! - ஓ பரதவம்ச சிரேஷ்டனே! தஸ்மாத் - அக்காரணத்தாலே, த்வம் - நீ, ஆதௌ - ஆரம்பத்தில், இந்த்ரியாணி - புலன்களை, நியம்ய - அடக்கி - ஜ்ஞாந விஜ்ஞாந நாசநம் - (ஆத்மஸ்வரூப) ஞானத்தையும், (அதின் விவேக) ஞாநத்தையும் போக்கடிக்கின்ற, ஏநம் பாப்மாநம் - இந்தப் பாவியை, ப்ரஜஹிஹி - நன்றாய் சொல்லு. (சக)

(தா-ம்.) ஆகையால், ஓ பரத சிரேஷ்டனே! நீ இந்திரியங்களை யடக்கி இந்திரிய "ஞானம்" "விக்ஞானம்" இதுகளைக் கெடுக்கின்றன. இந்தப் பாபத்தை "கர்மத்தை" நாசஞ்செய். (சக)

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌪𑌰𑌾𑌣𑍍𑌯𑌾𑌹𑍁𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌂 𑌮𑌨𑌃 ।
𑌮𑌨𑌸𑌸𑍍𑌤𑍁 𑌪𑌰𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌯𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌪𑌰𑌤𑌸𑍍𑌤𑍁 𑌸𑌃 ॥சஉ॥

(ப-ம்.) இந்த்ரியாணி - புலன்களை, பராணி - பிரதானமாக, ஆஹு: - சொல்லுகின்றனர்; இந்த்ரியேப்ய: - புலன்களைக்காட்டிலும், மந: - மனதை, பரம் - பிரதான (மென்பார்கள்); மநஸ: - மனதைக்காட்டிலும், புத்தி: - அத்தியவஸாயமானது, பரா - பிரதானம் (என்பர்கள); ய: - எது, புத்தே: அபி - அத்தியவஸாயத்தைப் பார்க்க, பரத: து - பிரதானமான தென்றாலே, ஸ: - அது (அந்தக் காமம்,) (சஉ)

(தா-ம்.) ஞானத்தைக் கெடுப்பதற்கு இந்ரியங்களே முக்கியங்க ளெனப்படும். மனம் இந்திரியங்களைக் காட்டிலும், முக்கியமானது. புத்தியைக்காட்டிலும காமம் முக்கியமானது. (ப-ம்.) ஸ: - பரமாத்மா. (சஉ)

(ரா) ஞானத்திற்கு முக்கிய விரோதி இந்திரியங்கள், அவைகளை விட அதிக விரோதி மனசு, அதைவிட அதிக விரோதி புத்தி; அதை விட மேலானவும், அதிகமாகவும் விரோதி காமம் என்று தாத்பர்யம்.

இராகவேந்திர சுவாமிகள் செய்திருக்கிற வ்யாக்கியானமாகிய கீதாவிருத்தி.

இந்திரியங்கள் அதைக்காட்டிலும் பெரியவை என்றால்(தேகத்தைக் காட்டிலும்) என்பதைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். இந்திரியங்களுக்கு அபிமானி தேவதைகளான சந்திரன், குபேரன், சூரியன், வருணன், அஸ்வனி தேவதைகள், அக்கினி, இந்திரன், ஜயந்தன், யமன், தக்ஷன் இவர்களைக்காட்டிலும் விஷயாபிமானி தேவதைகளான ஸௌபர்ணி, வாருணி, பார்வதி இவர்கள் சிரேஷ்டமானவர்கள், இவர்களைக் காட்டிலும் மனோபிமானி தேவதைகளான கருடன், சேஷன், ருத்திரன் இவர்கள் சிரேஷ்டமானவர்கள், இவர்களைக்காட்டிலும் புத்தி அபிமானி தேவதையான சரஸ்வதி சிரேஷ்டமானவள், இவளைக்காட்டிலும் மகத்தத்துவாபிமானியாகிய ப்ரம்மா சிரேஷ்டர். அந்தப் பிரம்மாவைக் காட்டிலும் ப்ரக்ருதி அபிமானிதேவதையான இலக்ஷ்மி சிரேஷ்டமானவள். இலக்ஷ்மியைக்காட்டிலும் சகலகுண பரிபூர்ணரான விஷ்ணு சிரேஷ்டமானவர். இவருக்குப் பெரியவர் ஒருவருமில்லை. அவர்கள்தான் அடையத்தகுந்தவர். இந்த வ்யாக்கியானத்திற்கு ஆதாரமாய், கடோபநிஷத் வாக்கியத்தையும், அதின் பாஷியத்தையும் குறிப்பிடுகிறார். கடோபநிஷத் ௩-வது வல்லி ௧௦-௧௧ வாக்கியங்கள், 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌾 𑌹𑍍𑌯𑌰𑍍𑌥𑌾 𑌅𑌰𑍍𑌥𑍇𑌭𑍍𑌯𑌶𑍍𑌚 𑌪𑌰𑌂 𑌮𑌨𑌃 | 𑌮𑌨𑌸𑌸𑍍𑌤𑍁 𑌪𑌰𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 𑌮𑌹𑌾𑌨𑍍𑌪𑌰𑌃 | 𑌮𑌹𑌤𑌃 𑌪𑌰𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑌰𑌃 | 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌨𑍍𑌨 𑌪𑌰𑌂 𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍𑌸𑌾 𑌕𑌾𑌷𑍍𑌠𑌾 𑌸𑌾 𑌪𑌰𑌾 𑌗𑌤𑌿𑌃 ||

𑌏𑌵𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌪𑌰𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌸𑌂𑌸𑍍𑌤𑌭𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 |
𑌜𑌹𑌿 𑌶𑌤𑍍𑌰𑍁𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌂 𑌦𑍁𑌰𑌾𑌸𑌦𑌮𑍍 || ௪௩ ||

(ப-ம்.) ஹே மஹாபாஹோ - பெருந்தோளாய்! ஏவம் - இந்தப்படி, புத்தே: அபி - அத்தியவஸாயத்தைக் காட்டிலும், பரம் - பிரதானமாக, காமம் புத்வா - காமத்தை யறிந்து, ஆத்மாநம் - மனதை, ஆத்மநா - அத்தியவஸாயத்தால், ஸம்ஸ்தப்ய - அசையாமல் நிறுத்தி, துராஸதம் - ஜயிக்கவரிய, காமரூபம் சத்ரும் - காமமென்னும் பகையை, ஜஹி - ஜயிக்கப்பார். (௪௩.)

(தா-ம்.) ஓ பெருத்த புஜமுடையவனே! இப்படி புத்தியைக் காட்டிலும் பலத்தையுடையது காமனென்று நினைத்து, புத்தியினால் மனதை "கர்மயோகத்தில்" நிறுத்தி, இந்தக் காமமென்கிற பகைவனை நிர்மூலப் படுத்துவாயாக. (௪௩)

கர்மயோக:

ஸ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணேநம:

மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

நான்காவது அத்தியாயம்.

ஜ்ஞாநயோக:.

ஸ்ரீக்ருஷ்ணவாக்கியம்.

இமம் விவஸ்வதே யோகம் ப்ரோக்தவாநஹமவ்யயம் |
விவஸ்வாந் மநவே ப்ராஹ மநுரிக்ஷ்வாகவேऽப்ரவீத் || க ||

(ப-ம்.) அஹம்-நான், அவ்யயம்-நாசமில்லாத, இமம் யோகம்-இந்த (கரும) யோகத்தை, விவஸ்வதே-சூரியனுக்கு, ப்ரோக்தவாந்-உபதேசித்தேன்; விவஸ்வாந்-சூரியன், மநவே - மனுவுக்கு, ப்ராஹ-உபதேசித்தார்; மநு:-மனுவானவர், இக்ஷ்வாகவே-இக்ஷுவாகுவுக்கு, அப்ரவீத்-உபதேசித்தார். (க)

(தா-ம்) யான் இச்சிறந்த ஞானயோகத்தை முன் சூரியனுக்கு றைத்தேன். சூரியன், தன்புத்திரனாகிய மனுசக்கிரவர்த்திக்குக் கூறினன் மனுசக்கிரவர்த்தி இக்ஷ்வாகுமஹாராஜனுக்குசொன்னார். (க)

ஏவம் பரம்பராப்ராப்தமிமம் ராஜர்ஷயோ விது: |
ஸ காலேநேஹ மஹதா யோகோ நஷ்ட: பரந்தப || உ ||

(ப-ம்) ஹே பரந்தப! - வாராய் பகைவரை வெல்லுவோய்! ஏவம்-இம்மாதிரி, பரம்பரா ப்ராப்தம்-பரம்பரையாய் வந்த, இமம்-இந்தஞ்ஞானயோகத்தை, ராஜர்ஷய:-இராஜரிஷிகள், விது:-அறிந்தார்கள்; ஸ: யோக:-அப்படிப்பட்ட யோகமானது, இஹ-உலகத்தில், மஹதா காலேந-நெடுங்காலமாய், நஷ்ட:-அற்றுப்போயிற்று. (உ)

(தா-ம்.) இவ்வண்ணம் பரம்பரையா யோதிக்கொண்டுவந்த இந்தயோகத்தை இராஜர்ஷிகளறிவார்கள். ஓ பரந்தபனே! அஃதுநெடுங்காலமானதாலத்தகைய யோக மிப்பொழுது க்ஷீணமடைந்தது போல் காணப்படுகிறது. (உ)

ஸ ஏவாயம் மயா தேऽத்ய யோக: ப்ரோக்த: புராதந: |
பக்தோऽஸி மே ஸகா சேதி ரஹஸ்யம் ஹ்யேததுத்தமம் || ௩ ||

(ப-ம்.) ஸ:-(அப்படிப்பட்ட) புராதந: - பிராசீனமான, அயம் யோக: ஏவ-இந்த யோகமே, மே பக்த:-எனக்குப் பக்தனும், ஸகா ச-தோழனுமாய், அஸி இதி-இருக்கின்றாய் என்று, தே அத்ய-உனக்கு இப்பொழுது, மயாப்ரோக்த:-என்னால் உபதேசிக்கப்பட்டது, ஏதத் - இது, உத்தமம் ரஹஸ்யம்ஹி - உத்தமமான இரஹஸியமன்றோ? (௩)

(தா-ம்.) அநாதியான அந்த யோகத்தையே நீ எனக்கு பக்தனும் நேசனுமிருப்பதால் யானுனக்கறிவித்தேன். இஃது மிகவும் இரகசியம்; இதை யான் தவிர வேறொருவர் அறிவதற்கும் பிறருக்கோதிவைப்பதற்கு முடியாதென்றறிக. (௩)

அர்ச்சுனவாக்கியம்.

அபரம் பவதோ ஜந்ம பரம் ஜந்ம விவஸ்வத: |
கதமேதத்விஜாநீயாம் த்வமாதௌ ப்ரோக்தவாநிதி || ௪||

(ப-ம்.) (ஹே க்ருஷ்ண)-வாரீர் கண்ணா! பவத: ஜந்ம-தேவரீருடைய அவதாரம், அபரம்-பின்னிட்டது; விவஸ்வத:-சூரியனுடைய, ஜந்மது-பிறப்போ, பரம்-முன்னிட்டது; த்வம்-நீர், ஆதௌ - ஆதியில், ப்ரோக்தவாந் இதி-உபதேசித்தீர் என்று, ஏதத் கதம் - இதையெப்படி? விஜாநீயாம்-அறிகுவன். (௪)

(தா-ம்) சூரியனுடைய வுற்பத்தி முந்தியும் உம்முடையயுற்பத்தி பிந்தியுமாக விருக்க நீவிர் பிரதமத்தில் இதை சூரியனுக்கோதிவைத்தீரென்பதையானுண்மையென நம்புவதெப்படி? (௪)

ஸ்ரீகிருஷ்ண வாக்கியம்.

பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந |
தாந்யஹம் வேத ஸர்வாணி ந த்வம் வேத்த பரந்தப || ௫||

(ப-ம்.) ஹே அர்ச்சுந-ஓ அருச்சுனா! தவச - உன்னைப்போல, மே-எனக்கும், பஹூநி ஜந்மாநி-பல பிறவிகள், வ்யதீதாநி - கழிந்தன; ஹே பரந்தப-ஓ பரந்தபனே! தாநி ஸர்வாணி-அந்த ஜன்மங்களெல்லாவையும், அஹம் வேத-நான் அறிவேன், த்வம்-நீ, நவேத்த-அறியாய். (௫)

(தா-ம்.) ஓ அர்ஜுனா! இதுவரையிலும் எனக்களவற்ற ஜன்மமாயின, உந்தனுக்கு மவ்வாறே வெகுஜன்மமாயிற்று. ஏ பார்த்தா! அவை யாவையும் யானறிவேன் உனக்கது தெரியாது. (௫)

அஜோऽபி ஸந்நவ்யயாத்மா பூதாநாமீச்வரோऽபி ஸந் |
ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா || ௬||

(ப-ம்.) அஜ:-பிறப்பற்றவதாய், அவ்யய ஆத்மா ஸந் அபி - நசியாத ஸ்வரூபியாயினும், பூதாநாம்-பிராணிகளுக்கு, ஈச்வர: ஸந் அபி-ஈசனாயினும், ஸ்வாம் ப்ரக்ருதிம்-சொந்தமான பிரகிருதியை, அதிஷ்டாய-அதிஷ்டித்து, ஆத்மமாயயா - என்னுடைய ஸங்கல்பத்தால், ஸம்பவாமி-அவதரிக்கிறேன். (௬)

(தா-ம்) யான் பிறப்பிறப்பற்றவனும் அகில ஜீவன்களுக் கீசுவரனுமிருந்தபோதிலும், எனது ஈஸ்வர ஸ்வரூபத்தைத்தொடர்ந்தே ஆன்மசங்கற்பத்தாலுதிக்கிறேன். (சு)

யதா³ யதா³ ஹி த⁴ர்மஸ்ய க்³லாநிர்ப⁴வதி பா⁴ரத |
அப்⁴யுத்தா²நமத⁴ர்மஸ்ய ததா³த்மாநம் ஸ்ருஜாம்யஹம் || எ ||

(ப-ம்.) ஹே பாரத-ஓ அருச்சுனா! தர்மஸ்ய - தருமத்திற்கு, யதா-எப்பொழுது, க்லாநிஃபவதி-வாட்ட முண்டாகிறதோ, அதர்மஸ்ய-அதருமத்திற்கு, யதா - எப்பொழுது, அப்யுத்தாநம் - கிளர்ச்சி, (பவதி)-உண்டாகின்றதோ, ததா ஆத்மாநம்-அப்பொழுது என்னை, ஸ்ருஜாமி-அவதரிப்பிக்கிறேன். (எ)

(தா-ம்.) ஏ பார்த்தனே! எப்பொழுது வேதத்திற்கூறிய தர்மத்திற்கு தீங்கும் அதர்மத்திற்கு விருத்தியுமுண்டாகிறதோ அப்பொழுது என்னை யானே படைத்துக்கொள்ளுகிறேன். (எ)

பரித்ராணாய ஸாதூ⁴நாம் விநாஶாய ச து³ஷ்க்ருதாம் |
த⁴ர்மஸம்ஸ்தா²பநார்தா²ய ஸம்ப⁴வாமி யுகே³ யுகே³ || அ ||

(ப-ம்) ஸாதூநாம்-பரமவைதிகதருமத்தை அநுட்டிப்பவர்களின், பரித்ராணாய-ஸம்ரக்ஷணத்துக்காகவும், துஷ்க்ருதாம் - துஷ்கர்மாக்களின், விநாசாயச - அழிவுக்காகவும், தர்ம ஸம்ஸ்த்தாபநார்த்தாய-வைதிகத்தருமத்தை நிலை நாட்டுவதற்காகவும், யுகேயுகே-யுகந்தோறும், ஸம்பவாமி-அவதரிக்கிறேன். (அ)

(தா-ம்) நன்மனதுடைய சாதுக்களைப் பாதுகாப்பதற்கும்கொடியவர்களைத் தண்டிப்பதற்கும் வைதிகதர்மத்தை நிலைபெறநாட்டுவதற்கும் யுகந்தோறும் உதிக்கின்றேன். (அ)

ஜந்ம கர்ம ச மே தி³வ்யமேவம் யோ வேத்தி தத்த்வத꞉ |
த்யக்த்வா தே³ஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோ(அ)ர்ஜுந || ௯ ||

(ப-ம்) ஏவம்-இப்படிப்பட்ட, மே-என்னுடைய, திவ்யம் ஜந்ம-திவ்வியமான பிறப்பையும், கர்ம-கருமத்தையும், தத்வதஃ- உள்ளபடியே, யஃவேத்தி-எவன் அறிகிறானோ, ஹே அர்ஜுந!-ஓ அருச்சுனா! ஸஃ-அவன், தேஹம் த்யக்த்வா-சரீரத்தைவிட்டு, புநஃ ஜந்ம-ஜனனமரணரூப ஸம்ஸாரத்தை, ந ஏதி-அடைகிறதில்லை; மாம் ஏதி - என்னையை அடைகிறான். (௯)

(தா-ம்) அர்ஜுனனே! என்னிட ஜந்மமும் கன்மமும் பிரகிருதி

சம்பந்த மற்றதென்றெவனுண்மையறிகிருனே அவன் சரீரத்தை விட்டபின் மீண்டு மிக்கன்மபூமியில் ஜநிக்கிறதில்லை. (௯)

வீதராகபயக்ரோதா மந்மயா மாமுபாச்ரிதா: |
பஹவோ ஜ்ஞாநதபஸா பூதா மத்பாவமாகதா: || ௧௦ ||

(ப-ம்) ஜ்ஞாநதபஸா-ஞானத் தவத்தினால், பூதா:-பரிசுத்தர்களான, பஹவ:-வெகுபெயர்கள், மாம்உபாச்ரிதா:-என்னை அடைந்தவர்களாய், வீதராக பயக்ரோதா:-காமம் பயம் கோபமிவையற்று மந்மயா:-என்மயமாய்க்கொண்டு, மத் பாவம்-என்னுடைய ஸாயுஜ்ஜியத்தை, ஆகதா:-அடைந்தார்கள். (௰)

(தா-ம்) அருந்தவத்தினற் சுத்தர்களான அனேகஞானிகள் இராகம் பயம் மோகம் இதுகளை நிர்மூலப்படுத்தி எந்தன் தன்மையை அடைந்து எந்தனை பஜித்து முத்தியைப் பெற்றனர்கள். (௰)

யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம் |
மம வர்த்மாநுவர்த்தந்தே மநுஷ்யா: பார்த்த ஸர்வச: || ௧௧ ||

(ப-ம்.) ஹே பார்த்த-வாராய் அர்ச்சுன! யே யதா-எவர்கள் எப்படி, மாம் ப்ரபத்யந்தே-என்னை ஆச்ரயிக்கிறார்களோ, தாந் அஹம்-அவர்களை யான், ததா ஏவ-அப்படியே, பஜாமி-அடைகிறேன், அருள்கிறேன்; மநுஷ்யா:-மனிதர்கள், மம வர்த்ம-எனது மார்க்கத்தை, ஸர்வச:-ஸர்வப்பிரகாரத்தாலும், அநுவர்த்தந்தே-அநுஸரிக்கின்றார்கள். (௧௧)

(தா-ம்) பார்த்தனே! எவரெவ்வண்ணம் என்னை பாவிக்கிறார்களோ, அவ்வண்ணமே யானவர்கட்கருட்சொரிகின்றேன். (௧௧)

காங்க்ஷந்த: கர்மணாம் ஸித்திம் யஜந்த இஹ தேவதா: |
க்ஷிப்ரம் ஹி மாநுஷே லோகே ஸித்திர்பவதி கர்மஜா || ௧௨ ||

(ப-ம்.) இஹ-உலகத்தில் (உள்ளவர்), கர்மணாம்-கருமங்களின், ஸித்திம்-பலனை, காங்க்ஷந்த:-அபேக்ஷிக்கவர்களாய், தேவதா:-தேவர்களை, யஜந்தே-ஆராதிக்கின்றார்கள்; ஹி-ஏனென்றால், மாநுஷே லோகே-மனுஷ்யலோகத்தில், கர்மஜா ஸித்தி:-கருமப்பயனானது, க்ஷிப்ரம் பவதி-துரைவில் உண்டாகிறது. (௧௨)

(தா-ம்) இவ்வுலகின்கண்ணே கன்மங்கட்குத்தக்க ஸ்வர்காதிசுகத்தை விரும்பினோர் இந்திரன் முதலிய தேவர்களை யாசிக்கின்றனர்கள், ஏனெனின் இம்மண்ணுலகில் சன்மத்திற்குரிய நற்பயன் சீக்கிரத்திற் சித்திக்கின்றதாலென்க. (௧௨)

𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌂𑌮𑌯𑌾𑌸𑍃𑌷𑍍𑌟𑌂𑌗𑍁𑌣𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌭𑌾𑌗𑌶𑌃।
𑌤𑌸𑍍𑌯𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑌪𑌿𑌮𑌾𑌂𑌵𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍॥ ௧௩

(ப-ம்) சாதுர் வர்ண்யம்-நான்கு வருணமும், குண கர்ம விபாகசஃ-குண கருமங்களின் பிரிவாய், மயா ஸ்ருஷ்டம்-என்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்டது; தஸ்ய-அதற்கு, கர்தாரம் அபி - கர்த்தாவாயிருக்கச் செய்தே, அகர்தாரம்-கர்த்தாவல்லே னென்பதாகவும், அவ்யயம்-நாசமற்றவனாகவும், மாம் வித்தி-என்னை அறி. (௧௩)

(தா-ம்) ஸத்துவ ரஜஸ் தமோகுணங்களையும், சாந்தி, கோரதம், மோஹம், உலோபம் இதுகளையும் பகுத்து உலகமெல்லாம் என்னால் படைக்கப்பட்டன; எல்லாவற்றிற்கும் யானே காரணனாகவிருந்தாலும், ஒன்றிற்கும் காரணனல்லனென்றும், நித்தியனென்றும் எந்தனை யுணரக்கடவாய். (௧௩)

𑌨𑌮𑌾𑌂𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿𑌲𑌿𑌮𑍍𑌪𑌨𑍍𑌤𑌿𑌨𑌮𑍇𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑍇𑌸𑍍𑌪𑍃𑌹𑌾।
𑌇𑌤𑌿𑌮𑌾𑌂𑌯𑍋𑌽𑌭𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌰𑍍𑌨𑌸𑌬𑌧𑍍𑌯𑌤𑍇॥ ௧௪

(ப-ம்.) கர்மாணி-கருமங்கள், மாம்-என்னை, நலிம்பந்தி-ஒட்டுகிறதில்லை, மே-எனக்கு, கர்ம பலே-கருமப் பயனில், ஸ்ப்ருஹா-இச்சை இல்லை, இதி-என்று, யஃ மாம்-எவன் என்னை, அபிஜாநாதி-அறிகிறானோ, ஸஃ அவன் கர்மபிஃ-கருமங்களால், நபத்யதே-கட்டுப்படுகிறதில்லை. (௧௪)

(தா-ம்) சிருஷ்டிமுதலிய கன்மங்களென்னைச்சாரமாட்டாது. சிருஷ்டிமுதலியகன்மங்களின்பயனிலுமெனக்குவிருப்பங்கிடையாது இவ்வண்ணமென்னை யெவனுய்த்துணருகின்றானோ அவனுக்கு ஞானயோகத்திற்கு வைரியான ஜன்மாந்தர தீவினைகளொழியும். (௧௪)

𑌏𑌵𑌂𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾𑌕𑍃𑌤𑌂𑌕𑌰𑍍𑌮𑌪𑍂𑌰𑍍𑌵𑍈𑌰𑌪𑌿𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌭𑌿𑌃।
𑌕𑍁𑌰𑍁𑌕𑌰𑍍𑌮𑍈𑌵𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌂𑌪𑍂𑌰𑍍𑌵𑍈𑌃𑌪𑍂𑌰𑍍𑌵𑌤𑌰𑌂𑌕𑍃𑌤𑌮𑍍॥

(ப-ம்) ஏவம் ஜ்ஞாத்வா-இப்படி அறிந்து, பூர்வைஃமுமுக்ஷுபிஃ-முந்திய மோக்ஷகாமர்களால், கர்ம க்ருதம்-கருமயோகம் செய்யப்பட்டது; தஸ்மாத் த்வம்-ஆகையால் நீ, பூர்வைஃக்ருதம்-முன்னோர்களால் செய்யப்பட்ட, பூர்வதரம் கர்ம ஏவ - ப்ராசீந கருமத்தையே, குரு-செய். (௧௫)

(தா-ம்) இவ்வாறு என்னையறிந்த முன்னோர்களான முமுக்ஷுக்கள்கூட கர்மங்களையே அநுஷ்டித்தனர்கள். ஆதலால் முன்னோர்

களான சூரியன் மநு முதலானோர் செய்த கன்மத்தைநீயு மநுஷ்டிப்பாயாக. (கரு)

கிம் கர்ம கிமகர்மேதி கவயோऽப்யத்ர மோஹிதா꞉ ।
தத்தே கர்ம ப்ரவக்ஷ்யாமி யஜ்ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸேऽசுபாத் ॥ (கசு)

(ப-ம்) கர்ம கிம்-கருமம் எப்படிப்பட்டது? அகர்ம கிம் - அகர்ம்ம எப்படிப்பட்டது? இதி-என்று, அத்ர-இவ்விஷயத்தில், கவய꞉ அபி-வித்வான்களும், மோஹிதா꞉-மயக்கமுற்றார்கள்; தத்தே-அதை உனக்கு, ப்ரவக்ஷ்யாமி-சொல்லுகிறேன்; யத் ஜ்ஞாத்வா-யாதொன்றை அறிந்து (அநுபவித்து), அசுபாத்-சம்சாரபந்தமான பாபத்திலிருந்து, மோக்ஷ்யஸே-விடுபடுவாய். (கசு)

(தா-ம்) முமுக்ஷுக்கள் (முக்தியைவிரும்புவோர்) அநுஷ்டிக்க வேண்டிய கன்மமெது? அகர்மமெது? என்கிற விஷயத்திற் கற்றோர்கள்கூட சந்தேகிக்கிறார்கள். அப்படி ஆன்மஞான சம்பந்தமான கன்மத்தை யுனக்குரைக்கின்றேன்; அதை யுள்ளுணர்ந்து யுணரப்பெற்றுத் துன்பக்கடலான சம்சாரபந்தத்தை யொழிப்பாயாக. (கசு)

கர்மணோ ஹ்யபி போத்தவ்யம் போத்தவ்யம் ச விகர்மண꞉ ।
அகர்மணஸ்ச போத்தவ்யம் கஹநா கர்மணோ கதி꞉ ॥ கஎ ॥

(ப-ம்) ஹி-ஏனென்றால், கர்மண꞉-கருமயோகத்துக்கு, போத்தவ்யம்-அறியத்தக்கது, விகர்மண꞉-(அதற்குச் சாதனமான பற்பல) கருமத்துக்கும, போத்தவ்யம்-அறிந்து கொள்ளவேண்டியது, அகர்மணச-ஞானத்துக்கும், போத்தவ்யம்-அறிந்து கொள்ளவேண்டியது, கர்மண꞉ கதி꞉-கருமத்தின் கதியானது, கஹநா-அறிவரியது. ()

(தா-ம்) கன்மத்திலும், அதற்கங்கமான விகாமமென்னும் நித்தியநைமித்திக கன்மங்களிலும், அகர்மமென்கிற ஞானயோகத்திலும் அறியத்தக்கவைகள் பலவுளவாங்கனமாயின், கன்மத்தின் முறைமைகளை தெரிந்துக்கொள்ளுதற்கு முடியாது. (கஎ)

கர்மண்யகர்ம ய꞉ பச்யேதகர்மணி ச கர்ம ய꞉ ।
ஸ புத்திமாந்மநுஷ்யேஷு ஸ யுக்த꞉ க்ருத்ஸ்நகர்மக்ருத் ॥ கஅ ॥

(ப-ம்) ய꞉ கர்மணி-யாவனொருவன் கருமத்தில், அகர்ம-(ஆத்ம) ஞானத்தை, பச்யேத்-பார்க்கிறானோ; அகர்மணி-ஞானத்தில், கர்மச-கருமத்தையும், பச்யேத்-பார்க்கிறானோ, ஸ꞉ புத்திமாந்-அவன் புத்

திசாலி; ஸ:-அவன், மநுஷ்யேஷு-மனிதரிடையில், யுக்த:-(மோக்ஷ)யோக்கியன்; (ஸ ஏவ) அவனே, க்ருத்ஸ்நகர்ம க்ருத்-எல்லாக் கருமத்தையும் செய்தவன். (௧௮)

(தா-ம்) யாதாமொருவன் கன்மத்தில் ஞானத்தையும், கர்மத்தையும், பாவிக்கின்றானோ அவனேஞானியெனப்படுவன். அவனே மானிடருள் முத்திபெறத்தக்கவன். அவனே வைதிக கன்மங்கள்யாவையுஞ்செய்து முடித்தவன். (௧௮)

𑌯𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌃 𑌕𑌾𑌮𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌃।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌦𑌗𑍍𑌧𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌂 𑌤𑌮𑌾𑌹𑍁𑌃 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌂 𑌬𑍁𑌧𑌾𑌃॥ ௧௯॥

(ப-ம்) யஸ்ய-எந்த (மோக்ஷார்த்திக்கு), ஸர்வே ஸமாரம்பா:-எல்லாக் கருமங்களும், காம ஸங்கல்ப வர்ஜிதா:-அபேக்ஷையும் சங்கற்பமும் அற்றவைகளோ, தம்-அவனை, புதா: - (தத்வ)மறிந்தவர்கள், பண்டிதம்-வித்வானென்றும், ஜ்ஞாநாக்நி தக்த கர்மாணம்-அறிவென்னும் தீயினால பொசுக்கப்பட்ட வினையற்றவனென்றும், ஆஹு:-சொல்லுகிறார்கள். (௧௯)

(தா-ம்.) எவனிட கன்மம் யாவற்றும் பயனைக்கருதியும்,சங்கற்பத்தை யுட்கொண்டு மில்லையோ, அப்படிப்பட்ட வநுபவத்தினைதான் ஞானமென்னும் பெருஞ்சுடராற் கொளுத்தப்பட்ட தீயவினையை யுடையவனென்றான்றோற் கூறுவார். (௧௯)

𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌾𑌸𑌙𑍍𑌗𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍃𑌪𑍍𑌤𑍋 𑌨𑌿𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌃।
𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌭𑌿𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌨𑍈𑌵 𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍𑌕𑌰𑍋𑌤𑌿 𑌸𑌃॥ ௨௦॥

(ப-ம்.) ய:-யாவனொருவன், கர்ம பலாஸங்கம்-கருமப் பயனில் பற்றை, த்யக்த்வா-விட்டு, நித்ய த்ருப்த:-நித்யமான(ஆத்மாவில்)திருப்தியடைந்தவனும், நிராஶ்ரய:-(சரீராதிகளில்) இது ஆஶ்ரயம்(என்கிற புத்தி)யற்றவனுமிருக்கிறானோ, ஸ:-அவன், கர்மணி-கருமத்தில், அபி ப்ரவ்ருத்த:அபி-ஊற்றத்தோடு முயன்றபோதிலும், கிஞ்சித் அபி - கொஞ்சமும்; நகரோதிஏவ-செய்கிறானில்லையே. (௨௦)

(தா-ம்) கன்மத்தினது பயனை விரும்பாது நித்திய வஸ்துவின் கண்ணே மனதைத் தாக்கினவனும், அநித்தியமான பிரகிருதியின் குணத்தை யாதாரமாக எண்ணுமது முள்ளவனெவனோ, அவன் கன்மத்திற் பிரவேசித்தவனாயினும், எத்தகைய கன்மத்தையுஞ் செய்தவனன்று. (௨௦)

நிராஶீர்யதசித்தாத்மா த்யக்தஸர்வபரிக்ரஹ꞉|
ஶாரீரம் கேவலம் கர்ம குர்வந்நாப்நோதி கில்பிஷம்|| உக||

(ப-ம்.) நிராசீ꞉-ஆசையற்றவனாய், யத சித்த ஆத்மா-அடக்கிய மனதும் சித்தமுமுடையனாய், த்யக்த ஸர்வபரிக்ரஹ꞉ - விடப்பட்ட ஸகல விஷயங்களுமுடையனாய், சாரீரம் கேவலம்-சரீரத்துக்குமாத்திரம்வேண்டிய, கர்ம-கருமத்தை, குர்வந்அபி - செய்துவந்தபோதிலும், கில்பிஷம்-ஸம்ஸாரபந்தத்தை, நாப்நோதி-அடையமாட்டான்.

(தா-ம்) பலத்திலாசை யற்றவனும் மனதையும் இந்திரியங்களையும் கட்டினவனும், பிரகிருதிவஸ்துக்களிலகப்பாவத்தை யொழித்தவனும், சரீரத்தைச்சார்ந்த கன்மத்தைமாத்திரஞ் செய்கிறவனுமிருக்கிறவன் பாவத்தையடையான். (உக)

யத்ருச்சாலாபஸந்துஷ்டோ த்வந்த்வாதீதோ விமத்ஸர꞉|
ஸம꞉ ஸித்தாவஸித்தௌ ச க்ருத்வாபி ந நிபத்யதே|| உஉ||

(ப-ம்.) யத்ருச்சா லாப ஸந்துஷ்ட꞉-விரும்பாமல் கிடைத்த ஆஹாரபதார்த்தால த்ருப்தியடைந்தவனும், த்வந்த்வ அதீத꞉-சுகதுக்கங்களைக் கடந்தவனாய்ப் பொறுத்தவனாய், விமத்ஸர꞉-அசூயையற்றவனும், ஸித்தௌ-லாபத்திலும்; அஸித்தௌச - அலாபத்திலும், ஸம꞉-ஸம(புத்தியாயிருக்கும் புருஷன்), க்ருத்வாபி - செய்தும், நபத்யதே-கட்டுப்படுகிறதில்லை. (உஉ)

(தா-ம்) முயற்சியின்றி அதுவாய்க்கிடைத்த வஸ்துவிலுள்ளக் கிளர்ச்சியுடன் திருப்தியடைந்து சீதோஷ்ணமென்னு மின்பதுன்பத்தை விடுத்து பிறரிடத்திற் பொறாமையின்றி தனக்கு நேரிடுந்தீங்குகள் யாவற்றையும் வினையின் பயனென்றொதுக்கி இலாபநஷ்டங்களிற் சமபுத்தி வகித்தவன கன்மத்தைச் செய்தாலும் ஸம்சாரபந்தத்திலகப்படான். (உஉ)

கதஸங்கஸ்ய முக்தஸ்ய ஜ்ஞாநாவஸ்திதசேதஸ꞉|
யஜ்ஞாயாசரத꞉ கர்ம ஸமக்ரம் ப்ரவிலீயதே|| உங||

(ப-ம்) ஜ்ஞாந அவஸ்தித சேதஸ꞉ - (ஆத்ம) ஞானத்தில் ஊன்றிய மனமுடையனாய், கத ஸங்கஸ்ய-விஷயத்தில் ஆசையற்று, முக்தஸ்ய-காமக்ரோதங்களை விட்டவனாய், யஜ்ஞாய - யாகத்துக்காக,

ஆசரதஃ-பகவத் பரீத்யர்த்தமாகவே செய்கிறவனுடைய, கர்ம - (புண்ணியபாவமென்கிற) கருமம், ஸமக்ரம்-முழுதும், ப்ரவிலீயதே-நசித்துப்போகும். (௨௩)

(தா-ம்.) மெஞ்ஞானத்தில் ஸ்திரபுத்திவைத்து அதற்கு வேறுபாடான வஸ்துக்களில் விருப்பமின்றி பிரகிருதி சம்பந்தத்தை வேரறுத்தவன்செய்யும் யாகாதிகன்மங்களால் புண்ணியபாபமான பிராசீநகன்மங்கள் யாவும் நசிக்கும். (௨௩)

ப்ரஹ்மார்பணம் ப்ரஹ்மஹவிர் ப்ரஹ்மாக்நௌ ப்ரஹ்மணா ஹுதம்।
ப்ரஹ்மைவ தேந கந்தவ்யம் ப்ரஹ்மகர்மஸமாதிநா॥ ௨௪॥

(ப-ம்) ப்ரம்ஹார்பணம் - பிரமஸ்வரூப ஸ்ருக்முதலியவற்றையுடைய, ப்ரம்ஹஹவிஃ - பிரமஸ்வரூபமான அவிஸ்ஸானது, ப்ரம்ஹணு-பிரமஸ்வரூப (கர்த்தாவால்), ப்ரம்ஹஅக்நௌ-பிரமஸ்வரூப அக்கினியில், ஹுதம்-ஓமம்பண்ணப்பட்டது, இதி - என்று, ப்ரம்ஹகர்ம ஸமாதிநா-பிரமஸ்வரூபம் கருமமென்கிற நினைவுள்ள, தேந-அவனால்; ப்ரம்ஹ ஏவ-பிரம்ம (ஸ்வரூபஆத்மாவே) கந்தவ்யம்-அடையத்தக்கதாகும். (௨௪)

(தா-ம்) பிர்மமாகிய சாதனவஸ்துவுடன்கூடிய பிர்மமென்னும் ஹோமத்திரவியமானது பிர்மமென்கிற அக்கினியிற் பிர்மரூபியான கர்த்தனால் ஹோமஞ்செய்யப்படுகின்றது. அப்படிப்பட்ட பிர்மரூபமான கர்மத்தைத் தியானிப்போருக்கு பிர்மரூபமான ஆன்மஞானம் லபிக்கும். (௨௪)

தைவமேவாபரே யஜ்ஞம் யோகிந: பர்யுபாஸதே।
ப்ரஹ்மாக்நாவபரே யஜ்ஞம் யஜ்ஞேநைவோபஜுஹ்வதி॥ ௨௫॥

(ப-ம்.) அபரே-சில, யோகிநஃ-(கரும) நிஷ்டர்கள், தைவம்ஏவ-தேவதார்ச்சனரூபமான, யஜ்ஞம்-யக்ஞத்தை, பர்யுபாஸதே - அநுட்டிக்கிறார்கள்; அபரே-சிலர், யஜ்ஞம்-யக்ஞத்துக்குச் சாதனமான(அவிஸ்ஸை), யஜ்ஞேந ஏவ-யக்ஞத்தின் உபகரணமான (ஸ்ருகாதியால்), பரம்ஹ அக்நௌ - பிரமஸ்வரூப அக்கினியில், உபஜுஹ்வதி-ஓமம் செய்கிறார்கள். (௨௫)

(தா-ம்) சிலயோகிகள் தேவார்ச்சனரூபமான யஞ்ஞத்தையே கர்மமென்றநுஷ்டிக்கின்றனவர்கள், மற்றுஞ் சிலர் பிர்மமென்னுமக்கினியில் யஞ்ஞசாதனத்தினுலேயே யஞ்ஞத்தை "ஹவிஸ்ஸை" ஹோமஞ்செய்கிறார்கள். (௨௫)

𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍍𑌯𑌨𑍍𑌯𑍇 𑌸𑌂𑌯𑌮𑌾𑌗𑍍𑌨𑌿𑌷𑍁 𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑌿 ।
𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑍀𑌨𑍍𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑌨𑍍𑌯 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌗𑍍𑌨𑌿𑌷𑍁 𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑌿 ॥ ௨௬॥

(ப-ம்.) அந்யே-(பின்னும்) சிலர், ஶ்ரோத்ராதீநி-காதுமுதலிய, இந்த்யாணி-இந்திரியங்களை, ஸம்யம அக்நிஷு-அடக்குவதென்கிற அக்கினிகளில்; ஜுஹ்வதி-ஓமஞ்செய்கிறார்கள்; அந்யே-(பின்னும்) சிலர், சப்தாதீந் விஷயாந்-சப்தாதிவிஷயங்களை, இந்த்ரிய அக்நிஷு-இந்திரியங்களென்றும் அக்கினிகளில், ஜுஹ்வதி - ஓமம் செய்கிறார்கள். (௨௬)

(தா-ம்) சிலர், செவிமுதலிய இந்திரியங்களை நிக்கிரகமென்னும் அக்னியில் ஹோமஞ்செய்கிறார்கள், இன்னுஞ் சில யோகிகள் சப்தஸ்பர்சாதி இந்திரியங்களையே அக்கினியில் ஹோமஞ் செய்கிறார்கள். (௨௬)

𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌾𑌣𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌚𑌾𑌪𑌰𑍇 ।
𑌆𑌤𑍍𑌮𑌸𑌂𑌯𑌮𑌯𑍋𑌗𑌾𑌗𑍍𑌨𑍌 𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑍀𑌪𑌿𑌤𑍇 ॥ ௨௭॥

(ப-ம்) அபரே-(பின்னும்) சில,யோகிநஃ-யோகிகள், ஸர்வாணி-எல்லா, இந்த்ரிய கர்மாணி-இந்திரியங்களின் செயல்களையும்,ப்ராண கர்மாணிச-பிராண வியாபாரங்களையும், ஜ்ஞாந தீபிதே-ஞானத்தால்சொலிக்கின்ற, ஆத்ம ஸம்யமயோக அக்நௌ-மனதை அடக்குவதென்னும் யோகத்தீயில், ஜுஹ்வதி-ஓமம் செய்கிறார்கள். (௨௭)

(தா-ம்) மற்றுஞ் சிலர், இந்திரியங்களின்றொழில்களையும், பிராணாதிகளின்றொழில்களையும், ஜ்வலிக்கும் மனோநிக்கிரகமென்னும் அக்கினியில் ஆகுதிசெய்கிறார்கள். (௨௭)

𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌯𑌜𑍍𑌞𑌾𑌸𑍍𑌤𑌪𑍋𑌯𑌜𑍍𑌞𑌾 𑌯𑍋𑌗𑌯𑌜𑍍𑌞𑌾𑌸𑍍𑌤𑌥𑌾𑌪𑌰𑍇 ।
𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑌜𑍍𑌞𑌾𑌶𑍍𑌚 𑌯𑌤𑌯𑌃 𑌸𑌂𑌶𑌿𑌤𑌵𑍍𑌰𑌤𑌾𑌃 ॥ ௨௮॥

(ப-ம்.) ஸம்சித வ்ரதாஃ-திடசங்கற்பமுள்ள, யதயஃ - கருமயோகிகளான(சிலர்), த்ரவ்யயஜ்ஞாஃ - திரவியத்தால் யக்ஞஞ்செய்பவர்கள்; தபோயஜ்ஞாஃ-தவமே யாகமாயுடையவர்கள் (சிலர்), ததா - அப்படியே, அபரே-பின்னும் சிலர், யோக யக்ஞாஃ-யோகமே (புண்ணியக்ஷேத்திராதிகளுக்குப்போவதே) யக்ஞமாயிருக்கிறார்கள்; (அபரேச)-பின்னும் சிலர், ஸ்வாத்யாயஜ்ஞாந யஜ்ஞாஃச-வேதாப்பியாஸமும்(அதின்) அர்த்தஞானமுமே யக்ஞமாயிருக்கிறார்கள். (௨௮)

(தா-ம்) திருடமான விரதத்தையுடைய சிலபேர்கள் திரவியத்தையே யஞ்ஞமாயுடையவர்கள். மற்றுஞ் சிலர், தவத்தையே யாகமாயுடையவர்கள். இன்னுஞ்சிலர், யோகங்களையே யாகமாயுடைய

வர்கள். சிலர், வேதாத்தியயனத்தையே யஞ்ஞமாயுடையவர்கள் சிலர், வேதார்த்த ஞானத்தையே யஞ்ஞமாயுடையவர்கள். (ஸ)ஸம்சிதவ்ரதா: காயக்கிலேசம்முதலிய சாந்திராயணமுடையோர். ()

ப்ராணாபாநகதீ ருத்த்வா ப்ராணாயாமபராயணா: |
அபாநே ஜுஹ்வதி ப்ராணம் ப்ராணே அபாநம் ததாபரே ||
அபரே நியதாஹாரா: ப்ராணாந் ப்ராணேஷு ஜுஹ்வதி|

(ப-ம்) அபரே-(பின்னும்) சிலர், ப்ராணாபாநகதிருத்வா - ப்ராணாபானவாயுக்களுடைய நடைகளைத்தடுத்து, ப்ராணாயாம பராயணா:-பிராணாயாமநிட்டையுற்றவராய், அபாநே-அபாநத்தில், பிராணம்-பிராணனை, ஜுஹ்வதி-ஓமம் செய்கிறார்கள்; ததா - அப்படியே, அபரே-பின்னும் சிலர், ப்ராணே-பிராணனில், அபாநம் - அபானத்தை, (ஜுஹ்வதி)-ஓமம் செய்கின்றனர். (அபரே)-(பின்னும்) சிலர், நியதாஹாரா:-மிதமான ஆகாரஞ் செய்துகொண்டு,ப்ராணேஷு(ஏவ)-பிராணன் களிலேயே, ப்ராணாந் - பிராணன்களை, ஜுஹ்வதி-ஓமம் செய்கிறார்கள். (உக-உகூ)

(தா-ம்) பிராணாயாமத்தையே சிலர், ஆகாரநியமத்துடன்,அபானவாயுவில் பிராணவாயுவை ஹோமஞ்செய்கிறார்கள். என்பதால், பூரகமென்னும் பிராணாயாமத்தைச் செய்கிறார்கள். "இன்னுஞ்சிலர் பிராணவாயுவில் அபானவாயுவை ஹோமஞ்செய்கிறார்கள். என்றால், இரேசகமென்னும் பிராணாயாமத்தைச் செய்கிறார்கள்." மற்றுஞ்சிலர், பிராணாபானங்களிரண்டு வாயுக்களின் வழிகளையுந்தகைந்து பிராணவாயுவை பிராணவாயுவிலேயே ஹோமஞ் செய்கிறார்கள். "இதனால் பிராணவாயுவை வெளியிடாமலும், உள்ளுக்கிழுக்காமலும்; ஸ்தம்பித்து கும்பகமென்னும், பிராணாயாமத்தைச் செய்கிறார்கள்." (உக- கூ)

ஸர்வே அப்யேதே யஜ்ஞவிதோ யஜ்ஞக்ஷபிதகல்மஷா:| ங௦||
யஜ்ஞசிஷ்டாம்ருதபுஜோ யாந்தி ப்ரஹ்ம ஸநாதநம்|
நாயம் லோகோ அஸ்த்யயஜ்ஞஸ்ய குதோ அந்ய: குருஸத்தம||

(ப-ம்.) ஏதே-இவர்கள், ஸர்வே அபி-எல்லாரும், யஜ்ஞ விதஃ-யக்ஞநிட்டை யுடையவர்களாய், யஜ்ஞக்ஷபித கல்மஷா: - யக்ஞங்களால் போக்கப்பட்ட பாபங்களுடையராய், ஹே குருஸத்தம - வாராய் அருச்சுன! யஜ்ஞ சிஷ்ட அம்ருதபுஜ:-யக்ஞத்தில் மிகுந்த (அன்னமுதலிய) அமுதத்தை உண்டவர்களாய், ஸநாதநம் பிரம்ஹ-சாச்சுவதமான பிரம்மத்தை, யாந்தி-அடைகின்றனர்; அயஜ்ஞஸ்ய-யக்

ஞமற்றவனுக்கு, அயம்-(சுவர்க்காதிரூபமான) இந்த, லோகஃ-லோகத்தி(லுள்ள புருஷார்த்தமானது), நாஸ்தி-கிடையாது; அந்யஃ-(இதற்குப் புறம்பான) மோக்ஷமானது, குதஃ-எப்படி (யுண்டாகும்). ()

(தா-ம்) இவர்களைத்தனரும் யஞ்ஞத்தை யறிந்தவர்களாயும், யஞ்ஞத்தாற் பாபத்தை யொழித்தவர்களாயும், யஞ்ஞசேஷமாகியவமுதை சரீரத்தை இரக்ஷிப்பதற்காகவுண்டு, சாசுவதமான பிரமத்தையுமடைகிறார்கள் ஓ குருவம்சத்திற் பிறந்தவர்களுட்சிறந்த அர்ஜ்ஜுனா! யஞ்ஞமில்லாதவனுக்கு இவ்வுலகம் லபிக்காது, மோக்ஷங்கிடைப்பதேது? (௩0-௩௧)

ஏவம்பஹுவிதா யஜ்ஞா விததா ப்ரஹ்மணோ முகே |
கர்மஜாந்வித்தி தாந்ஸர்வாநேவம் ஜ்ஞாத்வா விமோக்ஷ்யஸே ||

(ப-ம்.) ஏவம்-இப்படிப்பட்ட, பஹுவிதாஃ-பலவிதங்களான, யக்ஞாஃ-யக்ஞங்கள், ப்ரம்ஹணஃ-வேதத்தினுடைய, முகே-முகத்தில், விததாஃ-விவரிக்கப்பட்டன; தாந்ஸர்வாந்-அவைகளெல்லாம், கர்மஜாந்-கருமத்தாலுண்டானவை(யென்று), வித்தி-அறி, ஏவம்-இந்தப்பிரகாரம், ஜ்ஞாத்வா - அறிந்து (அநுட்டித்து), விமோக்ஷ்யஸே-சம்ஸாரபந்தத்திலிருந்து விடுபடுவாய். (௩௨)

(தா-ம்) இப்படி பலவிதங்களான கன்மயோகங்கள் பிர்மத்தினது முகத்தில் வேதரூபமாகவிருக்கிறது. அப்படிப்பட்ட கர்மயோகங்கள் யாவும்; நித்தியநைமித்திக கர்மங்களாலுண்டானதென்றுணர்க. இவ்வண்ண முணர்ந்தபின் முத்திபெறுவாய். (௩௨)

ஶ்ரேயாந்த்ரவ்யமயாத்யஜ்ஞாஜ்ஜ்ஞாநயஜ்ஞ: பரந்தப |
ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞாநே பரிஸமாப்யதே || ௩௩ ||

(ப-ம்) பரந்தப-(ஓ அருச்சுனா!) த்ரவ்யமயாத்-திரவியமயமான, யஜ்ஞாத்-யக்ஞத்தைக்காட்டிலும், ஜ்ஞாந யக்ஞஃ-ஞானமயமானயக்ஞம், ஶ்ரேயாந்-சிரேஷ்டம்; ஹே பார்த்த-ஓ அருச்சுனா! ஸர்வம்-ஸர்வப்பிரகாரமாயிருக்கின்ற, அகிலம் கர்ம-எல்லாக்கருமமும், ஜ்ஞாநே-ஆத்மஞானத்தில், பரிஸமாப்யதே-அந்தர்பூதமாயிருக்கிறது. ()

(தா-ம்) ஓ பரந்தபனே! பார்த்தனே! திரவ்யத்தாற்செய்யப்படுகிற யஞ்ஞத்தைவிட ஞானஸ்வரூபமானயஞ்ஞமே மேலானது. கர்மங்களத்தனையும், நிஶ்ஶேஷமாய் ஞானத்திலேயே முடிவை யடைகின்றது. (௩௩)

தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா |
உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்வதர்ஶிந: || ௩௪ ||

யஜ்ஜ்ஞாத்வா ந புநர்மோஹமேவம் யாஸ்யஸி பாண்டவ |
யேந பூதாந்யசேஷேண த்ரக்ஷ்யஸ்யாத்மந்யதோ மயி || ௩௫

(ப-ம்.) தத்-அந்த (ஆத்ம ஞானத்தை), ப்ரணிபாதேந - நமஸ்காரத்தாலும், பரிப்ரச்நேந-பல்படியான கேள்வியினாலும், ஸேவயா (ச)-சிச்சுரூஷையாலும், வித்தி-அறி; தத்வ தர்சிந꞉-தத்துவ மறிந்த, ஜ்ஞாநிந꞉-பண்டிதர்கள், தே -உனக்கு, ஜ்ஞாநம் - (ஆத்ம) ஞானத்தை, உபதேக்ஷ்யந்தி-உபதேசிப்பர்கள். (௩௪)

(ப-ம்) ஹே பாண்டவ-ஓ பாண்டவனே! யத்(ஜ்ஞாநம்) - எந்த ஞானத்தை, ஜ்ஞாத்வா-அறிந்து, புந꞉-மறுபடியும், ஏவம் - இம்மாதிரி, மோஹம்-அக்ஞானத்தை, நயாஸ்யஸி-அடையமாட்டாய்; யேந-எந்த(ஞானத்தால்), பூதாநி அசேஷேண - எல்லாப்பூதங்களையெல்லாம், ஆத்மநி-உன்னிடத்தில ஆத்மாவில் தானே, த்ரக்ஷ்யஸி-பார்ப்பாய்; அதோ-அனந்தரம், மயி-என்னிடத்தில், ப்ரணிபாதேந - சாஷ்டாங்கதண்டம் ஸமர்பித்தலாலேயும், பரிப்ரச்நேந - கேட்பதினாலேயும், ஸேவயா-ஆசாரியசேவையினாலேயும், வித்தி-அறி. (௩௫)

(தா-ம்) அத்தகைய ஞானத்தை வணக்கத்தாலும், வினவினாலும், பணிவிடையாலுமறிந்துகொள். ஆன்ம சொரூபத்தையறிந்தஞானிகள் அந்த ஞானத்தையுனக்குபதேசிப்பார்கள். ஓ பாண்டவா! அப்படிப்பட்ட ஞானத்தையறிந்து மீண்டும் நீ இவ்வண்ணம் சந்தேகிக்காய், அவ்வறிய ஞானத்தால் எல்லா பிராணிகளையும் உன்னிடத்தும், என்னிடத்து மிருப்பதாக் காண்பாய் என்பதால்; "பிரகிருதி சம்பந்தத்தைவிட ஆன்மசொரூபமெல்லாம் ஞானவடிவாகிச் சமமாய்த்தோற்றுமென்க." (௩௪-௩௫)

அபி சேதஸி பாபேப்ய꞉ ஸர்வேப்ய꞉ பாபக்ருத்தம꞉ |
ஸர்வம் ஜ்ஞாநப்லவேநைவ வ்ருஜிநம் ஸந்தரிஷ்யஸி || ௩௬ ||

(ப-ம்)த்வம்-நீ, ஸர்வேப்ய꞉ பாபேப்ய꞉-எல்லாப்பாவிகளினும் பாபக்ருத்தம꞉-அதிகப்பாவியாக, அஸிசேத்அபி-இருந்தாயாகிலும், ஸர்வம் வ்ருஜிநம்-எல்லாப்பாவத்தையும், ஜ்ஞாந ப்லவேநைவ-(ஆத்ம)ஞானமென்னும் ஓடத்தாலேயே, ஸந்தரிஷ்யஸி-நன்கு தாண்டிவிடுவாய். (௩௬)

(தா-ம்.) எல்லாப்பாபிகளைவிட நீ அதிக பாதகனாகவிருந்தபோதிலும், ஸமஸ்தமான பாபமென்னு மலைகடலை ஆத்துமஞானமாகிற ஓடத்தால் தாண்டிவிடுவாய். (௩௬)

யதைதாம்ஸி ஸமித்தோऽக்நிர்பஸ்மஸாத்குருதேऽர்ஜுந |

𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌭𑌸𑍍𑌮𑌸𑌾𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌤𑌥𑌾 ॥ ௧௭ ॥

(ப-ம்.) ஹே அர்ஜுந-வாராய் அர்ச்சுனா! யதா-எப்படி, ஸமித்தஃ-நன்றாய் சொலிக்கின்ற, அக்நிஃ-நெருப்பானது, ஏதாம்ஸி - கட்டைகளை, பஸ்மஸாத் குருதே-பஸ்மமாய்ச் செய்கிறதோ, ததா-அப்படி, ஜ்ஞாநஅக்நிஃ-ஞானத்தீயானது, ஸர்வ கர்மாணி-எல்லாக் கருமங்களையும், பஸ்மஸாத் குருதே-பஸ்மமாய்ச் செய்யும். (௧௭)

(தா-ம்) அர்ச்சுனா! நன்கு எரிகின்ற அக்கினி எவ்வாறுகாஷ்டங்களை பஸ்பமாக்குகிறதோ அவ்வாறே ஆன்மஞானமாகிற அக்கினி ஜந்மாந்திர தீவினைகள் யாவையும் சாம்பலாக்கும். (௧௭)

𑌨 𑌹𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌸𑌦𑍃𑌶𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌮𑌿𑌹 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌤𑌤𑍍𑌸𑍍𑌵𑌯𑌂 𑌯𑍋𑌗𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌃 𑌕𑌾𑌲𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑌿 ॥ ௧௮ ॥

(ப-ம்.) ஹி-யாதொருகாரணத்தால், இஹ-லோகத்தில், ஜ்ஞாநேந-ஞானத்தோடு, ஸத்ருசம்-ஸமானமாய், பவித்ரம்-பரிசுத்திகரமான(வஸ்து), நவித்யதே-இல்லை; தத் - அந்த (ஞானத்தை), யோகஸம்ஸித்தஃ-யோகத்தால் ஸித்திபெற்றவன்; காலேந-கால வளவில், ஆத்மநி-ஆத்மாவில், ஸ்வயம்-தான், விந்ததி-அடைகிறான். (௧௮)

(தா-ம்) ஆத்ம ஞானத்துக்குச் சமதையான பரிசுத்தவஸ்து இவ்வுலகி லொன்றுமில்லை. அப்படிப்பட்ட ஆன்மஞானம் யோகசித்தியடைந்தவனுக்குக் கிரமமாய் ஆன்மாவினிடத்தில் தானாகவே விளங்குகிறது. (௧௮)

𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌵𑌾𑌂𑌲𑍍𑌲𑌭𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑌤𑍍𑌪𑌰𑌃 𑌸𑌂𑌯𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌪𑌰𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌚𑌿𑌰𑍇𑌣𑌾𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥ ௧௯ ॥

(ப-ம்.) ஶ்ரத்தாவாந்-விசுவாஸமுடையனாய், தத்பரஃ-அதில்(தானே)ஊன்றியவனாய், ஸம்யதேந்த்ரியஃ-(விஷயத்தினின்றும்) திருப்பப்பட்ட இந்திரியங்களையுடைய(புருஷன்), ஜ்ஞாநம் லபதே-ஞானத்தையடைகிறான்; ஜ்ஞாநம் லப்த்வா-ஞானத்தை அடைந்து, பராம் சாந்திம்-மேலான சுகத்தை, அசிரேண-சீக்கிரமாகவே, அதிகச்சதி-அடைகிறான். (௧௯)

(தா-ம்) ஞானமார்க்கத்தையே முக்கியமாயடைந்து சிரத்தையுடையவனாய் இந்திரியநிக்கிரகஞ் செய்கிறவன் ஞானத்தையடைந்த பின்பு மேலான மோக்ஷமென்னும் சாந்தியை அடைகிறான். (௧௯)

𑌅𑌜𑍍𑌞𑌶𑍍𑌚𑌾𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌶𑍍𑌚 𑌸𑌂𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ।
𑌨𑌾𑌯𑌂 𑌲𑍋𑌕𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌨 𑌪𑌰𑍋 𑌨 𑌸𑍁𑌖𑌂 𑌸𑌂𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥ ௨௦ ॥

(ப-ம்) அஜ்ஞஃச-ஞானமற்றவனும், அஶ்ரத்ததாநஃச-விசுவா

ஸமற்றவனும், ஸம்சய ஆத்மா-ஸந்தேஹமான மனம்பொருந்திய வனு(மிருப்பவன்), விநச்யதி - கெட்டுப்போகிறான்; ஸம்சய ஆத்ம ந:-ஸந்தேஹ மனமுற்றவனுக்கு; அயம் லோக:(அபி)-இந்த லோக மும், நஅஸ்தி-இல்லை, பர:ந(அஸ்தி) - பரலோகமுமில்லை, ஸுகம்-(மோக்ஷரூபமான)சுகமும், ந(ஸ்தி)-இல்லை. (சம)

(தா-ம்) ஆன்ம ஞானமற்றவனும், ஞானத்தைப் பெருக்குவதி லாவலில்லாதவனும், உபதேசத்தாலடைந்த ஞானத்திற்சந்தேகமன துடையவனும் கெடுவான் அத்தகையசந்தேகிக்கு இந்த பிராசினவு லகும், பரலோகமும், தர்மார்த்தகாமரூபமாகிய சதுர்வித புருஷார் த்தமும், சுகமும் மோக்ஷமுமில்லை. (சம)

யோகஸந்ந்யஸ்தகர்மாணம் ஜ்ஞானஸம்சிந்நஸம்சயம் ।
ஆத்மவந்தம் நகர்மாணி நிபத்நந்தி தனஞ்ஜய ॥ சக॥

(ப-ம்.) யோக ஸந்யஸ்த கர்மாணம்-(எல்லாக்கருமமும் பிரம ஸ்வரூபமென்கிற) நினைவினால் விடப்பட்ட கர்மமுடையவனாய்,ஜ்ஞா நஸம்சிந்ந ஸம்சயம்-ஞானத்தால் அறுப்பட்டஸந்தேகமுடையனாய், ஆத்மவந்தம்-சிறந்த மனமுடையனாயிருக்கும் (புருஷனை), ஹே தன ஞ்ஜய-ஓ தனஞ்சயனே! கர்மாணி-கருமங்கள், நநிபத்நந்தி-இஷ்டாநி ஷ்டபலங்களில் கட்டுப்படுத்தமாட்டாது. (சக)

(தா-ம்) ஓ தனஞ்சயா! யோகத்தால ஞானரூபமாகியகாமயோ கமுண்டாகி ஆன்ம ஞானத்தா லாத்மவிஷயசந்தேகந்தைத்துலைத்து அசைவற்ற மனதுடையவனை ஜன்மாந்திரவினைகள் பிடிக்காது. ()

தஸ்மாதஜ்ஞானஸம்பூதம் ஹ்ருத்ஸ்தம் ஜ்ஞானாஸினாத்மந: ।
சித்வைநம் ஸம்சயம் யோகமாதிஷ்டோத்திஷ்ட பாரத ॥ சஉ॥

(ப-ம்) ஹே பாரத-ஓ அருச்சுனா! தஸ்மாத் - ஆகையால், அஜ் ஞாந ஸம்பூதம்-அக்ஞானத்தால் உண்டாய், ஹ்ருத்ஸ்தம்-ஹ்ருதய த்தில் இருக்கும், ஏநம் ஆத்மந:ஸம்சயம் - இந்த ஆத்ம ஸந்தேஹத் தை, ஜ்ஞாந அஸிநா-ஞானமென்னுங் கத்தியால், சித்வா - வெட்டி (யெறிந்து), யோகம்-கருமயோகத்தை, ஆதிஷ்ட்ட-அனுட்டிக்கக்க டவாய், உத்திஷ்ட்ட-எழுந்திரு. (சஉ)

(தா-ம்) ஆகையால், அஞ்ஞானத்தாலுண்டாகி மனதிலிருக்கி ன்ற அவ்வாத்மவிஷயமான சந்தேகத்தை மெஞ்ஞானமாகிறகத்தி யால் சேதித்து கர்மயோகத்தைச்செய். ஓ பாரத! எழுந்திரு. (சஉ)

ஸ்ரீகீதாஸூ விஸ்வரூபஸந்தர்ஸநயோகமென்னும்
நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

ஐந்தாவது அத்தியாயம்.

கர்மஸந்ந்யாஸயோக:

அர்ச்சுனவாக்கியம்.

ஸந்ந்யாஸம் கர்மணாம் க்ருஷ்ண புநர்யோகம் ச ஸம்ஸஸி।
யச்ச்ரேய ஏதயோரேகம் தந்மே ப்ரூஹி ஸுநிஶ்சிதம்॥ ௧॥

(ப-ம்) ஹே க்ருஷ்ண-ஓ கிருஷ்ணா! புந:-மறுபடியும், கர்மணாம்-கர்மங்களின், ஸந்யாஸம் - விடுதல் என்கிற; ஞானத்தையும், சம்ஸஸி-கொண்டாடுகிறீர்; யோகம்ச-கருமயோகத்தையும், (சம்ஸஸி) புகழ்கின்றீர்; ஏதயோ:-இரண்டினுள்ளே, ஸ்ரேய:-சிரேஷ்டமாக, யத் ஏகம் அஸ்தி-யாதொன்றுண்டோ, தத்-அதை, மே - எனக்கு, ஸுநிச்சிதம் ப்ரூஹி - நன்றாய் நிச்சயிக்கப்படும்படிச் சொல்லுவாயாக. (௧)

(தா-ம்.) ஓ கிருஷ்ணா! கர்மசன்னியாஸத்தை "ஞானயோகத்தைச்" செய்யென்று சொல்லுகின்றீர் மறுபடியும் கர்மயோகத்தைச்செய்யென்றும் சொல்லுகின்றீர் இவ்விரண்டுகளில் சிறந்ததான ஒன்றையே, நன்றாய்நிச்சயித்து எனக்குச்சொல்லும். (௧)

ஸ்ரீகிருஷ்ண வாக்கியம்.

ஸந்ந்யாஸ: கர்மயோகஶ்ச நி:ஶ்ரேயஸகராவுபௌ।
தயோஸ்து கர்மஸந்ந்யாஸாத்கர்மயோகோ விஶிஷ்யதே॥

(ப-ம்) ஸந்யாஸ:-கர்மங்களை விடுதல் என்கிற ஜ்ஞானயோகமும், கர்மயோகஶ்ச - கருமயோகமும், உபௌ - இரண்டும், நிஸ்ரேயஸகரௌ-மோக்ஷ ஸாதனமானவைகள்; தயோ:மத்யே-அவற்றினிடையில், கர்ம ஸந்யாஸாத்-கருமத்தியாகத்தைக் காட்டிலும், கர்மயோகஸ்து-கருமயோகமே, விசிஷ்யதே-சிறப்புற்றது. (௨)

(தா-ம்) ஞானயோகம், கர்மயோகம் இவ்விரண்டுகளும் மோட்சஹேதுக்கள் ஆங்ஙனமாயினும், ஞானயோகத்தைக்காட்டிலும்கர்மயோகமே சிறந்தது. (௨)

ஜ்ஞேய: ஸ நித்யஸந்ந்யாஸீ யோ ந த்வேஷ்டி ந காங்க்ஷதி।
நிர்த்வந்த்வோ ஹி மஹாபாஹோ ஸுகம் பந்தாத்ப்ரமுச்யதே॥

(ப-ம்) ஹே மஹா பாஹோ - ஓ பெரியதோளாள்களையுடைய அர்ச்சுனா, ய:-எந்த, நகாங்க்ஷதி - (ஆத்மாவைத்தவிரமற்றொன்றையும்) விரும்பானோ; நத்வேஷ்டி-பகைக்கமாட்டானோ, நிர்த்வந்த்வ:-

த்வந்த்வர்கள் இல்லாதவன்; ஸ:-அவன், நித்ய ஸந்யாஸீ-நித்தியம் ஞாநயோகநிஷ்ட(னென்று) ஜ்ஞேய:-தெரிந்துகொள்ளத் தகுந்தவன், (ஸ:)-அவன், ஸுகம்-வருத்தமின்றி, பந்தாத்-ஸம்ஸாரத்திலிருந்து, ப்ரமுச்யதே-விடுபடுகிறான். (௩)

(தா-ம்) ஓ மஹாபாஹோ! யாவனொருவன் ஆசையில்லாமலும், த்வந்துவமென்கின்ற சுகதுக்கமில்லாமலும் இருக்கிறானோ, அவன் நித்தியசன்னியாசி "நித்தியஞானயோகத்திலிருப்பவன்" என்று அறியத்தக்கவன், அவன் சம்சாரத்திலிருந்து சுலபமாய் விடப்படுகிறான். (௩)

ஸாங்க்யயோகௌ ப்ருதக் பாலா: ப்ரவதந்தி ந பண்டிதா:।
ஏகமப்யாஸ்தித: ஸம்யகுபயோர்விந்ததே பலம்॥ ௪॥

(ப-ம்) பாலா:-அஜ்ஞர்கள், ஸாங்க்ய யோகௌ-(ஞாநகர்ம) யோகங்களை, ப்ருதக்-தனிப்பட்டவைகளாக, ப்ரவதந்தி-சொல்லுகிறார்கள்; பண்டிதா:-பண்டிதர்களோ, ந-சொல்லமாட்டார்கள், உபயோ:-இவ்விரண்டினுள், ஏகம் ஆஸ்த்திதஃஅபி-ஒன்றை அனுட்டித்தாலும், ஸம்யக்பலம்-நல்லபயனை (ஆத்மஸாக்ஷாத்காரத்தை), விந்ததே-அடைகிறான். (௪)

(தா-ம்) ஞானயோகம், கருமயோகம் இவ்விரண்டுகளும் வேறுகளென்று பூர்ணமில்லாதவர்கள் சொல்லுகிறார்கள். இவ்விரண்டுகளில் ஒன்றையாவது நன்றாய்ச்செய்கிறவன் ஒரேபலத்தை யடைகிறான். (௪)

யத்ஸாங்க்யை: ப்ராப்யதே ஸ்தானம் தத்யோகைரபி கம்யதே।
ஏகம் ஸாங்க்யஞ்ச யோகஞ்ச ய: பஶ்யதி ஸ பஶ்யதி॥ ௫॥

(ப-ம்.) ஸாங்க்யை:-ஜ்ஞாநநிஷ்டர்களால்; யத்ஸ்தாநம்-எந்தவிடம், ப்ராப்யதே-அடையப்படுகின்றதோ, தத்-அது, யோகைரபி-(கரும)யோகிகளாலும், கம்யதே-அடையப்படும், ஸாங்க்யம்ச-ஞாநயோகத்தையும், யோகஞ்ச-கர்மயோகத்தையும், ஏகம்-ஒன்றாக, ய:பச்யதி-எவன் பார்க்கிறானோ, ஸ:-அவனே, பச்யதி-அறிந்தவன்.()

(தா-ம்) ஸாங்கியயோகத்தைச் செயகின்றவனால் அடையப்படும் பலமெதுவோ, அதுவே கர்மயோகத்தைச் செய்கின்றவனாலும் அடையப்படுகின்றது. ஒரேவிதமாகிய பலத்தைக்கொடுப்பதினால் ஞானயோகமும், கர்மயோகமும் ஒன்றாகவே யிருக்கிறதென்று எவன்தெரிந்துகொள்கிறானோ, அவனே தெரிந்துகொண்டவன் என்றால் பண்டிதன். (௫)

[illegible]
[illegible] ௬॥

(ப-ம்.) ஹே மஹாபாஹோ - பெரியபுஜத்தையுடைய ஓ அர்ஜுநா! ஸந்யாஸஸ்து-ஜ்ஞாநயோகமானல், அயோகதஃ-கர்மயோகமின்றி, ஆப்தும்-அடைவதற்கு, துக்கம்-கஷ்டம்; யோகயுக்தஃ-கர்மயோகத்தோடுகூடினவனும், முநிஃ-(ஆத்மாவை)மனனஞ்செய்பவன், நசிரேண-தாமதமின்றி, ப்ரம்ஹ-ஆத்மாவை, அதிகச்சதி - அடைகின்றான். (௬)

(தா-ம்) ஓ மஹாபாஹோ! ஆனல் கர்மயோகமின்றி ஞானயோகத்தை யடைவது கடினம். கர்மயோகம் நிறைந்தமுனி "அத்தியாத்மபரன்" மாத்திரம் சீக்கிரமாய் ஆத்மாவையடைகிறான். (௬)

[illegible]
[illegible] ௭॥

(ப-ம்.) யோகயுக்தஃ-(கரும)யோகநிஷ்டன், விசுத்த ஆத்மா-பரிசுத்தமான மனமுள்ளவனும், விஜித ஆத்மா-ஜயிக்கப்பட்ட மனமுடையனும், ஜித இந்த்ரியஃ - ஜயிக்கப்பட்ட இந்த்ரியங்களுடையனும், ஸர்வபூத ஆத்மபூத ஆத்மா-ஸமஸ்த ப்ராணிகளுடைய ஆத்மாக்களும் ஒரே ஆகாரமுள்ளவர்களென்கிற ஜ்ஞாநமுள்ளவனும் ஆகியபுருஷன், குர்வந்அபி-செய்துவந்தானாகிலும், நலிப்யதே-ஒட்டப்படுவதில்லை. (௭)

(தா-ம்) "பகவதாராதன ரூபமாகிய" கர்மயோகத்தில், நிஷ்டையுண்டாக்கி பரிசுத்தமான மனதையுடையவனும், மனதையும், இந்திரியங்களையும், ஜயித்து தனதான்மாவையும், எல்லாப்பிராணிகளிட ஆன்மாவையும், ஒரே ரூபமாக நினைக்கிறவன், கர்மத்தைச்செய்தபோதிலும் அகங்காராதிகள் அவனையடையாது. (௭)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௯॥

(ப-ம்) தத்வவித்-ஆத்மஸ்வரூபம் அறிந்தவன், யுக்தஃ-(கர்ம)நிஷ்டனுக்கொண்டு, பச்யந்-பார்க்கும்பொழுதும்; ச்ருண்வந்-கேட்கும்பொழுதும், ஸ்ப்ருசந்-பரிசிக்கும்பொழுதும், ஜிக்ரந்-மொகரும்பொழுதும்; அச்நந்-புசிக்கும்பொழுதும், கச்சந் - நடக்கும்பொழுதும், ஸ்வபந்-உறங்கும்பொழுதும், ச்வஸந்-மூச்சுவிடும்பொழுதும்

ப்ரலபந்-பேசும்பொழுதும், விஸ்ருஜந்-விடும்பொழுதும், க்ருஹ்ண ந்-எடுக்கும்பொழுதும், உந்மிஷந்-கண்திறக்கும்பொழுதும், நிமிஷ ந் அபி - கண்களை மூடும்பொழுதும், இந்த்ரிய அர்த்தேஷு-தங்கள் தங்கள் கார்யங்களில், இந்த்ரியாணி-அந்தந்த இந்த்ரியங்கள், வர்த ந்தே-பிரவர்த்திக்கின்றன, இதி-என்று, தாரயந் - நிச்சயிக்கிறவனா ய், கிஞ்சித்-சிறிதும், நைவகரோமி-(நான்) செய்யவில்லை; இதி மந் யேத-நினைப்பான். (அ-௯)

(தா-ம்) தத்துவமறிந்தயோகி பார்த்தாலும், கேட்டாலும், தொ ட்டாலும், வாசனையறிந்தாலும், புசித்தாலும், நடந்தாலும், தூங்கி னாலும், சுவாசத்தைவிட்டாலும், பேசினாலும், விட்டாலும், பிடித் தாலும், கண்களைத் திறந்தாலும், மூடினாலும், அந்தந்த இந்திரியங் கள், தங்கள் தங்கள் காரியங்களில் பிரவேசித்திருக்கிறதென்று நிச்சயித்தவனாய், தானொன்றையும்செய்யவில்லையென்று நினைப்பான்.

ப்ரஹ்மண்யாதாய கர்மாணி ஸங்கம் த்யக்த்வா கரோதி ய:|
லிப்யதே ந ஸ பாபேந பத்மபத்ரமிவாம்பஸா|| ௰||

(ப-ம்.) ய:-எவன், கர்மாணி - (எல்லாக்) கருமங்களையும், ப்ர ஹ்மணி-பிரகிருதியில், ஆதாய-வைத்து, ஸங்கம்-பலாபேக்ஷையை, த்யக்த்வா-விட்டு, கரோதி-கர்மங்களைச் செய்கிறானோ, ஸ: - அவன், அம்பஸா-ஜலத்தால், பத்மபத்ரம் இவ-தாமரையிலையைப்போல், பாபேந-பாவத்தால், நலிப்யதே-பூசப்படமாட்டான். (௰)

(தா-ம்.) கர்மங்களை பிரகிருதியினிடத்தில்வைத்து பலத்திலப ற்றைவிட்டு எவன் கர்மத்தைச்செய்கிறானோ, அவன் தாமரையிலை யில் ஜலம்போல் பிரகிருதிசம்பந்தங்களால் புரயங்கள் சேருவதில்லை. (ஸ) ஸங்கம்-மோக்ஷபலனில்கூட இச்சையை. (௰)

காயேந மநஸா புத்த்யா கேவலைரிந்த்ரியைரபி|
யோகிந: கர்ம குர்வந்தி ஸங்கம் த்யக்த்வாத்மஶுத்தயே||

(ப-ம்.) யோகிந:-கருமயோகிகள், ஸங்கம் [illegible], த்யக்த்வா-விட்டு, ஆத்மசுத்தயே-ஆத்மசுத்திக்காக, [illegible] தாலும், மநஸா-மனதினாலும், புத்த்யா-புத்தியினாலும், கேவலை:-சுத்த மான, இந்த்ரியை: அபி-இந்த்ரியங்களாலும், கர்ம-கர்மத்தை, குர் வந்தி-செய்கின்றனர். (௧௧)

(தா-ம்) யோகிகள், சரீரத்தினாலும்; மனதினாலும், புத்தியினா லும், கேவலமான இந்திரியங்களாலும், ஜனித்த பலனில் ஆசையை விட்டு, ஆத்மாவின் பூர்வகர்மபந்த நிவர்த்திரூபமாகிய ஆத்மசுத்திக்

காரக் கர்மத்தைச் செய்கிறார்கள். (ஸ) ஆத்மஶுத்தயே - மனம் பிரம்ஞானத்தால் பரிசுத்தப்படும்பொருட்டு. (௧௧)

𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌨𑍈𑌷𑍍𑌠𑌿𑌕𑍀𑌮𑍍 ।
𑌅𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑌾𑌮𑌕𑌾𑌰𑍇𑌣 𑌫𑌲𑍇 𑌸𑌕𑍍𑌤𑍋 𑌨𑌿𑌬𑌧𑍍𑌯𑌤𑍇 ॥ ௧௨ ॥

(ப-ம்) யுக்தஃ-யோகியானவன், கர்மபலம் த்யக்த்வா-கருமபலங்களில் ஆசையைவிட்டு, நைஷ்டிகீம்-ஸ்திரமான, சாந்திம்-ஆத்மாநுபவரூபமான ஆனந்தத்தை, ஆப்நோதி-அடைகிறான்; அயுக்தஃ-ஆத்மாநுபவத்தினின்றும் திரும்பியவன், காமகாரேண-காமத்தால் பிரவர்த்திப்பதனால், பலே-பலனில், ஸக்தஃ - பற்றுடையனாய், நிபத்யதே-கட்டுப்படுகிறான். (௧௨)

(தா-ம) ஆத்மயோகமுடையவன், கர்மபலத்தைவிட்டு குறைவில்லாத ஆத்மாநுபவ சுகத்தையடைகிறான். ஆத்மதரிசனத்தில் விமுகனாயிருப்பவன், மோகத்தால் பலனை விரும்பி கர்மங்களைச்செய்து சம்சாரபந்தத்தை யநுபவிக்கிறான். (௧௨)

𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌮𑌨𑌸𑌾 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍇 𑌸𑍁𑌖𑌂 𑌵𑌶𑍀 ।
𑌨𑌵𑌦𑍍𑌵𑌾𑌰𑍇 𑌪𑍁𑌰𑍇 𑌦𑍇𑌹𑍀 𑌨𑍈𑌵 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌨 𑌕𑌾𑌰𑌯𑌨𑍍 ॥ ௧௩ ॥

(ப-ம்) வஶீ-இந்த்ரியஜயமுள்ளவன், தேஹீ-புருஷன், மநஸா-மனதினால், ஸர்வகர்மாணி-எல்லாக் கருமங்களையும், நவ த்வாரே-ஒன்பது துவாரங்கள்பெற்ற, புரே-பட்டணத்தில், (சரீரத்தில்), ஸந்யஸ்ய-விட்டு, நைவ குர்வந்-(தான்)செய்யாமலும், நகாரயந்-(பிறரைச்)செய்விக்காமலும், ஸுகம ஆஸ்தே-சுகமாகயிருக்கிறான் (௧௩)

(தா-ம்) சரீரியானவன் கர்மங்களை யெல்லாம் மனதினால் ஒன்பது வழியோடுகூடிய சரீரமாகிற நகரில விட்டு தான் வசியனாயிருந்துக்கொண்டும், தேகசம்பந்தமான பிரயத்தினத்தைச் செய்யாதவனாயும், செய்விக்காதவனாயுமிருந்து சுகத்தையடைகிறான். (௧௩)

𑌨 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌨 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌸𑍃𑌜𑌤𑌿 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 ।
𑌨 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌸𑌂𑌯𑍋𑌗𑌂 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥ ௧௪ ॥

(ப-ம்) ப்ரபுஃ - ஸ்வாபாவிகமான ஸ்வரூபத்தோடிருக்கிற ஆத்மா, லோகஸ்ய-ஜனத்தினது, கர்த்ருத்வம் - கர்த்ருத்வத்தையாவது, கர்மாணி - கருமங்களையாவது, நஸ்ருஜதி - உண்டாகமாட்டான், கர்மபல ஸம்யோகம்-கருமப்பயனின் ஸம்பந்தத்தையாவது, நஸ்ருஜதி-உண்டுபண்ணுகிறதில்லை; ஸ்வபாவஃது-பிரகிருதிவாஸனை, ப்ரவர்த்தே காரணமாகின்றது. (௧௪)

(தா-ம்) இவ்வுலகத்தினது கர்த்தாருத்வத்தையாவது, கர்மங்க

யையாவது, கர்மபல சம்பந்தத்தையாவது, கர்மங்களுக்கு அன்பா உண்டுபண்ணுகிறதில்லை. ஸ்வபாவமென்கிற ஐச்வர்யமானதே காரணமாகிறது. (கச)

நாதத்தே கஸ்யசித் பாபம் நசைவ ஸுக்ருதம் விபு:|
அஜ்ஞாநேநாவ்ருதம் ஜ்ஞாநம் தேந முஹ்யந்தி ஜந்தவ:|| கரு||

(ப-ம்.) விபு:-எல்லாவற்றிலுமிருக்கிற (ஆத்மா), கஸ்யசித் -ஒருவனுடைய, பாபம்-பாவத்தையும், நாதத்தே - கொண்டுபோவதில்லை; கஸ்யசித்-ஒருவனுடைய, ஸுக்ருதம்-புண்ணியத்தையும், நசைவ ஆதத்தே-கொண்டுபோவதில்லை; அஜ்ஞாநேந-அஜ்ஞாநத்தால், ஜ்ஞாநம்-ஆத்மஸ்வரூபமானது, ஆவ்ருதம்-மூடப்பட்டது, தேந-அதனால் ஜந்தவ:-ஜீவர்கள், முஹ்யந்தி-மோஹத்தையடைகின்றனர். (கரு)

(தா-ம்) விபுவான ஆத்மா, ஒருவன் பாபத்தையாவது, புண்ணியத்தையாவது, கிரகிக்கின்றவனல்ல. ஞானவிரோதியான பூர்வ கர்மத்தினால் ஞானம் மூடப்பட்டிருக்கிறது. அதனால் பிராணிகள் மோகத்தையடைகிறார்கள். "இதனால் ஆத்மாவுக்கு புண்ணியபாபம் சம்பந்தமில்லை; இருப்பதுபோல் உலகம் பிரமிக்கிறது என்று பொருள்படுகிறது." (கரு)

ஜ்ஞாநேந து ததஜ்ஞாநம் யேஷாம் நாசிதமாத்மந:|
தேஷாமாதித்யவஜ்ஜ்ஞாநம் ப்ரகாசயதி தத்பரம்|| கசு||

(ப-ம்) யேஷாம்து-எவர்களுக்கானால், ஆத்மந:ஜ்ஞாநேந-ஆத்மஞானத்தால், தத்அஜ்ஞாநம்-அவ்வஞ்ஞானம், நாசிதம்-நாசம்செய்யப்பட்டதோ, தேஷாம்-அவர்களுக்கு, தத்-அந்த (ஸ்வபாவமான) பரம்-சிறந்த, ஜ்ஞாநம்-ஜ்ஞாநம், ஆதித்யவத் - சூரியன்போல, ப்ரகாசயதி-(எல்லாவற்றையும்) ப்ரகாசிக்கச்செய்வான். (கசு)

(தா-ம்) எவர்களுக்கு ஆத்மஞானத்தால் அந்த அஞ்ஞானமானது நசிப்பிக்கப்படுகிறதோ, அவர்களுடைய அப்படிப்பட்ட சிறந்த ஞானம் சூரியன்போ லெல்லாவற்றையும்பிரகாசிக்கச்செய்கின்றது.

தத்புத்தயஸ்ததாத்மாநஸ்தந்நிஷ்டாஸ்தத்பராயணா:|
கச்சந்த்யபுநராவ்ருத்திம் ஜ்ஞாநநிர்தூதகல்மஷா:|| கஎ||

(ப-ம்) தத் புத்தய:-ஆத்மாவினிடத்திலேயே புத்தியுள்ளவர்களும், தத் ஆத்மாந:-அதே ஆத்மாவினிடத்திலேயே மனமுள்ளவர்களும், தந்நிஷ்டா:-அதில (தானே)பிரானின்றுகொண்டும், தத்பராயணா:-அதையே பரம்ப்ரயோஜநமென்று நினைப்பவர்களும் ஆகிய ஜ்

ஞானிகள், ஜ்ஞாநநிர்த்தூதகல்மஷா: - ஞானத்தால் போக்கப்பட்ட பாவத்தையுடையராய், அபுநராவ்ருத்திம்-மறுபடி (பிரகிருதிக்கு) திரும்பாத (ஆத்மஸ்வரூபத்தை), கச்சந்தி-அடைகின்றார்கள். (கஎ)

(தா-ம்) அந்த ஆத்மாவினிடத்திலேயே புத்தியுடையவர்களாயும், அவ்வாத்மாவினிடத்திலேயே மனதையுடையவர்களாயும், அவ்வான்ம ஞானாப்பியாசத்தில் ஆஸக்தியுடையவர்களாயும், ஆத்மாவையே முக்கியப் பிரயோஜனமாகவும் நினைப்பவர்கள் ஞானத்தால் பாபங்களையெல்லாம், போக்கடித்துக்கொண்டு மறுபிறப்பில்லாத சுத்தாத்மஸ்வரூபத்தை அடைகிறார்கள். (கஎ)

வித்³யாவிநயஸம்பந்நே ப்³ராஹ்மணே க³வி ஹஸ்திநி।
ஶுநி சைவ ஶ்வபாகே ச பண்டி³தா: ஸமத³ர்ஶிந:॥ கஅ॥

(ப-ம்) பண்டிதா:-ஆத்மஜ்ஞாநிகள், வித்யா விநய ஸம்பந்நே-வித்தையும் வணக்கமுங் கூடியவனிடத்தும், ப்ராஹ்மணே - பிராம்மணனிடத்தும், கவி-பசுவினிடத்தும், ஹஸ்திநி - யானையினிடத்தும், சுநி ச-நாயினிடத்தும், ச்வபாகே ச-சண்டாளனிடத்தும் (உள்ள ஆத்மஸ்வரூபத்தில்), ஸமதர்சிந:-ஸமமாய்ப் பார்ப்பார்கள். (கஅ)

(தா-ம்) ஆத்மஞானிகள் கல்வியினாலும், விநயத்தாலும், நிறைந்தவனிடத்திலேயும், கேவலபிராமணனிடத்திலேயும், பசு, யானை, நாய் இவைகளிடத்திலேயும், நாயைத்தின்கின்ற சண்டாளனிடத்திலும், ஞானரூபியான ஆத்மாக்கள் ஒரேவிதமாயிருப்பதினால் சமமாய்ப் பார்ப்பார்கள். (கஅ)

இஹைவ தைர்ஜித: ஸர்கோ³ யேஷாம் ஸாம்யே ஸ்தி²தம் மந:।
நிர்தோ³ஷம் ஹி ஸமம் ப்³ரஹ்ம தஸ்மாத்³ ப்³ரஹ்மணி தே ஸ்தி²தா:॥ க௯॥

(ப-ம்,) யேஷாம்-எந்த புருஷர்களுடைய, மந: - மனதானது, ஸாம்யே-ஸமத்வத்தில், ஸ்திதம்-இருக்கிறதோ, தை:-அவர்களாலே, இஹைவ-உலகத்தில் தானே, ஸர்க:-ஸம்ஸாரமானது, ஜித:-ஜயிக்கப்பட்டது. ஹி-யாதொரு காரணத்தால், நிர்தோஷம்-பிரகிருதிஸம்பந்தமற்றதும், ஸமம்-ஸமானாகாரமுமான (ஆத்மாவானது) ப்ரஹ்ம-பிரமமோ, தஸ்மாத்-ஆகையால், தே - அவர்கள், ப்ரஹ்மணி ஸ்திதா (ஏவ)-பிரம்மத்திலிருப்பவர்களே. (க௯)

(தா-ம்) எவர்களுக்கு, எல்லா ஆத்மாக்களும், ஸமமென்கிறபாவத்தில் மனதிருக்கிறதோ, அவர்களால் கர்மாநுஷ்டானகாலத்திலேயே, சம்சாரம் ஜெயிக்கப்பட்டது. பிரகிருதி சம்பந்ததோஷமின்

நிசமமான ஆத்மஸ்வரூபமே பிர்மம் ஸமமான மனதையுடையவர்களே பிர்மத்தினிடத்திலிருப்பவர்கள். (௧௯)

𑌨 𑌪𑍍𑌰𑌹𑍃𑌷𑍍𑌯𑍇𑌤𑍍𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌨𑍋𑌦𑍍𑌵𑌿𑌜𑍇𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌚𑌾𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 |
𑌸𑍍𑌥𑌿𑌰𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌸𑌂𑌮𑍂𑌢𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ௨௦||

(ப-ம்) புமாந்-புருஷனானவன், ப்ரியம் - இஷ்டத்தை, ப்ராப்ய-அடைந்து, நப்ரஹ்ருஷ்யேத்-மகிழ்வுறக்கடவனல்லன்; அப்ரியம்-பிரதிகூலத்தை, ப்ராப்ய-அடைந்து, நோத்விஜேத்-பயப்படக்கூடாது, ஸ்திரபுத்திஃ-ஆத்மாவில் நிலைத்தபுத்தியுடையவன்; அஸம்மூடஃ-மோஹமற்றவனாயும், ப்ரஹ்மவித் - ஆத்மஸ்வரூபத்தையறிந்தவனும், ப்ரஹ்மணி-ஆத்மஜ்ஞாநத்திலேயே. ஸ்திதஃ-நிஷ்டையுள்ளவனாயான். ()

(தா-ம்) ஆத்மாவில ஸ்திரபுத்தியுடையவனாயும் சரீரமே ஆத்மாவென்கிற பிரமயில்லாதவனாயும் ஆத்மஸ்வரூபத்தையறிந்திருக்கிற ஆத்மாப்பியாச நிஷ்டன் பிரியமான வஸ்துவைப்பார்த்து சந்தோஷிக்கமாட்டான். பிரியமில்லாத வஸ்துவைக்கண்டு துக்கிக்கமாட்டான். (௨௦)

𑌬𑌾𑌹𑍍𑌯𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑍇𑌷𑍍𑌵𑌸𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌯𑌤𑍍𑌸𑍁𑌖𑌮𑍍 |
𑌸 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑍋𑌗𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑍁𑌖𑌮𑌕𑍍𑌷𑌯𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 || ௨௧||

(ப-ம்) யஃ-எவன், பாஹ்யஸ்பர்சேஷு-ஆத்மாவைப்பார்க்கிலும்வேறான விஷயானுபவங்களில், அஸக்த ஆத்மா-பற்றற்றமனமுடையவனாய், ஆத்மநி(ஏவ)-ஆத்மாவில்தானே, ஸுகம் விந்ததி-சுகத்தை அடைகிறானோ; ஸஃ-அவன், ப்ரஹ்மயோக யுக்த ஆத்மா-பிரம்ம அப்பியாஸத்துடன் கூடிய மனமுடையனாய், அக்ஷயம்ஸுகம்- அழியாதசுகத்தை(மோக்ஷத்தை), அச்நுதே-அனுபவிக்கிறான். (௨௧)

(தா-ம்) ஆத்மாவைக்காட்டிலும் இதரவஸ்துவில் யோகத்தினாலாசையற்ற மனமுடையவனாய் ஆத்மாவினிடத்திலேயேஎவன்சுகத்தையநுபவித்துக்கொண்டிருக்கிறானோ அவனே பிர்மத்தியானத்தோடு கூடிய மனமுடையவனாய் சாஸ்வதமாகிய சுகத்தை "பிர்மாநந்தத்தை"யடைகிறான். (௨௧)

𑌯𑍇 𑌹𑌿 𑌸𑌂𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌜𑌾 𑌭𑍋𑌗𑌾 𑌦𑍁𑌃𑌖𑌯𑍋𑌨𑌯 𑌏𑌵 𑌤𑍇 |
𑌆𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌵𑌨𑍍𑌤𑌃 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌨 𑌤𑍇𑌷𑍁 𑌰𑌮𑌤𑍇 𑌬𑍁𑌧𑌃 || ௨௨||

(ப-ம்.) ஸம்ஸ்ப்ரசஜாஃ-(விஷயத்துக்கும் இந்திரியத்துக்குமுண்டான) ஸம்பந்தத்தாலுண்டான, யேஹி போகாஃ-எந்த போகங்களானுல், ஆத்யந்தவந்தஃ-உத்பத்திநாசங்களுள்ளவை, ஸந்தி-இருக்கின்றனவோ, தே-அவை, துஃகயோநயஃ-துக்கஹேதுகளே, அதஃ-

ஆகையால், ஹேகௌந்தேய ஓ குந்திபுத்திர! தேஷு - அவைகளில், புதஃ-பண்டிதன், நரமதே-ரமிக்கமாட்டான். (உஉ)

(தா-ம்.) ஓ குந்திபுத்திரா! எந்த ஸுகங்கள் விஷயேந்திரியசம்பந்தத்தாலுண்டாகின்றதுகளோ, அவைகளெல்லாம் துக்கஹேதுகரங்களாயும், உற்பத்தி நாசங்களையுடையதுகளாயுமிருக்கிறதுகள். அவைகளில் ஆத்மஞானமுடையவன் திருப்தியடையான். (உஉ)

ஶக்நோதீஹைவ ய: ஸோடும் ப்ராக் ஶரீரவிமோக்ஷணாத்|
காமக்ரோதோத்பவம் வேகம் ஸ யுக்த: ஸ ஸுகீ நர:|| உங||

(ப-ம்.) ய:நர:-எந்த நரன், சரீரவிமோக்ஷணாத்-சரீரத்தைவிடுவதற்கு, ப்ராக்-முன்னே, இஹ ஏவ-இங்கேயே, காமக்ரோத உத்பவம்- காமத்தாலும் கோபத்தாலும் உண்டான, வேகம் - வேகத்தை, ஸோடும்-ஸஹிக்க, சக்நோதி-ஸமர்த்தனாகிறான்; ஸ:யுக்த:-அவனே ஆத்மானுபவத்துக்கு யோக்யனும்; ஸ-அவனே, ஸுகீ - சுகத்தையடையவன். (உங)

(தா-ம்) எவன் சரீரத்தைவிடுவதற்கு முன்யோகஞ்செய்யும்போதே காமக்ரோதத்தாலுண்டாகிற வேகத்தையடக்கவல்லவனாகிறானோ அவனே ஆத்மாநுபவத்திற்குத் தக்கவன். அவனுக்கே ஆத்மாவினால் சுகமுண்டு. (உங)

யோऽந்த:ஸுகோऽந்தராராமஸ்ததாந்தர்ஜ்யோதிரேவ ய:|
ஸ யோகீ ப்ரஹ்மநிர்வாணம் ப்ரஹ்மபூதோऽதிகச்சதி|| உச||

(ப-ம்.) ய:-எந்த யோகி, அந்த:ஸுக:-அந்தராத்மாவில் சுகிப்பவனும், அந்த:ஆராம:உள்ளத்தில் (தானே)ரமிப்பவனும், ததா-அப்படியே, அந்த:ஜ்யோதி:-உள்ளே ஞானச்சோதி (யுடையவனுயும், ய:-எவனிருக்கிறானோ, ஸ: - அந்த, ப்ரஹ்மபூத:-பிரம்ம நிஷ்டனான, யோகீ-யோகியானவன், ப்ரஹ்மநிர்வாணம்-ஆத்மாநுபவச்சுகத்தை, அதிகச்சதி-அடைகிறான். (உச)

(தா-ம்) எவன் அந்தராத்மாவினிடத்தில் சுகமுடையவனும் அந்தராத்மாவினிடத்திலேயே த்ருப்தியுடையவனும் ஆத்மஞானமுடையவனுயுமிருக்கிறானோ அந்த யோகி பிரமஸ்வரூபமுடையவனாய் ஆத்மாநுபவ ஸுகத்தையடைகிறான். (உச)

லபந்தே ப்ரஹ்மநிர்வாணம்ருஷய: க்ஷீணகல்மஷா:|
சிந்நத்வைதா யதாத்மாந: ஸர்வபூதஹிதே ரதா:|| உரு||

(ப-ம்) சிந்நத்வைதா:-சேதிக்கப்பட்ட சீதோஷ்ணாதித்வந்தவர்கள் உள்ளவர்களும், யதாத்மாந:-அடங்கிய மனதுடையவரும், ஸ

ர்வபூத ஹிதே-ஸகலப் பிராணிகளுடைய இதத்திலும், ரதா꞉-ஆஸக்தியுடையருமான, ருஷய꞉-ஆத்மஸாக்ஷாத்காரம்பண்ணுமவர்கள், க்ஷீணகல்மஷா꞉-அழிந்த பாவமுடையராய், ப்ரஹ்மநிர்வாணம்-ஆத்மாநுபவச் சுகத்தை, லபந்தே-அடைகின்றனர். (௨௫)

(தா-ம்) சீதோஷ்ணாதித்வந்த்வங்களைவிட்டு ஆத்மாவில்மனதை நிறுத்தி எல்லாப்பிராணிகளிடத்திலும் அன்புடையவர்களான இருஷிகள் "ஆத்மஞானிகள்" பாபங்களைப் போக்கடித்தவர்களாய்ப்பிரமானந்தத்தை யடைகின்றார்கள். (௨௫)

𑌕𑌾𑌮𑌕𑍍𑌰𑍋𑌧𑌵𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑌤𑍀𑌨𑌾𑌂 𑌯𑌤𑌚𑍇𑌤𑌸𑌾𑌮𑍍 ।
𑌅𑌭𑌿𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌂 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌵𑌿𑌦𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑍍 ॥ ௨௬ ॥

(ப-ம்) காமக்ரோத வியுக்தாநாம்-காமக்ரோதங்களால் விடப்பட்டவர்களுக்கு, யதீநாம்-யோகாப்யாஸம் செய்வோர்களும், யதசேதஸாம்-அடக்கியமனமுடையவரும், விதித ஆத்மநாம் - ஜயிக்கப்பட்டமனமுடையவர்களுமான, புருஷாணாம் - புருஷர்களுக்கு, நிர்வாணம்-சுகரூபமான, ப்ரஹ்ம-ஆத்மஸ்வரூபமானது, அபித꞉ வர்த்ததே-எங்கும் இருக்கும். (௨௬)

(தா-ம்) காமக்குரோதங்களில்லாதவர்களாயும், யோகாப்பியாஸத்தைச் செய்கிறவர்களாயும், ஸாவதானமனதையுடையவர்களாயுமிருந்து மனதை ஜயித்தவர்களுக்கு பிரமாநுபவரூபமாகிய சுகம் கையிலிருக்கிறது. (ஈம) அபித꞉-கைக்குள்ளேயே. (௨௬)

𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌾𑌨𑍍𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌬𑌹𑌿𑌰𑍍𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌶𑍍𑌚𑍈𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑍇 𑌭𑍍𑌰𑍁
𑌵𑍋𑌃 । 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌪𑌾𑌨𑍌 𑌸𑌮𑍌 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌨𑌾𑌸𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌚𑌾𑌰𑌿
𑌣𑍌 ॥ 𑌯𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌮𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌮𑍁𑌨𑌿𑌰𑍍𑌮𑍋𑌕𑍍𑌷𑌪𑌰𑌾𑌯𑌣𑌃 । 𑌵𑌿𑌗
𑌤𑍇𑌚𑍍𑌛𑌾𑌭𑌯𑌕𑍍𑌰𑍋𑌧𑍋 𑌯𑌃 𑌸𑌦𑌾 𑌮𑍁𑌕𑍍𑌤 𑌏𑌵 𑌸𑌃 ॥ ௨௭ ॥

(ப-ம்) ய꞉-எந்தயோகி, பாஹ்யாந்-புறம்புண்டான, ஸ்பர்சாந்-விஷயாநுபவங்களை, பஹி꞉க்ருத்வா-வெளியே விட்டுவிட்டு, சக்ஷு꞉ சைவ-கண்ணையும், ப்ருவோ꞉-அந்தரே-நடுவில்புருவங்களின், க்ருத்வா-நிறுத்தி, நாஸாப்யந்தர சாரிணௌ-மூக்குக்குள் ஸஞ்சரிக்கின்ற, ப்ராண அபாநௌ-பிராணாபானங்களை, ஸமௌ-ஸமகதியாக, க்ருத்வா-செய்து, யத இந்த்ரியமநோபுத்தி꞉-நியமிக்கப்பட்ட இந்த்ரியங்களும்மனமும்உள்ளவனும், விகதஇச்சாபயக்ரோத꞉-போயிருக்கிற இச்சை பயம் கோபம் இவையுடையனாய், மோக்ஷபராயண꞉-மோக்ஷமே ப்ரயோஜநமாக நினைப்பவனாய், முநி꞉-(ஆத்மாவை) மனனம்செ

ய்வதே தொழிலா(யிருக்கிறனே), ஸঃ-அவன், ஸதா-எப்போதும், முக்தঃ ஏவ-முக்தனே. (௨௭-௨௮)

(தா-ம்) பாஹ்யவிஷயங்களை வெளியிலே நிறுத்திவிட்டுக்கண்களைப் புருவங்களின் நடுவில் வைத்து மூக்கில் சஞ்சரிக்கின்றபிராணுபானங்களை சரியாய் சஞ்சரிக்கச்செய்து இந்திரியங்கள் மனது புத்தி இவைகளைக்கட்டி மோக்ஷத்தையே பிரயோஜனமாகவுடையவனும், ஆசை, பயம், கோபம் இவைகளைவிட்டு ஆத்மஞானுப்பியாசம் பண்ணுகிறவனெவனே, அவனெக்காலத்திலும் முக்தனுகவே யிருக்கிறன். (௨௭-௨௮)

𑌭𑍋𑌕𑍍𑌤𑌾𑌰𑌂 𑌯𑌜𑍍𑌞𑌤𑌪𑌸𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍|

𑌸𑍁𑌹𑍃𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑌿||

(ப-ம்.) (யோகீ)-யோகியானவன், மாம்-என்னை, ஸர்வலோகமஹேச்வரம்-ஸகல லோகங்களுக்கும் பெரிய ஆண்டவனும், ஸர்வ பூதாநாம்-எல்லாப்பிராணிகளுக்கும், ஸுஹ்ருதம்-ஹிதனும், யக்ஞதபஸாம்-யக்ஞங்களுக்கும் தவங்களுக்கும், போக்தாரம்-அனுபவிப்பவனும், ஜ்ஞாத்வா-அறிந்து, சாந்திம் - பரமாநந்தத்தை, ருச்சதி-அடைகிறன். (௨௯)

(தா-ம்) தபோயஞ்ஞங்களா லாராதிக்கப்படுகின்றவனுகவும், உலகங்களுக்கெல்லாம் கர்த்தனுகவும் பிராணிகளுக்கெல்லாம் ஹிதனுகவும் இருக்கிறவன் என்னையறிந்தபின் சுகத்தையடைகிறன், (ஶப) ஸுஹ்ருதம் ஜீவகாருண்யமுடையவன். (௨௯)

ஸ்ரீகீதாஸு விச்வரூபஸந்தர்சநயோகமென்னும்
ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆறுவது அத்தியாயம்.

ஸ்ரீகிருஷ்ண வாக்கியம்.

𑌆𑌤𑍍𑌮𑌸𑌂𑌯𑌮𑌯𑍋𑌗𑌃.

𑌅𑌨𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌯𑌃|

𑌸 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑍀 𑌚 𑌯𑍋𑌗𑍀 𑌚 𑌨 𑌨𑌿𑌰𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌨 𑌚𑌾𑌕𑍍𑌰𑌿𑌯𑌃|| ௧||

(ப-ம்.) யঃ-யாவனெருவன், கர்மபலம் - கருமப் பலனை, அநாச்ரிதঃ-அபேக்ஷிக்காமல், கார்யம்-செய்யவேண்டியதான, கர்ம-கரு

மத்தை, கரோதி-செய்கிருனே, ஸ:-அவனே, ஸந்யாஸீச-கர்மங்கள் இல்லாதவனும், யோகீச-கரும நிஷ்டனும்;(மற்றப்படி), நிரக்நி:-அக்நினியற்றவனும் அல்ல; அக்ரிய:ச ந - கருமஞ் செய்யாதவனு மல்ல. (௧)

(தா-ம்) கர்மத்தின் பிரயோஜனத்தை அபேக்ஷிக்காமல் வேதத்தில் அநுஷ்டிக்கும்படி விதித்த நித்தியநைமித்திக கர்மத்தை எவன் விடாமல செய்கிருனே, அவனே சந்யாசியாயும், "ஞானயோகபரனும்" கன்மயோகபரனும் ஆகிருன். அக்கினிகிருத்தியத்தைக்கை விட்டதிருலேயே கர்மாநுஷ்டானத்தை யொழித்தவனும், சந்யாசியாயும், யோகியாயுமாவது ஒருபொழுதுமில்லை. (௧)

யஂ ஸஂந்யாஸமிதி ப்ராஹுர்யோகஂ தஂ வித்தி பாண்டவ |
ந ஹ்யஸஂந்யஸ்தஸங்கல்போ யோகீ பவதி கஶ்சந || ௨ ||

(ப-ம்) ஹே பாண்டவ!-வாராய் அருச்சுனு!, யம்-எதை; ஸந்யாஸம் இதி-ஸந்நியாஸமென்று, ப்ராஹு:-சொல்லுகிருர்களோ, தம் யோகம்-அதை யோகமாகவும், வித்தி-அறி, ஹி-ஏனெனில், கஶ்சந யோகீ-எந்த யோகியும், அஸந்யஸ்த ஸங்கல்ப:-விடப்படாத ஸங்கல்பத்தையுடையவனுய் (அதாவது தேஹாத்மாபிமானத்தை விடாமல்), நபவதி-இருப்பதில்லை. (௨)

(தா-ம்) ஓ பாண்டவா ! எதை ஞானயோகமென்று கூறுகின்ருர்களோ அதை கர்மயோகமென்றே தெரிந்துகொள். எவனும் ஆசையைத் துலைக்காமல் யோகியாகிறதில்லை. (௨)

ஆருருக்ஷோர்முநேர்யோகஂ கர்ம காரணமுச்யதே |
யோகாரூடஸ்ய தஸ்யைவ ஶம: காரணமுச்யதே || ௩ ||

(ப-ம்) யோகம்-ஜ்ஞாநயோகத்தை, ஆருருக்ஷோ:-அடையவிரும்பிய, முநே:-முனிக்கு, கர்ம-கருமயோகமே, காரணம்-ஸாதனமென்று, உச்யதே-சொல்லப்படுகின்றது; யோகாரூடஸ்ய-யோகமடைந்த, தஸ்யஏவ-அவனுக்கே, சம:-கர்மங்களை விடுதல், காரணம் உச்யதே-சொலலப்படுகின்றது. (௩)

(தா-ம்) ஞானயோகத்தை யாஶ்ரயித்து ஒன்றினயோகிக்குக் கன்மயோகங் காரணமெனப்படும். ஞானமார்க்கத்தைக் கடந்த அவனுக்குக் கர்மத்தை நிவ்ருத்தி செய்வது காரணமாகிறதென்று சொல்லப்படுகிறது. (௩)

யதா ஹி நேந்த்ரியார்தேஷு ந கர்மஸ்வநுஷஜ்ஜதே |
ஸர்வஸங்கல்பஸஂந்யாஸீ யோகாரூடஸ்ததோச்யதே || ௪ ||

(ப-ம்) யதா(யஃ)-எப்பொழுது எந்த (யோகி), இந்த்ரிய அர்த்தேஷு-விஷயங்களிலும், கர்மஸு - கருமங்களிலும், ந அநுஷஜ்ஜதே-ஆஸக்தியடையாரே, ததா ஹி-அப்பொழுதுதான், ஸர்வ ஸங்கல்ப ஸந்யாஸீ-ஸர்வ காமத்தையும் விட்ட, யோக ஆரூடஃ - ஜ்ஞான யோகம் அடைந்தவ(னென்று), உச்யதே-சொல்லப்படுகிறான். (௪)

(தா-ம்.) எப்பொழுது இந்திரியவிஷயங்களிலும். கர்மயோகங்களிலும், மனம் சம்பந்தப்படவில்லையோ, அப்பொழுது தான் எல்லாகோரிக்கைகளையும் விட்ட அவன் யோகியெனப்படுகிறான். (௪)

உத்தரேதாத்மநாத்மாநம் நாத்மாநமவஸாதயேத்|
ஆத்மைவ ஹ்யாத்மநோ பந்துராத்மைவ ரிபுராத்மந:||

(ப-ம்) ஆத்மநா-மனதினால், ஆத்மாநம்-(தன்) ஆத்மாவை, உத்தரேத்-கரையேற்றவேண்டும், ஆத்மாநம்-ஆத்மாவை, நாவஸாதயேத்-அல்லல படுத்தக்கடவனல்லன், ஹி-ஏனெனில், ஆத்மநஃ - தனக்கு, ஆத்மா ஏவ-மனதே, பந்துஃ-துணை, ஆத்மநஃ-ஆத்மாவுக்கு, ஆத்மா ஏவ-மனதே, ரிபுஃ பகை. (௫)

(தா-ம்) ஆத்மாவை மனதினால் மேன்மைப்படுத்தவேண்டும். ஆன்மாவைக்கீழ்ப்படிக்குச் செல்லும்படி செய்யலாகாது. ஆன்மாவுக்கு மனமேபந்து. மனமேதான் வைரியாகிறது. (௫)

பந்துராத்மாத்மநஸ்தஸ்ய யேநாத்மைவாத்மநா ஜித:|
அநாத்மநஸ்து ஶத்ருத்வே வர்தேதாத்மைவ ஶத்ருவத்|| ௬||

(ப-ம்) யேந-எவனால், ஆத்மநா ஏவ-தன்னாலேயே, ஆத்மா ஜிதஃ-மனம் ஜயிக்கப்பட்டதோ, தஸ்ய ஆத்மநஃ-அவன் ஆத்மாவுக்கு, ஆத்மா பந்துஃ-மனமே பந்துவாகும், அநாத்மநஃது-மனத்தை ஜெயிக்காதவனுக்கோ, ஆத்மா ஏவ-மனமே, சத்ருவத் - பகைபோல, சத்ருத்வே-சத்ருத்வத்தில், வர்தேத-இருக்கும். (௬)

(தா-ம்) எவனால் தன் மனம் தானாகவேவெற்றி பெறப்படுகிறதோ, அவனான்மாவுக்கு மனம் பந்துவாயும் மனதைவெல்லாதவனுக்கு அம்மனமே சத்ருவுப்போல் விரோதியாகவுமிருக்கின்றது. (௬)

ஜிதாத்மந: ப்ரஶாந்தஸ்ய பரமாத்மா ஸமாஹித:|
ஶீதோஷ்ண ஸுகது:கேஷு ததா மாநாவமாநயோ:|| ௭||

(ப-ம்) சீதஉஷ்ண ஸுகதுக்கேஷு-குளிர்ச்சி வெப்பம் இன்பம்துன்பம் (இவைகளில்), ததா-அப்படியே, மாந அவமாநயோஃ-மானவமானங்களிலும், ஜித ஆத்மநஃ - ஜெயித்த மனத்தனும், ப்ரசாந்த

ஸ்ய-அடங்கியிருப்பவனுடைய, (மனதில்)ஆத்மா-ஆத்மஸ்வரூபமானது, பரம் ஸமாஹித:-மிகவும் ஸுகஸ்வரூபமாயிருக்கிறான். (௭)

(தா-ம்) சீதோஷ்ணம், இன்பதுன்பம், பெருமை சிறுமை, இவ்விஷயங்களில் மனதைச்செலுத்தாமல் நிறுத்தி பொறுமையுடனிருப்பவனுக்கு மனதின்கண்ணே ஆன்மாவிளங்குஞ் சுகஸ்வரூபமாயிருக்கும். (௭)

ஜ்ஞாநவிஜ்ஞாநத்ருப்தாத்மா கூடஸ்தோ விஜிதேந்த்ரிய:|
யுக்த இத்யுச்யதே யோகீ ஸமலோஷ்டாஶ்மகாஞ்சந:॥ ௮॥

(ப-ம்.) ஜ்ஞாநவிஜ்ஞாநத்ருப்தாத்மா-ஸ்வரூபஜ்ஞானத்தாலும் விசேஷஞானத்தாலும் திருப்தியடைந்த மனத்தனாய், கூடஸ்த:-(ஞானமே வடிவான) ஆத்மாவிலிருப்பவனாய், விஜிதேந்த்ரிய:-ஜயிக்கப்பட்ட இந்த்ரியங்களுள்ளவனும், ஸமலோஷ்டாச்மகாஞ்சந:-ஸமமான மண்கட்டி கல் பொன்களையுடைய, யோகீ-கர்மயோகியானவன், யுக்த இதி-தக்கவனென்று, உச்யதே-சொல்லப்படுவான். (௮)

(தா-ம்.) ஆன்மஞானத்தினாலும் விஞ்ஞானமென்னும் பிரகிருதியைவிட ஆன்மா வேறென்கிற அறிவினாலேயும், திருப்தியடைந்த மனதுடையவனாயும், கூடஸ்தனாயும், ஜிதேந்திரியனாயும், மண், பொன், சிலை, அதுகளில் சமபுத்தியுடையவனாயுமுள்ளவன் ஞானயோகத்துக்குத் தக்கவனெனப்படுவான். (௮)

ஸுஹ்ருந்மித்ரார்யுதாஸீநமத்யஸ்தத்வேஷ்யபந்துஷு |
ஸாதுஷ்வபி ச பாபேஷு ஸமபுத்திர்விஶிஷ்யதே॥ ௯॥

(ப-ம்,) ஸுஹ்ருத்-ஸுஹ்ருத்துக்களும், அரி-அநர்த்தத்தைவிரும்புவோர்களும், மித்ர-ஸமவயதான தோழர்கள், உதாஸீந-உறவு பகையிரண்டுக்கும் காரணமில்லாமையாலே இரண்டு மற்றவர், மத்யஸ்த-ஸ்வபாவமாகவே இரண்டுமற்றவர், த்வேஷ்ய-ஸ்வபாவமாகவே பகைப்பவர், பந்துஷு-ஸ்வபாவமாகவே இதஞ்செய்யுமவர்கள் ஆகிய இவர்களிடத்திலும், ஸாதுஷு அபி-ஸாதுக்களிடத்தும், பாபேஷு ச-பாபிகளிடத்தும், ஸமபுத்தி:-ஸமபுத்தியுடையவன், விசிஷ்யதே-விசேஷாதிகாரியாகிறான். (௯)

(தா-ம்) தனக்கு நன்மையை விரும்புவோன், சினேகிதன், பகைநேசம் இதுகளற்ற மத்தியஸ்தன், இயற்கையான விரோதி, சுற்றத்தார், ஸத்புருடன், பாபிஷ்டி; இவர்களிடத்தில் சமபுத்தியுள்ளவனே உத்தமனாவன். (௯)

யோகீ யுஞ்ஜீத ஸததமாத்மாநம் ரஹஸி ஸ்தித: |
ஏகாகீ யதசித்தாத்மா நிராசீரபரிக்ரஹ: || ௧0 ||

(ப-ம்.) யோகீ-கருமயோகநிஷ்டன், ஸததம்-எப்போதும் (அதாவது நாடோறும் யோககாலத்தில்), ரஹஸி - ஏகாந்ததேசத்தில், ஸ்த்திதஃ-இருந்து; ஏகாகீ-ஒண்டிக்காரனாய், யதசித்த ஆத்மா-அடக்கப்பட்ட சித்தமு மனமுமுடையனாய், நிராசீஃ-நிரபேக்ஷனாய், அபரிக்ரஹஃ-மமதை யொழித்தவனாய், ஆத்மாநம்-ஆன்மாவை, யுஞ்ஜீத-யுக்தமாகக்கடவன். (ம)

(தா-ம்) கர்மயோகநிஷ்டன் நிர்ஜனப்பிரதேசத்தில் ஏகாகியாகவிருந்து மனதை நித்தியவஸ்து விசாரத்தில் நிறுத்தி ஆத்மஞானத்துக் கந்நிய விஷயங்களிலாசையில்லாமல் எந்த வஸ்துவிலும் அஹம்பாவத்தை நீக்கினவனாய் எக்காலும் மனதை ஆன்மாவினிடத்திற் சேர்க்கவேண்டும். "என்பதால் பரப்பிர்மஸ்வரூபத்தைக் காண்பதற்குப் பிரயத்தினப்படவேணுமென்று பொருள்." (ம)

சுசௌ தேசே ப்ரதிஷ்டாப்ய ஸ்திரமாஸநமாத்மந: |
நாத்யுச்ச்ரிதம் நாதிநீசம் சைலாஜிநகுசோத்தரம் || ௧௧ ||
தத்ரைகாக்ரம் மந: க்ருத்வா யதசித்தேந்த்ரியக்ரிய: |
உபவிச்யாஸநே யுஞ்ஜ்யாத் யோகமாத்மவிசுத்தயே || ௧௨ ||

(ப-ம்) சுசௌ தேசே-பரிசுத்த ஸ்தானத்தில், ஆத்மநஃ-தனக்கு, ஸ்திரம்-உரப்பானதும், நாதி உச்ச்ரிதம்-அதிக உயரமில்லாததும், நாதி நீசம்-அதிக தாழ்மில்லாததும், சேலாஜிநகுசஉத்தரம்-துணி மான்தோல் தர்ப்பைகள் மேல் போர்த்ததுமான, ஆஸநம்-ஆஸனத்தை, ப்ரதிஷ்டாப்ய-ஸ்தாபித்து, தத்ர-அதில், மநஃ-மனதை; ஏகாக்ரம்க்ருத்வா-ஒன்றைநாடியதாகச் செய்து, யத சித்த இந்த்ரிய க்ரியஃ-அடக்கப்பட்ட சித்தம் இந்திரிய மிவற்றின் வியாபாரத்தையுடையனாய், ஆஸநே-ஆஸனத்தில், உபவிச்ய-உட்கார்ந்து, ஆத்ம விசுத்தயே-ஆத்மாவின் சுத்தியின்பொருட்டு, யோகம் யுஞ்ஜ்யாத்-யோகஞ் செய்யக்கடவன். (௧௧-௧௨)

(தா-ம்) பரிசுத்தமானவிடத்தில் உறுதியாயும், அதிக உயர்வு தாழ்வின்றியும், வஸ்திரம், புலித்தோல், தர்பம், இதுகள்மேற்போர்த்த வோராசனத்தைபோட்டுக்கொண்டு, "என்பதால் ஆசனத்தின் மீது தர்பத்தையும், அதின்மீது புலித்தோலையும், அதினமீது வஸ்திரத்தையும் விரித்து" அவ்வாசனத்தின் மீதுட்கார்ந்து மனத்தின் றொழில்களையும், இந்திரியங்களின் றொழில்களையு முள்ளடக்கி மன

தை ஒரே வஸ்துவிற்செல்லும்படி செய்துக்கொண்டு (சித்தசுத்தி) சம்சாரபந்த நிவ்ருத்திக்காகவும் பரப்பிரம ஸ்வரூபத்தை யறிவதற்காகவும் யோகத்தையாரம்பிக்கவேண்டும். (௧௧-௧௨)

ஸமம் காயஶிரோக்ரீவம் தாரயந்நசலம் ஸ்திர: |
ஸம்ப்ரேக்ஷ்ய நாஸிகாக்ரம் ஸ்வம் திஶஶ்சாநவலோகயந் ‖ ௧௩ ‖
ப்ரஶாந்தாத்மா விகதபீர் ப்ரஹ்மசாரிவ்ரதே ஸ்தித: |
மந: ஸம்யம்ய மச்சித்தோ யுக்த ஆஸீத மத்பர: ‖ ௧௪ ‖

(ப-ம்) காய சிரோக்ரீவம்-உடல் தலை கழுத்துகளை, ஸமம்-ஸமமாகவும், அசலம்-அசையாது, ஸ்திரம்-உறுதியாகவும், தாரயந்-நிறுத்திக்கொண்டு, ஸ்வம் நாஸிகாக்ரம்-தனது மூக்கு நுனியை, ஸம்ப்ரேக்ஷ்ய-பார்த்து, திசஃச-திசைகளையும், அநவலோகயந்-பாராமல் இருக்கிறவனும், ப்ரசாந்த ஆத்மா-அடங்கிய மனதோடு, விகத பீஃ-பயமற்று, ப்ரம்மசாரி வ்ரதே-பிரமத்தை நாடுகிற விரதத்தில், ஸ்திதஃ-இருந்தவனாய், மநஃ ஸம்யம்ய-மனதைத்திருப்பி, மத் சித்தஃ-என்னைச் சிந்திப்பவனாய், மத்பரஃ-என்னையே ஆசிரயித்திருப்பவனுமாய், யுக்தஃ ஸாவதானமாய், ஆஸீத-இருக்கக்கடவன். (௧௩-௧௪)

(தா-ம்) உடலையும், சிரசையும், கழுத்தையும், சிரமம் நேரிடும் போது கூட அசையாமற்செய்துக்கொண்டு தனது இரண்டு புருவத்துக்கும் இடையிலுள்ள ஞானஸ்தானமென்னும் சுழிமுனையை ஞானேந்திரியத்தாற்பார்த்தும், திக்குகளைக் கட்புலனாற்பாராமலும், ஆநந்த மனதுடையவனும் நிர்ப்பயனும், பிர்மசர்ய விரதத்திலிருப்பவனும், என்னிடத்திற் சித்தத்தை வைத்தவனும், ஸாவதானத்துடனு மிருந்துக்கொண்டு என்னையே ஆச்ரயித்திருக்கவேண்டும்.

யுஞ்ஜந்நேவம் ஸதாத்மாநம் யோகீ நியதமாநஸ: |
ஶாந்திம் நிர்வாணபரமாம் மத்ஸம்ஸ்தாமதிகச்சதி ‖ ௧௫ ‖

(ப-ம்) ஏவம் ஸதா-இப்படி எப்போதும், ஆத்மாநம் யுஞ்ஜந்-மனதை(நம்மிடத்தில்) நிறுத்திய, நியத மாநஸஃ-நியமிக்கப்பட்ட மனமுள்ளவனும், யோகீ-யோகியானவன், மத் ஸம்ஸ்தாம்-என்னிடத்தில் நிலையென்கிற, நிர்வாண பரமாம்-ஆநந்தத்தின் எல்லையான, சாந்திம்-சாந்தியை, அதிகச்சதி-அடைகிறான். (௧௫)

(தா-ம்) இப்படிக்கு எக்காலும் சித்தத்தை ஆன்மாவினிடத்தினிறுத்தி பரிசுத்த மனதுடைய யோகியானவன் சுகப்பெருக்காய் என்னிடத்திலிருக்கும்படியான சாந்தியென்னும் பரமாநந்தத்தை யடைவன். (௧௫)

நாத்யஶ்நதஸ்து யோகோ(அ)ஸ்தி ந சைகாந்தமநஶ்நத:|
ந சாதிஸ்வப்நஶீலஸ்ய ஜாக்ரதோ நைவ சார்ஜுந|| கசு||

(ப-ம்) ஹே அர்ஜுந-வாராய அருச்சுனா! அதி அச்நத:து-அதிகமாய் புசிப்பவனுக்கு, யோக: நாஸ்தி-யோகம் இல்லை, ஏகாந்தம-சுத்தமாய், அநச்நத:ச-உண்ணாதவனுக்கும், ந-இல்லை, அதிஸ்வப்ந சீலஸ்யச-அதிக தூக்கமானவனுக்கும், ந-இல்லை, ஜாக்ரத:-விழித்துக்கொண்டே யிருப்பவனுக்கும், ந ஏவ-இல்லையேயில்லை. (கசு)

(தா-ம்) ஓ அர்ஜுனா! அதிக ஆகாரத்தையுட்கொண்டவனுக்கும், இரகசியமாய் புசிக்காதவனுக்கும், விசேஷமாய்த்தூங்குகிறவனுக்கும், விழித்துக்கொண்டிருப்பவனுக்கும், ஞானயோகம் கைகூடாது. (கசு)

யுக்தாஹாரவிஹாரஸ்ய யுக்தசேஷ்டஸ்ய கர்மஸு|
யுக்தஸ்வப்நாவபோதஸ்ய யோகோ பவதி து:கஹா|| கஎ||

(ப-ம்.) யுக்த ஆஹார விஹாரஸ்ய-மிதமான ஆஹாரமும் ஸஞ்சாரமுமுடையனும், கர்மஸு-கருமங்களில், யுக்த சேஷ்டஸ்ய-மிதமான வியாபாரமுடையனும், யுக்த ஸ்வப்ந அவபோதஸ்ய - மிதமான தூக்கமும் விழிப்பு முள்ளவனுமானவனுக்கு, துக்கஹா-துக்கத்தைப்போக்கடிக்கிற, யோக: பவதி-யோகம் சித்திக்கும். (கஎ

(தா-ம்) உசிதமான ஆகாரமும், உசிதமான வெளிசஞ்சாரமும் கர்மத்திலுசிதமான பரிஸ்ரமும், உசிதமான நித்திரையும், விழித்துக்கொள்ளுதலுமுள்ளவனுக்குச் சம்சாரதுக்கம் விலகி ஞானயோ ஞ்சித்திக்கின்றது. (கஎ

யதா விநியதம் சித்தமாத்மந்யேவாவதிஷ்டதே |
நிஸ்ப்ருஹ: ஸர்வகாமேப்யோ யுக்த இத்யுச்யதே ததா|| கஅ

(ப-ம்.) யதா சித்தம்-எப்பொழுது மனது, விநியதம்-அடக்கப்பட்டதாய், ஆத்மநி ஏவ-ஆத்மாவில் தானே, அவதிஷ்டதே-இருக் மோ, ததா-அப்பொழுது, ஸர்வ காமேப்ய:-எல்லாப் பண்டங் ளும், நிஸ்ப்ருஹ:-ஆசையற்று, யுக்த: இதி-(யோகத்துக்குத்) தக்க ன்என்று, உச்யதே-சொல்லப்படுவான். (கஅ

(தா-ம்) எப்பொழுது மனம் ஆன்மாவினிடத்தில் லயித்து சலமாகவிருக்கிறதோ அப்பொழுது தான் எல்லாவஸ்துகளிடத் லும் விருப்பமற்றவனெனவும், யோகாப்பியாசத்துக் குரியவனெ வும் கூறப்படுகிறான். (ஸ) ஆத்மந்யேவ, தனதுமெய்ஞ்ஞான சொ த்திலேயே. (க

யதா தீபோ நிவாதஸ்தோ நேங்கதே ஸோபமா ஸ்ம்ருதா |
யோகினோ யதசித்தஸ்ய யுஞ்ஜதோ யோகமாத்மந: || ககூ ||

(ப-ம்) நிவாத ஸ்தஃ தீபஃ-காற்றில்லாதவிடத்துள்ள தீபம், யதா ந இங்கதே-எப்படி சலிக்கிறதில்லையோ; யத சித்தஸ்ய-மனோவிருத்தியற்று, ஆத்மநி-ஆத்மாவில், யோகம்-யோகத்தை, யுஞ்ஜதஃ-செய்கின்ற, யோகிநஃ-யோகஞ்செய்பவனுடைய, ஆத்மநஃ-ஆத்மாவுக்கு, ஸா உபமா ஸ்ம்ருதா-அது உவமையாக வெண்ணப்பட்டது. (ககூ)

(தா-ம்) காற்றில்லாவிடத்தில் வைத்த தீபமெவ்வண்ணம் அசைவற்றுப் பிரகாசிக்குமோ, அவ்வண்ணமே மனதை நிலைநிறுத்தி ஆன்ம விசாரஞ் செய்பவனுக்கு ஸாங்கித்தியமாகிறது, "ஆன்மஸ்வரூபம் நன்கு பிரகாசிக்கிறது." (ககூ)

யத்ரோபரமதே சித்தம் நிருத்தம் யோகஸேவயா |
யத்ர சைவாத்மனாத்மானம் பஶ்யன்னாத்மனி துஷ்யதி || உ0 ||

ஸுகமாத்யந்திகம் யத்தத் புத்திக்ராஹ்யமதீந்த்ரியம் |
வேத்தி யத்ர ந சைவாயம் ஸ்திதஶ்சலதி தத்த்வத: || உக ||

யம் லப்த்வா சாபரம் லாபம் மன்யதே நாதிகம் தத: |
யஸ்மின் ஸ்திதோ ந து:கேன குருணாபி விசால்யதே ||

தம் வித்யாத் து:கஸம்யோகவியோகம் யோகஸம்ஜ்ஞிதம் |
ஸ நிஶ்சயேன யோக்தவ்யோ யோகோ(அ)நிர்விண்ணசேதஸா ||

(ப-ம்.) யோக ஸேவயா-யோகஞ் செய்வதனால், நிருத்தம்-விஷயங்களிலிருந்து நிறுத்தப்பட்ட, சித்தம் - மனமானது, யத்ர உபரமதே-எதில் ரமிக்குமோ, யத்ர ச ஏவ-எதில் தானே, ஆத்மா ஆத்மாநா-மனதினால் ஆத்மாவை, பச்யந்-பார்த்துக்கொண்டு, ஆத்மநி-ஆத்மாவில், துஷ்யதி-இன்புறுகின்றானோ, யத் தத்-யாதொன்று, அதீந்த்ரியம்-புலன்களுக்கெட்டாததோ, புத்தி க்ராஹ்யம்-புத்தியால் அறியக்கூடியதோ, ஆத்யந்திகம் ஸுகம்-மிகவும் ஸுகரூபமோ, யத்ர வேத்தி-எதில் அனுபவிக்கிறானோ, யத்ர ஸ்திதஃ அயம்-எதில் இருக்குமிவன், தத்வதஃ-சுகாநுபவத்தினின்றும், நைவசலதி - சலிக்கவேமாட்டானோ, யம் லப்த்வா - எதை யடைந்தபிறகு, அபரம் லாபம்-வேறு லாபத்தை, ததஃ அதிகம்-அதைவிட அதிகமாக, நமந்யதே - மதிக்கமாட்டானோ, யஸ்மிந் ஸ்திதஃ-எதில் இருப்பவன், குருணா துக்கேந அபி-பெருந்துயரத்தாலும், நவிசால்யதே - சலிக்கவேமாட்டானோ, தம்-அதை, துக்க ஸம்யோக வியோகம் - துக்க ஸம்பந்தமற்ற,

யோகஸம்ஜ்ஞிதம்-யோகமென்பதாக, வித்யாத் - அறிக்கடவன், ஸ꞉ யோக꞉-அந்த யோகமானது, நிச்சயேந-(இப்படிப்பட்டதென்கிற) நிச்சயத்தோடு, அநிர்விண்ண சேதஸா - ஸந்துஷ்ட மனதோடு, யோக்தவ்ய꞉-செய்யத்தக்கது. (௨௰-௨௧-௨௨-௨௩)

(தா-ம்) யோகாப்பியாசத்தால் விஷயாதிகளில் நின்றும் திருப்பப்பட்ட சித்தம் எதனிடத்தில் சுகித்து நிற்கின்றதோ எதனிடத்தில் மனம் ஆன்மாவைப் பார்த்துக்கொண்டு ஆன்மாவினிடத்திலேயே திருப்தியடைகின்றதோ, இந்திரியாதிகளுக்கெட்டாததாயும், அறிவினால் அறியத்தக்கதாயுமுள்ள பரமசுகத்தை எதனிடத்தில் நிலைநின்று காண்கின்றானோ, எதுகிடைத்தபின் மீண்டும் அதைவிட மேலானலாபம் வேறுதோன்றாதோ எதனிடத்திலிருப்போன் மகாதுக்கத்தினாற்கூட அசைக்கப்படானோ அப்படிப்பட்ட துக்கநிவர்த்தியே யோகமெனப்படுகின்றதென்றறிதல் வேண்டும். அத்தகைய யோகத்தை திருப்தியுள்ள மனதோடும் ஸ்திரபுத்தியோடும் அநுஷ்டிக்கவேண்டும். (ஸம்) யம்-எந்தஆத்மலாபத்தை. (௨௰-௨௧-௨௨-௨௩)

ஸங்கல்பப்ரபவாந்காமாம்ஸ்த்யக்த்வா ஸர்வாநஶேஷத꞉ |
மநஸைவேந்த்ரியக்ராமம் விநியம்ய ஸமந்தத꞉ || ௨௪ ||
ஶநை꞉ ஶநைருபரமேத்புத்த்யா த்ருதிக்ருஹீதயா |
ஆத்மஸம்ஸ்தம் மந꞉ க்ருத்வா ந கிஞ்சிதபி சிந்தயேத் || ௨௫ ||

(ப-ம்) ஸங்கல்ப ப்ரபவாந்-கோரிக்கையாலுண்டாகும், காமாந்-விஷய ஆசைகளை, ஸர்வாந்-எல்லாவற்றையும், அஶேஷத꞉ த்யக்த்வா-முழுதும் விட்டு, இந்த்ரிய க்ராமம்-புலன் கூட்டத்தை, ஸமந்தத꞉-எப்புறத்தினின்றும், மநஸா ஏவ விநியம்ய-மனதினால் தானே அடக்கி, ஶநை꞉ ஶநை꞉-மெள்ள மெள்ள, த்ருதி க்ருஹீதயா - தைரியத்தால அடையப்பட்ட, புத்த்யா-புத்தியினாலே, உபரமேத்-(ஸகலத்தினின்றும்) நீங்கக்கடவன்; மந꞉-மனதை, ஆத்மஸம்ஸ்தம்-ஆத்மாவில்நிலைக்க, க்ருத்வா-செய்து, கிஞ்சித் அபி-சிறிதொன்றையும், நசிந்தயேத்-சிந்திக்கக்கடவனல்லன். (௨௪-௨௫)

(தா-ம்) சங்கற்பத்தாலுதித்த புத்திர மித்திராதி விஷயபாகங்களையாவும் நிச்சேஷமாய் மனதினலொதுக்கி இந்திரிய சமூகங்களை நான்கு பக்கத்திலும் ஸ்பர்சஜங்களென்னும் சப்தாதி விஷயங்களில் நின்றும் மனதினால் நிவர்த்திசெய்து கொஞ்சங்கொஞ்சமாய் விவேகத்துடன்கூடிய அறிவினால் ஆன்மஞானத்திற் கந்நியமான விஷயாதிகளில் நின்றும் திரிப்பி மனதை ஆன்மாவினிடத்தில் நிறுத்தினபி

ன்பு மீண்டும் ஒன்றையுஞ் சிந்திக்கக்கூடாது. (ம)மநஃ மனம் பரப்பிரமனிடத்தில் நிலைபெற்றிருக்கும்படி. (௨௪-௨௫)

𑌯𑌤𑍋 𑌯𑌤𑍋 𑌨𑌿𑌶𑍍𑌚𑌰𑌤𑌿 𑌮𑌨𑌶𑍍𑌚𑌞𑍍𑌚𑌲𑌮𑌸𑍍𑌥𑌿𑌰𑌮𑍍 ।
𑌤𑌤𑌸𑍍𑌤𑌤𑍋 𑌨𑌿𑌯𑌮𑍍𑌯𑍈𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌵 𑌵𑌶𑌂 𑌨𑌯𑍇𑌤𑍍 ॥ ௨௬ ॥

(ப-ம்.) சஞ்சலம்-சஞ்சல ஸ்வபாவ மாகையாலே. அஸ்திரம்-நிலைக்காத, மநஃ-மனது, யதஃ யதஃ-எங்கெங்கு, நிச்சரதி - ஸஞ்சரிக்கின்றதோ, ததஃ ததஃ-அந்தந்த விஷயங்களிலிருந்து, ஏதத் - இப்(மனதை), நியம்ய-அடக்கி, ஆத்மநி ஏவ-ஆத்மாவில் தானே, வசம்நயேத்-வசப்படுத்தக்கடவன். (௨௬)

(தா-ம்) சஞ்சலஸ்வபாவமுடையதாதலால் ஆன்மாவினிடத்தில்மனம் ஸ்திரமாகவிருக்காமல் எங்கெந்தமார்க்கமாய் சஞ்சரிக்குமோ, அந்தந்த மார்க்கத்தில் நின்றும் அதை திருப்பி ஆன்மாவினிடத்திலேயே பிரவேசிக்கும்படி செய்தல்வேண்டும். (௨௬)

𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑌨𑌸𑌂 𑌹𑍍𑌯𑍇𑌨𑌂 𑌯𑍋𑌗𑌿𑌨𑌂 𑌸𑍁𑌖𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌉𑌪𑍈𑌤𑌿 𑌶𑌾𑌨𑍍𑌤𑌰𑌜𑌸𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑌮𑌕𑌲𑍍𑌮𑌷𑌮𑍍 ॥ ௨௭ ॥

(ப-ம்) ப்ரசாந்த மநஸம்-அசையாத மனதுடையனும், அகல்மஷம்-கலக்கமற்று, சாந்த ரஜஸம்-ரஜோகுணமுமொழித்து, ப்ரஹ்ம பூதம்-ஸ்வஸ்வரூபமாய்நின்ற, ஏநம் யோகிநம்-இந்த யோகியை, உத்தமம் ஸுகம்-உத்தம ஸுகமான(மோக்ஷம்), உபைதி ஹி-அடைகிறதென்பது வேதப்ரஸித்தமாயிருக்கிறது. (௨௭)

(தா-ம்) ஆன்மஞானத்தில் உறுதியான மனதோடிருப்பதினால் பாவத்தையொழித்து சுத்தாத்மஸ்வரூபியாய் விளங்காநின்ற அந்த யோகியை சுகமடைகின்றது. (௨௭)

𑌯𑍁𑌞𑍍𑌜𑌨𑍍𑌨𑍇𑌵𑌂 𑌸𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌯𑍋𑌗𑍀 𑌵𑌿𑌗𑌤𑌕𑌲𑍍𑌮𑌷𑌃 ।
𑌸𑍁𑌖𑍇𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌮𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌸𑍁𑌖𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 ॥ ௨௮ ॥

(ப-ம்) ஏவம் ஸதா-இப்படி எப்போதும், ஆத்மாநம் - ஆத்மாவைக்(குறித்து), யுஞ்ஜந்-யோகத்திலிருக்கின்ற, யோகீ-யோகியானவன்; விகத கல்மஷஃ-பாபங்களற்றவனாய், ப்ரஹ்ம ஸம்ஸ்பர்சம்-பிர்ம்மாநுபவரூபமான, அத்யந்தம் ஸுகம்-மிகுந்த சுகத்தை, ஸுகேந-வருத்தமின்றி, அச்நுதே-அநுபவிக்கிறான். (௨௮)

(தா-ம்) இவ்வாறு எக்காலம் பிர்மஞானத்திலிருந்துகொண்டு ஜன்மாந்திர தீவினைகளைத் தொலைத்த யோகியானவன் பிர்மஞானானந்தமென்னும் அபரிமிதசுகத்தை ஆயாசமில்லாமலேயநுபவிக்கின்றான்.

𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍍𑌥𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌚𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 ।
𑌈𑌕𑍍𑌷𑌤𑍇 𑌯𑍋𑌗𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑌃 ॥ ௨௯ ॥

(ப-ம்) ஆத்மாநம்-தன்னை, ஸர்வபூதஸ்தம்-எல்லாப்பூதங்களிலுமிருப்பதாகவும், ஸர்வபூதாநி-எல்லாப் பூதங்களையும், ஆத்மநிச-பூதங்களிலுமிருக்கிறதாகவும், யோக யுக்த ஆத்மா-யோகத்தில நின்றமனதுடையவன், ஸர்வத்ர-எல்லாவிடத்தும், ஸமதர்சநः-ஸமமானபார்வையுடையனாய், ஈக்ஷதே-பார்க்கிறான். (௨௯)

(தா-ம்) யோகத்தினால் இரஜோகுணம் நாசமடைந்தபின் சுத்தமானமனதுடன் ஸமஸ்தப்பிராணிகளிடத்திலும் சமதிருஷ்டியுடையவனாய், தனது ஆன்மாவை ஸர்வபூதங்களிலுமிருப்பதாயும், ஸர்வபூதங்களுடைய ஆத்மா தன்னிடத்திலிருப்பதாயும் காண்கின்றான். ()

𑌯𑍋 𑌮𑌾𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌚 𑌮𑌯𑌿 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑌂 𑌨 𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸 𑌚 𑌮𑍇 𑌨 𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌤𑌿 ॥ ௩௦ ॥

(ப-ம்.) யः மாம்-எவன் என்னை, ஸர்வத்ரபச்யதி-எங்கும் பார்க்கிறானோ, ஸர்வம்ச-எல்லாவற்றையும், மயி பச்யதி-என்னில் பார்க்கிறானோ, தஸ்ய அஹம்-அவனுக்கு நான், நப்ரணச்யாமி-காணாமற்போவதில்லை, ஸச மே-அவனும் எனக்கு, நப்ரணச்யதி-காணாமற்போவதில்லை. (௩௰)

(தா-ம்) எவன், எல்லாவற்றிலும், எத்தனையும், என்னிடத்தில், எல்லாவற்றையும் பார்க்கிறானோ, அவனுக்குயானும் எந்தனுக்கவனும், நசிக்கிறதில்லை. (௩௰)

𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌯𑍋 𑌮𑌾𑌂 𑌭𑌜𑌤𑍍𑌯𑍇𑌕𑌤𑍍𑌵𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌥𑌾 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍋𑌽𑌪𑌿 𑌸 𑌯𑍋𑌗𑍀 𑌮𑌯𑌿 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥ ௩௧ ॥

(ப-ம்.) யः மாம்-யாவனொருவன் என்னை, ஸர்வபூத ஸ்திதம்-சகலபூதங்களிலுமிருக்கிற; ஏகத்வம ஆஸ்த்திதः-ஒருமையடைந்து, பஜதி-ஸேவிக்கிறானோ, ஸர்வதா-எந்தநிலையில், வாதமாநः அபி-இருந்தாலும, ஸः யோகி-அந்த யோகி, மயி வர்த்தே-என்னிடத்தில் இருக்கிறான். (நித்தியமுக்தனாகச் சொல்லப்படுகிறான்) (௩௧

(தா-ம்) எவன் பேதபுத்தியன்றி ஸர்வப் பிராணிகளிடத்திலும் எந்தனை பஜிக்கின்றானோ அப்படிப்பட்டயோகி எவ்வித வ்யாபாரத்திற் பிரவேசித்தபோதிலும் எந்தனிடத்திலேயே யிருக்கின்றான். (

𑌆𑌤𑍍𑌮𑍌𑌪𑌮𑍍𑌯𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌮𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌯𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌸𑍁𑌖𑌂 𑌵𑌾 𑌯𑌦𑌿 𑌵𑌾 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌸 𑌯𑍋𑌗𑍀 𑌪𑌰𑌮𑍋 𑌮𑌤𑌃 ॥ ௩௨

(ப-ம்) ஆத்ம ஔபம்யேந - ஆத்மாக்களுக்குண்டான ஸாம்யத்தைக்கொண்டு, ஹே அர்ஜுந-ஓ அர்ஜுநனே, ஸர்வத்ர-எங்கும், ஸுகம் வா யதி வா துக்கம்-இன்பத்தையோ துன்பத்தையோ, ஸமம்-ஸமமாக, ய꞉ பச்யதி-எவன் பார்க்கிறானோ, ஸ꞉-அவன், பரம꞉ யோகீ-மேலான யோகி, மத꞉ (என்)றெண்ணப்படுவான். (௩௨)

(தா-ம்) ஓ அர்ஜுநனே! சுகதுக்கங்களை தனது போல்ஸர்வப்பிராணிகளிடத்திலும் சமமாய்ப் பார்க்கிறவனெவனோ அவனே பரமயோகி யென்றெண்ணப்படுகிறான். (௩௨)

அர்ஜுநவாக்கியம்.

யோயம் யோகஸ்த்வயா ப்ரோக்த꞉ ஸாம்யேந மதுஸூதந ।
ஏதஸ்யாஹம் ந பச்யாமி சஞ்சலத்வாத் ஸ்திதிம் ஸ்திராம் ॥ ௩௩ ॥

(ப-ம்.) ஹே மதுஸூதந-ஓ மதுசூதனனே! த்வயா-தேவரீரால், ஸாம்யேந-ஸாம்யமாக, ய꞉ அயம் யோக꞉ - யாதொன்றிந்தயோகம், ப்ரோக்த꞉-சொல்லப்பட்டதோ, சஞ்சலத்வாத்-(மனம்) சலிப்புற்றதாகையால், ஏதஸ்ய-இந்த யோகத்தினுடைய, ஸ்திராம் - நிலையான, ஸ்திதிம் - நிலைமையை, அஹம் - நான், நபச்யாமி - பார்க்கிறேனில்லை. (௩௩)

(தா-ம்.) ஓ கிருஷ்ணா! ஸர்வபூதங்களையும் சமமாய்ப்பார்ப்பதினால் எந்தயோகம் உம்மால் கூறப்பட்டதோ அத்தகைய இந்தயோகம் எந்தனுக்கு சஞ்சலப்படுவதால் இதற்கு ஸ்திரமான அவஸ்தை இன்னதென்று தெரியவில்லை. (௩௩)

சஞ்சலம் ஹி மந꞉ க்ருஷ்ண ப்ரமாதி பலவத்த்ருடம் ।
தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம் ॥ ௩௪ ॥

(ப-ம்) ஹே க்ருஷ்ண-ஓ கண்ணா! சஞ்சலம்-சலிக்கும் ஸ்வபாவமான, மந꞉-மனது, பலவத்-வலுவில்(புருஷனை), த்ருடம் ஹி-விஷயங்களில் கெட்டியாயும், ப்ரமாதி-கலங்கச் செய்கிறதாயும், தஸ்ய-அதினுடைய, நிக்ரஹம்-ஜயத்தை, அஹம்-நான், வாயோ꞉ இவ-காற்றினதுபோல, ஸுதுஷ்கரம்-மிகவும் செய்ய வரியதென்று, மந்யே-நினைக்கின்றேன். (௩௪)

(தா-ம்.) ஓ கிருஷ்ணா! மனதோ சஞ்சலஸ்வபாவமுடையது. இன்னும் பலாத்காரமாய் அபகரிக்கப் படும்படியானதும் அதிகபலமுடையது மாதலால் "காற்றை அசையாமல் நிற்கச்செய்வதுபோல்" சாத்தியமென்று யான் எண்ணுகின்றேன். (௩௪)

ஸ்ரீகிருஷ்ண வாக்கியம்.

𑌅𑌸𑌂𑌶𑌯𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌮𑌨𑍋 𑌦𑍁𑌰𑍍𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌂 𑌚𑌲𑌮𑍍 |
𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑍇𑌨 𑌤𑍁 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑍇𑌣 𑌚 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 ||

(ப-ம்) ஹே மஹாபாஹோ-ஓ பலசாலியே!, சலம்-சலிக்குந்தன்மையுடையதான; மந:-மனமானது, துர்நிக்ரஹம்-அடக்கமுடியாததுதான், அஸம்சயம்-ஸம்சயமில்லை, ஹே கௌந்தேய-ஓ குந்தியின் மைந்தா! அப்யாஸேந-அப்பியாசத்தாலும், வைராக்யேணச-வைராக்கியத்தாலும், க்ருஹ்யதே-அடக்கப்படும். (௩௫)

(தா-ம்) ஓ அர்ஜ்ஜுனா! மனத்தைநிலைநிறுத்தமுடியாதென்பதில் ஐயமில்லை. அப்படியிருந்தபோதிலும் அப்பியாசத்தாலும் பிரகிருதிவஸ்துக்களில் தோஷாரோபணம் அவைகளில் விருப்பமின்றியிருத்தல்முதலிய வைராக்கியத்தால், மனம் சுத்தப்படும். (௩௫)

𑌅𑌸𑌂𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌯𑍋𑌗𑍋 𑌦𑍁𑌷𑍍𑌪𑍍𑌰𑌾𑌪 𑌇𑌤𑌿 𑌮𑍇 𑌮𑌤𑌿𑌃 |
𑌵𑌶𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌤𑍁 𑌯𑌤𑌤𑌾 𑌶𑌕𑍍𑌯𑍋𑌽𑌵𑌾𑌪𑍍𑌤𑍁𑌮𑍁𑌪𑌾𑌯𑌤𑌃 || ௩௬ ||

(ப-ம்) அஸம்யத ஆத்மநா-ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளாத மனதையுடைய, யோக:-யோகமானது, துஷ்ப்ராப:-அடையக் கூடியதல்ல, இதி-என்று, மே-என்னுடைய, மதி:-நிச்சயம், வச்ய ஆத்மநா-வசப்பட்ட மனதையுடையனாய், யததா-யத்தினம் செய்பவனாலோ, உபாயத:-உபாயமாய், அவாப்தும்-அடைய, சக்ய:-சாத்தியானது. (௩௬)

(தா-ம்) மனக்கட்டின்றியோகம் சித்திக்காதென்றுஎன்கருத்து பற்பல வுபாயத்தால் மனதை யடக்கினவனுக்குக் கர்மப்பிரயத்தினத்தால் பரமபொருள் சுலபமாய்புலப்படும். (௩௬)

அர்ஜ்ஜுன வாக்கியம்.

𑌅𑌯𑌤𑌿𑌃 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑍋𑌪𑍇𑌤𑍋 𑌯𑍋𑌗𑌾𑌚𑍍𑌚𑌲𑌿𑌤𑌮𑌾𑌨𑌸𑌃 |
𑌅𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌯𑍋𑌗𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌕𑌾𑌂 𑌗𑌤𑌿𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 || ௩௭ ||

(ப-ம்) ஸ்ரத்தயா உபேத:-சிரத்தையோடு கூடியவன், அயதி:-யத்தினமில்லாத பக்ஷத்தில், யோகாத்-யோகத்தினின்றும், சலிதமாநஸ:-சலிப்புற்றமனத்தனாய், யோகஸம்ஸித்திம்-யோகஸித்தியை, அப்ராப்ய-அடையாமல், ஹே க்ருஷ்ண!-ஓ பகவானே, காம்கதிம் கச்சதி-என்னகதி யடைகிறான். (௩௭)

(தா-ம்) ஏ கிருஷ்ணா! சிரத்தை யுடையவன்கூட முயற்சியின் குறைவால் யோகத்தினது சித்தியைப் பெறாமல் மனம் யோகத்திலிருந்து சலித்தபிறகு எக்கெதியடைவன்? (௩௭)

கச்சிந்நோபயவிப்ரஷ்டஶ்சிந்நாப்ரமிவ நஶ்யதி ।
அப்ரதிஷ்டோ மஹாபாஹோ விமூடோ ப்ரஹ்மண: பதி ॥

(ப-ம்) உபய விப்ரஷ்ட:-கர்மயோக இரண்டிலும் நழுவிய (இவன்), சிந்ந அப்ரம் இவ-துண்டுபட்ட மேகம்போல, கச்சித் ந நஶ்யதி-கெட்டுப்போகாமலிருக்கிறானா? மஹா பாஹோ-ஓ விக்ரமசாலியே! அப்ரதிஷ்ட:-(கருமமும்) கைகூடாமல், ப்ரஹ்மண: பதி-பிரமத்தின் வழியிலும், விமூட:-மூடனானவன். (௩௮)

(தா-ம்) ஏ முகுந்தா! கர்மபலங்களான ஸ்வர்காதி போகங்களினும், தான் ஆரம்பித்த பிர்மஞான மார்க்கத்திலும் பயிற்சியடையாத உபயப்பிரஷ்டன் (ஞானமார்க்கத்திலும், கர்மமார்க்கத்திலும் தேர்ச்சியடையாதவன்) கண்டப்பட்ட மேகம்போல நசிக்காமற் போவனோ? (௩௮)

ஏதந்மே ஸம்ஶயம் க்ருஷ்ண சேத்துமர்ஹஸ்யஶேஷத: ।
த்வதந்ய: ஸம்ஶயஸ்யாஸ்ய சேத்தா ந ஹ்யுபபத்யதே ॥ ௩௯ ॥

(ப-ம்.) ஏதம் மே ஸம்சயம்-இந்த என் ஸந்தேகத்தை, ஹே க்ருஷ்ண-ஓ கண்ணபிரானே! அசேஷத:-முழுதும், சேத்தும் அர்ஹஸி-நீர் போக்கவேண்டும், ஹி-ஏனெனில், அஸ்ய ஸம்சயஸ்ய-இச்சந்தேகத்தை, த்வத் அந்ய: - உம்மைத்தவிர மற்றொருவன், சேத்தா-போக்கவல்லனாய், ந உபபத்யதே-ஏற்படான். (௩௯)

(தா-ம்) ஏ கிருஷ்ணா! எந்தனுக்கு இப்படிப்பட்ட சந்தேகங்களை நிஸ்சேஷமா யொழிக்கவேண்டும். இச்சந்தேகங்களை நிவர்த்திசெய்கிறவன் உம்மைத்தவிர வேறொருவருமில்லை. (௩௯)

ஸ்ரீக்ருஷ்ணவாக்கியம்.

பார்த்த நைவேஹ நாமுத்ர விநாஶஸ்தஸ்ய வித்யதே ।
ந ஹி கல்யாணக்ருத்கஶ்சித் துர்கதிம் தாத கச்சதி ॥ ௪௦ ॥

(ப-ம்) ஹே பார்த்த!-ஓ அர்ஜுனா! இஹ - இந்த லோகத்திலும், தஸ்ய விநாச:-அந்த யோகப்ரஷ்டனுக்கு, நைவ வித்யதே-இல்லவேயில்லை, அமுத்ர-பரலோகத்திலும், நைவ - இல்லை, ஹே தாத-வாராய் அண்ணா! கல்யாணக்ருத்-சுபமான (யோகத்தைச்) செய்து (நழுவிய), கச்சித்-எவனும், துர்கதிம்-கெடுதியை; ந ஹி கச்சதி - அடையமாட்டானன்றோ? (௪௦)

(தா-ம்) ஏ பார்த்தா! அப்படிப் பட்டவனுக்கு இஹத்திலும், பரத்திலும், நாசமொருபொழுதுமில்லை. அர்ஜுனா! நற்கன்மத்தைச்செய்தவனொருவனும் துர்க்கதியை யடையான். (௪௦)

ப்ராப்ய புண்ய க்ருதாம் லோகாநுஷித்வா சாஶ்வதீ: ஸமா: ।
ஶுசீநாம் ஶ்ரீமதாம் கேஹே யோகப்ரஷ்டோऽபிஜாயதே ॥

(ப-ம்) யோகப்ரஷ்ட:-யோகத்தினின்று நழுவியவன், புண்யக்ருதாம்-புண்ணியவான்களின, லோகாந்-உலகங்களை, ப்ராப்ய-அடைந்து, சாச்வதீ:-சாசுவதமான, ஸமா:-(பல) வருஷங்கள், உஷித்வா-(அங்கே) வாஸஞ்செய்து, சுசீநாம்-பரிசுத்தாளான,ஸ்ரீமதாம்-ஸ்ரீமான்களின், கேஹே-கிருஹத்தில், அபிஜாயதே-பிறக்கிறான்.(சக)

(தா-ம்) யோகப்பிரஷ்டன் புண்ணியஞ் செய்தவர்களுடைய லோகம்சென்று வெகுகாலம் சுகியாகவிருந்து பரிசுத்தர்களாயும் யோகாப்பியாசமுடையவர்களுடைய கிரஹத்தில் மீண்டும் ஜனிக்கின்றான். (சக)

அதவா யோகிநாமேவ குலே பவதி தீமதாம் ।
ஏதத்தி துர்லபதரம் லோகே ஜந்ம யதீத்ருஶம் ॥ சஉ ॥

(ப-ம்.) அதவா-இல்லையென்றால், யோகிநாம் - யோகிகளான, தீமதாம்-புத்திமான்களின், குலே ஏவ-வம்சத்தில்தானே, பவதி-பிறக்கின்றான், ஈத்ருசம்-இப்படிப்பட்ட, யத்ஜந்ம-யாதொரு ஜன்மமுண்டோ, ஏதத்ஹி-இதுதான்; லோகே - உலகத்தில் (பிராணிகளுக்கு), துர்லபதரம்-மிகவும் அலபமானது. (சஉ)

(தா-ம்) அப்படி யோகபரிபாகத்தை யடைந்தவன் சமிப்பானேயாகில யோகிகளாயும்,ஞானவந்தர்களாயுமிருக்கிறவர்களுடையகிரஹத்தில் பிறக்கின்றான். லோகத்தில் இப்படிப்பட்ட ஜன்மமுண்டாவது வெகுகடினம். (சஉ)

தத்ர தம் புத்திஸம்யோகம் லபதே பௌர்வதேஹிகம் ।
யததே ச ததோ பூய: ஸம்ஸித்தௌ குருநந்தந ॥ சஙு

(ப-ம்) ஹே குருநந்தந-ஓ குருவம்சதிலகமே! தத்ர-அந்தஜந்மத்தில்; பௌர்வதைஹிகம்-முன் தேஹத்திலுண்டான, தம் புத்திம்யோகம்-அந்த புத்தியோகத்தை, லபதே-அடைகிறான், தத:-அதனால், ஸம்ஸித்தௌ-(யோக) ஸித்தியில், பூய:யததே-மீண்டும் யத்னம் செய்கிறான். (சஙு

(தா-ம்) ஓ அர்ஜுனா! அவ்விடத்திலும், பூர்வதேஹசம்பந்தமான அந்தயோகி விஷயத்திலேயே புத்தி, சம்பந்தப்பட்டு அங்கிருந்து மறுபடியும் யோகசித்தியில் முயலுகின்றான். (ஸம்) பூய: - திகமாய். (சஙு

𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑌾𑌸𑍇𑌨 𑌤𑍇𑌨𑍈𑌵 𑌹𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌹𑍍𑌯𑌵𑌶𑍋𑌽𑌪𑌿 𑌸𑌃।
𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑍁𑌰𑌪𑌿 𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 𑌶𑌬𑍍𑌦𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌤𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇। ௪௪॥

(ப-ம்) பூர்வ அப்யாஸேந-முன்பு பழக்கமான, தேந ஏவ-அதினாலேயே, ஸ:-அவன், அவச: அபி-ஸ்வாதீன மற்றவனாயினும், ஹ்ரியதே-கொண்டுபோகப்படுகிறான், யோகஸ்ய - யோகத்தை, ஜிஜ்ஞாஸு: அபி-அறிய முயன்றவனும், சப்தப்ரஹ்ம - வேதோக்த கர்மபலனை, அதிவர்த்ததே-கடக்கிறான். (௪௪)

(தா-ம்) அப்படிப்பட்டவன் யோகத்திலிச்சை யில்லாதவனாயினும் முன் அப்பியசிக்கப்பட்ட அந்த யோகத்தின் வலுவாலிழுக்கப்பட்டவனாகிறான். யோகத்தை நன்கறியக்கருதினவன்தான் பிரகிருதி சம்பந்தத்தை யதிக்கிரமித்து நிற்பன். (௪௪)

𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌾𑌦𑍍𑌯𑌤𑌮𑌾𑌨𑌸𑍍𑌤𑍁 𑌯𑍋𑌗𑍀 𑌸𑌂𑌶𑍁𑌦𑍍𑌧𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌃।
𑌅𑌨𑍇𑌕𑌜𑌨𑍍𑌮𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌸𑍍𑌤𑌤𑍋 𑌯𑌾𑌤𑌿 𑌪𑌰𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍॥ ௪௫॥

(ப-ம்) தத:-இப்படி யாகையாலே, அநேகஜந்ம ஸம்ஸித்த:-பலபிறவிகளில் (இப்படி) பிறந்து, ஸம்சுத்த கில்பிஷ: - துலக்கப்பட்ட பாவமுடையனாய், ப்ரயத்நாத்-பெருமுயற்சியாய், யதமாந: - யத்தனம் செய்கின்ற, யோகீ து-யோகியானவன், தத:-அதினின்றும், பராம்கதிம்-ப்ரஹ்மஸாயுஜ்யத்தை, யாதி-அடைகிறான். (௪௫)

(கா-ம்) வெகு ஜன்மங்களாற் சம்பாதிக்கப்பட்ட புண்ணியங்களினாற் பாபத்தை யொழித்தவனாய் விடாமுயற்சிபெற்று யோகாப்பியாசஞ்செய்யும் யோகி அந்தஜன்மத்தில் நின்றும் பரகதியை "பிர்மாநுபவத்தை" யடைகிறான். (௪௫)

𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌭𑍍𑌯𑍋𑌽𑌧𑌿𑌕𑍋 𑌯𑍋𑌗𑍀 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌭𑍍𑌯𑍋𑌽𑌪𑌿 𑌮𑌤𑍋𑌽𑌧𑌿𑌕𑌃।
𑌕𑌰𑍍𑌮𑌿𑌭𑍍𑌯𑌶𑍍𑌚𑌾𑌧𑌿𑌕𑍋 𑌯𑍋𑌗𑍀 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑍋𑌗𑍀 𑌭𑌵𑌾𑌰𑍍𑌜𑍁𑌨॥ ௪௬॥

(ப-ம்) தபஸ்விப்ய:-தவசிகளைக்காட்டிலும், யோகீ அதிக:-யோகி சிறந்தவன், ஜ்ஞாநிப்ய: அபி-ஞானிகளைக்காட்டிலும், அதிக: மத:-சிறந்தவனாக வெண்ணப்படுவான், கர்மிப்ய: ச-கருமஞ்செய்பவரினும், யோகி அதிக:-யோகி சிறந்தவன், தஸ்மாத்-ஆகையால், அர்ஜுந-ஓ அர்ச்சுனா, யோகீ பவ-நீயோகி யாகுவாய். (௪௬)

(தா-ம்) அர்ஜ்ஜுனா! தவஞ்செய்கிறவன், ஆத்மஞான முடையோன், பயனைக்கருதி கன்மஞ்செய்கிறவன், இவர்களை விடயோகியே சிறந்தவன். ஆதலால் நீயும் யோகியாய்விடு. (௪௬)

𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌮𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌮𑌦𑍍𑌗𑌤𑍇𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌾।
𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌵𑌾𑌨𑍍𑌭𑌜𑌤𑍇 𑌯𑍋 𑌮𑌾𑌂 𑌸 𑌮𑍇 𑌯𑍁𑌕𑍍𑌤𑌤𑌮𑍋 𑌮𑌤𑌃॥ ௪௭॥

(ப-ம்.) யோகிநாம்-யோகிகளான, ஸர்வேஷாம் அபி-எல்லாரு க்குள்ளும், மத்கதேந அந்தராத்மநா-என்னையடைந்த சிந்தையினால், யஃஶ்ரத்தாவாந்-எவன் சிரத்தையோடு, மாம் பஜதே-என்னைச்சேவி க்கிறானோ, ஸஃ மே-அவன் எனக்கு, யுக்ததமஃ-மிகவும் யுக்தனாக, மதஃ-எண்ணப்படுவான். (சஎ)

(தா-ம்) யோகிகளுக்குள், என்னிடத்தில் மனதை நிறுத்தி எவ ன்பக்தியுடன் என்னை பஜிக்கின்றானோ, அவனே மேலானயோகிக ளிலும் சிறந்தவனென்பது என் கருத்து. (சஎ)

ஸ்ரீகீதாஸு விஸ்வரூபஸந்தர்ஶநயோகமென்னும்

ஆறாவது அத்தியாயம் முற்றிற்று.

ஏழாவது அத்தியாயம்.

விஜ்ஞாநயோகஃ.

ஸ்ரீகிருஷ்ண வாக்கியம்.

மய்யாஸக்தமநாஃபார்த்த யோகம்யுஞ்ஜந்மதாஶ்ரயஃ!
அஸம்ஶயம்ஸமக்ரம்மாம்யதாஜ்ஞாஸ்யஸிதச்ச்ருணு॥ க॥

(ப-ம்) ஹே பார்த்த-வாராய் அர்ச்சுனா! மயி - என்னிடத்தில், ஆஸக்த மநாஃ-பற்றிய மனத்தனாய், மத் ஆஶ்ரயஃ-என்னை ஆதாரமாக ப்பற்றி, யோகம் யுஞ்ஜந்-யோகம் செய்யாநின்றுகொண்டு, மாம்-எ ன்னை, அஸம்ஶயம்-ஸம்சயமின்றி, ஸமக்ரம் - ஸகலமும், யதா ஜ்ஞா ஸ்யஸி - எப்படி அறிவாயோ, தத் ஶ்ருணு - அந்த ஜ்ஞானத்தை கேள். (க)

(தா-ம்) ஏ பார்த்தா! எந்தனிடத்தில் மனதை நிலைநிறுத்தி அ ன்புடன் நிமிஷங்கூட பகவானைவிட்டு நீக்குவதை சகிக்காதவனாய் என்னை ஆசிரித்து யோகாப்பியாசஞ்செய்து எந்தனை சந்தேகமின்றி முற்றுமெவ்வண்ண முணர்வாயோ, அதைக்கேள்மின். (க)

ஜ்ஞாநம்தேஹம்ஸவிஜ்ஞாநமிதம்வக்ஷ்யாம்யஶேஷதஃ।
யஜ்ஜ்ஞாத்வாநேஹபூயோந்யஜ்ஜ்ஞாதவ்யமவஶிஷ்யதே॥ உ

(ப-ம்) அஹம் தே-நான் உனக்கு, இதம்-இந்த, ஜ்ஞாநம்-ஞா னத்தை, ஸவிஜ்ஞாநம்-விஜ்ஞானத்தோடு கூட, அஶேஷதஃ-குறைவி ன்றி முழுதும், வக்ஷ்யாமி-சொல்லுகிறேன், யத் ஜ்ஞாத்வா-யாதொ

ன்றை அறிந்து, இஹ-என்விஷயத்தில், பூய: ஜ்ஞாதவ்யம்-மறுபடி அறியவேண்டுவதாய், அந்யத் ந அவசிஷ்யதே-வேறு மிஞ்சமாட்டாது. (௨)

(தா-ம்) யான் உந்தனுக்கு ஸமஸ்த சேதனா சேதனங்களுக்கு விலக்ஷணீயமான பகவத்ஸ்வரூப விசேஷஞானத்துடன் கூடியஇந்த பிரஞானத்தைச் சம்பூரணமாய்க் கூறுகின்றேன். இதை யறிந்தபின்பு இன்னும அறியத்தக்கதை வேறொன்று இவ்விடத்தில் விசேஷமிருக்காது. (௨.)

𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑍇𑌷𑍁 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌯𑌤𑌤𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇 ।
𑌯𑌤𑌤𑌾𑌮𑌪𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌮𑌾𑌂 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 ॥ ௩ ॥

(ப-ம்.) மநுஷ்யாணாம்-மனிதர்களின், ஸஹஸ்ரேஷு-ஆயிரத்தில், கச்சித்-ஒருவன், ஸித்தயே-ஸித்தியின்பொருட்டு, யததி-யத்தனம் செய்கிறான், யததாம்-(அப்படி) யத்தனம் செய்து, ஸித்தாநாம் அபி-ஸித்திபெற்றவருக்குள்ளும், கச்சித்-ஒருவனே, தத்வத:-உள்ளபடியே, மாம் வேத்தி-என்னை அறிகிறான். (௩)

(தா-ம்) ஆயிரக்கணக்கான மனிதர்களிலே எவனோஒருவன்ஞானசித்தியின்பொருட்டு பிரயத்தனப்படுகின்றான். பிரயத்தனப்பட்டவர்களுள் எவனோ ஒருவன் என்தனையறிந்து அநேகருக்குள்எவனோ ஒருவன் உண்மையை யறிகின்றான். (௩)

𑌭𑍂𑌮𑌿𑌰𑌾𑌪𑍋𑌽𑌨𑌲𑍋 𑌵𑌾𑌯𑍁𑌃 𑌖𑌂 𑌮𑌨𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍇𑌵 𑌚 ।
𑌅𑌹𑌂𑌕𑌾𑌰 𑌇𑌤𑍀𑌯𑌂 𑌮𑍇 𑌭𑌿𑌨𑍍𑌨𑌾 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑌷𑍍𑌟𑌧𑌾 ॥ ௪

(ப-ம்.) பூமி: ஆப:-பூமி ஜலம், அநல: வாயு:-நெருப்பு காற்று கம்-ஆகாசம், மந:-மனது, புத்தி: அஹங்கார:-புத்தி அஹங்காரம், இதி இயம்-என்கிற இந்த, மே ப்ரக்ருதி:-என்னுடைய பிரகிருதியானது, அஷ்டதா பிந்நா-எட்டுவகையாய்ப் பிரிக்கப்பட்டது. (௪)

(தா-ம்.) பிருதிவி, அப்பு, தேஜஸ், வாயுவு, ஆகாயம், மனம், புத்தி, அஹங்காரம் என்கிற எண்வகைப்படும் உபபிரகிருதி, யெல்லாமென்னிடத்திலுண்டானதென்றுணர்க. (௪)

𑌅𑌪𑌰𑍇𑌯𑌮𑌿𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌮𑍇 𑌪𑌰𑌾𑌮𑍍 ।
𑌜𑍀𑌵𑌭𑍂𑌤𑌾𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌯𑌯𑍇𑌦𑌂 𑌧𑌾𑌰𑍍𑌯𑌤𑍇 𑌜𑌗𑌤𑍍 ॥ ௫ ॥

(ப-ம்.) ஹே மஹாபாஹோ-ஓ பெருந்தோளாய்! இயம் அபரா-முன் சுலோகத்தில்குறித்த எட்டுவிதப்ரக்ருதிக்ருஷ்டமானது, ப்ரக்ருதி:-பிரகிருதி, இத:து அந்யாம்-இதைக்காட்டிலும் வேறுபட்

டதோ, மே பராம்-என்னுடைய மேலான, ஜீவபூதாம் - ஜீவரூபமான, ப்ரக்ருதிம்-பிரகிருதியென்று, வித்தி-தெரிந்துக்கொள், யயா-யாதொன்றால், இதம் ஜகத் - இஜ்ஜகமானது, தார்யதே - தரிக்கப்படுகின்றது. (ரு)

(தா-ம்) அசேதனமான இப்பிரகிருதி சிறந்ததன்று, இதைவிட மேலான என் பிரகிருதிவேறொன்று ஜீவரூபமாக விருக்கின்றது. அனாற்றான் இப்பிரபஞ்சம் தரிக்கப்படுகிறதென்றறிக. (ரு)

ஏதத்யோநீநி பூதாநி ஸர்வாணீத்யுபதாரய |
அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ்ததா || ௬ ||

(ப-ம்) ஸர்வாணி பூதாநி-எல்லாப்பூதங்களும், ஏதத் யோநீநி இதி-இவ்விரண்டினின்று முண்டானவை, உபதாரய-தெரிந்துகொள், க்ருத்ஸ்நஸ்ய ஜகத:-எல்லா வுலகத்துக்கும், அஹம் ப்ரபவ:-நான்உத்பத்திகாரணம், ததா ப்ரளய:-அப்படியே நாசகாரணமும். (௬)

(தா-ம்) இந்த ஸமஸ்தப் பிராணிகளும் மேற்கூறிய இரண்டுபிரகிருதிகளே காரணமாயுடையதுகளென்று நிச்சயிக்கவும்; அவ்விரண்டு பிரகிருதிகளுக்கும் யானே காரணனாகவிருந்துகொண்டு இப்பிரபஞ்சத்தையெல்லாம் படைக்கவும், அழிக்கவும் சார்க்கவுமுடையவனாகிறேன். (௬)

மத்த: பரதரம் நாந்யத்கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய |
மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ || ௭ ||

(ப-ம்) ஹே தநஞ்சய!-வாராய் தனஞ்சயனே!, மத்த: பரதரம்-என்னிலும் மேலான, அந்யத் கிஞ்சித்-வேறொன்றும், நாஸ்தி - கிடையாது, இதம் ஸர்வம்-இதெல்லாம், ஸூத்ரே மணிகணா இவ - நூலில மணி ஸமூஹம்போல, மயி ப்ரோதம்-என்னில் கோர்க்கப்பட்டிருக்கிறது. (௭)

(தா-ம்) ஏ அர்ஜுநா! என்னைவிட மேலானவஸ்துவேறொன்றுமில்லை இதெல்லாம் தந்துவில் (நூலில்) கோர்த்தமணிபோலென்னிடத்தில் கோர்க்கப்பட்டிருக்கிறது. (௭)

ரஸோऽஹமப்ஸு கௌந்தேய ப்ரபாஸ்மி ஶஶிஸூர்யயோ: |
ப்ரணவ: ஸர்வவேதேஷு ஶப்த: கே பௌருஷம் ந்ருஷு || ௮ ||

(ப-ம்) ஹே கௌந்தேய-வாராய் குந்திபுத்திர! அப்ஸு-நீரில், அஹம் ரஸ:-நான் ரஸம்; சசி ஸூர்யயோ: - சந்திர சூரியரில், ப்ரபா அஸ்மி-ஒளியாகிறேன்; ஸர்வ வேதேஷு - எல்லா வேதங்

ளிலும், ப்ரணவः-பிரணவமாகிய ஓம்காரம், கே சப்த: - ஆகாயத்தில் சத்தம், ந்ருஷு-மனிதரில், பௌருஷம் - புருஷஸ்வரூபம், அஹம ஸ்மி-நானாகவே இருக்கிறேன். (அ)

(தா-ம்) ஏ பார்த்தா! யான் ஜலங்களுக்கு உருசியாயும், சூரிய சந்திரர்களுக்கு ஒளியாயும், வேதங்களுக்கெல்லாம் பிரணவமாயும், ஆகாயத்திற்கு சப்தமாயும், புருடர்களுக்குப் பௌருஷமாயும் இருக்கிறேன். (அ)

புண்யோ கந்த: ப்ருதிவ்யாஞ்ச தேஜஶ்சாஸ்மி விபாவஸௌ |
ஜீவனம் ஸர்வபூதேஷு தபஶ்சாஸ்மி தபஸ்விஷு || ௯ ||

(ப-ம்.) ப்ருதிவ்யாம்ச-மண்ணில், புண்ய: கந்த: - நல்ல மணம், விபாவஸௌச-சூரியனில, தேஜ: அஸ்மி - தேஜஸ்ஸாகிறேன், ஸர்வ பூதேஷு-எல்லாப்பிராணிகளிலும், ஜீவநம்-உயிர்நிலை, தபஸ்விஷு ச-தவசிகளில், தப: அஸ்மி-தவமாகிறேன். (௯)

(தா-ம்) பூமிக்குப்புண்ணிய சுகந்தமாயும், சூரியனுக்குத்தேஜோ ரூபமாயும், பிராணிகளுக்கெல்லாம் ஜீவனமாயும், தபஸ்விகளுக்குத் தபஸ்ஸாயும் இருக்கிறேன். (௯)

பீஜம் மாம் ஸர்வபூதாநாம் வித்தி பார்த்த ஸநாதநம் |
புத்திர்புத்திமதாமஸ்மி தேஜஸ்தேஜஸ்விநாமஹம் || ௧௦ ||

(ப-ம்) ஹே பார்த்த!-வாராய் பார்த்தனே!, ஸர்வ பூதாநாம்-எல்லாப் பிராணிகளுக்கும், மாம்-என்னை, ஸநாதநம் - நித்தியமான, பீஜம் வித்தி-வித்தாகவறி, புத்திமதாம்-புத்திமான்களுக்கு, புத்தி: அஸ்மி-புத்தியாகிறேன், தேஜஸ்விநாம் - தேஜஸ் உள்ளவருக்கு, அஹம் தேஜ:-நான் தேஜஸ். (௰)

(தா-ம்) பார்த்தா! இப்படி ஸமஸ்தவஸ்துவுக்கும் பூர்வமான பீஜம் (வித்து) என்று என்னையறிக, புத்திமான்களுக்கு புத்தியாயும் தேஜோவான்களுக்கு தேஜஸ்ஸாயும் இருக்கிறேன். (௰)

பலம் பலவதாஞ்சாஹம் காமராகவிவர்ஜிதம் |
தர்மாவிருத்தோ பூதேஷு காமோऽஸ்மி பரதர்ஷப || ௧௧ ||

(ப-ம்.) பலவதாம்ச-பலவான்களுக்கு, அஹம்-நான், காமராக விவர்ஜிதம்-காமம் ராகம் அற்ற, பலம்-பலம், ஹே பரதர்ஷப-ஓ பரதச்சிரேஷ்ட! பூதேஷு-பிராணிகளில், தர்மா விருத்த:-தருமத்தோடு விரோதிக்காத, காம: அஸ்மி-காமமாகிறேன். (௧௧)

(தா-ம்) அர்ஜுனா! பலவான்களுக்குயான் காமம், இராகம்,

இது சாஸ்த்ர விரோத பலமாயும், பிராணிகளுக்கு தர்ம விருத்தமில்லாத காமமாகவும்; (கோரிக்கையாக) இருக்கிறேன். (௧௧)

யெசெவெஸாத்விகாபாவா ராஜஸாஸ்தாமஸாஸ்சயெ|
மத்தஎவெதிதாந்வித்திநத்வஹந்தேஷுதெமயி|| ௧௨||

(ப-ம்) ஸாத்விகா:-ஸாத்துவிகங்களாயும், ராஜஸா: - ராஜஸங்களாயும், தாமஸா:-தாமஸங்களாயும், யேசயேச பாவா: - யாவையாவை விஷயங்களுண்டோ, தாந்-அவ்வவைகளை, மத்த ஏவ இதி-என்னிடத்தினின்றுமென்றே, வித்தி-அறி. தேமயி-அவை என்னிடத்தில்(இருக்கின்றன), அஹந்து - நானோ, தேஷு - அவற்றின் கண் (இல்லை). (௧௨)

(தா-ம்) ஸாத்விகம், இராஜஸம், தாமஸம், இதுகளுக்குவந்து வெதுவோ, அவையெல்லாம் எந்தனாலேயே உண்டுபண்ணப்பட்டதென்றுணர்க. என்னிடத்தில் வஸ்துக்களை ஆசிரித்திருக்கின்றதுகளேயன்றி யான் வஸ்துக்களை ஆச்ரயித்தவனன்று. (ஶ0) ஸாத்விகா: ஸத்துவகுணத்தாலுதித்த சமதமாதிகள். (௧௨)

த்ரிபிர்குணமயைர்பாவைரெபிஸ்ஸர்வமிதம்ஜகத்|
மோஹிதம்நாபிஜாநாதிமாமேப்ய:பரமவ்யயம்|| ௧௩||

(ப-ம்) குணமயை:-குண விகாரங்களான, ஏபி: த்ரிபி:பாவை:- இம்மூன்று பாவங்களாலும; மோஹிதம்-மயக்கப்பட்ட, இதம் ஜகத் ஸர்வம், இஜ்ஜகமெல்லாம், ஏப்ய: பரம் - இந்த த்ரிகுணங்களைக்காட்டிலும் மேற்பட்டு, அவ்யயம்-ஏகரூபனுமிருக்கும், மாம் ந அபிஜாநாதி-என்னை அறிகிறதில்லை. (௧௩)

(தா-ம்) இம்மூன்று பகுதிகளான ஸத்துவ, ரஜ, ஸ்தமோகுணங்களினது வஸ்துகளினால் மோஹமடைந்திருக்கிற இப்பிரபஞ்சமெல்லாவற்றிற்கும் சிறந்தவனும், எக்காலத்திலும் ஏகரூபனுமிருக்கின்ற எந்தனை யறியாது. (௧௩)

தைவீஹ்யெஷாகுணமயீமமமாயாதுரத்யயா|
மாமேவயேப்ரபத்யந்தேமாயாமேதாம்தரந்திதே|| ௧௪||

(ப-ம்) குணமயீ-குணஸ்வரூபையான, ஏஷா மம மாயா-இந்த என் மாயையானது, தைவீஹீ - தேவஸம்பந்தையாதலின், துரத்யயா-ஒருவராலும் கடக்கவரியது, மாம் ஏவ-என்னையே, யே ப்ரபத்யந்தே-யாவர் பற்றுகிறார்களோ, தே ஏதாம் மாயாம் - அவர்கள் இம்மாயையை, தரந்தி-கடக்கின்றார்கள். (௧௪)

(தா-ம்) ஸத்துவ ரஜஸ் தமோ குணமயமான என்தனுக்குக்கிரீடார்த்தமான இந்த மாயையை அதிக்கிரமிப்பதற்குச் சாத்தியமன்று. என்னைப் போற்றிப் பணிபுகிறவர்கள் மாத்திரம் இம்மாயையை அதிக்கிரமிப்பார்கள். (கச)

நமாம் து³ஷ்க்ருதிநோ மூடா⁴: ப்ரபத்³யந்தே நராத⁴மா:|
மாயயாபஹ்ருதஜ்ஞாநா ஆஸுரம் பா⁴வமாஶ்ரிதா:|| கரு||

(ப-ம்.) மூடா:-விபரீதபுத்திகளும், நராதமா:-என்வழி திரும்ப மாட்டாதவர்களும், மாயயா-வஞ்சகயுக்திகளால், அபஹ்ருத ஜ்ஞாநா: அபஹரிக்கப்பட்ட வறிவுடையோர்களும், ஆஸுரம்பாவம்-அசுரத்தன்மையை, ஆஶ்ரிதா: - அடைந்தவர்களுமான, துஷ்க்ருதிந:-பாவத்தொழில்புரியுமவர்கள், மாம்-என்னை, நப்ரபத்யந்தே - ஆஶ்ரயிக்கமாட்டார்கள். (கரு)

(தா-ம்) மூடர்கள், விபரீதஞானத்தால் பகவச்சேஷமான ஆத்தும சரீராதிகளை மமதையால் தங்களுக்கு விசேஷமென்றுநினைப்பவர்கள் "நராதமாம் சாமான்னியமாய்ப் பிரம ஸர்வ ரூபஞானமுதித்திருந்தும் ஆஸக்தியில்லாதவர்கள்" மாயையால் அபஹரிக்கப்பட்டஞானிகள், பகவத்ஸ்வரூப ஞானமுண்டாயிருந்தும் குயுக்திகளினால் அதற்கு மறுப்புரைப்போர் "ஆஸுராபிப்பிராயமுள்ளவர்களெனின் பகவத்வேஷமுள்ளவர்கள்" இவர்கள் ஒருவரைவிட ஒருவர்விசேஷபாபிகள். மேற்கூறிய இந்த நான்கு வகுப்பாரும் அதிபாதகர்கள். இவர்கள் என்னை யடையார்கள். (ரூo) ஆஸுரம்பாவம், பரபீடை, சொற்றமொற்றமுதலியதன்மை. (கரு)

சதுர்விதா⁴ ப⁴ஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிநோऽர்ஜுந|
ஆர்தோ ஜிஜ்ஞாஸுரர்தா²ர்தீ² ஜ்ஞாநீ ச ப⁴ரதர்ஷப⁴|| கசு||

(ப-ம்) ஹே பரதர்ஷப-ஓ பரதவம்சத்திலுதித்த அர்ச்சுனா! ஆர்த்த:-ஆர்த்தன், ஜிஜ்ஞாஸு:-ஜிஜ்ஞாஸு, அர்த்தார்த்தீ- அர்த்தார்த்தி, ஜ்ஞாநீ-ஞானி(என்கிற); ஜ்ஞாநீச - ப்ரஹ்மஞானியும், சதுர்விதா:-நான்குவகையினரான, ஸுக்ருதிநோஜநா:-புண்ணியசாலி ஜனங்கள், மாம் பஜந்தே என்னைச் சேவிக்கின்றனர். (கசு)

(தா-ம்) ஏ அர்ஜ்ஜுனா! செல்வங்குறைந்து மீண்டும் செல்வத்தைக் கோருகின்ற ஆர்த்தகன், செல்வத்திலிருந்துகொண்டே மறுபடியும் செல்வத்தை விரும்புகின்ற அர்த்தார்த்தீ, பிரகிருதிவிலக்ஷணமான ஜீவாத்தும ஸ்வரூபப்பிராப்தியை இச்சிக்கின்ற ஜிக்ஞாஸியும், பரமாத்மசேஷத்வக்ஞானமுள்ளஞானி என்கிற இந்நான்கு

பகுதியாரும் புண்ணியகிருத்தியமுள்ளவர்கள். இவர்கள். என்னை யடைவார்கள். (கசு)

தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த ஏகபக்திர்விசிஷ்யதே।
ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:॥ கஎ॥

உதாரா: ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்।
ஆஸ்தி: ஸ ஹி யுக்தாத்மா மாமேவாநுத்தமாம் கதிம்॥ கஅ॥

(ப-ம்) தேஷாம்-அவர்களுக்குள், ஜ்ஞாநீ-ஞாநியானவன், நித்யயுக்த:-நித்தியமும் கூடியும், ஏகபக்தி:-ஒரே பக்தியாயும் (இருப்பதுபற்றி), விசிஷ்யதே-சிறப்பிக்கப்படுவான், ஹி - ஏனெனில்:—ஜ்ஞாநிந:-ஞாநிக்கு, அஹம்-நான், அத்யர்த்தம் ப்ரிய: - மிகவும் பிரியன், ஸச-அவனும், மம ப்ரிய:-எனக்குப்பிரியன். (கஎ)

(ப-ம்) ஏதே ஸர்வே ஏவ-இவர்கள் எல்லோருமே, உதாரா:-வண்மையுடையோர்; ஜ்ஞாநீது-ஞாநியோ, ஆத்மா ஏவ-(எனது) ஆத்மாவென்றே, மே மதம்-என்னுடைய மதம், ஹி-என்னால், ஸ:-அவன், யுக்தாத்மா (ஸந்)-என்னிடத்தில் மனதை நிலையாக நிறுத்தினவன், மாமேவ-என்னையே, அநுத்தமாம்-சர்வோத்தமமான, கதிம்-ப்ராப்ய ஸ்தானமான, ஆஸ்தித:-அடைந்தவனுயிருக்கிறுன். (கஅ)

(தா-ம்) மேற்கூறிய நான்கு வகுப்பாரும் நன்மனதுடையவர்களே. ஆயினும் ஞானிமாத்திரம் என் ஆத்மாவென்று என் கருத்து ஏதுபற்றி யெனின் ஞானியானவன் மனதை என்னிடத்தில் நிறுத்தி என்னையே அடையவேணுமென்று நிச்சயித்திருப்பதாலென்க.()

பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந்மாம் ப்ரபத்யதே।
வாஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:॥ கக॥

(ப-ம்) பஹூநாம் ஜந்மநாம்-பலஜன்மங்களுக்கு, அந்தே - கடைசியில், ஜ்ஞாநவாந்-ஞானியாய், மாம் ப்ரபத்யதே - என்னை அடைகிறுன், வாஸுதேவ:-வாசுதேவனே, ஸர்வம் இதி-எல்லாமென்கிற, ஸ:மஹாத்மா-அப்படிப்பட்ட மஹாத்மா, ஸுதுர்லப:-மிகவும் அரியன். (கக)

(தா-ம்) அன்றியும், ஞானியானவன் அநேக ஜன்மங்களைக்கடந்தபிறகு ஸர்வமும் பரமேஸ்வரஸ்வரூபமென்கிற அறிவுதித்துஎன்னை ஆசிரிக்கின்றுன. அப்படிப்பட்ட புண்ணியாத்துமா மிகவுமரிது. (கக)

காமைஸ்தைஸ்தைர்ஹ்ருதஜ்ஞாநா: ப்ரபத்யந்தேऽந்யதேவதா:।
தம் தம் நியமமாஸ்தாய ப்ரக்ருத்யா நியதா: ஸ்வயா॥ உ0॥

(ப-ம்.) (புருஷா:)-புருஷர்கள், ஸ்வயா ப்ரக்ருத்யா - தம்(பாப) வாஸனையோடு, நியதா:-நித்தியமும் கூடி, தைஸ்தை: - அந்தந்த, காமை:-விஷயங்களால், ஹ்ருதஜ்ஞாநா: - அபஹரிக்கப்பட்ட அறிவுடையர்களாய், அந்ய தேவதா:-இதர தேவர்களை, தம்தம்-அந்தந்த, நியமம்-நியமத்தை, ஆஸ்த்தாய-அடைந்து, ப்ரபத்யந்தே - ஆஸ்ரயிக்கிறார்கள். (உ௦)

(தா-ம்) பெரும்பான்மையாய் ஜனங்கள் தங்கள் தங்கள் கர்ம வாஸனா ரூபமான பிரகிருதியினால் கட்டப்பட்டு அந்தந்த பிரகிருதி விஷயங்களான கோரிக்கைகளால் பிரம்ஞானம் அபஹரிக்கப்பட்டு அந்தந்த நியமங்களில் இதர தேவதைகளை பஜிக்கின்றார்கள். (உ௦)

𑌯𑍋𑌯𑍋𑌯𑌾𑌂𑌯𑌾𑌂 𑌤𑌨𑍁𑌂 𑌭𑌕𑍍𑌤𑌃𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌰𑍍𑌚𑌿𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌿।
𑌤𑌸𑍍𑌯𑌤𑌸𑍍𑌯𑌾𑌚𑌲𑌾𑌂𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌂 𑌤𑌾𑌮𑍇𑌵𑌵𑌿𑌦𑌧𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍॥ உக॥

(ப-ம்.) ய:ய: பக்த: - எந்தெந்த பக்தன், யாம் யாம் தநும்-எந்தெந்த மூர்த்தியை, ஶ்ரத்தயா-சிரத்தையுடன், அர்சிதும் இச்சதி- அர்ச்சிக்கக் கோருகிறானோ, தஸ்ய தஸ்ய-அவனவனுடைய, தாம் ஏவ ஶ்ரத்தாம்-அந்த சிரத்தையையே, அசலாம்-திடமாக, அஹம் விததாமி-நான் செய்கிறேன். (உக)

(தா-ம்) எவனெவன் எந்தெந்த தேவதையை பக்திசிரத்தையோடு பூஜிக்கக்கருதுகின்றானோ, அவனவனுக்கும் அந்தபக்திசிரத்தையை யானே இடையூறின்றி செய்கிறேன். (உக)

𑌸𑌤𑌯𑌾𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌰𑌾𑌧𑌨𑌮𑍀𑌹𑌤𑍇।
𑌲𑌭𑌤𑍇𑌚𑌤𑌤𑌃𑌕𑌾𑌮𑌾𑌨𑍍𑌮𑌯𑍈𑌵𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌨𑍍𑌹𑌿𑌤𑌾𑌨𑍍॥ உஉ॥

(ப-ம்) ஸ:-அவன்; தயா ஶ்ரத்தயா யுக்த: - அந்த சிரத்தையுடன்கூடி, தஸ்ய-அத்தேவதையின், ஆராதநம - ஆராதனத்தை, ஈஹதே-விரும்புகிறான், தத:-அதனால், தாந்-அந்த, காமாந் ஏவ-அபீஷ்டங்களையே, மயா-என்னால், விஹிதாந்-அளிக்கப்பட்டவைகளாக, லபதே-அடைகின்றான். (உஉ)

(தா-ம்) எவன் எந்த சிரத்தையுடையவன் எந்த தேவதையை ஆராதிப்பதற்கு பிரயத்தினப்படுகிறானோ, அந்த ஆராதனத்தாலும் அபீஷ்டங்களான கோரிக்கைகள் என்னாலேயே பரிபூரணஞ்செய்யப்பட்டு கிருதார்த்தனாகிறான். (உஉ)

𑌅𑌨𑍍𑌤𑌵𑌤𑍍𑌤𑍁𑌫𑌲𑌂𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑌦𑍍𑌭𑌵𑌤𑍍𑌯𑌲𑍍𑌪𑌮𑍇𑌧𑌸𑌾𑌮𑍍।
𑌦𑍇𑌵𑌾𑌨𑍍𑌦𑍇𑌵𑌯𑌜𑍋𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌾𑌯𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌾𑌮𑌪𑌿॥ உங॥

(ப-ம்) தேஷாம் அல்பமேதஸாம்-அவவற்பமதிகளுக்கு, தத் பலம்-அந்தப்பயனானது, அந்தவத்-முடிவுள்ளதாய், பவதி-கிடைக்கின்றது, தேவ யஜ:-தேவர்களை ஆராதிப்பவர். தேவாந் யாந்தி-தேவர்களை அடைகின்றனர். மத்பக்தா:அபி - எனது பக்தர்களும், மாம் யாந்தி-என்னைச் சேருகின்றனர். (உ௩)

(தா-ம்) ஆனால் அற்பபுத்தியுடைய அப்படிப்பட்டவர்களுக்கு அந்த பலம் ஸ்வல்ப்பமாயும், நசிக்கத்தக்கதாயுமிருக்கும். இதரதேவதைகளை பூசிப்போர் இதரதேவதைகளை யடைவார்கள். என்னை பஜிப்போர் என்னையடைகிறார்கள். (௩)

அவ்யக்தம் வ்யக்திமாபந்நம் மந்யந்தே மாமபுத்தய:|
பரம் பாவமஜாநந்தோ மமாவ்யயமநுத்தமம்|| உ௪||

(ப-ம்) அவ்யயம்-அழிவற்றதும், அநுத்தமம் - உத்தமமுமான, மம பரம் பாவம்-எனதுமேலான கொள்கையை, அஜாநந்த:-அறியாத, அபுத்தய:-அறிவீனர்கள், மாம்-என்னை, அவ்யக்தம்-முன் பிரகாசியாமல, வ்யக்திம்-பிரகாசத்தை, ஆபந்நம் - (பிறகு) அடைந்ததாக, மந்யந்தே-நினைக்கின்றார்கள். (உ௪)

(தா-ம்) அழிவில்லாதவனா யான்! நித்தியன், ஸர்வோத்தமன்; என்று என்பர ஸ்வரூபத்தை யறியாது யான் இதற்குமுன் பிரகாசிக்காமல் இப்பிறப்பிறமுன் பிரகாசிக்கின்றேனென்பான். (உ௪)

நாஹம் ப்ரகாச: ஸர்வஸ்ய யோகமாயாஸமாவ்ருத:|
மூடோऽயம் நாபிஜாநாதி லோகோ மாமஜமவ்யயம்|| உ௫||

(ப-ம்) யோகமாயா ஸமாவ்ருத:-யோக மாயையால் மூடப்பட்ட, அஹம்-நான், ஸர்வஸ்ய-எல்லாருக்கும், நப்ரகாச:-பிரகாசிப்பவனல்லேன், மூட: அயம் லோக:-மூடமான இந்த ஜனம், மாம்-என்னை, அஜம்-பிறப்பிலியென்றும், அவ்யயம்-அழிவற்றவனென்றும், ந அபிஜாநாதி-அறிகிறதில்லை. (உ௫)

(தா-ம்) ஏ அர்ஜுனா! யோகமாயையால் மறைக்கப்பட்ட யானெல்லாருக்கும் புலப்படுகிறவனன்று. மூடமான இவ்வுலகம் என்னை பிறப்பிறப்பற்றவனென்றறியாது. (உ௫)

வேதாஹம் ஸமதீதாநி வர்த்தமாநாநி சார்ஜுந|
பவிஷ்யாணி ச பூதாநி மாம் து வேத ந கஶ்சந|| உ௬||

(ப-ம்) ஹே அர்ஜுந-ஓ அர்ச்சுனா!, ஸமதீதாநி-கடந்தவைகளும், வர்த்தமாநாநிச-நிகழ்வனவும், பவிஷ்யாணி-வருமவைகளுமான, பூதாநி-பூதங்களை, அஹம்வேத-நான் அறிவேன், மாம்து - என்னை

யோ, ந கச்சந வேத-லோகாநுக்ரஹமாய் க்ருஷ்ணாவதாரஞ்செய்தவ னுகி ஒருவனும் அறியமாட்டார்கள். (௨௬)

(தா-ம்) அர்ஜுனா! யான் பூத, பவிஷ்யத், வர்த்தமானமென் னு முக்காலத்தையு முணர்ந்தவன். என்னைமாத்திரம் எவனு மறி யான். (௨௬)

இச்சாத்வேஷஸமுத்தேந த்வந்த்வமோஹேந பாரத |
ஸர்வபூதாநி ஸம்மோஹம் ஸர்கே யாந்தி பரந்தப || ௨௭ ||

(ப-ம்) ஹே பாரத-ஓ பாரதனே!, இச்சாத்வேஷ ஸமுத்தேந-இச்சை த்வேஷங்களால் உண்டான, த்வந்த்வ மோஹேந - இன்ப துன்பங்களிலுண்டான மயக்கத்தாலே, ஹே பரந்தப-ஓ பகைவரை த் தவிப்போனே, ஸர்வபூதாநி-எல்லாப்பிராணிகளும், ஸர்கே - ஸ்ருஷ்டி-காலத்தில, ஸம்மோஹம் யாந்தி-மயக்கமுறுகின்றன. (௨௭)

(தா-ம்) வ அருந்தவமுடைய அர்ஜுனா! இன்பத்துன்ப முத லிய இச்சாத்வேஷத்தினுண்டான அறிவின்மையால் பிராணிக ளெல்லாம் ஜநிக்கும்போதே மோஹத்தையடைகின்றன. (௨௭)

யேஷாம் த்வந்தகதம் பாபம் ஜநாநாம் புண்யகர்மணாம் |
தே த்வந்த்வமோஹநிர்முக்தா பஜந்தே மாம் த்ருடவ்ரதா: || ௨௮ ||

(ப-ம்) புண்யகர்மணாம்-புண்ணியஞ் செய்தவரான, யேஷாம் ஜநாநாம்-எந்த ஜனங்களுடைய, பாபம்-பாவமானது, அந்த கதம்-அழிவுற்றதோ, தே-அவர்கள், த்வந்த்வ மோஹ நிர்முக்தா:-த்வந்த்வத்தில் மோஹத்தினின்று விடுபட்டு, த்ருடவ்ரதா:-திடமான ஸங்கல்பத்தோடு, மாம் பஜந்தே-என்னை பஜிக்கின்றனர். (௨௮)

(தா-ம்) புண்ணியகாரியஞ்செய்த எந்த ஜனங்களுக்கு பாபம் க்ஷீணதசை யடைந்திருக்கிறதோ அவர்கள் திருட பக்தியுடையவர்களாய் இந்த இன்பதுன்பத்தாலுதித்தப் பிரமையையொழித்து என்னை யடைவார்கள். (௨௮)

ஜராமரணமோக்ஷாய மாமாச்ரித்ய யதந்தி யே |
தே ப்ரஹ்ம தத்விது: க்ருத்ஸ்நமத்யாத்மம் கர்ம சாகிலம் || ௨௯ ||

(ப-ம்.) மாம் ஆச்ரித்ய-என்னை ஆச்சிரயித்து, யதந்தி-யத்தினஞ்செய்கிறார்களோ, தே-அவர்கள், தத்ப்ரஹ்ம-அப்பிரம்மத்தையும், க்ருத்ஸ்நம்-முழு, அத்யாத்மம்-அத்யாத்மத்தையும், அகிலம்கர்மச-ஸகலகருமத்தையும், விது:அறிவார்கள். (௨௯)

(தா-ம்) எவன் ஜநநமரண துக்கத்தை யொழிப்பதற்கு (என்ப

தால் ஆத்மஞான ஸாக்ஷாத்காரத்திற்கு) பிரயத்தனப்படுகிறானோ, அவன் அந்த பரப்ரம்மத்தையும் தனது ஆத்மாவையும், ஸமஸ்தகர்மத்தையு மறிகின்றான். (௨௯)

𑌸𑌾𑌧𑌿𑌭𑍂𑌤𑌾𑌧𑌿𑌦𑍈𑌵𑌂𑌮𑌾𑌂𑌸𑌾𑌧𑌿𑌯𑌜𑍍𑌞𑌂𑌚𑌯𑍇𑌵𑌿𑌦𑍁𑌃|
𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌕𑌾𑌲𑍇𑌽𑌪𑌿𑌚𑌮𑌾𑌂𑌤𑍇𑌵𑌿𑌦𑍁𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌚𑍇𑌤𑌸𑌃|| ௩0||

(ப-ம்.) யே மாம்-எவர்கள் என்னை, ஸாதிபூதாதிதைவம் - அதிபூதம் அதிதைவம இவற்றோடு கூடியவனையும், ஸாதியக்ஞம்ச-அதியக்ஞத்தோடு கூடியவனையும், விதுঃ-அறிகிறார்களோ, தே-அவர்கள் ப்ரயாணகாலேபி-மரணகாலத்திலும், யுக்தசேதஸঃ(என்னோடு) கூடியமனத்தராய், மாம்விதுঃ-என்னை அறிவர்கள். (௩௰)

(கா-ம்.) எந்தனை எவர்கள் அதிபூதமென்னும் பிரகிருதிஸம்பந்தத்திற்கும் அதிதைவதமென்னும் ஆத்ம ஸம்பந்தத்திற்கும், அதியக்ஞமென்னும் கர்மஸம்பந்தத்திற்கும் ஆதாரபூதனென்றுணர்கிறார்களோ, அப்படிப்பட்ட யோகிகள் பிராணப்பிரயாண ஸமயத்திற்கூடஎந்தனை மறவார்கள். (௩௰)

ஸ்ரீகீதாஸு விஸ்வரூபஸந்தர்ஸநயோகமென்னும்

எழாவது அத்தியாயம் முற்றிற்று.

எட்டாவது அத்தியாயம்.

𑌅𑌕𑍍𑌷𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑍋𑌗𑌃.

அர்ஜ்ஜுனவாக்கியம்.

𑌕𑌿𑌂𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌿𑌮𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌂𑌕𑌿𑌂𑌕𑌰𑍍𑌮𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮 |
𑌅𑌧𑌿𑌭𑍂𑌤𑌂𑌚𑌕𑌿𑌂𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑌧𑌿𑌦𑍈𑌵𑌂𑌕𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇|| ௧||

𑌅𑌧𑌿𑌯𑌜𑍍𑌞𑌃𑌕𑌥𑌂𑌕𑍋𑌤𑍍𑌰𑌦𑍇𑌹𑍇𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌮𑌧𑍁𑌸𑍂𑌦𑌨 |
𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌕𑌾𑌲𑍇𑌚𑌕𑌥𑌂𑌜𑍍𑌞𑍇𑌯𑍋𑌸𑌿𑌨𑌿𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌭𑌿𑌃|| ௨||

(ப-ம்) ஹே புருஷோத்தம-வாரீர் புருஷோத்தம, தத்ப்ரஹ்மகிம்-அந்தப்பிரம்மமாவதென்? அத்யாத்மம்கிம்-அத்தியாத்மமாவதென்? கர்மகிம்-கருமமாவதென்? அதிபூதம்ச - அதிபூதமென்று, கிம்ப்ரோக்தம்-எதுசொல்லப்பட்டது? கிம் அதிதைவம்-எது அதிதைவமென்று, உச்யதே-சொல்லப்படுகிறது. (௧)

(ப-ம்) ஹேமதுஸூதந-ஓ மதுசூதனா! அஸ்மிந் தேஹே-இ

ச்சரீரத்தில், அதியக்ஞ꞉ க꞉-அதியக்ஞன் எவன்? அத்ர கதம் ஜ்ஞேயஃ-இவ்விஷயத்தில் எப்படி அறியப்படுவன்? நியதாத்மபி꞉-நிக்கிரஹிக்கப்பட்ட அந்தக் கரணமுடையவரால், ப்ரயாணகாலே-மரணகாலத்தில், கதம் ஜ்ஞேயஃ அஸி-எப்படி அறியப்படுகிறீர்? (௨)

(தா-ம்) ஏ புருஷோத்தமா! பிரம்மமென்பது யாது? அத்தியாத்மமென்றாலென்ன? கர்மமென்பதென்ன? ஆதி பூதமாவது எப்படிப்பட்டது? மதுஸூதனா! அ[illegible]து இச்சரீரங்களிலேது? பிராணம்போகிற காலத்தில ஸ்திர சித்தமுடையவர்களா லெவ்வண்ணமறியப்படுகிறீர்? (௧-௨)

ஸ்ரீகிருஷ்ண வாக்கியம்.

𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑌰𑌮𑌂 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌭𑍂𑌤𑌭𑌾𑌵𑍋𑌦𑍍𑌭𑌵𑌕𑌰𑍋 𑌵𑌿𑌸𑌰𑍍𑌗𑌃 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌃 ॥ ௩ ॥

(ப-ம்) பரமம் அக்ஷரம்-மேலான அக்ஷரம், ப்ரஹ்ம பிரம்மமெனப்படும், ஸ்வபாவஃ-ஸ்வபாவமானது, அத்யாத்மம் உச்யதே-அத்தியாத்மமென்னப்படும், பூதபாவ உத்பவகரஃ-பிராணிக்தன்மையை உண்டுபண்ணுமதான, விஸர்கஃ-விஸர்கமானது, கர்மஸம்ஜ்ஞிதஃ-கருமமென்னப்படும். (௩)

(தா-ம்) பிரமமென்பது சிறந்த அக்ஷரம். "என்றால் பிரகிருதிஸம்பந்தமில்லாத ஆத்மஸமூகம்" அத்யாத்மமென்பது பிரகிருதி. ஸமஸ்தபிராணிகளுடைய யுற்பத்திக்குமகாரணமான விஸர்க்கமென்னும் பீஜத்தை க்ஷேத்திரத்தில் விடுவதைக்கர்மமென்று சொல்லப்படும். (௩)

𑌅𑌧𑌿𑌭𑍂𑌤𑌂 𑌕𑍍𑌷𑌰𑍋 𑌭𑌾𑌵𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌶𑍍𑌚𑌾𑌧𑌿𑌦𑍈𑌵𑌤𑌮𑍍 ।
𑌅𑌧𑌿𑌯𑌜𑍍𑌞𑍋𑌽𑌹𑌮𑍇𑌵𑌾𑌤𑍍𑌰 𑌦𑍇𑌹𑍇 𑌦𑍇𑌹𑌭𑍃𑌤𑌾𑌂 𑌵𑌰 ॥ ௪ ॥

(ப-ம்.) அதிபூதம்-அதிபூதமாவது; க்ஷரஃபாவஃ - க்ஷரிக்குந்தன்மையது, அதிதைவதம்-அதிதைவதமாவது, புருஷஃ - புருஷன்; தேஹப்ருதாம் வர-சரீரிகளுக்குள் சிறந்தோனே! அத்ர தேஹே - இத்தேஹத்தில், அதியஜ்ஞஃ-அதியக்ஞமாவது, அஹம் ஏவ-நானே. (௪)

(தா-ம்) ஏ அர்ஜ்ஜுனா! அதிபூதமென்பது பரிணமைப்பட்ட வஸ்து. ஸமஸ்ததேவதைகளுக்கும் அந்தராத்மாவான புருடனே அதிதைவம். இச்சரீரங்களில் ஸகல யக்ஞங்களினாலும் ஆராதிக்கப்படுகிறவனான யானே அதியஞ்ஞன். (௪)

𑌅𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇 𑌚 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌲𑍇𑌵𑌰𑌮𑍍 ।

𑌯𑌃 𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌿 𑌸 𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌸𑌂𑌶𑌯𑌃॥ ௫॥

(ப-ம்) அந்தகாலேச-மரணகாலத்திலும், மாம் ஏவ ஸ்மரந்-என்னையே சிந்தித்துக்கொண்டு, கலேபரம்-சரீரத்தை, முக்த்வா-விட்டு, யஃ ப்ரயாதி-எவன் மரிக்கிறானோ, ஸஃ-அவன், மத்பாவம்-எனது தன்மையை, யாதி-அடைகின்றான், அத்ர-இவ்விஷயத்தில் ஸம்சயஃ நாஸ்தி-ஸம்சயமில்லை. (௫)

(தா-ம்) அந்திமகாலத்தில் எந்தனை தியானித்துக்கொண்டே சரீரத்தை விட்டவன் எந்தன் ஸ்வரூபத்தையே யடைகிறானென்பதில் சந்தேகமில்லை. (௫)

𑌯𑌂 𑌯𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 𑌭𑌾𑌵𑌂 𑌤𑍍𑌯𑌜𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌕𑌲𑍇𑌵𑌰𑌮𑍍।
𑌤𑌂 𑌤𑌮𑍇𑌵𑍈𑌤𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌸𑌦𑌾 𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌭𑌾𑌵𑌿𑌤𑌃॥ ௬॥

(ப-ம்) ஹே கௌந்தேய-ஓ குந்திபுத்திர, அந்தே- இறுதியில், யம்யம் வாபிபாவம்-எந்தெந்த பாவத்தை, ஸ்மரந்-சிந்தித்துக்கொண்டு, கலேபரம்-சரீரத்தை, த்யஜதி-விடுகிறானோ, ஸதா-எப்போதும், தத்பாவபாவிதஃ-அத்தன்மையையே சிந்தித்துக்கொண்டு, தம்தம் ஏவ-அவ்வவற்றையே, ஏதி-அடைகிறான். (௬)

(தா-ம்) ஏ அர்ஜுனா! புருடனெக்காலும் ஒரு வஸ்துவை நினைத்து அத்தன்மைத்தனமாகவே மனதின்கண் வியாபித்துப் பிராணாந்திமத்திலெப்பொருளை ஸ்மரித்து தேகத்தைவிடுகிறானோ, அவன் மீண்டும் அத்தன்மையையே யடைகிறான். (௬)

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌕𑌾𑌲𑍇𑌷𑍁 𑌮𑌾𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑌰 𑌯𑍁𑌧𑍍𑌯 𑌚।
𑌮𑌯𑍍𑌯𑌰𑍍𑌪𑌿𑌤𑌮𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌮𑌾𑌮𑍇𑌵𑍈𑌷𑍍𑌯𑌸𑍍𑌯𑌸𑌂𑌶𑌯𑌃॥ ௭॥

(ப-ம்) தஸ்மாத்-ஆகையால், ஸர்வேஷு காலேஷு - எல்லாக் காலங்களிலும், மாம் அநுஸ்மர-என்னைச் சிந்திப்பாய், யுத்யச-யுத்தமும் செய்வாய், மயி-என்னிடத்தில், அர்பித மநோபுத்திஃ - ஸமர்ப்பிக்கப்பட்ட மனதும் புத்தியுமுடைய (நீ), மாம் ஏவ-என்னையே, ஏஷ்யஸி-அடைவாய், அஸம்சயஃ-ஸந்தேகமின்று. (௭)

(தா-ம்) ஆதலின் முக்காலத்திலும் எந்தனை ஸ்மரித்துக்கொண்டிருப்பாயாக. இப்பொழுது நீ அஞ்சாமற் போர்புரிவதையும், அறிவையும், எந்தனிடத்தில் வைத்தால் எந்தனையே யடைவாயென்பதிற் சமுசயமில்லை. (௭)

𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑌯𑍁𑌕𑍍𑌤𑍇𑌨 𑌚𑍇𑌤𑌸𑌾 𑌨𑌾𑌨𑍍𑌯𑌗𑌾𑌮𑌿𑌨𑌾।
𑌪𑌰𑌮𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌪𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍॥ ௮॥

(ப-ம்.) அப்யாஸ யோகயுக்தேந, அப்பியாஸத்தோடும் யோகத்தோடுங்கூடி, நாந்யகாமிநா புறம்பே செல்லாத, சேதஸா-மனதினால், திவ்யம்-அப்ராகிருதனாய், பரமம்புருஷம் - பரமபுருஷனாயிருக்கும்(என்னை) அநுசிந்தயந் (அந்தியகாலத்தில்) சிந்திப்பவன், ஹே பார்த்த-ஓ அர்ச்சுன, யாதி-(என்னை) அடைகிறான். (அ)

(தா-ம்) ஏ பார்த்தா! உபாஸனை, பரிசய முதலிய வப்பியாசத்தினாலும், தியானரூபமான சமாதியென்னும் யோகவிசேடத்தினாலும், அந்நிய விடங்களிற் பிரவேசிக்காத மனதினாலும், அநாதியான பரமபுருடனைச் சிந்திப்பவன் என்னையடைவான். (அ)

𑌕𑌵𑌿𑌂 𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑌨𑍁𑌶𑌾𑌸𑌿𑌤𑌾𑌰 𑌮𑌣𑍋𑌰𑌣𑍀𑌯𑌾𑌂𑌸𑌮𑌨𑍁𑌸𑍍𑌮
𑌰𑍇𑌦𑍍𑌯𑌃 । 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌧𑌾𑌤𑌾𑌰𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌰𑍂𑌪 𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌮
𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 ॥ ௯॥

𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌕𑌾𑌲𑍇 𑌮𑌨𑌸𑌾𑌚𑌲𑍇𑌨 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌯𑍋𑌗𑌬𑌲𑍇𑌨 𑌚𑍈
𑌵 । 𑌭𑍍𑌰𑍁𑌵𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌾𑌵𑍇𑌶𑍍𑌯 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌸 𑌤𑌂
𑌪𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑍍 ॥ ௧௦॥

(ப-ம்) கவிம்-ஸர்வஜ்ஞனாய், புராணம் - புராதனனாய், அநுசாஸிதாரம்-ஆளுமவனாய், அணோ: அணீயாம்ஸம் - அணுவுக்கு அணுவாய், ஸர்வஸ்ய-எல்லாவற்றிற்கும், தாதாரம் - சிருஷ்டி கர்த்தாவாய், அசிந்த்ய ரூபம்-சிந்திக்கவரிய ரூபமுடையனாய், தமஸ: பரஸ்தாத்-பிரகிருதிக்குப் புறம்பே, ஆதித்யவர்ணம்-சூரியனை(ப்போன்ற)நிறமுடையனானவனை, ப்ரயாணகாலே-மரணகாலத்தில், பக்த்யா-பக்தியோடு, யுக்த:-கூடியவன், யோகபலேந ச - யோகபலத்தால், அசலேந மநஸா-அசைவுறாதமனதினால், ப்ருவோ: மத்யே-புருவங்களுக்கிடையில், ப்ராணம்-பிராணனை, ஸம்யக், ஆவேச்ய - நன்றாய் நிறுத்தி, ய: அநுஸ்மரேத்-எவன் இடைவிடாது சிந்திக்கிறானோ, ஸ:-அவன், தம் திவ்யம்-அந்த திவ்யமான, பரம் புருஷம்-பரமபுருஷனை, உபைதி-அடைகிறான். (௯-ம்)

(தா-ம்) ஸர்வஞ்யனாயும், ஆதியந்தமில்லாதவனாயும், பிரபஞ்சத்தைப் படைப்பவனாயும், அணுவுக்கணுவாயும், ஆத்மாவுக்கு அந்தர்யாமியாயும், ஸர்வலோகாதிகாரியாயும், அசிந்தியரூபனாயும், சூரியன்போன்ற பிரகாசமுடையவனாயும் இருளுக்கு வெகுதூரனாயுமிருக்கிற என்னை எவன் இடைவிடாமல் தியானிக்கின்றானோ: அப்படி

ப்பட்ட சாது பிராணப்ரயாணகாலத்தில் திருடசித்தத்தோடும், பக்தியோடும், யோகபலத்தோடுங்கூடினவனாய், இரண்டு புருவத்திற்குமிடையிலுள்ள சுழிமுனையின்கண் பிராணவாயுவை நன்கு நிறுத்தி திவ்யகுணங்களஸ்வரூபியான அப்பரமபுருடனை ஆசிரயிப்பான்.(௱௦) திவ்யம்-ஸிருஷ்டி ஸ்திதிஸம்ஹாராதி அற்புத கர்மமுடையவர். (௱௧) ஸம்யக்-ஜாக்கிரதையாய். (௯-ம்)

யத³க்ஷரம் வேத³விதோ³ வத³ந்தி விஶந்தி யத்³யதயோ வீதராகா³: । யதி³ச்ச²ந்தோ ப்³ரஹ்மசர்யம் சரந்தி தத்தே பத³ம் ஸங்க்³ரஹேண ப்ரவக்ஷ்யே ॥ ௧௧॥

(ப-ம்) யத்-எத்தையானும், அக்ஷரம்-அஸ்தூலத்வம்முதலியகுணங்களுடையதாக, வேதவித³:-வேதமறிந்தவர்கள், வதந்தி-சொல்லுகின்றார்களோ, வீதராகா³:-நிஷ்காமரான, யதய:-யத்தினசீலர்கள், யத்-எந்த (அக்ஷரத்தை), விசந்தி-பிரவேசிக்கின்றார்களோ, யத்இச்சந்த:-எந்த (அக்ஷரத்தை) இச்சிப்பவர்கள், ப்ரஹ்மசர்யம்-பிரம்மசரியத்தை, சரந்தி-அநுஷ்டிக்கிறார்களோ, தத் பதம்-அந்த ஸ்வரூபத்தை, தே-உனக்கு, ஸங்க்ரஹேண-ஸங்கிரஹமாக, ப்ரவக்ஷ்யே-சொல்லுகிறேன். (௧௧)

(தா-ம்) எந்த நித்திய வஸ்துவை வேதமுணர்ந்தோர் கூறுகின்றார்களோ, எதனிடத்தில் இராகத்வேஷமற்ற யதிகள் பிரவேசிக்கிறார்களோ, எதைக்கருதி பிரமசரியமென்னும் இந்திரிய நிக்கிரஹாநுஷ்டானத்தைச் செய்கிறார்களோ, அப்படிப்பட்ட ப்ராப்யஸ்வரூபத்தை யுனக்குச் சுருக்கமாயுரைக்கின்றேன். (௧௧)

ஸர்வத்³வாராணி ஸம்யம்ய மனோ ஹ்ருதி³ நிருத்⁴ய ச ।
மூர்த்⁴ன்யாதா⁴யாத்மன: ப்ராணமாஸ்தி²தோ யோக³தா⁴ரணாம் ॥
ஓமித்யேகாக்ஷரம் ப்³ரஹ்ம வ்யாஹரன்மாமனுஸ்மரன் ।
ய: ப்ரயாதி த்யஜந்தே³ஹம் ஸ யாதி பரமாம் க³திம் ॥ ௧௨॥

(ப-ம்.) ஸர்வத்³வாராணி- எல்லாத்துவாரங்களையும், ஸம்யம்ய-அடக்கி, மந:-மனதை, ஹ்ருதி - இருதயத்திலிருக்கும், (என்னிடத்தில்) நிருத்⁴ய ச-மடுத்து, யோகதாரணாம் - யோகமென்னும் தாரணையை, ஆஸ்த்தித:-அடைந்தவனாய், ஓம் இதி-ஓம் என்கிற, ஏகாக்ஷரம் ப்ரஹ்ம-ஏகாக்ஷரப் பிரம்மத்தை, வ்யாஹரந்-சொல்லிக்கொண்டு, மாம் அநுஸ்மரந்-என்னை இடைவிடாதுசிந்தித்து, ஆத்மந:பிராணம்-தன்பிராணனை, மூர்த்நி ஆதாய - தலையில்வைத்து, தேஹம் த்யஜந்-

சரீரத்தைவிட்டு, யঃ ப்ரயாதி-எவன் போகிறானோ, ஸঃ - அவன்பரமாம்கதிம்-பரமகதியை, யாதி-அடைகின்றான். (௧௨-௧௩)

(தா-ம்) ஸர்வ இந்திரியங்களையு முள்ளடக்கி இருதயத்தின்கண்மனதை நிலைபெற நிறுத்திப்ராணவாயுவை சிரசின்கண்ணுடியோகமென்னும் தாரணத்தை "நிச்சல ஞானத்தை" யனுஷ்டித்து ஓமென்னும் ஏகாக்ஷர ரூபமான பரப்ரம்மத்தை யுச்சரித்துக்கொண்டும், என்னை ஸ்மரித்துக்கொண்டும தேகத்தைவிட்டவன் பரமகதியை "ஸாயுஜ்ஜியபதவியை" யடைகிறான். (௧௨-௧௩)

அநந்யசேதா꞉ ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யஶ꞉ |
தஸ்யாஹம் ஸுலப꞉ பார்த்த நித்யயுக்தஸ்ய யோகிந꞉ || ௧௪ ||

(ப-ம்) நித்யஶঃ-தினந்தோறும் ஸததம்-எப்பொழுதும், மாம்-என்னை, அநந்யசேதா꞉-வேறுசிந்தையின்றி, யঃ ஸ்மரதி-எவன் நினைக்கிறானோ, ஹேபார்த்த. ஓ அருச்சுந! நித்யயுக்தஸ்ய-நித்யயம் யோகம்புரிகின்ற; தஸ்ய யோகிந꞉-அந்த யோகிக்கு, அஹம் ஸுலப꞉-நான்சுலபன். (௧௪)

(தா-ம்) பார்த்தா! எவன் தினந்தோறும், வேறுமனதின்றி இடைவிடாமல் என்னை பஜிக்கிறானோ, அந்த நித்தியோபாஸனாசீலனான ஞானயோகிக்கே யான் சுலபமாயறியப்பாலனாகிறேன். (ஸ0) ஸததம்-இடைவிடாமல். (௧௪)

மாமுபேத்ய புநர்ஜந்ம து꞉காலயமஶாஶ்வதம் |
நாப்நுவந்தி மஹாத்மாந꞉ ஸம்ஸித்திம் பரமாம் கதா꞉ || ௧௫ ||

(ப-ம்) மாம் உபேத்ய-என்னை அடைந்து, து꞉காலயம்-துயரத்துக்கிடமாயும், அஶாஶ்வதம்-அஸ்த்திரமாயுமிருக்கின்ற, ஜந்ம-பிறவியை, புந꞉-மறுபடியும், ந ஆப்நுவந்தி - அடையமாட்டார்கள், (யத꞉)-ஏனெனில், மஹாத்மாந꞉ - பெருமனத்தரான (அவர்கள்) பரமாம்-உத்தமமான, ஸம்ஸித்திம்-பலஸித்தியை:—(என்னை), கதா꞉-அடைந்தாலோ, புந꞉ ஜந்ம-மறுபடியும் பிறவி, நவித்யதே-கிடையாது.

(தா-ம்) சிறந்த சித்திபெற்ற மகான்கள் என்னையடைந்தபின்பு துக்காஸ்பதமாயும், அனித்தியமாயுமுள்ள ஜனனமரணகஷ்டத்தை மீண்டுமடையார்கள். (௧௫)

𑌆𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍁𑌵𑌨𑌾𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌃 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨।
𑌮𑌾𑌮𑍁𑌪𑍇𑌤𑍍𑌯 𑌤𑍁 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑌨𑍍𑌮 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇॥ கசு॥

(ப-ம்) அர்ஜுந-ஓ அர்ச்சுநா! ஆப்ரஹ்மபவநாத்-பிரமலோகபரியந்தமுள்ள, லோகா:-உலகங்கள், புநராவர்திந: - திரும்புதலுடையவைகள்; கௌந்தேய - ஓ குந்திபுத்திர! மாம் உபேத்ய து - என்னை அடைந்தாலோ, புந: ஜந்ம-மறுபடியும் பிறவி, நவித்யதே - கிடையாது. (கசு)

(தா-ம்) அர்ஜ்ஜுநா! ப்ரம்மலோகம் வரையிற்போகாமல் வேறு லோகஞ்சென்றோர்க்கு மறுபிறப்புண்டு எந்தனை யடைந்தபின்பு மாத்திரம் மறுபிறப்பில்லை. (கசு)

𑌸𑌹𑌸𑍍𑌰𑌯𑍁𑌗𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑌹𑌰𑍍𑌯𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃।
𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌂 𑌯𑍁𑌗𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌂 𑌤𑍇𑌽𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌵𑌿𑌦𑍋 𑌜𑌨𑌾𑌃॥

(ப-ம்) யேஜநா:-எந்த ஜனங்கள், அஹோராத்ரவித:-பகலிரவுகளை யறிந்திருக்கிறார்களோ, தே-அவர்கள், ப்ரஹ்மண:-நான்முகனுக்கு, யத் அஹ:-எதினை (யென்றால்), தத்-அது, ஸஹஸ்ரயுகபர்யந்தம்-ஆயிரயுகங்களின் முடிவுஎன்று, விது:-சொல்வர்கள். (கஎ)

(தா-ம்) இராப்பகலென்கிற விபாகமுணர்ந்த ஜனங்கள் நமது ஆயிரம் நான்குயுகத்தை ப்ரம்மனுக்கோர் பகலென்றும், இன்னுமவ்வளவு சதுர்யுகம் சென்றால் அது அப்பிர்மனுக்கோர் இரவென்றுங்கூறுவார்கள். (கஎ)

𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌦𑍍𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑌹𑌰𑌾𑌗𑌮𑍇।
𑌰𑌾𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌗𑌮𑍇 𑌪𑍍𑌰𑌲𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵𑌾𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑌂𑌜𑍍𑌞𑌕𑍇॥ கஅ॥

(ப-ம்.) அஹராகமே-பகல்வரும்பொழுது, வ்யக்தய: ஸர்வா:) வியக்திகளெல்லாம், அவ்யக்தாத்-அவ்வியக்தத்தினின்றும், ப்ரபவந்தி-உண்டாகின்றன; ராத்ரிஆகமே-இரவு வரும்பொழுது, அவ்யக்தஸம்ஞகே-அவ்வியக்தமென்னு பெயருடைய, தத்ரைவ அவ்விடத்தில்தானே ப்ரலீயந்தே-லயிக்கின்றன. (கஅ॥

(தா-ம்) பாலீனது ஆரம்பத்தில் பிரகிருதி ஸ்வரூபியானபிர்மனிடத்தில் நின்றும் உலகமெல்லா முற்பத்தியாகின்றது. பிரமனு

கு இரவினது ஆரம்பத்தில் பிரகிருதி ரூபியான அப்பிர்மனிடத்தே யாவும் லயப்படுகின்றன. (௧௮)

𑌭𑍂𑌤𑌗𑍍𑌰𑌾𑌮𑌸𑍍𑌸 𑌏𑌵𑌾𑌯𑌂 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌲𑍀𑌯𑌤𑍇 ।
𑌰𑌾𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌗𑌮𑍇𑌽𑌵𑌶𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌪𑍍𑌰𑌭𑌵𑌤𑍍𑌯𑌹𑌰𑌾𑌗𑌮𑍇 ॥ ௧௯ ॥

(ப-ம்) ஹேபார்த்த-ஓ பார்த்தா, ஸஏவ அயம் பூதக்ராமஃ-அந்தஇந்த பூதஸமூஹமே, அவசஃ-பரவசமாய்க்கொண்டு, பூத்வா பூத்வா-உண்டாகி யுண்டாகி, ப்ரலீயதே-அழிகின்றது, அஹராகமே-பகல்வரும்பொழுது, ப்ரபவதி-உண்டாகின்றது. (௧௯)

(தா-ம்) பார்த்தா! அப்பிராணி சமூகமே கர்மவசத்தாற்பிறந்து பிறந்து நசிக்கின்றன. இராத்திரியின்றொடர்பிலிறப்பதும், பகலினதுதொடர்பிற் பிறப்பது மியர்க்கையாயின. (௧௯)

𑌪𑌰𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍁 𑌭𑌾𑌵𑍋𑌽𑌨𑍍𑌯𑍋𑌽𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍋𑌽𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌸𑌨𑌾𑌤𑌨𑌃 ।
𑌯𑌸𑍍𑌸 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌨𑌶𑍍𑌯𑌤𑍍𑌸𑍁 𑌨 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ॥ ௨௦ ॥

(ப-ம்) தஸ்மாத்அவ்யக்தாத்-அந்தப்(பிரகிருதிரூப)அவயக்தத்தைக்காட்டிலும், பரஃ-உத்க்ருஷ்டமான, அந்யஃ - மற்றொரு, அவ்யக்தஃ-பிரமாணத்துக்குப்புலப்படாத, ஸநாதநஃ-நித்தியமான, யஃ பாவஃ-யாதொருபாவமுண்டோ, ஸஃ-அது-ஸர்வேஷு பூதேஷு - எல்லாப்பூதங்களும், நச்யத்ஸு-நசிக்கும் பொழுதும், நவிநச்யதி-நசிக்கிறதில்லை. (௨௰)

(தா-ம்) பிரகிருதிக்கு விலக்ஷணமாயும், அநித்தியமாயுமுள்ள ஸமஸ்தவஸ்துவும் நசித்தாலும் தான் நாசமடையாமலும், எப்பிரமாணத்தாலும் அறியக்கூடாததுமான ஆன்மா வேறானதென்றுணர்க.

𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍋𑌽𑌕𑍍𑌷𑌰 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑌮𑌾𑌹𑍁𑌃 𑌪𑌰𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍 ।
𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌨 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌤𑌦𑍍𑌧𑌾𑌮 𑌪𑌰𑌮𑌂 𑌮𑌮 ॥ ௨௧ ॥

(ப-ம்) யஃ-எதுவானால், அவ்யக்தஃ-அவ்யக்தம், அக்ஷரஃ-அக்ஷரம், இதிஉக்தஃ-என்று சொல்லப்பட்டதோ, தம்-அதை, பரமாம்கதிம்-பரமகதியாக, ஆஹுஃ-சொல்லுகிறார்கள், யம்-யாதொன்றை, ப்ராப்ய-அடைந்து, ந நிவர்தந்தே-நிவர்த்திக்கமாட்டார்களோ, தத்-அது, மம-எனது, பரமம் மேலான, தாம-(வியபன)ஸ்தாநம். (௨௧)

(தா-ம்) அவ்யக்தமெனவும், நாசமற்றதெனவும் கூறப்படுகிற

ஆன்மாவே முக்கியமான கெதியென்றுரைப்பார். அதையுரைப்பெற்றோர் மீண்டும் பிறவார். அதுதான் எந்தனுர்கு முக்கியமான ஸ்தானம். (உக)

புருஷஸ்ஸ பர: பார்த² ப⁴க்த்யா லப்⁴யஸ்த்வநந்யயா|
யஸ்யாந்த:ஸ்தா²நி பூ⁴தாநி யேந ஸர்வமித³ம் ததம்|| உஉ||

(ப-ம்.) இதம்ஸர்வர்-இதெல்லாம், யஸ்ய-யாதொத்தனுடைய, அந்தஃ ஸ்தாநி-உள்ளுக்குள்ளிருக்கின்றனவோ, யேந - எவனுல், ததம்-வியாபிக்கப்பட்டதோ, ஸ:-அந்த, பர:புருஷ:-பரம புருஷன், அநந்யயா-மற்றொன்றைநாடாத, பக்த்யா-பக்தியினுல், லப்ய:-அடையத்தகுந்தவன். (உஉ)

(தா-ப்) பார்த்தா! இந்தச் சேதனு சேதனஸ்வரூபங்களானஸர்வபூதங்களும் எவனிடத்தில் அந்தர்க்கதங்களாகவிருக்கிறதுகளோ, எவன் இந்த எல்லா வஸ்துக்களிடத்திலும் வியாபித்திருக்கிறுனே, அப்படிப்பட்ட பரமபுருடன் அந்நிய விஷயசப்பந்தமில்லாத பக்தியொன்றுலேயே அறியத்தக்கவன். (ஸம்) அநந்யயா - ஆத்மவிஷயமான. (உஉ)

யத்ர காலே த்வநாவ்ருத்திமாவ்ருத்திம் சைவ யோகி³ந:|
ப்ரயாதா யாந்தி தம் காலம் வக்ஷ்யாமி ப⁴ரதர்ஷப⁴|| உங||

(ப-ம்.) பூதாநி-(ஸகல)பூதங்களும், ஹேபரதர்ஷப-ஓ பரதச்சிரேஷ்ட, யத்ர-எந்த, காலே-மார்க்கத்தில், ப்ரயாதா:-சென்ற(மறித்த), யோகிந:-யோகிகள், அநாவ்ருத்திம்-திரும்பாமையையும், யோகிந:)-புண்ணியவான்கள், ஆவ்ருத்திம்-திரும்புதலேயும்,யாந்தி-(முறையே) அடைகின்றனரோ, தமகாலம்-அந்த காலத்தை, வக்ஷ்யாமி-சொல்லுகிறேன். (உங)

(தா-ப்) ஏ பாரதா! யோகிகளெந்தமார்க்கத்திற்சென்று மறுபிறப்பில்லாதவர்களாயும், பிறப்பையுடையவர்களாயுமாவார்களோ அந்த மார்க்கத்தை யுந்தனுக் கறிவிக்கின்றேன். (உங)

அக்³நிர்ஜ்யோதிரஹ: ஶுக்ல: ஷண்மாஸா உத்தராயணம்|
தத்ர ப்ரயாதா க³ச்ச²ந்தி ப்³ரஹ்ம ப்³ரஹ்மவிதோ³ ஜநா:|| உச||

(ப-ம்) அக்நி:-அக்கினி, ஜ்யோதி:-ஜோதி, அஹ:-பகல்,சுக்ல:-

சுக்லபக்ஷ:, ஷண்மாஸா:-ஆறுமாதங்களான, உத்தராயணம்-உத்தராயணம், தத்ர-இதில், ப்ரயாதா:-மரணமடைந்த, ப்ரஹ்மவித:-பிரமத்தையறிந்த, ஜநா:-ஜனங்கள், ப்ரஹ்ம-பிரமத்தை, கச்சந்தி-அடைகின்றார்கள். (௨௪)

(தா-ம்) அக்கினி, தேஜஸ், பகல், சுக்கிலபக்ஷம், உத்திராயணமென்கிற இந்தமார்க்கமாய்ச்சென்ற பிரமவித்துகளான ஜனங்கள் பிரமத்தைச் சேருவார்களென்பது "அர்ச்சிராதி மார்க்கமெனப் படும்." (௨௪)

தூமோ ராத்ரிஸ்ததா க்ருஷ்ண: ஷண்மாஸா தக்ஷிணாயநம்|
தத்ர சாந்த்ரமஸம் ஜ்யோதிர்யோகீ ப்ராப்ய நிவர்த்ததே||௨௫||

(ப-ம்) தூம:-புகை, ராத்ரி:-இரவு, ததா-அப்படியே, க்ருஷ்ண:-கிருஷ்ணபக்ஷம், ஷண்மாஸா:-ஆறுமாதங்களான, தக்ஷிணாயநம் - தக்ஷிணாயனம், தத்ர-இதில், யோகீ-யோகியானவன், சாந்த்ரமஸம்-சந்திரஸம்பந்தியான, ஜ்யோதி:-சோதியை, ப்ராப்ய-அடைந்து, நிவர்த்ததே-திரும்புகிறான். (௨௫)

(தா-ம்) புகை, இரவு, கிருஷ்ணபக்ஷம், தக்ஷிணாயனமென்னும் ஆறுமாதம் என்கிற இந்தமார்க்கமாய் சந்திரனது தேஜஸ்ஸை ஆசிரயித்த யோகிகள் மறுபிறப்பெடுக்கிறார்கள். இதை "தூமமார்க்கமென்ப்படும்." (௫)

ஶுக்லக்ருஷ்ணே கதீ ஹ்யேதே ஜகத: ஶாஶ்வதே மதே|
ஏகயா யாத்யநாவ்ருத்திமந்யயாவர்த்ததே புந:|| ௨௬||

(ப-ம்) சுக்லக்ருஷ்ணே-வெளுப்பும் கறுப்புமான, ஏதே கதீ-இக்கதிக(ளிரண்டும்), ஜகத:-உலகத்துக்கு, சாச்வதே-சாசுவதங்களாக, மதே-எண்ணப்பட்டன, ஏகயா-ஒன்றால், அநாவ்ருத்திம்-மீட்சியின்மையை, யாதி-அடைகின்றான், அந்யயா-மற்றொன்றால், புந: - மறுபடியும், ஆவர்த்ததே-திரும்புகிறான். (௨௬)

(தா-ம்) சுக்கிலபக்ஷம் "வெண்மை" கிருஷ்ணபக்ஷம் "கறுப்பு" என்கிற இவ்விரண்டு மார்க்கங்களும் "அர்ச்சிராதி, தூமாதி மார்க்கங்களும்" பிரபஞ்சத்திற்கு சாசுவதமென்பது வேதசம்மதமாயிருக்கிறது. அவ்விருமார்க்கங்களுள் ஆதியான அர்ச்சிராதி மார்க்கமாய்

ச்சென்றவனுக்கு மறுபிறப்பில்லை. இரண்டாவதான தூமமார்க்கமாய்ச்சென்றவனுக்கு புநர்ஜன்மம் சம்பவிக்கிறது. (உசு)

நைதே ஸ்ருதீ பார்த்த ஜாநந் யோகீ முஹ்யதி கஶ்சந ।
தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு யோகயுக்தோ பவார்ஜுந ॥

(ப-ம்.) ஹேபார்த்த-வாராய் பார்த்தனே, ஏதே-இந்த, ஸ்ருதீ-மார்க்கங்களை, ஜாநந்-அறிகின்ற, யோகி-யோகியானவன், கஶ்சந-எவனும், நமுஹ்யதி-கலங்கான், தஸ்மாத்-ஆகையால், ஹே அர்ச்சுந-ஓ அர்ச்சுனா! ஸர்வேஷு-எல்லா, காலேஷு-காலங்களிலும், யோகயுக்த:-யோகத்தோடுகூடியவனாய், பவ-ஆகுவாய். (உஎ)

(தா-ம்) ஏ பார்த்தா! மேற்கூறிய இரண்டு மார்க்கமு முணர்ந்தவந்த யோகியும் பிரமிக்கமாட்டான். ஆதலால் நீயுமெக்காலும் யோகநிஷ்டனாகவிரு. (உஎ)

வேதேஷு யஜ்ஞேஷு தப:ஸு சைவ தாநேஷு யத்புண்யபலம் ப்ரதிஷ்டம் । அத்யேதி தத்ஸர்வமிதம் விதித்வா யோகீ பரம் ஸ்தாநமுபைதி சாத்யம் ॥ உஅ ॥

(ப-ம்) வேதேஷு-வேதங்களிலும், யஜ்ஞேஷு-யாகங்களிலும், தப:ஸு-ச-ஏவ-தவங்களிலும், தாநேஷு-ச-தானங்களிலும், யத்-எந்த, புண்யபலம்-புண்ணியபலம், ப்ரதிஷ்டம்-சொல்லப்பட்டதோ, இதம்-இதை, விதித்வா-அறிந்து. யோகீ-யோகியானவன், தத்ஸர்வம்-அவை எல்லாவற்றையும், அத்யேதி-அதிக்கிரமிக்கிறான், ஆத்யம்-முதல்முதலான, பரம்ஸ்தாநம்ச-பெரியஸ்தானத்தையும், உபைதி-அடைகின்றான். (உஅ)

(தா-ம்) வேதாத்தியயனம், யஞ்ஞம், தவம், ஈகை இதுமுதலானவைகளாலுண்டான புண்ணிய விசேடங்கள் ஞானியும், யோகியும், அதிக்கிரமித்து ஆதியந்தமில்லாதமேன்மை தாங்கிய பதவியைப்பெறுகிறான். (உஅ)

ஶ்ரீகீதாஸு விஶ்வரூபஸந்தர்ஶநயோகமென்னும்

எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

௯-வது அத்தியாயம்.

𑌰𑌾𑌜𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌰𑌾𑌜𑌗𑍁𑌹𑍍𑌯𑌯𑍋𑌗𑌃

ஒன்பதாவது அத்தியாயம்.

𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣 𑌉𑌵𑌾𑌚.

𑌇𑌦𑌂 𑌤𑍁 𑌤𑍇 𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌨𑌸𑍂𑌯𑌵𑍇 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌹𑌿𑌤𑌂 𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇𑌽𑌶𑍁𑌭𑌾𑌤𑍍 ॥

(ப்ரதிபதம்.) அநஸூயவே - அஸூயாரஹிதமான, தே-உனக்கு, குஹ்யதமம்-அதிரஹஸ்யமும், விஜ்ஞாநஸஹிதம்-விஜ்ஞானத்தோடுகூடியதுமான, இதம்து-இந்த, ஜ்ஞாநம்-ஞானத்தை, ப்ரவக்ஷ்யாமி-சொல்லுகிறேன், யத்-எதை, ஜ்ஞாத்வா-அறிந்து, அசுபாத்-கர்மபந்தங்களிலிருந்து,மோக்ஷ்யஸே-விடுபடுவாய். (௧)

(தா-ம்)எதையுணர்ந்தபின்பு அசுபங்களான கர்மபந்தங்களினின்றும் முக்திபெறுவாயோ அப்படிப்பட்ட பரம இரகசியமான மெஞ்ஞானத்தை விசேஷ ஞானத்துடன் பொறாமையற்ற வுனக்குச் சொல்லுகிறேன். (ஸ௦) விஜ்ஞாநஸஹிதம்-அநுபவஞ்ஞானத்தோடு கூடின. (௧)

𑌰𑌾𑌜𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌰𑌾𑌜𑌗𑍁𑌹𑍍𑌯𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌮𑌿𑌦𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌵𑌗𑌮𑌂 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌸𑍁𑌸𑍁𑌖𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥௨॥

(ப-ம்) இதம்-இது,ராஜவித்யா-ராஜவித்யை;ராஜகுஹ்யம்-ராஜார்ஹமான ரஹஸ்யம்,உத்தமம்-மேலான,பவித்ரம்-பரிசுத்திகரமும்,ப்ரத்யக்ஷாவகமம் - ப்ரத்யக்ஷவிஷயமுடையதும், தர்ம்யம்-சத்ருக்களைத்தபிக்கச்செய்கிற, கர்தும் - செய்வதற்கு, ஸுஸுகம் - மிகவும், எளியதும், அவ்யயம்-நாசமற்றதுமானது. (௨)

(தா-ம்)இது,இராஜவித்யை,"என்பதால்வித்தைகளுக்கெல்லாம் சிறந்தது.அல்லதுஇராஜார்ஹமானவித்தை"இராஜகுஹ்யம்."என்பதால் இரகசியவித்தைகளுக்குட்சிறந்தது. அல்லது இராஜார்ஹமான இரகசியம்" இது விசேஷ பரிசுத்தமுடையதும், கண்கூடாய்க் காணத்தக்கதும், மோட்சதர்ம சாதனமானதும், இலகுவிற் செயற்பாலனவாகியதும் அழிவற்றதுமாம். (௨)

𑌅𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌾𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ।
𑌅𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌮𑌾𑌂 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌨𑌿 ॥௨॥

(ப-ம்) ஹேபரந்தப-ஓ அர்ஜுநா,அஸ்ய- இந்த,தர்மஸ்ய-தர்மத்

ஸ்ய, அஶ்ரத்ததாநா:-நம்பாத, புருஷா:-புருஷர்கள், மாம்-என்னை, அப்ராப்ய-அடையாமல், ம்ருத்யுஸம்ஸாரவர்த்மநி - இயமனுன ஸம்ஸார மார்க்கத்தில், நிவர்த்தந்தே-வர்த்திக்கிறார்கள். (௩)

(தா-ம்) ஏ அர்ஜுனா! மானிடர் இவ்வுபாஸனையென்னும் தர்மத்திற்கு உடன்பட்டவராயினும் நம்பிக்கையும், அன்புமில்லாதவர்களாய் என்னை யடையாது மிர்தயுரூபமான ஸம்ஸாரமார்க்கத்தில் மிக்கு பிரவேசிக்கிறார். (ஶ௦) அஶ்ரத்ததாநாஸஸிஶ்வா:- மற்றிருக்கிற. (௩)

மயா ததமிதம் ஸர்வம் ஜகதவ்யக்தமூர்த்திநா|
மத்ஸ்தாநி ஸர்வபூதாநி ந சாஹம் தேஷ்வவஸ்தித:|| ௪||

(ப-ம) அவ்யக்தமூர்த்திநா-அபரகாசரூபத்தையுடைய, மயா-என்னால், இதம்-இந்த, ஸர்வம்-ஸகலமான, ஜகத்-உலகம், ததம்-வியாபிக்கப்படிருக்கிறது, ஸர்வபூதாநி-எல்லாபூதங்களும், மத்ஸ்தாநி என்னையாசரயித்திருக்கின்றன, அஹம்ச-நானோ, தேஷு - அவைகளிடத்தில், அவஸ்தித:ந-இருப்பவன் அல்ல. (௪)

(தா-ம) இந்தஜகத்தெல்லாமஅவ்யக்தரூபியான எந்தனாலேவியாபிக்கப்பட்டிருக்கின்றது. ஸமஸ்த வஸ்துககளும எந்தனை ஆஶ்ரயித்திருந்தாலும் நான் எதையும் ஆஶ்ரயித்திருக்கவில்லை. (௪)

ந ச மத்ஸ்தாநி பூதாநி பஶ்ய மே யோகமைஶ்வரம்|
பூதப்ருந்ந ச பூதஸ்தோ மமாத்மா பூதபாவந: || ௫||

(ப-ம்) பூதாநி-பூதங்கள், மத்ஸ்தாநிச-என்னிடத்திருபபவைகளும், ச-அல்ல; மே-என்னுடைய, ஐஶ்வரம்-ஈஶ்வரஸம்மந்தியான, யோகம்-யோகத்தைபஶ்ய-பார், மம-என்னுடைய, ஆத்மா-ஆத்மாவானது, பூதப்ருத்-பூதங்களைப் பரிக்கின்றது, பூதஸ்த்த:ச-பூதஙகளில இருப்பதும், ந-அலல, பூதபாவந:-பூதங்களை உண்டாசகுவது. (௫)

(தா-ம்) அன்றியும்எந்தனிடத்தில்எந்தபூதமில்லை, ஈஶ்வரஸம்பந்தமான சக்தியால் தரிக்கின்றேன். ஆயினுமயான் அவ்வஸ்துககளிடத்திலுமில்லை. எந்தன் சங்கற்பமே யாவையும படைககின்றது. (௫)

யதாகாஶஸ்திதோ நித்யம் வாயு: ஸர்வத்ரகோ மஹாந்|
ததா ஸர்வாணி பூதாநி மத்ஸ்தாநீத்யுபதாரய|| ௬||

(ப-ம்) ஆகாசஸ்தித:-ஆகாசத்தில்இருக்கும், மஹாந்-பெரிய, வாயு:-வாயுவானது, யதா-எப்படி, நித்யம்-எப்போது, ஸர்வத்ரக:-எங்கும், சஞ்சரிக்கிறதோ, ததா-அப்படி, ஸர்வாணி-எல்லா, பூதாநி-பூதங்

களும் ஸ்தஸ்தாநி-என்னில் இருக்கின்றன,' இதி-என்று, உபதாரய-நிச்சயித்துக்கொள்ளுவாயாக. (௬)

(தா-ம்) ஆகாயத்திலெங்கும்வியாபித்திருக்கிறகாற்றுஎவ்வாறு எந்தனிடத்திலிருக்கிறதோ, அவ்வாறே எல்லாவஸ்துக்களும், எந்தனிடத்திலிருக்கிறதென்று அறிந்துகொள். (௬)

ஸர்வபூதாநி கௌந்தேய ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம்|
கல்பக்ஷயே புநஸ்தாநி கல்பாதௌ விஸ்ருஜாம்யஹம்|| ௭||

(ப-ம்) ஹேகௌந்தேயா-ஓ அர்ஜுநா! ஸர்வபூதாநி-எல்லாப் பூதங்களும், மாமிகாம்-எனக்குசரீரமான, ப்க்ருதிம்-பிரகிருதியை, கல்பக்ஷயே-கல்பத்தின் முடிவில், யாந்தி-அடைகின்றன, கல்பாதௌ-கல்பத்தின் ஆதியில், புநஃ-மறுபடி (தாநி)-அவைகளையே, அஹம்-நான், விஸ்ருஜாமி-ஸ்ருஷ்டிக்கிறேன். (௭)

(தா-ம்) ஏ குந்தி புத்திரா! பிரளயகாலத்தில் எல்லா வஸ்துக்களும் என்னுடன் சேர்ந்த பிரகிருதியை ஆசிரயிக்கின்றன. அவைகளை மீண்டும யுகாரம்பத்தில் யானே சிருஷ்டிக்கின்றனன். (௭)

ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்ய விஸ்ருஜாமி புந: புந:|
பூதக்ராமமிமம் க்ருத்ஸ்நமவஶம் ப்ரக்ருதேர்வஶாத்|| ௮||

(ப-ம்) ஸ்வாம்-என், சம்பந்தமான, ப்ரக்ருதிம்-பிரகிருதிக்கு வசாத் - வசமாயிருக்கையால், அவசம் - சுவாதீனமற்றிருக்கின்ற, இமம்-இந்த, பூதக்ராமம்-பூதஸமுதாயத்தை, க்ருத்ஸ்நம்-எல்லாவற்றையும், புநஃபுநஃ-அடிக்கடி, விஸருஜாமி-சிருஷ்டிக்கின்றேன். (௮)

(தா-ம்) எந்தன் பிரகிருதியைக் காரணமாகக்கொண்டு அப்பிரகிருதியினது ஸ்வாதந்திரியத்தால பரவசமான பிராணி சமூகத்தை அடிக்கடி சிருஷ்டிக்கிறேன். (௮)

ந ச மாம் தாநி கர்மாணி நிபத்நந்தி தநஞ்ஜய|
உதாஸீநவதாஸீநமஸக்தம் தேஷு கர்மஸு|| ௯||

(ப-ம்) ஹேதநஞ்ஜய-ஓ அர்ச்சுனா! உதாஸீநவத்-உபேக்ஷிப்பவன்போல், ஆஸீநம்-இருக்கின்றவனும், தேஷுகர்மஸு-அக்கருமங்களில், அஸக்தம்-ஸங்கமற்றவனுமிருக்கின்ற, மாம்-என்னை, தாநி கர்மாணி-அந்தகருமங்கள், நிபத்நந்தி-கட்டுப்படுத்தமாட்டா. (௯)

(தா-ம்) தனஞ்ஜயா! உதாசினன்போலிருந்து எந்த கர்மத்திலும் சம்பந்தப்படாத எந்தனை அச்சிருஷ்டி முதலிய கர்மங்கள் பந்திக்கமாட்டாது? (௯)

𑌮𑌯𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑍇𑌣 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌃 𑌸𑍂𑌯𑌤𑍇 𑌸𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑍍।
𑌹𑍇𑌤𑍁𑌨𑌾𑌨𑍇𑌨 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌜𑌗𑌦𑍍𑌵𑌿𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇॥ ௰॥

(ப-ம்) அத்யக்ஷேண - பரவர்த்தகனுன, மயா - என்னுல், ப்ரக்ருதிஃ-பிரகிருதியானது, ஸசராசரம்-ஜங்கமாஜங்கமங்களுடன்கூடிய, ஜகத்-உலகத்தை, ஸூயதே-உண்டு பண்ணுகின்றது, ஹேகௌந்தேய-குந்திபுத்திர! அநேந ஹேதுநா-இந்த காரணத்தால், ஜகத்-உலகமானது, விபரிவர்த்ததே - பரிணமித்துக் கொண்டிருக் கிறதல்லவா. (௰)

(தா-ம்) கௌந்தேயா! யான் அத்தியக்ஷனுக விருப்பதால் எனது பிரகிருதி எல்லா சராசரங்களையும் படைக்கின்றன. இக்காரணத்தினுலேயே அநேகஜகத்துபரிணமிக்கின்றது. (மாறுகின்றது.) (௰)

𑌅𑌵𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌂 𑌮𑍂𑌢𑌾 𑌮𑌾𑌨𑍁𑌷𑍀𑌂 𑌤𑌨𑍁𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌮𑍍।
𑌪𑌰𑌂 𑌭𑌾𑌵𑌮𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑍋 𑌮𑌮 𑌭𑍂𑌤𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍॥ ௧௧॥

(ப-ம்) மம - என்னுடைய, பரம்-மேலான, பாவம்-அபிப்பிராயத்தை, அஜாநந்தஃ-அறியமாட்டாத, மூடாஃ-மூடர்கள், பூதமஹேஸ்வரம்-பூதங்களுக்கு நியாமகனுய் (இருந்தவைத்து), மாநுஷீம்-மனுஷ்ய சம்பந்தமான, தநும்-சரீரத்தை, ஆஸ்ரிதம்-அடைந்திருக்கின்ற, மாம்-என்னை, அவஜாநந்தி, அநாதரிக்கிருர்கள். (௧௧)

(தா-ம்) மூடர்கள் ஸர்வப் பிராணிகளுக்கும் ஈசனுன என் ஸ்வரூபத்தையுணராது மானிடதேகத்தை யடைந்திருக்கிற என்னைப்பார்த்து அலக்ஷியம் செய்கிருர்கள். (௧௧)

𑌮𑍋𑌘𑌾𑌶𑌾 𑌮𑍋𑌘𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍋 𑌮𑍋𑌘𑌜𑍍𑌞𑌾𑌨𑌾 𑌵𑌿𑌚𑍇𑌤𑌸𑌃।
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌮𑌾𑌸𑍁𑌰𑍀𑌂 𑌚𑍈𑌵 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌮𑍋𑌹𑌿𑌨𑍀𑌂 𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃॥

(ப-ம்) ஆஸுரீம்-அசுரசம்பந்தமும், ராக்ஷஸீம்சைவ-ராக்ஷஸ சம்பந்தமுமான, மோஹிநீம்-மோஹத்தையுண்டுபண்ணும், ப்ரக்ருதிம்-பிரகிருதியை, ஸ்ரிதாஃ-அடைந்த (அவர்கள்), விசேதஸஃ-ஞானமில்லாதவராயும், மோக ஆசாஃ-வியர்த்தமான ஆசையுற்றவராயும், மோக கர்மாணஃ-வியர்த்தமான செய்கைகளுற்றவராயும், மோக ஜ்ஞாநாஃ- வியர்த்தமான ஞான முடையவர்களாயும் (பவந்தி) ஆகிருர்கள். (௧௨)

(தா-ம்) மோகத்தை தரத்தக்க இராஜஸ தாமஸகுணங்களை ஆசிரயித்தவர்கள் பயனற்ற வியாபாரத்தை யுடையவர்களாயும், நிஷ்பல மனோரதத்தை யுடையவர்களாயும், பயனற்றஞானமுடையவர்களாயும், ஞானமில்லாதவர்களாயு மாவார்கள். (௧௨)

𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌸𑍍𑌤𑍁 𑌮𑌾𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌦𑍈𑌵𑍀𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ।
𑌭𑌜𑌨𑍍𑌤𑍍𑌯𑌨𑌨𑍍𑌯𑌮𑌨𑌸𑍋 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥ ௧௩ ॥

(ப-ம்) ஹே பார்த்த-ஓ அர்ஜுநா! மஹாத்மாநஸ்து-மஹாத்மாக்களோ, தைவீம்-தேவஸம்பந்தியாகிய, ப்ரக்ருதிம் - பிரகிருதியை, ஆஶ்ரிதா:- அடைந்தவர்களாய், பூத ஆதிம் -பூதங்களுக்கு ஆதியாய், அவ்யயம்-வியயமில்லாதவனாய், மாம்-என்னை, ஜ்ஞாத்வா - அறிந்து, அநந்யமநஸ:-இதரமான மனமில்லாதவர்களாய், (மாம்)-என்னை, பஜந்தி-ஸேவிக்கின்றார்கள். (௧௩)

(தா-ம்) பார்த்தா! ஸத்துவகுணத்தை யாசிரயித்த மகான்கள் அந்நிய மனதின்றி ஸர்வபூதங்களுக்கும் ஆதியாயும், நித்தியனாயு மிருக்கிற என்னை பஜிப்பார்கள். (௧௩)

𑌸𑌤𑌤𑌂 𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑍋 𑌮𑌾𑌂 𑌯𑌤𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌦𑍃𑌢𑌵𑍍𑌰𑌤𑌾𑌃 ।
𑌨𑌮𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌮𑌾𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌉𑌪𑌾𑌸𑌤𑍇 ॥ ௧௪ ॥

(ப-ம்) மாம்-என்னை, ஸததம்-எப்பொழுதும், கீர்தயந்த:-புகழ்வோரும், யதந்தஶ்ச-யத்தனஞ்செய்யுமவர்களும், த்ருடவ்ரதா:-திடமானவிரதங்கொண்டவர்களும், மாம்-என்னை, நமஸ்யந்தஶ்ச-நமஸ்கரிப்பவர்களும், பக்த்யா-பக்தியுடன், நித்யயுக்தா:-நித்தியமும்கூடினவர்களும், மாம்-என்னை, உபாஸதே-உபாஸிக்கின்றார்கள். (௧௪)

(தா-ம்) மனதிடமுடையோர் எப்பொழுதும் என்தனையே தியானித்துக்கொண்டும் உபாசிப்பதற்குப் பிரயத்தினப் பட்டுக்கொண்டும், பக்தியுடன் என்தனை வணங்கிக்கொண்டும், என்தனோடு நித்திய சம்பந்தத்தைக் கோரிக்கொண்டும் உபாசித்துக்கொண்டு மிருப்பார்கள். (ஶ௦) யதந்த-வாஸ்தவமான ஸ்வரூபத்தை. (௧௪)

𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌚𑌾𑌪𑍍𑌯𑌨𑍍𑌯𑍇 𑌯𑌜𑌨𑍍𑌤𑍋 𑌮𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌏𑌕𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍃𑌥𑌕𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑍋𑌮𑍁𑌖𑌮𑍍 ॥ ௧௫ ॥

(ப-ம்) அந்யேச - இதரர்கள், ஜ்ஞாநயஜ்ஞேந - ஞானயக்ஞத்தால், யஜந்த:-பூஜிப்பவராய், மாம்-என்னை, ஏகத்வேந-ஏகாகாரமாயும், ப்ருதக்த்வேந-தனியாயும், பஹுதா-அனேகவிதங்களான, விஶ்வதோமுகம்-நானாப்பிரகாரமாயும், உபாஸதே-உபாஸிக்கிறார்கள். ()

(தா-ம்) மற்றுஞ் சில மகான்கள் ஞானமென்னும்யக்ஞத்தைச் செய்துக்கொண்டு ஸர்வகாரணனை என்தனை ஏகாகாரமாயும், அநேக விதங்களாய் ஜகத்காரணமாயும் உபாஸனை செய்வார்கள். (௧௫)

𑌅𑌹𑌂 𑌕𑍍𑌰𑌤𑍁𑌰𑌹𑌂 𑌯𑌜𑍍𑌞𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌹𑌮𑌹𑌮𑍌𑌷𑌧𑌮𑍍 |
𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍋𑌽𑌹𑌮𑌹𑌮𑍇𑌵𑌾𑌜𑍍𑌯𑌮𑌹𑌮𑌗𑍍𑌨𑌿𑌰𑌹𑌂 𑌹𑍁𑌤𑌮𑍍 || ௧௬ ||

(ப-ம்) அஹம்-நான், க்ரது:-(ஜோதிஷ்டோமாதி) க்ரதுஸ்வரூபன், அஹம்-நான், யக்ஞ:-யக்ஞஸ்வரூபன்; அஹம்-நான், ஸ்வதா-(பித்ருக்களுக்குரிய) அன்னம்; அஹம்-நான், ஔஷதம்-ஔஷதம்; அஹம்-நான், மந்த்ர:-மந்திரம்; அஹம் ஏவ-நானே, ஆஜ்யம்-நெய்; அஹம் நான், அக்னி:-ஹோமாக்கினி, அஹம்-நான், ஹுதம்-ஹோமஸ்வரூபன். (௧௬)

(தா-ம்) யானே யஞ்ஞம் யானே மஹாயஞ்ஞம். யானே பித்ருதேவதைகளுக்கும் ஸ்வதை யென்னும் திரவியம். யானே ஔஷதம். "என்பதால் தேவதைகளுக்குத் தரத்தக்க ஹவிஸ்ஸு" யானே மந்திரம். யானே அக்கினி. யானே ஹோமம். (௧௬)

𑌪𑌿𑌤𑌾𑌹𑌮𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑍋 𑌮𑌾𑌤𑌾 𑌧𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃 |
𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌮𑍋𑌂𑌕𑌾𑌰 𑌋𑌕𑍍𑌸𑌾𑌮 𑌯𑌜𑍁𑌰𑍇𑌵 𑌚 || ௧௭ ||
𑌗𑌤𑌿𑌰𑍍𑌭𑌰𑍍𑌤𑌾 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 𑌨𑌿𑌵𑌾𑌸𑌃 𑌶𑌰𑌣𑌂 𑌸𑍁𑌹𑍃𑌤𑍍 |
𑌪𑍍𑌰𑌭𑌵𑌃 𑌪𑍍𑌰𑌲𑌯𑌃 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌨𑌿𑌧𑌾𑌨𑌂 𑌬𑍀𑌜𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 || ௧௮ ||

(ப-ம்) அஸ்ய-இந்த, ஜகத:-உலகத்திற்கு, அஹம்-நான்; பிதா-தகப்பனும், மாதா-தாய்; தாதா-ரக்ஷகன்; பிதாமஹ:-பாட்டன்; பவித்ரம்-பரிசுத்தமாய, வேத்யம்-அறியவேண்டுமவனும் (நானே), ஓங்கார:-ஓங்காரமும்(நான்), ருக்-ருக்வேதம், ஸாம-ஸாமவேதம்; யஜு:ஏவச-யஜுர்வேதமும், அஹமேவ-நானே, கதி:-கதியும், பர்த்தா-பர்த்தாவும், ப்ரபு:-பிரபுவும், ஸாக்ஷீ-ஸாக்ஷியும், நிவாஸ:-வாஸஸ்தானமும், சரணம்-ரக்ஷகனும், ஸுஹ்ருத்-ஹிதபரனும், ப்ரபவப்ரளய ஸ்தானம்-உத்பத்திஸ்தானமும லயஸ்தானமும், நிதானம்-ஆதாரமும, அவ்யயம்பீஜம்-விகாரமில்லாத வித்தும், (அஹமேவ-நானே.) (௧௭-௧௮)

(தா-ம) இவ்வுலகத்திற்கு தாய் யான். தகப்பன் யான். பாட்டன் யான். சிருஷ்டிகர்த்தன் யான். வேதத்தாலறியப்பட்ட பரம்பொருள் யான். ஓங்காரம் யான். ருக்கு ஸாமம் யஜுர்வேதங்கள் யான். "ஆசிரயிக்கத்தக்க ஸ்தானம் யான்" தரிக்கிறவனும் யான். காக்கிறவனும, பார்க்கிறவனும் யான். வாஸஸ்தானமும் யான். சரணம் யான். மித்திரன் யான். உற்பத்தி லய ஸ்தானமும் யான். நிதியும் யான். நாசமற்ற வித்தும் யான். (ஙுல) அறிஞரும பலரும். (௧௭-௧௮)

𑌤𑌪𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑌹𑌂 𑌵𑌰𑍍𑌷𑌂 𑌨𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌮𑍍𑌯𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑌾𑌮𑌿 𑌚 |
𑌅𑌮𑍃𑌤𑌂 𑌚𑍈𑌵 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌶𑍍𑌚 𑌸𑌦𑌸𑌚𑍍𑌚𑌾𑌹𑌮𑌰𑍍𑌜𑍁𑌨 || ௧௯ ||

(ப-ம்) ஹே அர்ஜுந-வாராய் அர்ச்சுன! அஹம்-நான், தபாமி-தபிக்கிறேன்; அஹம்-நான், வர்ஷம்-வர்ஷத்தை, நிக்ருஹ்ணாமி-நிறுத்துகிறேன், உத்ஸ்ருஜாமி ச - விடுகிறேன், அம்ருதம் சைவ - அமிர்தமும், ம்ருத்யுஸ்ச-யமனும், ஸத்-ஸத்தும், அஸத்ச-அஸத்தும், அஹம்-நானே.

(தா-ம) அர்ஜுனா! யானே அக்கினி சூரியன் முதலிய தேஜோரூபமாக விருந்து தாபத்தை யுண்டுபண்ணுகிறேன். யானே மழைபெய்யாமற் செய்கின்றேன். யானே மழை பொழியும்படிச் செய்கின்றேன். யானே அமிர்தம். யானே மிருத்யு யானே ஸத்தானவஸ்து. யானே அஸத்தானவஸ்து. "என்பதால் உலோகாதீதப் பொருள்." (ஙப) அம்ருதனுச-ஜீவத்திருக்கிறவன். மருத்யுஞ்ச மரணத்தையுடையவர்களுக்கும்ருத்தியுவும். (௧௯)

𑌤𑍍𑌰𑍈𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌮𑌾𑌂 𑌸𑍋𑌮𑌪𑌾𑌃 𑌪𑍂𑌤𑌪𑌾𑌪𑌾
𑌯𑌜𑍍𑌞𑍈𑌰𑌿𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑌨𑍍𑌤𑍇 |
𑌤𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌸𑍁𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌲𑍋𑌕
𑌮𑌶𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑍍 𑌦𑌿𑌵𑌿 𑌦𑍇𑌵𑌭𑍋𑌗𑌾𑌨𑍍 || ௨௰ ||

(ப-ம்) த்ரைவித்யா:- ருக் யஜுஸ்ஸாமவேதங்களை அறிந்தவர், ஸோமபா:-ஸோமபானஞ்செய்து, பூதபாபா: (பாபாத்பூதா:) பாவங்களைப்போக்கடித்துக்கொண்டவர்களால, யக்ஞை:- யாகங்களாலே, மாம்-என்னை, இஷ்ட்வா-ஆராதித்து, ஸ்வர்கதிம்- சுவர்க்கக்கதியை, ப்ரார்த்தயந்தே-பிரார்த்திக்கின்றார்கள் ; தே-அவர்கள், புண்யம்-புண்யமான, ஸுரேந்த்ர லோகம்- தேவேந்திரன் உலகத்தை, ஆஸாத்ய-அடைந்து, திவி-சுவர்க்கலோகத்தில, திவ்யாந் -திவ்யங்களான, தேவபோகாந்-தேவபோகங்களை, அச்நந்தி-அனுபவிக்கின்றார்கள். (௨௦)

(தா-ம்) ருக்கு யஜுஸ் ஸாமமுதலிய வேதங்களை யுணர்ந்தவர் யஞ்ஞ கன்மங்களால எந்தனை அர்ச்சித்து ஸோமபானஞ்செய்து பாபங்களைப் போக்கி ஸ்வர்க்கலோகப் பிராப்தியை விரும்புகின்றார்கள். அப்படிப்பட்டவர் புண்ணியபலமான இந்திரலோகத்தை ஆச்ரயித்து அங்கு அற்புதமான தேவபோகங்களை யநுபவிக்றனர்.

𑌤𑍇 𑌤𑌂 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌲𑍋𑌕𑌂 𑌵𑌿𑌶𑌾𑌲𑌂
𑌕𑍍𑌷𑍀𑌣𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌲𑍋𑌕𑌂 𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 |

𑌏𑌵𑌂 𑌤𑍍𑌰𑌯𑍀𑌧𑌰𑍍𑌮𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌾
𑌗𑌤𑌾𑌗𑌤𑌂 𑌕𑌾𑌮𑌕𑌾𑌮𑌾 𑌲𑌭𑌨𑍍𑌤𑍇॥ உக॥

(ப-ம்) தே-அவர்கள், விஸாலம்-விசாலமான, தம்-அந்த, ஸ்வர்கலோகம்-சுவர்க்கலோகத்தை, புக்த்வா-அனுபவித்து, புண்யே-புண்ணியம், க்ஷீணே-க்ஷயித்தபோது, மர்த்யலோகம்-மனுஷிய லோகத்தை, விசந்தி-பிரவேசிக்கின்றார்கள், ஏவம்-இப்படி, காமகாமா:-(சுவர்க்காதி) காமங்களை விரும்பிய (அவர்கள்), த்ரயீ தர்மம்-வேதங்களில் சொல்லப்பட்ட அநுப்ரபந்நா:-அனுட்டித்தவர்களாய், கதாகதம்-போக்குவரத்தை, லபந்தே-அடைகின்றார்கள். (உக)

(தா-ம்) அவர்கள் விசேஷமான இந்த ஸ்வர்க்கபோகங்களை யநுபவித்து புண்ணிய பலம் நசித்துப்போனவுடன் மநுஷ்யலோகத்தை யடைகிறார்கள். இவ்வண்ணம் வேதத்திற் கூறிய யஞ்ஞமுதலிய கன்மங்களையநுசரித்துபோகங்களை விரும்பினோர்க்கு ஜனன மரணம் ஸம்பவிக்கின்றன. (உக)

𑌅𑌨𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑍋 𑌮𑌾𑌂 𑌯𑍇 𑌜𑌨𑌾𑌃 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇।
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌭𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑍋𑌗𑌕𑍍𑌷𑍇𑌮𑌂 𑌵𑌹𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍॥

(ப-ம்) அநந்யா:-என்னை நினைப்பதைப்பார்க்கிலும் இதரபர போஜனங்கள் இல்லாதவர்களாய், மாம்-என்னையே! சிந்தயந்த:-சிந்திப்பார்களாய், யேஜநா:-எந்த ஜனங்கள், பர்யுபாஸதே-உபாஸிக்கிறார்களோ, நித்ய அபியுக்தாநாம்-நித்தியமும் (என்னைவிட்டு) நீங்காத, தேஷாம்-அவர்களுடைய, யோக க்ஷேமம்-யோக க்ஷேமங்களை அஹம்-நான், வஹாமி-வஹிக்கிறேன். (உஉ)

(தா-ம்) எவர்கள் வேறு பிரயோஜநத்தைக்கருதாது எந்தனைத் தியானிக்கின்றார்களோ, அப்படிப்பட்டவர்களுக்குளெந்தன் பிராப்தி யென்னும் போகத்தையும், புநர்ஜன்ம நிவிருத்தியென்னும் க்ஷேமத்தையும் யானே யளிக்கின்றேன். (உஉ)

𑌯𑍇𑌽𑌪𑍍𑌯𑌨𑍍𑌯𑌦𑍇𑌵𑌤𑌾𑌭𑌕𑍍𑌤𑌾 𑌯𑌜𑌨𑍍𑌤𑍇 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃।
𑌤𑍇𑌽𑌪𑌿 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌯𑌜𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑌿𑌧𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍॥ உங॥

(ப-ம்) யேது-பின்னும் எவர்கள், அந்ய தேவதா பக்தா:-இதர தேவதைகளுக்குப் பக்தர்களாய், ஸ்ரத்தயா அந்விதா:-சிரத்தையோடு கூடினவர்களாய், யஜந்தே-யாகம் செய்கிறார்களோ, தே அபி-அவர்களும், ஹேகௌந்தேய-ஓ குந்திபுத்திர! அவிதி பூர்வகம் - அஞ்ஞானபூர்வகமாய், மாம் ஏவ-என்னையே, யஜந்தி-யாகஞ் செய்கிறார்கள். (உங)

(தா-ம்) கௌந்தேயா! அந்யதேவதைகளிடத்தில் பக்தியுண்டாகி அன்புடன் எவர்கள் பூஜிக்கின்றார்களோ, அவர்களுட எந்தனையே பூஜித்தவர்கள். ஆனால் அது விதிபூர்வகமாக மாட்டாது. "என்பதால் அவர்கள் வேதாந்த தாத்பரியத்தை யறிந்திலர் என்று கருத்து." (௨௩)

𑌅𑌹𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌚 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑍇𑌵 𑌚 ।
𑌨 𑌤𑍁 𑌮𑌾𑌮𑌭𑌿𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨𑌾𑌤𑌶𑍍𑌚𑍍𑌯𑌵𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 ॥௨௪॥

(ப-ம்) ஸர்வயஜ்ஞாநாம்-ஸமஸ்தமான யஜ்ஞங்களிலும், போக்தாச-அனுபவிப்பவன், ப்ரபு: ஏவச-பலம்கொடுக்கிறவனும், அஹம் ஹி-நான் அல்லாவா, தேது-அவர்களே, மாம்-என்னை, தத்வேந-உள்ளபடியே, நாபிஜாநந்தி-அறிகிறதில்லை, அத:-ஆகையால், ச்யவந்தி-தப்பிப்போகிறார்கள். (௨௪)

(தா-ம்) எல்லா வேள்விகளுக்கும் பயனை யளிப்பவனும் ஆராதிக்கத் தக்கவனும் யானே, காமிய கர்மாநிஷ்டர்கள் எந்தனை உண்மையா யறியார்கள். ஆதலாற்றான் அவர்கள் மறுபிறப்பெடுப்பார்கள்.

𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌦𑍇𑌵𑌵𑍍𑌰𑌤𑌾 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌪𑌿𑌤𑍄𑌨𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌪𑌿𑌤𑍃𑌵𑍍𑌰𑌤𑌾𑌃 ।
𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌭𑍂𑌤𑍇𑌜𑍍𑌯𑌾 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑌿𑌨𑍋𑌽𑌪𑌿 𑌮𑌾𑌮𑍍 ॥

(ப-ம) தேவ வ்ரதா:-தேவதைகளைக்குறித்து விரதம் பூண்டவர்கள், தேவாந்-தேவர்களை, யாந்தி-அடைகின்றார்கள்; பித்ருவ்ரதா:-பிதுருக்களைக்குறித்து விரதம்பூண்டவர், பித்ரூந்-பிதுருதேவதைகளை, யாந்தி - அடைகின்றார்கள், பூதேஜ்யா:- பூதங்களைக்குறித்து யாகஞ்செய்வோர், பூதாநி - பூதங்களை, யாந்தி-அடைகின்றார்கள், அபிச-பின்னும் மத்யாஜிந:-என்னைக்குறித்துயாகஞ்செய்யுமவர்கள், மாம்-என்னை, யாந்தி-அடைகின்றார்கள். (௨௫)

(தா-ம்) தேவதைகளைப் பூஜிக்க கருதி பூஜிப்போர் அத்தேவர்களை யடைவார்கள். பித்ருக்களைப் பூஜிக்க விரும்பி பூஜிப்போர் அவர்களைச் சேருவார்கள். யக்ஷராக்ஷஸ பிசாசாதி பூதகணங்களைப் பூஜிக்கக் கருதி பூஜிப்போர் அவர்களைச் சேருவார்கள். எந்தனைப் பூஜிக்கக் கருதி பூஜிப்போர் எந்தனைச் சேருவார்கள். (பப௦) மத்டஜிநோபி-விஷ்ணுசம்மந்தமான. (௨௫)

𑌪𑌤𑍍𑌰𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌫𑌲𑌂 𑌤𑍋𑌯𑌂 𑌯𑍋 𑌮𑍇 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 ।
𑌤𑌦𑌹𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌹𑍃𑌤𑌮𑌶𑍍𑌨𑌾𑌮𑌿 𑌪𑍍𑌰𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥௨௬॥

ம்) யஃ-எவன், பக்த்யா-பக்தியோடு, பத்ரம்-பத்திரத்தையும் புஷ்பம்-புஷ்பத்தையும், பலம்-பலத்தையும், தோயம்-தண்ணீரையும், மே-எனக்கு, ப்ரயச்சதி-கொடுக்கிறானோ, ப்ரயத ஆத்மநஃ-பரிசுத்த மனத்தனான, தஸ்ய-அவனுடைய, பக்தி உபஹ்ருதம்-பக்தியோடு கொடுக்கப்பட்ட, தத்-அந்தவஸ்துவை, அஹம்-நான், அஸ்நாமி-புஜித்துக்கொண்டிருக்கிறேன். (உசு)

(தா-ம்) எவன் பக்தியோடு ஒரு பத்திரத்தையாவது, ஒரு புஷ்பத்தையாவது ஒரு பலத்தையாவது, தீர்த்தத்தையாவது எனக்குக் கொடுக்கிறானோ, அந்த பரிசுத்த மனதுடையவன் பக்தியினால் ஸமர்ப்பிக்கப்பட்ட அந்த வஸ்துவை யான் புசிக்கின்றேன். (உசு)

யத்கரோஷி யதஶ்நாஸி யஜ்ஜுஹோஷி ததாஸி யத்|
யத்தபஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வ மதர்ப்பணம்|| உஎ||

(ப-ம்) ஹே கௌந்தேய-ஓ குந்திபுத்திர! யத்-எதை, கரோஷி-செய்கிறாயோ, யத்-எதை, அஸ்நாஸி - புசிக்கின்றாயோ, யத்-எதை ஜுஹோஷி-ஹோமஞ்செய்கிறாயோ, யத்-எதை, ததாஸி-தானஞ் செய்கிறாயோ, யத்-எதை, தபஸ்யஸி-தவமாகச்செய்கிறாயோ, தத்-அதை, மத் அர்பணம்-என்னிடத்தில் ஸமர்ப்பிக்கப்பட்டதாக, குருஷ்வ-செய். (உஎ)

(தா-ம்) அர்ஜ்ஜுனா! நீ எதைச் செய்கிறாயோ, எதை யுண்ணுகிறாயோ, எதை ஹோமம் செய்கிறாயோ, எதைத் தானஞ்செய்கிறாயோ, எவ்விதத் தவஞ்செய்கிறாயோ, அவைகளையெல்லாம் எனக்கு அர்பணஞ்செய். (உஎ)

ஶுபாஶுபபலைரேவம் மோக்ஷ்யஸே கர்மபந்தநை:|
ஸந்ந்யாஸயோகயுக்தாத்மா விமுக்தோ மாமுபைஷ்யஸி|| உஅ||

(ப-ம்) ஏவம்-இப்படி, ஸந்யாஸயோகயுக்த ஆத்மா-ஸந்நியாஸயோகத்தோடு கூடியமனமுடையனாய், சுப அசுபபலைஃ-நன்மை தீமைகளைப்பலமாயுள்ள, கர்ம பந்தனைஃ-கர்மபந்தங்களால், மோக்ஷ்யஸே-விடுபடுவாய்; விமுக்தஃ-விடு பட்டவனாய், மாம்-என்னை, உபைஷ்யஸி அடைவாய். (உஅ)

(தா-ம்) இவ்வண்ணம் சந்யாசமென்னும் "கன்ம பலன்களை பகவதர்ப்பணஞ்செய்தல்" யோகத்தில திடமனதுடையவனாய் நற்பயன் வினைப்பயன் இதுகளைத் தரத்தக்க புண்ணிய பாபரூபங்களாக ஜன்மாந்திர கர்மங்கள் விட்டுப்போம். அப்பிறகு என்னை ஆசிரயிப்பாய். (உஅ)

ஸமோऽஹம் ஸர்வபூதேஷு ந மே த்வேஷ்யோऽஸ்தி ந ப்ரிய:।
யே பஜந்தி து மாம் பக்த்யா மயி தே தேஷு சாப்யஹம்॥ ௨௯॥

(ப-ம்) அஹம்-நான், ஸர்வபூதேஷு-எல்லாப் பூதங்களிலும் ஸம:-ஸமமானவன்: மே-எனக்கு - த்வேஷ்ய:-துவேஷிக்கவேண்டிய வன், நாஸ்தி இல்லை; ப்ரிய:-ப்ரியன், ந-இல்லை; யேது-எவர்களானல், மாம்-என்னை, பக்த்யா-பக்தியோடு, பஜந்தி-ஸேவிக்கின்றார்களோ, தே-அவர்கள், மயி-என்னிடத்தில் (இருக்கிறார்கள்), அஹம்ச-நானும், தேஷு-அவர்களிடத்தில். (வர்த்ததே-இருக்கிறேன்.) (௨௯)

(தா-ம்) யான், ஸர்வபூதங்களிடத்திலும் பேதமின்றி யிருப்ப வன். எனக்குப் பகையாளியும், நேசனுமில்லை. பக்தியோடு என்னை எவர் பஜிக்கின்றார்களோ அவர்கள் என்னிடத்திலிருக்கின்றார்கள். யானும் அவர்களிடத்தி லிருக்கின்றேன். (௨௯)

அபி சேத் ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக்।
ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக்வ்யவஸிதோ ஹி ஸ:॥ ௩௦॥

(ப-ம்) ஸுதுராசார:அபி-மிசவும் துராசாரமுள்ளவனானாலும் அநந்யபாக்-மறறொன்றைநாடாமல், மாம்-என்னை, பஜதேசத்-ஸேவிக்கிறானாகில், ஸ:-அவன், ஸாதுரேவ - சாதுவாகவே, மந்தவ்ய:-நினைக்கத்தகுந்தவன் ஸ:-அவன், ஸம்யக்-நன்றாக, வ்யவஸித:ஹி-நிச்சயமுடையவனன்றோ. (௩௦)

(தா-ம்) இதரப் பிரயோஜனத்தைக் கருதாது என்னை பஜிப்ப வன் ஆசாரஹீனனாக விருந்தபோதிலும் அவனைச் சாதுவென்றே நினைத்தல் வேண்டும். அவனது மனோ நிசசயம் நன்கிருக்கின்றதல்லவா? (ஸ௦) அநந்யபாக-அன்னியபக்தியுடையவன். (௩௦)

க்ஷிப்ரம் பவதி தர்மாத்மா சஶ்வச்சாந்திம் நிகச்சதி।
கௌந்தேய ப்ரதிஜாநீஹி ந மே பக்த: ப்ரணஶ்யதி॥ ௩௧॥

(ப-ம்) க்ஷிப்ரம்-சீக்கிரத்தில், தர்மாத்மா-தருமமானமனமுடைய வனாக, பவதி, ஆகிறான், ஶஶ்வத்-எப்போதும், சாந்திம்-சாந்தியை, நிகச்சதி-அடைகின்றான்; ஹேகௌந்தேய-ஓ குந்திபுத்திரா! மே-என்னுடைய, பக்த:-பக்தன், நப்ரணச்யதி-நசிக்கமாட்டான் (என்று) ப்ரதிஜாநீஹி-நீப்ரதிஜ்ஞைசெய்வாயாக. (௩௧)

(தா-ம்) கௌந்தேயா! அப்படிப்பட்டவர்கள் துரிதத்திலேயே ஸதாசார நிஷ்டர்களாவார்கள். எக்காலும் பொறுமையை யப்பி

பார்த்தா! என் பக்தர்கள் அழிவுடையோ ராகமாட்டார்கள். என்று நீ அறிந்துகொள். (௩௧)

𑌮𑌾𑌂𑌹𑌿𑌪𑌾𑌰𑍍𑌥𑌵𑍍𑌯𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌯𑍇𑌽𑌪𑌿𑌸𑍍𑌯𑍁𑌃 𑌪𑌾𑌪𑌯𑍋𑌨𑌯𑌃।
𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑍋𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌥𑌾𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇𑌽𑌪𑌿𑌯𑌾𑌨𑍍𑌤𑌿𑌪𑌰𑌾𑌂𑌗𑌤𑌿𑌮𑍍॥
𑌕𑌿𑌂𑌪𑍁𑌨𑌰𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌃𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌭𑌕𑍍𑌤𑌾𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑌸𑍍𑌤𑌥𑌾।
𑌅𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌸𑍁𑌖𑌂𑌲𑍋𑌕𑌮𑌿𑌮𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌭𑌜𑌸𑍍𑌵𑌮𑌾𑌮𑍍॥௩௩॥

(ப-ம்) ஹேபார்த்த-ஓ அர்ச்சுன! யே-எவர்கள், பாபயோநய:-பர்பத்தைகாரணமாய்உடைய, ஸ்திரிய:-பெண்களாயும், வைச்ய:-வைசியர்களாயும், ததா-அப்படியே, சூத்ரா:அபி-சூத்திரர்களாயும், ஸ்யு:-ஆவார்களோ, தே அபி-அவர்களும், மாம்-என்னை, வ்யபாஸ்ரித்ய-ஆஸ்ரயித்து, பராம் - மேலான, கதிம்-கதியை, யாந்தி-அடைகின்றனரன்று புண்யர்களும் புண்யா:-ப்ராம்ஹணா:-பிராம்மணர்களும், ராஜர்ஷய:-ராஜருஷிகளும், ததா- அப்படியே; பக்தா: பக்தர்களாகில், கிம்புந:-என்னசொலலவேண்டுமா அநித்யம்-அநித்யமானது அஸுகம்-சுகமில்லாததுமாகிய, இமம் லோகம்-இவ்வுலகத்தை, ப்ராப்ய-அடைந்து (இருக்கும்) நீ மாம்-என்னை, பஜஸ்வ-பஜிப்பாயாக. (௩௨-௩௩)

(தா-ம்) பார்த்தா! ஸ்திரீகள், வைசியர்கள், சூத்திரர்கள், புலையர்கள், இவர்களில் என்னை எவர்கள் நம்பியிருக்கிறார்களோ அவர்கள் பரமபதம் சேருவார்கள். (ஸ0) பரப்ரும்மத்தை அடைவார்கள். அப்படிக்கிருக்க; புண்ணிய ஜன்மமுடைய அந்தணர்களும், இராஜரிஷிகளும் பக்தர்களாக விருந்தால் எந்தனையடைவார்களென்பதைச் சொல்லவும்வேண்டுமோ? ஆதலால் அநித்தியமாயும், அசுகமாயுமுள்ள இந்த லோகத்தை யடைந்திருக்கிற நீ எந்தனைத் தொழுவாயாக. (ஸ0) புண்யம் - புண்ணிய ஜன்மாவையுடையவர்கள். (௩௨-௩௩)

𑌮𑌨𑍍𑌮𑌨𑌾𑌭𑌵𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍋 𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑍀𑌮𑌾𑌂𑌨𑌮𑌸𑍍𑌕𑍁𑌰𑍁।
𑌮𑌾𑌮𑍇𑌵𑍈𑌷𑍍𑌯𑌸𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑍈𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂𑌮𑌤𑍍𑌪𑌰𑌾𑌯𑌣𑌃॥ ௩௪॥

(ப-ம்) மந்மநா:-என்னிடத்து மனமுடையனும், பவ-ஆகக்கடவாய், மத்பக்த:-என்னிடத்தில் பக்தியுடையனுய்க்கொண்டு, மத்யாஜீ-என்னை ஆராதிப்பவனுய், மாம்-என்னை, நமஸ்குரு-வணங்கு, ஏவம்-இப்படி ஆத்மாநம்-மனஸ்ஸை, யுக்த்வா-சேர்த்து, மத்பரா

யணஃ-நாமேகதியான, நீ மாம் ஏவ-என்னையே, ஏஷ்யஸி-அடைய்க்கடைவாய். (ஙச)

(தா-ம்) என்னிடத்தில் மனமுடையவனும், என்னிடத்தில் பக்தியுடையவனும், என்னைப் பூஜிப்பவனும், என்னை நமஸ்கரிப்பவனு மிருப்பாயாக. இவ்வாறு என்னையே முக்கிய கதியாக நம்பி மனதை என்னிடத்தில் நிலைபெற நிறுத்தின பிறகு என்தனை ஆசிரயிப்பாய்.(ஶ௦)மந்மநா:-என்மனம்போன்றமனமுடையவனாக.(ஙச)

ஸ்ரீகீதாஸூ ராஜவித்யா ராஜகுஹ்யயோக மென்னும்
ஒன்பதாவது அத்தியாயம்
முற்றிற்று.

விபூதியோகம்.

பத்தாவது அத்யாயம்.

ஸ்ரீபகவான் அருளிச்செய்கிறார்.

𑌭𑍂𑌯 𑌏𑌵 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌶𑍃𑌣𑍁 𑌮𑍇 𑌪𑌰𑌮𑌂 𑌵𑌚𑌃।
𑌯𑌤𑍍𑌤𑍇𑌽𑌹𑌂 𑌪𑍍𑌰𑍀𑌯𑌮𑌾𑌣𑌾𑌯 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌹𑌿𑌤𑌕𑌾𑌮𑍍𑌯𑌯𑌾 ॥க॥

(ப-ம்) ஹேமஹாபாஹோ-பெரியதோள்களையுடையஅர்ஜுநா, பூயஏவ-மறுபடியும், மே-என்னுடைய, பரமம்-என் மஹாத்ம்யத்தைத் தெரியப்படுத்துகிற, வசஃ-வார்த்தையை, ஶ்ருணு-கேள், ப்ரீயமாணாய-ப்ரீதிசெய்கின்ற, தே-உனக்கு, அஹம்-நான், ஹிதகாம்யயா-இதத்தைக் கோருவதனுல், யத்-எதை, வக்ஷ்யாமி-சொல்லுகிறேன். (க)

(தா-ம்) அர்ஜ்ஜுனு! இவ்விஷயத்தி லன்புண்டாயிருக்கிற உந்தனுக்கு நன்மையைக் கருதி மறுபடியும் சிறந்த ஒரு வசனத்தை யான் கூறுகிறேன். கேள்மின்? (க)

𑌨 𑌮𑍇 𑌵𑌿𑌦𑍁𑌃 𑌸𑍁𑌰𑌗𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑌂 𑌨 𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌃 ।
𑌅𑌹𑌮𑌾𑌦𑌿𑌰𑍍𑌹𑌿 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌮𑌹𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ॥உ॥

(ப-ம்) ஸுரகணுஃ-தேவதாசமூஹங்கள், மே-ப்ரபவம்-எனது பிரபாவத்தை, நவிதுஃ-அறியார்கள், மஹர்ஷயஃ - மஹர்ஷிகள், ந (விதுஃ)-அறியார்கள், அஹம்-நான், தேவாநாம்-தேவர்களுக்கும்,

[illegible]களும்ச-மஹர்ஷிகளுக்கும், ஸர்வசஃ-ஸர்வப்பிரகாரத்தாலும், [illegible]தி-முதலானவனல்லவா. (௨)

(தா-ம்) என்தன் பிரபாவத்தை தேவதைகளும், மகரிஷிகளும் அறிந்திலர்; தேவர்களுக்கும், மகாரிஷிகளுக்கும் யானே எல்லா விஷயங்களிலும் மேம்பட்டவன். (௨)

𑌯𑍋 𑌮𑌾𑌮𑌜𑌮𑌨𑌾𑌦𑌿𑌂 𑌚 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌲𑍋𑌕 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।

𑌅𑌸𑌂𑌮𑍂𑌢𑌃 𑌸 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍈𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥௩॥

(ப-ம்) யஃ-எவன், மாம்-என்னை, அஜம்-பிறப்பில்லாதவனாக வும், அநாதிம்ச-ஆதியில்லாதவனாகவும், லோக மஹேசுவரம்-உலகங்களுக்கு மஹேசுவரனாகவும், வேத்தி-அறிகின்றானோ, ஸஃ-அவன், மர்த்யேஷு-மனிதர்கள், அஸம்மூடஃ-மூடத்தனமற்றவனாய், ஸர்வ பாபைஃ-எல்லாப்பாவங்களாலும், பரமுசயதே-விடுபடுகிறான். (௩)

(தா-ம்) அநாதிகாலமுதல் ஜனனமின்றி ஸமஸ்த புவனங்கட்கும் அதிபனான என்னை மானிடருள் எவன் பிரமமின்றி அறிகின்றானோ, அப்படிப்பட்ட புருடன் எல்லா பாபங்களிலிருந்தும் விடுபடுகிறான். (௩)

𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌸𑌂𑌮𑍋𑌹𑌃 𑌕𑍍𑌷𑌮𑌾 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌦𑌮𑌃 𑌶𑌮𑌃 ।

𑌸𑍁𑌖𑌂 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌭𑌵𑍋𑌽𑌭𑌾𑌵𑍋 𑌭𑌯𑌂 𑌚𑌾𑌭𑌯𑌮𑍇𑌵 𑌚 ॥௪॥

𑌅𑌹𑌿𑌂𑌸𑌾 𑌸𑌮𑌤𑌾 𑌤𑍁𑌷𑍍𑌟𑌿𑌸𑍍𑌤𑌪𑍋 𑌦𑌾𑌨𑌂 𑌯𑌶𑍋𑌽𑌯𑌶𑌃 ।

𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌭𑌾𑌵𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌮𑌤𑍍𑌤 𑌏𑌵 𑌪𑍃𑌥𑌗𑍍𑌵𑌿𑌧𑌾𑌃 ॥௫॥

(ப-ம்) புத்திஃ-புத்தியும், ஜ்ஞாநம், ஞானமும், அஸம்மோஹஃ ஒன்றை மற்றொன்றாகப் ரமிக்காமலிருப்பதும், க்ஷமா-பொறுமையும், ஸத்யம்-உண்மையையும், தமஃ-பாஹ்யேந்த்ரியங்களை நிஷ்ப்ரயோஜனமான விஷயங்களிலிருந்து திரும்புவதும் சமஃ-அந்தஃகரண நிக்ரஹமும், ஸுகம்-இன்பமும், துஃகம்-துன்பமும், பவஃ-சந்தோஷித்திருப்பதும், அபாவஃ-இன்மையும், பயம்ச-பயமும், அபயம் ஏவச-பயநிவ்ருத்தியும், அஹிம்ஸா-ஹிம்ஸைசெய்யாமையும், ஸமதா-ஸமபுத்தியும், துஷ்டிஃ-காணப்பட்ட எல்லா ஆத்மாக்களும், தபஃ-தவமும், தாநம்-தானமும், யசஃ-கீர்த்தியும், அயசஃ-அபகீர்த்தியு (மென்கிற), பூதாநாம் - பிராணிகளினது, ப்ருதக்விதாஃ-வெவ்வேறு விதமான, பாவாஃ-மனோவிருத்திகளும், மத்தஏவ - என்னிடத்தினின்றுமே, பவந்தி-உண்டாகின்றன. (௪-௫)

(தா-ம்) புத்தி ஞானம் ஸம்மோகமின்மை பொறுமை ஸத்தியம் தமம், சமம், சுகம், துக்கம், பவம் (அநுகூலாநுபவத்தால் மனம் நிலை பெற்று நிற்றல்) அபாவம் (பிரதிகூலாநுபவத்தால் மனம் கெடுதல்) பயம் அபயம் (பயமில்லாமை.) அஹிம்ஸை, ஸமத்துவம், ஸந்தோஷம் தபஸ்ஸு தானம் (தமக்குப் போக்கியமான வஸ்துக்களைப் பிறருக் களித்தல்) யஶஸ்ஸு (குணவந்தனென்று பிரசித்தி) அயசோகீர்த்தி (நிர்க்குணனென்று பிரஸித்தி) இப்படிப்பட்ட அநேகவிதங்களான தோற்றங்கள் பிராணிகளுக்கு என்தனுலேயே உண்டாகின்றன. (ஶம) க்ஞாநம்-கட்புலனுக்குத் தோற்றும் வஸ்துக்களெல்லாம் நாசமடையத்தக்க தென்கிற மெய்ஞ்ஞானம். (௪-௫)

மஹர்ஷய꞉ ஸப்த பூர்வே சத்வாரோ மநவஸ்ததா |
மத்பாவா மாநஸா ஜாதா யேஷாம் லோக இமா꞉ ப்ரஜா꞉ ||௬||

(ப-ம்) மாநஸா꞉- ஜாதா꞉- ப்ரஹ்மாவின் மனத்திலுண்டான, பூர்வே-கடந்த; ஸப்தமஹர்ஷ꞉- ஏழுமகாரிஷிகளும், ததா - அப்படியே, சத்வார꞉-நால்வரான, மநவ꞉-மனுக்களும், மத்பாவ꞉-என்னுடைய அபிப்பிராயங் கொண்டவர்கள், யேஷாம்-யாருடையஸ்ருஷ்டியாகிறார்கள், லோகே உலகத்தில, மே-இந்த, இமா꞉ப்ரஜா꞉-இந்தப் பிராணிகள். (௬)

(தா-ப்) ப்ரம்ம மனசத்தில் பிறந்த பிருகு முதலிய ஸப்த மகரிஷிகளும், அப்படியே, (ஸாவர்ணிகர்களென்கிற) நான்கு மநுக்களும் என் அபிப்பிராயத்தை யநுசரித்தே உலகத்தில இந்த பிரஜைகளைச் சிருஷ்டித்தார்கள். (௬)

ஏதாம் விபூதிம் யோகம் ச மம யோ வேத்தி தத்வத꞉ |
ஸோ(அ)விகம்பேந யோகேந யுஜ்யதே நாத்ர ஸம்ஶய꞉ ||௭||

(ப-ம்) மம-எனது, ஏதாம்-இந்த. விபூதிம்-ஐசுவரியத்தையும், யோகம்ச-யோகத்தையும், தத்வத꞉-உள்ளபடியே, ய꞉-எவன், வேத்தி-அறிகிறானோ, ஸ꞉-அவன், அவிகம்பேந-நிச்சலமான, யோகேந-யோகத்தால், யுஜ்யதே-கூடுகிறான், அத்ர-இதில், ஸம்ஶய꞉ந-ஸந்தேஹமில்லை. (௭)

(தா-ம்) என்னுடைய இந்தஐசுவரியத்தையும், கல்யாணகுண சம்பந்தமான செய்கையையும் எவன் உண்மையா யறிந்துகொள்கிறானோ, அவன் திடமான பக்தி யோகத்தால் என்னை யடைவானென்பதில் ஐயமில்லை. (௮)

𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑌵𑍋 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇।
𑌇𑌤𑌿 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌭𑌜𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌂 𑌬𑍁𑌧𑌾 𑌭𑌾𑌵𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃॥ ௮॥

(ப-ம்) அஹம்-நான், ஸர்வஸ்ய-எல்லாவற்றிற்கும், ப்ரபவ:-உற்பத்திகாரணம், மத்த:-என்னிடத்தினின்று, ஸர்வம்-எல்லாம், ப்ரவர்ததே-உண்டாகின்றது, இதி-என்று, மத்வா-நினைத்து, பாவ ஸமந்விதா:-பாவத்தோடுகூடிய, புதா:-பண்டிதாள், மாம்-என்னை, பஜந்தே-ஸேவிக்கிறார்கள். (௮)

(தா-ம்) நான் எல்லாவற்றிற்கும் ஸிருஷ்டி காரணன். என்னாலேயே ஸர்வமும் நிறைவேறுகின்றது என்று அறிந்து நன்மனதோடு கூடிய ஞானிகள் என்னை பஜிக்கின்றார்கள். (௮)

𑌮𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾 𑌮𑌦𑍍𑌗𑌤𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌬𑍋𑌧𑌯𑌨𑍍𑌤𑌃 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌮𑍍।
𑌕𑌥𑌯𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌮𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌤𑍁𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌚 𑌰𑌮𑌨𑍍𑌤𑌿 𑌚॥ ௯॥

(ப-ம்) மத்சித்தா:-என்னிடத்தில் சிந்தையும், மத்கதப்ராணா:-என் ஆதீனமானபிராணனும், பரஸ்பரம்-ஒருவர்க்கொருவர், போதயந்த:-போதித்துக்கொண்டு, மாம்-என்னை, நித்யம்-எப்பொழுதும், கதயந்தஃச-சொல்லிக் கொண்டுமிருந்து, துஷ்யந்திச-ஸந்தோஷிக்கிறார்கள், ரமந்திச-ப்ரீதியை அடைவார்கள். (௯)

(தா-ம்) (ஞானிகள்) என்னிடத்திலேயே மனம் லயித்து என்னிடத்திலேயே பிராணனை வைத்து ஒருவர்க்கொருவர் என் பிரபாவத்தைத் தெரிவித்துக் கொண்டும், பிரசங்கித்துக் கொண்டும் திருப்தி யடைகிறார்கள். ஆனந்திக்கிறார்கள். (௯)

𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌤𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌭𑌜𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍।
𑌦𑌦𑌾𑌮𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌤𑌂 𑌯𑍇𑌨 𑌮𑌾𑌮𑍁𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇॥ ௰॥

(ப-ம்) ஸதத யுக்தாநாம்-நித்தியமாய் என்னோடு சேர்ந்திருப்பதற்கு விருப்பமுள்ளவராய், ப்ரீதிபூர்வகம்-பிரீதியோடு, பஜதாம்-பஜிக்கின்ற, தேஷாம்-அவர்களுக்கு, யேந-எந்தபுத்தியினால், தே-அவர்கள்-யேந-எதனால், மாம்-என்னை, உபயாந்தி-அடைவார்களோ, தம்-அந்த, புத்தியோகம்-புத்தியோகத்தை, ததாமி-கொடுக்கிறேன். ()

(தா-ம்) எக்காலும் யோகாப்பியாசஞ் செய்துகொண்டேபஜிப்போருக்கு நானே என்னை யடையும்படியான ஞானோபாயத்தை அன்புடன் அளிக்கின்றேன். (௰)

𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌵𑌾𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌾𑌰𑍍𑌥𑌮𑌹𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑌂 𑌤𑌮𑌃।
𑌨𑌾𑌶𑌯𑌾𑌮𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑌸𑍍𑌥𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑍀𑌪𑍇𑌨 𑌭𑌾𑌸𑍍𑌵𑌤𑌾॥ ௧௧॥

(ப-ம்) தேஷாம் அவர்களுடைய, அநுகம்பார்த்தம்-ஏவ, அநுக்கிரஹத்துக்காகவே, அஹம்-நான், ஆத்மபாவஸ்த்த:-மனோவ்ருத்தியிலிருந்து, பாஸ்வதா-பிரகாசமான, ஜ்ஞாநதீபேந-என்னிடத்திலுள்ள ஜ்ஞாநமென்கிற தீபத்தினால், அஜ்ஞாநஜம்-அஞ்ஞானத்தாலுண்டாகிற, தம:-இருளை, நாசயாமி-நசிக்கச்செய்கிறேன். (கக)

(தா-ம்) யான் அவர்களுக்கு அநுக்கிரகம் செய்வதற்காகவே அவர்கள் மனோபாவத்திற்குவிஷயமாகின்றேன்(காணப்படுகிறேன்) பிரகாசமுடைய ஞானமென்னும் தீபத்தினால் அஞ்ஞானமென்னும் அந்தகாரத்தை (விஷயாஸக்தியை) போக்கடிக்கின்றேன். (கக)

அர்ஜுனவாக்கியம்.

பரம் ப்ரஹ்ம பரம் தாம பவித்ரம் பரமம் பவாந் ।
புருஷம் ஶாஶ்வதம் திவ்யமாதிதேவமஜம் விபும் ॥ ௰௨ ॥
ஆஹுஸ்த்வாம்ருஷய: ஸர்வே தேவர்ஷிர்நாரதஸ்ததா ।
அஸிதோ தேவலோ வ்யாஸ: ஸ்வயம் சைவ ப்ரவீஷி மே ॥ ௰௩ ॥

(ப-ம்) பரம் ப்ரம்ஹ-பரப்பிரம்மமும், பரம்தாம-பரமதேஜஸ்ஸும், பரமம் பவித்ரம்-பரமபாவனமென்றும் (ஶ்ருதிகள் சொல்லாநின்ற,) பவாந்-தேவரீர், ஸர்வேருஷய:-எல்லாருஷிகளும், ததா-அப்படியே, தேவர்ஷி:-தேவரிஷியான, நாரத:-நாரதரும், அஸித: அஸிதரும், தேவல:-தேவலரும், வ்யாஸ:-வியாஸரும், த்வாம்-உம்மை, சாச்வதம்-சாசுவதமாகவும் திவ்யம்-திவ்யமான, புருஷம்-புருஷனாகவும், ஆதிதேவம்-ஆதிதேவனாகவும் அஜம்-பிறப்பிலியாகவும், விபும்-வியாபகனாகவும், ஆஹு:-சொல்லுகிறார்கள், ஸ்வயம்சைவ-தாமும், மே-எனக்கு, ப்ரவீஷி-சொல்லுகிறாய். (கஉ-கங)

(தா-ம்) நீவிர், பரப்ரம்மம், சிறந்த பிரகாசவந்தன், ஸர்வோத்கிருஷ்டமான பரிசுத்தன் (என்பதால் பகவானை ஸ்மரித்த க்ஷணத்தில் பாபஸமூகங்களெல்லாம் துலைந்துப் போகிறதென்று கருத்து) நித்தியன் அப்ராக்ருதன் ஆதிகாரணன், நித்தியாநந்தரூபன்; பரிணாமமற்றவன், ஸர்வவியாபி, என்று நும்மை தேவரிஷிகளான நாரதரும், அஸிதரென்னும் மகரிஷியும், தேவல மகரிஷியும், வியாஸ மகரிஷியும், இன்னும் அளவற்ற மகரிஷிகளும் கூறுகின்றார்கள். ()

ஸர்வமேதத்ருதம் மந்யே யந்மாம் வதஸி கேஶவ ।
ந ஹி தே பகவந் வ்யக்திம் விதுர்தேவா ந தாநவா: ॥ ௰௪ ॥

(ப-ம்) ஹேகேசவா-ஓ கிருஷ்ண! மாம்-என்னைக்குறித்து, யத்-எதை, வதஸி-சொல்லுகிறீரோ, ஏதத் ஸர்வம்-இதெல்லாம், ருதம்

ஸத்யமென்று, மந்யே-நினைக்கிறேன்; ஹேபகவந்-ஓ பகவானே, தேஹம்முடைய, வ்யக்திம்-வைபவத்தைச் சொல்லும்விதத்தை, தேவா:-தேவர்களும், தாநவா:ச-அசுரர்களும், நவிது:-அறியமாட்டாரகள். (கச)

(தா-ம்) கேசவா! நீவிர் எனக்குச் சொன்னதெல்லாம்-உண்மை யென்றே நம்புகின்றேன். நுங்கள் ஸ்வரூபத்தை தேவர்களும், அசுரர்களு மறிந்திலர். புருஷோத்தமா! ஸர்வபூதங்களையும் ஸ்ருஷ்டித்த மகானுபாவா! ஸர்வபூதங்களையும் நியமனஞ் செய்கிறவரே! தேவாதிதேவனே! ஜகத்பதே! நுங்கள் ஸ்வரூபத்தை அஸாதாரணமான ஞானத்தால் நீங்களே அறிகின்றீர். (கச)

ஸ்வயமேவாத்மநாத்மாநம் வேத்த த்வம் புருஷோத்தம|
பூதபாவந பூதேஶ தேவதேவ ஜகத்பதே ||கரு||

(ப-ம்) ஹே புருஷோத்தம-வாரீர் புருஷோத்தமரே, பூதபாவந-பூதங்களைப்படைப்பவனே! பூதேச-பூதங்களை யாள்பவனே, தேவதேவ-தேவர்களுக்கும் தேவ! ஜகத்பதே-லோகநாத! த்வம்-நீர்! ஆத்மநா-உன், ஜ்ஞாநத்தால் ஆத்மாநம்-தன்னை, ஸ்வயமேவ-தாமே, வேத்த-அறிகிறாய். (கரு)

(தா-ம்) புருஷோத்தமா! ஸர்வபூதங்களையும் ஸ்ருஷ்டித்தமகானுபாவா! ஸர்வபூதங்களையும் நியமனஞ் செய்கிறவரே! தேவாதிதேவனே! ஜகத்பதே! நுங்கள் ஸ்வரூபத்தை அஸாதாரணமான ஞானத்தால் நீங்களே அறிகின்றீர். (கரு)

வக்துமர்ஹஸ்யஶேஷேண திவ்யா ஹ்யாத்மவிபூதய:|
யாபிர்விபூதிபிர்லோகாநிமாம்ஸ்த்வம் வ்யாப்ய திஷ்டஸி ||கசு||

(ப-ம்) ஆத்மவிபூதய:-உமது விபூதிகள், திவ்யா:ஹி-திவ்யங்களன்றூ? தா:-அவைகளை, அசேஷேண-நிச்சேஷமாக, வக்தும்-சொல்ல, அர்ஹஸி-நீதகுந்திருக்கிறாய், த்வம்-நீர், யாபி:விபூதிபி:-எந்த ஐசுவரியங்களைக் கொண்டு, இமாந்லோகாந்-இந்தஉலகங்களை, வ்யாப்ய-வியாபித்து, திஷ்டஸி-இருக்கிறீர். (கசு)

(தா-ம்) எந்த மஹிமையால் இந்தப் பிரபஞ்சங்களை யெல்லாம் வியாபித்திருக்கிறீர்களோ, அப்படிப்பட்ட பிராகிருதங்களான நுங்கள் மஹிமைகளை யெல்லாம் உரைப்பதற்கு நீங்களே தகுதியானவர். (கசு)

கதம் வித்யாமஹம் யோகிம்ஸ்த்வாம் ஸதா பரிசிந்தயந்|
கேஷு கேஷு ச பாவேஷு சிந்த்யோऽஸி பகவந்மயா ||கஎ||

(ப-ம்) அஹம்-நான், யோகீ - பக்தியோகநிஷ்டனும், த்வாம்-உம்மை, ஸதா-எப்பொழுதும், பரிசிந்தயந்-தியானித்துக்கொண்டு, கதம்-எப்படி, வித்யாம் - தெரிந்துகொள்வேன், ஹேபகவந் - ஓபகவானே! (கிம்)ச-பின்னும், மயா-என்னால், கேஷு-கேஷு-ச-எந்தெந்த, பாவேஷு-வஸ்துக்களில், சிந்த்ய: அஸி-சிந்திக்கப்படுகிறீர்.

(தா-ம) யான் பக்தியோகத்தை ஆச்ரயித்து எக்காலும் உம்மை ஸ்மரித்து நுங்களை யறிந்துகொள்வதெப்படி? ஓ பகவானே; யான் எந்தெந்த விஷயங்களா லும்மை தியானிக்கவேண்டும்? (கஎ)

𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍇𑌣𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌯𑍋𑌗𑌂 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌂 𑌚 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 ।
𑌭𑍂𑌯𑌃 𑌕𑌥𑌯 𑌤𑍃𑌪𑍍𑌤𑌿𑌰𑍍𑌹𑌿 𑌶𑍃𑌣𑍍𑌵𑌤𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌮𑍇𑌽𑌮𑍃𑌤𑌮𑍍 ॥ கஅ ॥

(ப-ம) ஹேஜநார்தந-ஓகிருஷ்ணா! ஆத்மந:-உன்னுடைய, யோகம்-யோகத்தையும், விபூதிம்ச ஐசுவரியத்தையும். பூய:-மறுபடியும், விஸ்தரேண-விஸ்தரித்து, கதய சொல்லும், அம்ருதம்-அம்ருதத்தை, ச்ருண்வத:-கேட்கின்ற, மே-எனக்கு, த்ருப்தி:-திருப்தியானது, நாஸ்திஹி-இல்லையன்றோ? (கஅ)

(தா-ம்) ஜனார்தனா! உம்முடைய சிருஷ்டிகர்த்ருத்வத்தையும் ஜகந்நியமனத்வத்தையும் எனக்கெடுத்து விரிவாய்க் கூறவேண்டும். இந்த அம்ருத வசனத்தைக்கேட்டு யான் திருப்தியடையவில்லை. ()

ஸ்ரீகிருஷ்ண வாக்கியம்.

𑌹𑌨𑍍𑌤 𑌤𑍇 𑌕𑌥𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾 𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑌃 ।
𑌪𑍍𑌰𑌾𑌧𑌾𑌨𑍍𑌯𑌤𑌃 𑌕𑍁𑌰𑍁𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍋 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌸𑍍𑌯 𑌮𑍇 ॥

(ப-ம்) ஹே குருச்ரேஷ்ட-ஓகுருகுலச் சிரேஷ்ட, ஆத்மந:-தன்னுடைய, சுபா:-கல்யாணமான, விபூதய:-விபூதிகள், திவ்யாஹி-சுபங்களைக் கொடுப்பனவல்லவா, ப்ராதாந்யத:-பிரதானமாய், தே உனக்கு, கதயிஷ்யாமி - சொல்லுவேன், மே-என்னுடைய, விஸ்தரஸ்ய-விஸ்தாரத்துக்கு, அந்த:-முடிவு, நாஸ்தி-இல்லை. (கக)

(தா-ம்) ஆஹா அர்ஜுனா! சுபகரங்களான என் அம்சங்களில் முக்கியமான குணங்களை மாத்திரம், உனக்குரைக்கின்றேன். என் விஸ்தாரத்துக்கு அந்தமில்லை. "என்பதால் அனந்தமாதலால் விரிவாய்க் கூறுவதற்கும் கேட்பதற்கும்சாத்தியமன்றென கருத்து." (ஶ்ரீ) ஹந்த-இப்போது. (கக)

𑌅𑌹𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌗𑍁𑌡𑌾𑌕𑍇𑌶 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌶𑌯𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
𑌅𑌹𑌮𑌾𑌦𑌿𑌶𑍍𑌚 𑌮𑌧𑍍𑌯𑌂 𑌚 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌨𑍍𑌤 𑌏𑌵 𑌚 ॥ உ0 ॥

(ப-ம்) (ஹே) குடாகேசா-ஓ அர்ச்சுனா, அஹம்-நான், ஸர்வ பூத ஆசயஸ்திதஃ-ஸகல பூதங்களின் ஹ்ருதயத்தில் இருக்கிற, ஆத்மா-ஆத்துமா, பூதாநாம்-பூதங்களுடைய, ஆதிஃ-ஆதியும், மத்யம்-மத்தியமும், அந்தஃச - முடிவும், அஹம்ஏவ - நானேயாகி யிருக்கிறேன். (௨௰)

(தா-ம்) அர்ஜுனா! ஸமஸ்தப்பிராணிகளுடைய ஹ்ருதயகமலத்தில் வீற்றிருக்கும் ஆத்மாயானே. எல்லாப்பிராணிகளுக்கும் யானே ஆதியாயும், மத்தியமாயும், அந்தமாயுமிருக்கின்றேன். (௨௰)

ஆதித்யாநாமஹம்விஷ்ணுர்ஜ்யோதிஷாம்ரவிரம்சுமாந் |
மரீசிர்மருதாமஸ்மி நக்ஷத்ராணாமஹம்சசீ ||௨௧||

(ப-ம்) ஆதித்யாநாம்-ஆதித்தியர்களுக்குள், விஷ்ணுஃ-விஷ்ணு வென்பவன் அஹம்-நான், ஜ்யோதிஷாம்-பிரகாசப்படுத்துகின்றவைகளுள், அம்சுமாந்-கிரணங்கள் உடைய, ரவிஃ (அஹம்)-சூரியன் நான், மருதாம்-மருத்துக்களுக்குள், மரீசிஃ-மரீசியென்பவன், அஹம்-நான், நக்ஷத்ராணாம்-நக்ஷத்திரங்களுக்குள், சசீ-சந்திரன், அஹம்-நான், அஸ்மி-ஆகிறேன். (௨௧)

(தா-ம்) யான் துவாதசாதித்தியர்களுள் விஷ்ணுவென்னும் பன்னிரண்டாவது சூரியனும், கிரஹ நக்ஷத்திரம்முதலிய பிரகாசமான வஸ்துக்களுள் விசேஷப்பிரகாசமுடைய சூரியனும், ஸப்தவாயுக்கள் மரீசி யென்கிற வாயுவாயும், நக்ஷத்திரங்களுள் சந்திரனுமிருக்கின்றேன். (௨௧)

வேதாநாம்ஸாமவேதோஸ்மி தேவாநாமஸ்மிவாஸவஃ |
இந்த்ரியாணாம்மநஸ்சாஸ்மி பூதாநாமஸ்மிசேதநா ||௨௨||

(ப-ம்) வேதாநாம்-வேதங்களுக்குள், ஸாமவேதஃ-ஸாமவேதம், அஸ்மி-ஆகிறேன், தேவாநாம் - தேவதைகளுக்குள், வாஸவஃ-இந்திரன், அஸ்மி-ஆகிறேன், இந்த்ரியாணாம்-இந்த்ரியங்களுக்குள், மநஃ-மனம், அஸ்மி-ஆகிறேன், பூதாநாம்-பூதங்களுக்கு, சேதநா-புத்தியும் அஸ்மி-ஆகிறேன். (௨௨)

(தா-ம்) வேதங்களுள் ஸாமவேதமாயும், தேவதைகளுள் இந்திரனாயும், இந்திரியங்களுள் மனமாயும் பிராணிகளுக்கு புத்தியாயுமிருக்கின்றேன். (௨௨)

ருத்ராணாம்சங்கரஸ்சாஸ்மி வித்தேசோயக்ஷரக்ஷஸாம் |
வஸூநாம்பாவகஸ்சாஸ்மி மேருஃசிகரிணாமஹம் ||௨௩||

(ப-ம்) ருத்ராணும்-பதினோருருத்திரர்களுக்குள், சங்கரஃச-சங்கரன், அஸ்மி-ஆகிறேன், யக்ஷரக்ஷஸாம் - யக்ஷராக்ஷஸர்களுக்குள், வித்தேசஃ- குபேரனாகிறேன், வஸூநாம் - அஷ்டவசுக்களுக்குள், பாவகஃச-அக்நியும், அஸ்மி-ஆகிறேன், சிகரிணும்-சிகரமுள்ள (மலைகளில்), மேருஃ-மேருபர்வதம், அஹம்-நான், அஸ்மி-ஆகிறேன். (உக)

(தா-ம்) யான் ஏகாதச உருத்திரர்களுள் சங்கரனும், யக்ஷராக்ஷஸர்களுள் குபேரனும், அஷ்டவஸுக்களுள் அக்கினியாயும், பர்வதங்களுள் மேருவாயு மிருக்கின்றேன். (உக)

புரோதஸாம் ச முக்யம் மாம் வித்தி பார்த்த ப்ருஹஸ்பதிம்|
ஸேநாநீநாமஹம் ஸ்கந்த: ஸரஸாமஸ்மி ஸாகர:||உ௪||

(ப-ம்) பார்த்த-ஓ அர்ஜுனா, புரோதஸாம்-புரோகிதர்களுக்குள், முக்கியம் - முக்கியனான, ப்ருஹஸ்பதிம் - பிருஹஸ்பதியாக, மாம்-என்னை, வித்தி-அறி, அஹம்-நான், ஸேநாநீநாம்-ஸேனாபதிகளுள், ஸ்கந்தஃ-சுப்பிரமண்ய ஸ்வாமி, ஸரஸாம் - குளங்களுள், ஸாகரஃ-ஸமுத்ரம், அஸ்மி-ஆகிறேன். (உ௪)

(தா-ம) பார்த்தா! யான் புரோகிதர்களுள் சிரேஷ்டரான பிருஹஸ்பதி யென்றுணர்க. யான் ஸேனாபதிகளுள் ஸுப்ரமண்ணியராயும் ஜலங்களுள் சமுத்திரமாயு மிருக்கின்றேன். (உ௪)

மஹர்ஷீணாம் ப்ருகுரஹம் கிராமஸ்ம்யேகமக்ஷரம்|
யஜ்ஞாநாம் ஜபயஜ்ஞோஸ்மி ஸ்தாவராணாம் ஹிமாலய:||உ௫||

(ப-ம்) மஹர்ஷீணும்-மரீசீமுதலான மஹரிஷிகளுக்குள், ப்ருகுஃ-பிருகுவென்பவர், அஹம்-நான், கிராம்-வாக்குக்களுக்குள், ஏகம் அக்ஷரம்-ஒன்றான அக்ஷரத்தையுடைய ப்ரணவமும், அஸ்மி-ஆகிறேன், யஜ்ஞாநாம்-யக்ஞங்களுக்குள, ஜப யஜ்ஞஃ-ஜபயக்ஞம், அஸ்மி-ஆகிறேன்; ஸ்தாவராணும்-தாவரங்களுக்குள், ஹிமாலயஃ-இமயமலை அஸ்மி-ஆகிறேன். (உ௫)

(தா-ம்) யான் மஹரிஷிகளுள் பிறகு மஹரிஷியாயும், பதங்களுள் பிரணவமாயும், யஞ்ஞங்களுள் ஜபயஞ்ஞமாயும், ஸ்தாவரங்களுள் ஹிமையமலையாயு மிருக்கின்றேன். (உ௫)

அஸ்வத்த: ஸர்வவ்ருக்ஷாணாம் தேவர்ஷீணாம் ச நாரத:|
கந்தர்வாணாம் சித்ரரத: ஸித்தாநாம் கபிலோ முநி:||உ௬||

(ப-ம்) ஸர்வ வ்ருக்ஷாணும்-ஸகலமான விருக்ஷங்களுள்ளும், அச்வத்தஃ-அரசமர (மாகிறேன்) தேவர்ஷீணும்ச-தேவரிஷிகளுக்

குலீர்ணாம் ரதஃ-நாரதரா (கிறேன்), கந்தர்வாணாம்-கெந்தருவருக்குள், சித்ரரதஃ-சித்ரரதன் (ஆகிறேன்), ஸித்தாநாம்-ஸித்தர்களுள், கபிலஃ முனிஃ-கபிலமுனி (யாகிறேன்). (உசு)

(தா-ம்) விருக்ஷங்களுள் அஶ்வத்தவிருக்ஷமாயும், தேவரிஷிகளுள் நாரதமஹரிஷியாயும், கெந்தர்வர்களுள் சித்திரரதனாயும், ஸித்தர்களுள் கபிலமகாரிஷியாயு மிருக்கிறேன். (உசு)

உச்சைஃஶ்ரவஸமஶ்வாநாம் வித்தி மாமம்ருதோத்பவம் |
ஐராவதம் கஜேந்த்ராணாம் நராணாஞ்ச நராதிபம் ||உஎ||

(ப-ம்) மாம்-என்னை, அசவாநாம்-குதிரைகளுள், அம்ருதோத்பவம், அம்ருதத்தில்பிறந்த, உசைச்ரவஸம்-உச்சைச்சிரவஸ்ஸென்கிற குதிரையாக, வித்தி-அறி, கஜேந்த்ராணாம் - கஜச்சிரேஷ்டங்களுள், ஐராவதமென்கிறயானையாக, நராணாம்-மனிதருள, நராதிபஞ்ச-அரசனாகவு(மறி). (உஎ)

(தா-ம்) யான் அசுவங்களுக்குள் அமிருதமதனஞ் செய்தகாலத்தில் க்ஷீரஸமுத்திரத்திற் பிறந்த உச்சைஸ்ரவஸ்ஸென்கிறகுதிரையாயும், திக்கஜங்களுக்குள் ஐராவதமாயும், மானிடருள அரசனாயுமிருக்கிறேனென்றறிக. (உஎ)

ஆயுதாநாமஹம் வஜ்ரம் தேநூநாமஸ்மி காமதுக் |
ப்ரஜநஶ்சாஸ்மி கந்தர்ப்பஃ ஸர்ப்பாணாமஸ்மி வாஸுகிஃ || உஅ||

(ப-ம்) ஆயுதாநாம்-ஆயுதங்களுள, வஜ்ரம்-வச்சிராயுதம், அஹம்-நான், தேநூநாம்-பசுக்களுள், காமதுக்-காமதேனுவாக, அஸ்மி-ஆகிறேன், ப்ரஜநஃ-உத்பத்திக்குக் காரணமான, கந்தர்பஃச-மன்மதனும், அஸ்மி-ஆகிறேன், ஸர்பாணாம்-ஸர்பங்களுள, வாஸுகிஃ அஸ்மி-வாசுகி யாகிறேன். (உஅ)

(தா-ம்) ஆயுதங்களுள் வஜ்ராயுதமாயும், பசுக்களுள் காமதேனுவாயும், பிரஜாவிருத்திக்குக் காரணமன்மதனாயும், சர்பங்களுள் வாஸுகியாயு மிருக்கிறேன். (உஅ)

அநந்தஶ்சாஸ்மி நாகாநாம் வருணோ யாதஸாமஹம் |
பித்ரூணாமர்யமா சாஸ்மி யமஃ ஸம்யமதாமஹம் || உகூ ||

(ப-ம்) நாகாநாம்ச-நாகங்களுக்குள், அநந்தஃ அஸ்மி-அனந்தனாகிறேன், யாதஸாம்-ஜலவாஸிகளுள், வருணஃ-வருணன், அஹம்-நான்; பித்ரூணாம்-பிதுருக்களுள், அர்யமா ச-அரியமாவென்பவர், அஸ்மி-ஆகிறேன், ஸம்யமதாம-சிக்ஷிப்பவர்களுக்குள், யமஃ-யமன், அஹம்-நான், அஸ்மி-ஆகிறேன். (உகூ)

(தா-ம்) நாகங்களுள் அனந்தனும், ஜலதேவதைகளுள் வருணனும், பித்ருக்களுள் அர்யமனும், தண்டனை செய்பவர்களுள் யமனுமிருக்கிறேன். (௨௯)

ப்ரஹ்லாதஶ்சாஸ்மி தைத்யாநாம் கால: கலயதாமஹம்|
ம்ருகாணாம் ச ம்ருகேந்த்ரோ(அ)ஹம் வைநதேயஶ்ச பக்ஷிணாம்||

(ப-ம்) தைத்யாநாம்-தைத்யர்களுக்குள், ப்ரஹ்லாதஶ்ச-பிரஹ்லாதனும், அஸ்மி-ஆகிறேன்; கலயதாம்-கணக்கர்களுக்குள், கால:-யமன், அஹம்-நான்; ம்ருகாணாம்ச-மிருகங்களுள், ம்ருகஇந்த்ர:-ஸிம்மம், அஹம்-நான்; பக்ஷிணாம்-பக்ஷிகளுள், வைநதேயஶ்ச-கருடனும், (நான்). (௩௰)

(தா-ம்) அசுரர்களுள் ப்ரஹ்லாதனும், ஆக்கிரமிப்பவர்களுள் ம்ருத்யுவாயும், மிருகங்களுள் ஸிம்மமாயும், பக்ஷிகளுள் கருடனுமிருக்கிறேன். (ஶ௦) தைத்யாநாம் ஜலதேவதைகளுக்குள்ளே. (௩௰)

பவந: பவதாமஸ்மி ராம: ஶஸ்த்ரப்ருதாமஹம்|
ஜஷாணாம் மகரஶ்சாஸ்மி ஸ்ரோதஸாமஸ்மி ஜாஹ்நவீ || ௩௧||

(ப-ம்) பவதாம்-சஞ்சரிப்பவைகளுக்குள், பவந:-காற்று, அஸ்மி-ஆகிறேன்; ஶஸ்த்ரப்ருதாம் - ஆயுதபாணிகளுள், ராம:-இராமன், அஹம்-நான்; ஜஷாணாம்-மத்ஸ்யங்களுள், மகரஶ்ச-முதலையும், அஸ்மி-ஆகிறேன்; ஸ்ரோதஸாம்-ப்ரவஹிப்பவைகளுள், ஜாஹ்நவீ-கங்கை, அஸ்மி-ஆகிறேன். (௩௧)

(தா-ம்) சஞ்சரிப்பவர்களுள் வாயுவாயும், சஸ்திரத்தைத் தாங்கினவர்களுள் இராமனும், மத்ஸியங்களுள் மகா (முதலை) யாயும், பிரவாகங்களுள் கங்கையாயுமிருக்கிறேன். (௩௧)

ஸர்காணாமாதிரந்தஶ்ச மத்யம் சைவாஹமர்ஜுந|
அத்யாத்மவித்யா வித்யாநாம் வாத: ப்ரவததாமஹம் || ௩௨||

(ப-ம்) ஹே அர்ஜுந-ஓ அர்ச்சுன! ஸர்காணாம்-படைக்கப்படுமவைகளின், ஆதி:-ஆதியும், அந்தஶ்ச-அந்தமும், மத்யம்ச-மத்தியமும், அஹம்-நான், வித்யாநாம்-வித்தைகளுள், அத்யாத்ம வித்யா-மோக்ஷவித்தை (நான்) ப்ரவததாம்-வாதம்செய்வோருள, வாத:-வாதம், அஹம்-நான். (௩௨)

(தா-ம்) அர்ஜ்ஜுனா! ஸிருஷ்டிகளிலிருக்கும் வஸ்துக்களுக்கெல்லாம் ஆதியாயும், அந்தமாயும், மத்தியமமாயும், வித்தைகளுள் ப்ரம்ஹ வித்தையாயும், வாதம் செய்கிறவர்களுக்கு வாதமாயுமிருக்கிறேன். (௩௨)

அக்ஷராணாமகாரோஸ்மி த்வந்த்வஸ் ஸாமாஸிகஸ்ய ச|
அஹமேவாக்ஷய: காலோ தாதாஹம் விஶ்வதோமுக:||௩௩||

(ப-ம்) அக்ஷராணாம்-அக்ஷரங்களுக்குள், அகார:-அகாரமாக, அஸ்மி-ஆகிறேன்; ஸாமாஸிகஸ்யச-ஸமாஸ ஸமூஹங்களுள், த்வந்த்வ:-த்வந்த்வம் (நான்), அக்ஷய: கால:-நாசமில்லாதகாலமானது, அஹமேவ-நானே; விஶ்வதோமுக:-நாற்புறமுமுகமான, தாதா-பிரம்மன், அஹம்-நானேயாகிறேன். (௩௩)

(தா-ம்) அக்ஷரங்களில் அகாரமாயும், ஸமாஸங்களில் த்வந்த்வ ஸமாஸமாயும் (அதாவது ஸமாஸமங்கள் ஒருபதத்தினது பொருளை மாத்திரம் பிரதானமாயுடையது. த்வந்த்வ ஸமாஸத்தில் மாத்திரம் சேர்ந்த எல்லா பாகத்தினதுபொருளு முக்கியமானவை) நாசமற்ற காலமாயும், கர்மபலனை யளிக்கும சதுர்முக ப்ரம்மனுயு மிருக்கிறேன். (௩௩)

ம்ருத்யுஸ் ஸர்வஹரஶ்சாஹமுத்பவஶ்ச பவிஷ்யதாம்|
கீர்திஶ்ஶ்ரீர்வாக்ச நாரீணாம் ஸ்ம்ருதிர்மேதா த்ருதி: க்ஷமா||௩௪||

(ப-ம்) ஸர்வஹர:-ஸகலத்தையுமழிக்கின்ற, ம்ருத்யுஶ்ச - இயமனும், அஹம்-நான்; பவிஷ்யதாம்-உண்டாகப்போமவைகளுள், உத்பவஶ்ச-பிறப்பும், அஹம்-நான், நாரீணாம்-பெண்களுள், கீர்தி:-கீர்த்தியும், ஶ்ரீ:-இலக்ஷ்மியும், வாக்ச-வாக்கும் (நான்), ஸ்ம்ருதி:-ஸ்மிருதியும், மேதா-புத்தியும், த்ருதி:-தைரியமும், க்ஷமா-க்ஷமையும் அஹம்-நானாகிறேன். (௩௪)

(தா-ம்) எல்லாவஸ்துக்களையும் அபகரிக்கும் ம்ருத்யுவாயும், உண்டாகப்போகிற வஸ்துக்களுக்கு ப்ரதமோற்பத்தியாயும், ஸ்திரீகளுள் ஶ்ரீதேவியாயும், கீர்த்தியாயும், வாக்காயும, ஸ்மிருதியாயும் மேதையாயும், த்ருதியாயும், க்ஷமையாயு மிருக்கிறேன். (இலக்ஷ்மி, கீர்த்தி, வாக்கு, இம்மூவரும் பகவானுக்கு அஸாதாரண ஶக்திகள்). (௩௪)

ப்ருஹத்ஸாம ததா ஸாம்நாம் காயத்ரீ சந்தஸாமஹம்|
மாஸாநாம் மார்கஶீர்ஷோஹம்ருதூநாம் குஸுமாகர:||

(ப-ம்) ததா-அப்படியே, ஸாம்நாம்-ஸாமங்களுக்குள், ப்ருஹத் ஸாம-பெரியஸாமம் (நான்), சந்தஸாம்-சந்தஸ்க்களுள், காயத்ரீ-காயத்திரி, அஹம்-நான், மாஸாநாம்-மாதங்களுள், மார்கஶீர்ஷ:-மார்கழிமாதம், அஹம்-நான்; ருதூநாம்-இருதுக்களுள், குஸுமாகர:-வஸந்தருது (நான்). (௩௫)

(தா-ம்) ஸாமங்களில்ப்ருஹத்து என்கிற ஸாமமாயும், சந்தஸ்ஸுகளுள் காயத்திரியாயும், மாதங்களுள் மார்கழிமாதமாயும்,ருதுக்களுள் வஸந்தருதுவாயு மிருக்கிறேன். (ஸ)-காயத்ரீ- காயத்ரீமந்த்ரம். (௩௫)

𑌦𑍍𑌯𑍂𑌤𑌂 𑌛𑌲𑌯𑌤𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌤𑍇𑌜𑌸𑍍𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑌿𑌨𑌾𑌮𑌹𑌮𑍍 ।
𑌜𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌤𑌾𑌮𑌹𑌮𑍍 ॥ ௩௬ ॥

(ப-ம்) சலயதாம்-மோசம் செய்பவர்களுடைய,த்யூதம்-சூதாக, அஸ்மி-ஆகிறேன்; தேஜஸ்விநாம்-அதிபலமுடையவருக்கு, தேஜ:-பலம், அஹம்-நான், ஜய:-அஸ்மி-ஜயமாகிறேன், வ்யவஸாய:-வியவஸாயம், அஸ்மி-ஆகிறேன்; ஸத்வவதாம்-ஸத்துவமுடையோருக்கு, ஸத்வம்-ஸத்துவம், அஹம்-நான்; (௩௬)

(தா-ம்) யான் கபடஞ்செய்கிறவர்களுக்கு த்யூதமாயும்,(அதாவது சொறகட்டான் அல்லது சூதாட்டம்) பராக்கிரமமுள்ளவர்கட்குப் பராக்கிரமமாயும், வெற்றியாயும் வ்யவஸாயமாயும் (ப்ரயத்னம்) பலிஷ்டர்கட்கு பலமாயுமிருக்கிறேன். (ஸ) ஸத்வம்-நல்லமனதும். (௩௬)

𑌵𑍃𑌷𑍍𑌣𑍀𑌨𑌾𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌨𑌾𑌂 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯𑌃 ।
𑌮𑍁𑌨𑍀𑌨𑌾𑌮𑌪𑍍𑌯𑌹𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 𑌕𑌵𑍀𑌨𑌾𑌮𑍁𑌶𑌨𑌾 𑌕𑌵𑌿𑌃 ॥ ௩௭ ॥

(ப-ம்) வ்ருஷ்ணீநாம்-யாதவர்களில், வாஸுதேவ: அஸ்மி-வாசுதேவனாகிறேன்,பாண்டவாநாம்-பாண்டுபுத்திரர்களுக்குள்,தநஞ்ஜய:-அருச்சுனன் (நான்), முநீநாம்அபி-முனிகளுக்குள்ளும், வ்யாஸ:-வியாஸமுனி, அஹம்-நான்,கவீநாம்-கவிகளுக்குள்,உசநாகவி:-சுக்கிராசாரியர், அஹம்-நான். (௩௭)

(தா-ம்) யான் விருஷ்ணி வம்சோற்பன்னர்கட்கு வாஸுதேவனாயும், பாண்டவர்கட்கு அர்ஜுனனாயும், இருஷிகட்கு வ்யாஸராயும், வித்வாம்ஸர்கட்கு சுக்கிராசாரியனாயு மிருக்கிறேன். (௩௭)

𑌦𑌣𑍍𑌡𑍋 𑌦𑌮𑌯𑌤𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌨𑍀𑌤𑌿𑌰𑌸𑍍𑌮𑌿 𑌜𑌿𑌗𑍀𑌷𑌤𑌾𑌮𑍍 ।
𑌮𑍌𑌨𑌂 𑌚𑍈𑌵𑌾𑌸𑍍𑌮𑌿 𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌤𑌾𑌮𑌹𑌮𑍍 ॥

(ப-ம்) தமயதாம்-சிக்ஷிப்பவர்களுக்கு,தண்ட:-சிக்ஷை, அஸ்மி-ஆகிறேன், ஜிகீஷதாம்-ஜயிக்கக்கோரியவர்களுக்கு, நீதி:அஸ்மி-நீதி ஆகிறேன், குஹ்யாநாம்-ரஹஸ்யமானவைகளுள், மௌநம்சஏவ-மௌனமும்,அஸ்மி-ஆகிறேன், ஜ்ஞாநவதாம்-ஞானவான்களுடைய; ஜ்ஞாநம்-ஞானம், அஹம்-நான். (௩௮)

(தா-ம்) அர்ஜுனா! தண்டிப்போர்கட்கு யான் தண்டமாயும், ஜயித்தைக் கோருகிறவர்கட்கு இராஜநீதியாயும், இரகசியங்களுக்குள்ளே மௌனமாயும், ஞானவான்கட்கு யான் ஞானமாயு மிருக்கிறேன். (௩௮)

யச்சாபி ஸர்வபூதாநாம் பீஜம் ததஹமர்ஜுந|

ந ததஸ்தி விநா யத்ஸ்யாந்மயா பூதம் சராசரம்||௩௯||

(ப-ம்) ஹே அர்ஜுந-வாராய் அர்ச்சுனா! யத்-எது, ஸர்வபூதாநாம்-ஸகலப்பிராணிகளுக்கும், பீஜம-பீஜமோ, தத்சஅபி-அதுவும் அஹம்-நான், யத்-எது, மயாவிநா-என்னைவிட்டு, ஸயாத்-இருக்குமோ, தத்-அந்த, சராசரம் - ஜங்கமஸ்த்தாவரரூபமான, பூதம்-பூதம், நாஸ்தி-கிடையாது. (௩௯)

(தா-ம்) அர்ஜுனா! இன்னும் யான் எல்லாவஸ்துக்களுக்கும் ஆதிகாரணன். யான் ஜங்கமுமன்று, ஸ்தாவரமன்று, இல்லாத வஸ்துவுமன்று, இருக்கிறவஸ்துவுமன்று. (௩௯)

நாந்தோஸ்தி மம திவ்யாநாம் விபூதீநாம் பரந்தப|

ஏஷ தூத்தேஶத: ப்ரோக்தோ விபூதேர்விஸ்தரோ மயா||

(ப-ம்)(ஹே)பரந்தப-சத்ருக்களைத்தபிக்கப்பண்ணுகிற அர்ச்சுனா மம-என்னுடைய, திவ்யாநாம-திவ்வியங்களான, விபூதீநாம்-விபூதிகளுக்கு, அந்த:-முடிவு, நாஸ்தி-கிடையாது; ஏஷ:-இந்த, விபூதே:-விபூதியின், விஸ்தரஸ்து-விஸ்தாரமோ, மயா-என்னால், உத்தேசத:-ஏகதேசம், ப்ரோக்த:-சொல்லப்பட்டது. (௪௦)

(தா-ம்) பரந்தபா! அப்ராக்ருதமான என் மகிமைக்கு முடிவில்லை. விஸ்தாரமான என்மகிமைகள் சுருக்கமாய்க் கூறப்பட்டன. (௪௦)

(ஶ௦) திவ்யாநாம்-மங்களகரமான.

யத்யத்விபூதிமத்ஸத்த்வம் ஶ்ரீமதூர்ஜிதமேவ வா|

தத்ததேவாவகச்ச த்வம் மம தேஜோம்ஶஸம்பவம் || ௪௧ ||

(ப-ம்) விபூதிமத்-விபூதியுள்ளதானாலும், ஶ்ரீமத்-சோபையுடையதும், ஊர்ஜிதமேவவா-பலமுடையதுமாம், யத்யத்-எந்தெந்த, ஸத்வம்-ஸத்துவம், அஸ்தி-இருக்கின்றதோ, தத்தத்-அதுஅது, மம-என்னுடைய, தேஜோம்ஶ- தேஜஸ்ஸினது அம்சத்தால், ஸம்பவமேவ-உண்டானதாகவே, த்வம்-நீ, அவகச்ச-அறி; (௪௧)

(தா-ம்) இக்காசினியுள்கண் எந்தெந்த வஸ்துசிறப்புடையதோ, எந்தெந்தவஸ்து ஶ்ரீமத் (அதாவது காந்தி, அல்லது தனதான்

ளிய ஸம்ருத்தியுடன் கூடியிருக்கிறதோ,) அக்தெந்த வஸ்து சுபகாரியங்களையே முக்கியப் பிரயோஜனமாயுடையதோ, அவைகளெல்லாம் எனது தேஜோம்சத்தினாலேயே உண்டாகிறதென்றுணர்க. (சக)

அதவா பஹுநைதேந கிம் ஜ்ஞாதேந தவார்ஜுந |
விஷ்டப்யாஹமிதம் க்ருத்ஸ்நமேகாம்சேந ஸ்திதோ ஜகத் ||சஉ||

(ப-ம்) ஹே அர்ஜுந-ஓ அர்ச்சுனா! அதவா-அல்லது, பஹுநா-விஸ்தாரமான, ஏதேந-இந்த, ஜ்ஞாதேந-ஞானத்தால் அறியப்பட்ட, தவ-உனக்கு, கிம்ஸ்யாத்-என்ன பிரயோஜனமுண்டாகும்? அஹம்-நான், இதம்-இந்த, க்ருத்ஸ்நம்-ஸமஸ்தமான, ஜகத்-உலகத்தையும், ஏகாம்சேந-ஓரம்சத்தாலே, விஷ்டப்ய-நிறுத்தி, ஸ்திதஃ-இருக்கிறேன். (சஉ).

(தா-ம்) அர்ஜுநனே! இதன்றிப்பற்பல ஞானத்தாலுனக்குபயோகமென்ன? யானே இந்த ஜகத்துக்கெல்லாம் ஓர் பாகத்தால் நிலைநிறுத்திக்கொண்டு (என்பதால் ஸம்பந்தப்பட்டும், ஸம்பந்தப்படாமலும் ஸர்வாதிகாரியாய்) இருக்கிறேன். (சஉ)

ஸ்ரீ கீதாஸூ விபூதியோகமென்னும் பத்தாவது
அத்தியாயம், முற்றிற்று.

பதினோராவது அத்தியாயம்.

விச்வரூபஸந்தர்சநயோகம்.

அர்ஜுனவாக்கியம்.

மதநுக்ரஹாய பரமம் குஹ்யமத்யாத்மஸம்ஜ்ஞிதம் |
யத்த்வயோக்தம் வசஸ்தேந மோஹோऽயம் விகதோ மம ||க||

(ப-ம்) மத் அநுக்ரஹாய-என்னை அனுக்கிரஹிக்கும்பொருட்டு, த்வயா-உன்னால், பரமம்-மிகவும், குஹ்யம்-ரஹஸ்யமும், அத்யாத்ம ஸம்ஜ்ஞிதம்-அத்தியாத்மமென்று பெயருடையதுமான, யத்வசஃ-எந்த வார்த்தையானது த்வயா-உம்மால், உக்தம்-சொல்லப்பட்டதோ, தேந-அதனால், மம-எனக்கு, அயம்-இந்த, மோஹஃ-மோஹமானது, விகதஃ-விட்டது. (க)

(தா-ம்) நீர், என்னை யநுக்கிரஹிப்பதற்காகக் கூறிய பரம இரக

சியமான ஆத்மஞான ரூபவசனத்தால் என்னுடைய அஞ்ஞானந் தொலைந்துப்போயின. (ஸ்ம) மோஹ꞉- அவிவேகபுத்தி. (க)

பவாப்யயௌ ஹி பூதாநாம் ஶ்ருதௌ விஸ்தரஶோ மயா ।
த்வத்த꞉ கமலபத்ராக்ஷ மாஹாத்ம்யமபி சாவ்யயம் ॥ உ ॥

(ப-ம்) (ஹே) கமலபத்ராக்ஷ-கமலபத்ரம்போல்போன்றநேத்திரங்களுள்ள ஸ்ரீகிருஷ்ணா! பூதாநாம்-பிராணிகளினது, பவாப்யயௌ-உற்பத்திவிநாசங்கள், இரண்டும் த்வத்த꞉-உம்மிடத்தினின்று, மயா-என்னால், விஸ்தரஶ꞉-விஸ்தாரமாய், ஶ்ருதௌ - கேட்கப்பட்டன, அவ்யயம்-நாசமில்லாத, மாஹாத்ம்யம் அபிச-மஹிமையும், (ஶ்ருதம்)-கேட்கப்பட்டது. (உ)

(தா-ம்) கமலநயனா! எல்லா வஸ்துக்களுக்கும் நுங்களாலேயே உற்பத்திலயங்களுண்டாகிற தென்பதையும, உமது அழிவற்ற மான்மியத்தையும் யான் உம்மிடத்திலேயே ஸவிஸ்தாரமாய்க் கேட்கப்பட்டன. (உ)

ஏவமேதத்யதாத்த த்வமாத்மாநம் பரமேஶ்வர ।
த்ரஷ்டுமிச்சாமி தே ரூபமைஶ்வரம் புருஷோத்தம ॥ ௩ ॥

(ப-ம்) (ஹே) பரமேஶ்வர-ஓ ஸர்வேசுவர! த்வம்-நீர், ஆத்மாநம்-உம்மைப்பற்றி, யதா-எப்படி, ஆத்த-சொன்னீரோ! ஏதத்-இது, ஏவம்-இப்படியே, (ஹே) புருஷோத்தம-ஓ புருஷச்சிரேஷ்ட! தே-உம்முடைய, ஐஶ்வரம் - ஈஸ்வரஸம்மந்தமான, ரூபம்-ரூபதத்தை, த்ரஷ்டும்-தர்சிப்பதற்கு, இச்சாமி-விரும்புகிறேன். (௩)

(தா-ம்) ஓ பரமபுருஷா! நீங்கள் நுங்களைக் குறித்துக் கூறியவைகளெல்லா முண்மையே, புருஷோத்தமா! உமது ஈஸ்வரஸ்வரூபத்தைத் தரிசிப்பதற்கு மிகவு மாவலுடையவனாகிறேன். (௩)

மந்யஸே யதி தச்சக்யம் மயா த்ரஷ்டுமிதி ப்ரபோ ।
யோகேஶ்வர ததோ மே த்வம் தர்ஶயாத்மாநமவ்யயம் ॥ ௪ ॥

(ப-ம்) (ஹே) ப்ரபோ-ஓ பிரபுவே, ஹேயோகச்வர-ஞானாதி கல்யாணகுணங்களோடு கூடியிருப்பவனே! தத்-அது, மயா-என்னால், த்ரஷ்டும்-பார்க்க, சக்யம்-கூடும், இதி-என்று, மந்யஸே யதி-நினைத்திராகில், தத꞉-அதன்பின்பு, த்வம்-தேவரீர், அவ்யயம்-சம்பூர்ணமான, ஆத்மாநம்-ஆத்மஸ்வரூபத்தை, மே-எனக்கு, தர்சய-காட்ட வேண்டும். (௪)

(தா-ம்) ஏ ப்ரபோ! ஸகல கல்யாணகுணங்களும் நிறைந்த

ஈசா! அந்த ஸ்வரூபத்தைத் தரிசிப்பதற்கு யான் ஸமர்த்தனென்று மக்குத் தோற்றுமேயாகில் நீவிர் எந்தனுக்கு அந்த விஸ்வரூபத்தை நன்கு காண்பிக்கவேண்டும். (௪)

ஸ்ரீகிருஷ்ண வாக்கியம்.

𑌪𑌶𑍍𑌯 𑌮𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 𑌶𑌤𑌶𑍋𑌽𑌥 𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃 |
𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧𑌾𑌨𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑌿 𑌨𑌾𑌨𑌾𑌵𑌰𑍍𑌣𑌾𑌕𑍃𑌤𑍀𑌨𑌿 𑌚 || ௫ ||

(ப-ம்) ஹே பார்த்த-ஓ பார்த்த, ஶதஶ:-நூறுபங்காயும், அத ஸஹஸ்ரஶ:-அல்லது ஆயிரம்பங்காயும், நாநாவிதாநி-பலவிதங்களாயும், நாநாவர்ண ஆக்ருதீநி-பலவர்ணமும் ஆகாரமுமுடையனவாயும், திவ்யாநிச-திவ்வியங்களாயுமுள்ள, மே-எனது, ரூபாணி-ரூபங்களை, பஶ்ய-பார். (௫)

(தா-ம்) பார்த்தா! அளவற்றதாயும், நானாவிதங்களாயும், அப்ராக்ருதங்களாயும், அநேக ஆகாரங்களாயுமுள்ள என் ஸ்வரூபத்தைப்பார்மின். (௫)

𑌪𑌶𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑍍 𑌵𑌸𑍂𑌨𑍍 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌨𑌶𑍍𑌵𑌿𑌨𑍌 𑌮𑌰𑍁𑌤𑌸𑍍𑌤𑌥𑌾 |
𑌬𑌹𑍂𑌨𑍍𑌯𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌪𑌶𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌭𑌾𑌰𑌤 || ௬ ||

(ப-ம்) ஹேபாரத-ஓ பரதவம்சத்திலுதித்தோய்! ஆதித்யாந்-துவாதச ஆதித்யர்களையும், ருத்ராந் - ஏகாதசருத்திரர்களையும், வஸூந்-அஷ்டவசுக்களையும், அச்விநௌ - அசுவனிதேவர்களையும், ததா-அப்படியே, மருத:-மருத்துக்களையும், பஶ்ய-பார், அத்ருஷ்டபூர்வாணி-முன்னேபார்க்கபடாத, பஹூநி-பலவித, ஆச்சர்யாணி-ஆச்சரியங்களை, பஶ்ய-பார். (௬)

(தா-ம்) ஏ பாரதா! எனது ஒருஸ்வரூபத்தின்கண் எண்ணிறந்தவைகளாயும் இதற்கு முன் காணாதவைகளாயும், அநேக ஆச்சரியயுக்தங்களாயுமுள்ள வஸ்துக்களையும், பன்னிரண்டுசூரியர்களையும், அஷ்டவஸுக்களையும், ஏகாதச உருத்திரர்களையும, அஸ்வினி தேவதைகளையும், நாற்பத்தொன்பது மருத்தேவதைகளையும் ஸ்பஷ்டமாய்ப் பார்மின்? (௬)

𑌇𑌹𑍈𑌕𑌸𑍍𑌥𑌂 𑌜𑌗𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌸𑌨𑌂 𑌪𑌶𑍍𑌯𑌾𑌦𑍍𑌯 𑌸𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑍍 |
𑌮𑌮 𑌦𑍇𑌹𑍇 𑌗𑍁𑌡𑌾𑌕𑍇𑌶 𑌯𑌚𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌦𑍍𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌸𑌿 || ௭ ||

(ப-ம்) (ஹே) குடாகேச-ஓ அர்ச்சுனா! ஸசராசரம்-ஜங்கமஸ்தாவரங்களோடுகூடிய ஜகத்-உலகம், க்ருத்ஸ்நம்- எல்லாவற்றையும், யத்-(பின்னும்)எது, அந்யத்-வேறு, த்ரஷ்டும்-பார்ப்பதற்கு,

இச்சஸி-விரும்புகிறாயோ, (தத்) ச-அதையும், மம-என்னுடைய, இஹ-இந்த, தேஹே-சரீரத்தில், ஏகஸ்தம்-ஓரிடத்திலிருக்கும்படி, அத்ய-இப்பொழுது, பச்ய-பார். (௭)

(தா-ம்) அர்ஜுநனே! என் சரீரத்தின்கண் சராசரங்களுடன் ஸம்பந்தப்பட்ட அகில லோகங்களையும், இன்னும் எதைப்பார்க்கக் கருதுகிறாயோ, அதையுமோர்லோகத்திற் கண்கூடாகக்காணலாம்.

ந து மாம் ஶக்யஸே த்³ரஷ்டுமநேநைவ ஸ்வசக்ஷுஷா |
தி³வ்யம் த³தா³மி தே சக்ஷு꞉ பஶ்ய மே யோக³மைஶ்வரம் ‖ ௮ ‖

(ப-ம்) அநேந-இந்த, ஸ்வசக்ஷுஷா ஏவது-உன் கண்ணினாலே யே, மாம்-என்னை, த்ரஷ்டும்-பார்க்க, நசக்யஸே-ஸமர்த்தனாகவே மாட்டாய, திவ்யம்சக்ஷு꞉-திவ்யநேத்திரத்தை, தே-உனக்கு, ததாமி-தருகிறேன், மே-எனது, ஐச்வரம்-ஈச்வரஸம்பந்தமான, யோகம்-யோகத்தை, பச்ய-பார். (௮)

(தா-ம்) நீ, இந்தப்ராக்ருத நேத்திரத்தால் என்னைப் பார்ப்பதற்கு முடியாது, ஆதலால் உனக்கு அப்ராக்ருதமான நேத்திரத்தைத் தருகின்றேன், அதனால் சுத்தஞானநந்தமயமான எனது ஈச்வரஸ்வரூபத்தையும், எனது மகிமையையும பார்மின்? (௮)

ஸஞ்ஜய வாக்கியம்.

ஏவமுக்த்வா ததோ ராஜந் மஹாயோகே³ஶ்வரோ ஹரி꞉ |
த³ர்ஶயாமாஸ பார்தா²ய பரமம் ரூபமைஶ்வரம் ‖ ௯ ‖

அநேகவக்த்ரநயநமநேகாத்³பு⁴தத³ர்ஶநம் |
அநேகதி³வ்யாப⁴ரணம் தி³வ்யாநேகோத்³யதாயுத⁴ம் ‖ ௰ ‖

தி³வ்யமால்யாம்ப³ரத⁴ரம் தி³வ்யக³ந்தா⁴நுலேபநம் |
ஸர்வாஶ்சர்யமயம் தே³வமநந்தம் விஶ்வதோமுக²ம் ‖ ௧௧ ‖

தி³வி ஸூர்யஸஹஸ்ரஸ்ய ப⁴வேத்³யுக³பது³த்தி²தா |
யதி³ பா⁴꞉ ஸத்³ருஶீ ஸா ஸ்யாத்³பா⁴ஸஸ்தஸ்ய மஹாத்மந꞉ ‖ ௧௨ ‖

(ப-ம்) (ஹே) ராஜந்-ஓராஜாவான (திருதராஷ்டிரா), மஹாயோகேச்வர꞉-மஹத்தான யோகங்களுக்கும் ஈச்வரனான, ஹரி꞉-ஸ்ரீகிருஷ்ணனானவர், ஏவம்-இப்படி, உக்த்வா-சொல்லி, தத꞉-பிறகு, ஐச்வரம்-ஈச்வரஸம்பந்தமான, பரமம்-மேலான, ரூபம்-ரூபத்தை, பார்த்தாய-அர்ச்சுனன் பொருட்டு, தர்சயாமாஸ-காட்டினார். அநேக வக்த்ர நயநம்-அநேக முகங்களுங்கண்களுமுடையதும், அநேக

அத்புததர்சநம் - அனேகம் ஆச்சரியக்காட்சியுடையதும், அநேக திவ்யாபரணம் - அநேகம் திவ்யாபரணங்களுடையதும், திவ்யா நேகோத்யதாயுதம்-திவ்வியமாயும் அனேகமாயும்எடுக்கப்பட்டதா யுமுள்ள ஆயுதங்களுடையதும், திவ்ய மால்யாம்பரதரம்-திவ்விய மான மாலைகளும் ஆடைகளுமுடுத்ததும், திவயகந்தாநுலேபநம் - திவ்வியமான கெந்தம்பூசியதும், ஸர்வாச்சர்யமயம் - எல்லா ஆச்சரியமும் நிறைந்ததும், தேவம் - பிரகாசிப்பதும், அநந் தம் - முடிவில்லாததும், விஸ்வதோமுகம் - நாற்புறமும் முகமு டையதுமான (ரூபத்தைக்காட்டினா, திவி-ஆகாயத்தில், யுகபத்- ஏககாலத்தில், ஸூர்யஸஹஸ்ரஸ்ய-சூரியர்களின் ஆயிரத்தின்,பாஃ கிரணம், உத்திதாயதி-உண்டாயிருக்குமாகில், ஸா-அது,தஸ்ய-அந் த, மஹாத்மந:-மஹாத்மாவின், பாஸ:-காந்திக்கு, ஸத்ருசீ-ஸமான மாக, ஸ்யாத்-ஆகும். (கூ-௰-௧௧-௧௨)

(தாம்) திர்த்தராஷ்டிர மகாராஜனே! இவ்வண்ணம் சொன்ன பிறகு சிறந்த யோகியான கிருஷ்ணன் அர்ஜ்ஜுனனுக்கு தனது முக்கியமான ஈஸ்வரஸ்வரூபத்தைக் காண்பித்தனர். அநேக முகங்களும், அநேக கண்களும், அநேக ஆச்சரிய வஸ்துக் களுடன் கூடியும், அநேக அப்ராக்ருத பூஷணங்களோடு கூடியும், நானாவிதங்களான ஆயுதங்களைத் தரித்தும், பற்பல புஷ்பமாலிகைகளும், பீதாம்பரங்களும், அபரிமிதவாசனுகந்த லே பனங்களும், ஆச்சரியமயங்களும், முடிவில்லாததும், ஸர்வதோமுகங் களுமான விஸ்வரூபத்தைக் காண்பித்தனர். ஆகாயத்தின்கண் ஆயி ரம் சூரியன் ஏககாலத்திலுதித்தால் அது அம்மகாத்மாவினது தே ஜஸ்ஸாகக் கிடாகும். (கூ-௰-௧௧-௧௨)

தத்ரைகஸ்தம் ஜகத் க்ருத்ஸ்நம் ப்ரவிபக்தமநேகதா|
அபஸ்யத்தேவதேவஸ்ய ஶரீரே பாண்டவஸ்ததா||௧௩||

(ப-ம்) தேவதேவஸ்ய-தேவதேவனுடைய, தத்ர-அந்த, சரீரே- சரீரத்தில், ஏகஸ்த்தம்-ஒரிடத்தில் இருக்குமதும், அனேகப்பிரகார மாக, ப்ரவிபக்தம்-பிரிக்கப்பட்டதுமான, க்ருத்ஸ்நம்-ஸமஸ்த,ஜகத்- லோகத்தையும், ததா-அப்பொழுது, பாண்டவ:-அருச்சுனன், அப ஸ்யத-பார்த்தான். (௧௩)

(தா-ம்) அப்பொழுது அர்ஜ்ஜுனன் தேவதேவனை பகவா னது சரீரத்தில் நானாவிதங்களான விபாகங்களுடன் கூடிய அகண் டப்பிரபஞ்சங்களையும் ஒருபாகத்தி லிருப்பதாகப் பார்த்தனன். ()

ததஸ்ஸவிஸ்மயாவிஷ்டோ ஹ்ருஷ்டரோமா தனஞ்ஜய꞉ ||
ப்ரணம்ய ஶிரஸா தேவம் க்ருதாஞ்ஜலிரபாஷத ||௧௪||

(ப-ம்) தத꞉-பிறகு, ஸ꞉-அந்த விஸ்மய ஆவிஷ்ட꞉- ஆச்சரியயுக்தனும், ஹ்ருஷ்டரோமா꞉-சிலிர்த்தமயிருடையனுன, தனஞ்ஜய꞉-அர்ச்சுனன், தேவம்-தேவனை, சிரஸா-தலையால், ப்ரணம்ய-வணங்கி, க்ருதாஞ்ஜலி꞉-கைகூப்பினவனும், அபாஷத-சொன்னான். (௧௪)

(தா-ம்) அப்பிறகு அர்ஜ்ஜுனன் ஆச்சரியத்தால் பரவசனும் ரோமாஞ்சமுண்டாகி (மயிர்கூச்சலுண்டாகி) அப்பகவானைவணங்கிக் குவித்தகையோடு வினவினன். (௧௪)

பஶ்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே
ஸர்வாம்ஸ்ததா பூதவிஶேஷஸங்காந் |
ப்ரஹ்மாணமீஶம் கமலாஸநஸ்தம்
ருஷீம்ஶ்ச ஸர்வாநுரகாம்ஶ்ச திவ்யாந் || ௧௫

(ப-ம்)ஹே தேவ-ஓ கிருஷ்ணமூர்த்தீ, தவ-உமமுடைய, தேஹே-சரீரத்தில், ஸர்வான் - ஸமஸ்தமான, தேவான் - தேவதைகளையும், ததா-அப்படியே, பூதவிஶேஷஸங்காந்-பிராணிவிசேஷங்களுடைய, கட்டங்களையும், ப்ரஹ்மாணம்-சதுர்முகப்ரஹ்மாவையும், கமலாஸநஸ்தம்-ப்ரஹ்மாவினிடத்திலிருக்கிற, ஈஶம்- ருத்திரனையும், ஸர்வான்-ஸமஸ்தமான, ருஷீம்ஶ்ச-ருஷிகளையும், திவ்யாந்-திவ்யங்களான, உரகாந்-நல்லபாம்புகளையும், பஶ்யாமி-பார்க்கிறேன். (௧௫)

(தா-ம்) தேவா ! உன் சரீரத்தில் எல்லா தேவர்களையும் எல்லாப்பிராணிகளையும், அவைகளுள்ளிருக்கும் பகுதிகளையும், கமலாஸனனும், சிருஷ்டிகர்த்தனுமான ப்ரம்மனையும், தேவரிஷிகள் முதலிய மகரிஷிகளையும், வாஸுகி தக்ஷகன் முதலிய பற்பல ஸர்ப்பங்களையும் ஈசனையும் பார்க்கின்றேன். (௰) ஈசம்-ப்ரஜைகளுக்கு கல்லாமிசனும். (௧௫)

அநேகபாஹூதரவக்த்ரநேத்ரம்
பஶ்யாமி த்வாம் ஸர்வதோऽநந்தரூபம் |
நாந்தம் ந மத்யம் ந புநஸ்தவாதிம்
பஶ்யாமி விஶ்வேஶ்வர விஶ்வரூப || ௧௬

(ப-ம்) அநேக பாஹூதர வக்த்ரநேத்ரம்-அநேகம்புயங்களும் வயிறுகளும்முகங்களும்கண்களுமுடையனும் அநந்தரூபம் அளவற்றரூபமுடையனுமான, த்வா-உம்மை, ஸர்வத꞉-எல்லாவற்றிலும்; பஶ்யாமி-பார்க்கிறேன். ஹே விஶ்வேஶ்வர-எல்லாவற்றிலும் அதிபதியானவனே, ஹே விஶ்வரூப-ஓ ஜகத்ரூப! தவ-உன்னுடைய, அந்தம்-முடி

லை, ந பஶ்யாமி-காணவில்லேன். மத்யம்-இடையை, ந (பச்யாமி)-பார்க்கிறேனில்லை. (கசு)

(தா-ம்) ஜகதீசா! அநேக கைகளும், அனேக உதரங்களும், பல நேத்திரங்களும், அந்தமில்லாத ரூபமும் கூடிய உம்மை எங்குங் காண்கின்றேன். ஏ விஶ்வரூபா! உமது முடிவும், மத்தியமும், உற்பத்தியும் தெரியவில்லை. (கசு)

கிரீடிநம் கதிநம் சக்ரிணஞ்ச
தேஜோராஶிம் ஸர்வதோ தீப்திமந்தம்।
பஶ்யாமி த்வாம் துர்நிரீக்ஷ்யம் ஸமந்தாத்
தீப்தாநலார்கத்யுதிமப்ரமேயம்॥ கஎ॥

(ப-ம்) தேஜோராசிம்-தேஜோராசியும், ஸர்வத:-எல்லாவற்றிலும், தீப்திமந்தம்-பிரகாசிப்பவரும், ஸமந்தாத்-எங்கும், துர்நிரீக்ஷ்யம்-பார்க்கக்கூடாதவரும் தீப்தாநலார்கத்யுதிம்-பிரகாசிக்கின்ற அக்னிசூரியாளின்காந்தியுடையவரும், அப்ரமேயம்-அறியசக்கிடமல்லாதவருமான, த்வாம்-உன்னை, கிரீடிநம்-கிரீடமுடையரும். கதிநம், கதையுடையரும், சக்ரிம்ச - சக்கரமுடையருமக, பச்யாமி-பார்க்கிறேன். (கஎ)

(தா-ம்) தேஜோரூபமாய் எல்லாத் திக்கிலும் பிரகாசித்துக்கொண்டும், பார்ப்பதற்கு அசக்கியனாய் நான்கு திக்கிலும் ஜ்வலித்துக்கொண்டும், அக்கினி சூரியன் இவர்களைப்போன்ற தேஜஸ் உடையவனாயும், அப்ரமேயனுமிருக்கிற உம்மை கிரீடம், கதை சக்ரம் இவைகளைத் தாங்கினவராய்ப் பார்க்கின்றேன். (கஎ)

த்வமக்ஷரம் பரமம் வேதிதவ்யம்
த்வமஸ்ய விஶ்வஸ்ய பரம் நிதாநம்।
த்வமவ்யய: ஶாஶ்வததர்மகோப்தா
ஸநாதநஸ்த்வம் புருஷோ மதோ மே॥ கஅ॥

(ப-ம்) வேதிதவ்யம்-அறியவேண்டிய, பரமம்-பெரிதாகிய, அக்ஷரம்-ப்ரப்ரஹ்மம், த்வம்-நீ, அஸ்ய-இந்த, விஶ்வஸ்ய-ஜகத்துக்கு, பரம்-பெரிய, நிதாநம்-ஆதாரம், த்வம்-நீ, அவ்யய:-நாசமில்லாதவன், த்வம்-நீ, ஶாஶ்வததர்மகோப்தா - ஶாஶ்வதமான தர்மத்தைப் பாலிக்கிறவன், நீ, ஸநாதந:-புராணனாகிய, புருஷ:-புருஷனும், த்வமேவ-நீயேயென்று, மே. என்னுடைய, மத:-அபிப்ராயம். (கஅ

(தா-ம்) அழியற்பாலனவாகிய சிறந்த ப்ரம்மம் நீங்களே நீவிரே இவ்வுலகத்திற்கு முக்கிய காரணன். உமக்கழிவில்லை, நீவிரே ஸ்திரமாய் அறத்தைப் பரிபாலிப்பவர், நீவிரே நித்தியரூபியான புருடன் என்பது என் கருத்து. (௧௮)

𑌅𑌨𑌾𑌦𑌿𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌮𑌨𑌨𑍍𑌤𑌵𑍀𑌰𑍍𑌯𑌮𑍍
𑌅𑌨𑌨𑍍𑌤𑌬𑌾𑌹𑍁𑌂 𑌶𑌶𑌿𑌸𑍂𑌰𑍍𑌯𑌨𑍇𑌤𑍍𑌰𑌮𑍍 |
𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌦𑍀𑌪𑍍𑌤𑌹𑍁𑌤𑌾𑌶𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂
𑌸𑍍𑌵𑌤𑍇𑌜𑌸𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌤𑌪𑌨𑍍𑌤𑌮𑍍 || ௧௯||

(ப-ம்) அநாதி மத்யாந்தம்-ஆதி மத்தியம் அந்தமில்லாதவரும், அநந்தவீர்யம்-அளவற்ற பராக்கிரமமுடையரும், அநந்தபாஹும்-அநந்தமான பராக்கிரமமுடையரும், சசி ஸூர்ய நேத்ரம்-சந்திர சூரியாளைக்கண்களாயுடையரும், தீப்தஹுதாச வக்த்ரம்-ஜ்வலிக்கிற அக்னிபோன்றமுகமுடையருமஸ்வதேஜஸா-தம்தேஜஸ்ஸாலே, இதம்-இந்த, விஸ்வம்-லோகத்தை, தபந்தம்-தபிக்கச்செய்கிறவனுமாகிய, த்வாம்-உன்னை, பச்யாமி-பார்க்கிறேன். (௧௯)

(தா-ம்) உற்பத்தி லய ஸ்திதி முதலியவைகளற்ற அபரிமித சக்தியுக்தனும், அளவிறந்த கைகளையுடையவனும், சந்திரசூரியர் போன்ற கண்களால் பிரகாசிப்பவனும், பிரளயகாலாக்கினியைப் போன்ற முகமுடையவனும், நின் ஒளியால் அவ்வுலகை பிரகாசிக்கிறவனுமுள்ள உன்னை நன்கு பார்க்கின்றேன். (௧௯)

𑌦𑍍𑌯𑌾𑌵𑌾𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑍋𑌰𑌿𑌦𑌮𑌨𑍍𑌤𑌰𑌂 𑌹𑌿
𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌤𑍍𑌵𑌯𑍈𑌕𑍇𑌨 𑌦𑌿𑌶𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 |
𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌂 𑌰𑍂𑌪𑌮𑍁𑌗𑍍𑌰𑌂 𑌤𑌵𑍇𑌦𑌂
𑌲𑍋𑌕𑌤𑍍𑌰𑌯𑌂 𑌪𑍍𑌰𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌂 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑍍 | ௨௰||

(ப-ம்) த்யாவாப்ருதிவ்யோ:-ஆகாசத்தினுடையவும் பூமியினுடையவும், இதம் அந்தரம்-இந்தஇடவெளியானது, ஏகேந-ஒருவரான, த்வயா-உம்மால், வ்யாப்தம்ஹி-வியாபிக்கப்பட்டதன்றோ? ஸர்வா:-எல்லா, திஸஸ-திசைகளும் (வியாபிக்கப்பட்டன), ஹேமஹாத்மாவே! அத்புதம்-ஆச்சரியமுற்றதும், உக்ரம்-பயங்கரமானதுமான, தவ-உன்னுடைய, இதம்-இந்த,ரூபம்-உருவத்தை,த்ருஷ்ட்வா-பார்த்து,லோகத்ரயம்-உலகமூன்றும், ப்ரவ்யதிதம்-வெருளுகின்றன.(௨௰)

(தா-ம்) பகவானே! ஊர்த்துவலோகமும், அதோலோகமும், மத்தியலோகமும், எல்லா திக்குகளும், உன்னாலேயே வியாபித்திருக்கிறது. உனது ஆச்சர்யகரமான, இந்த உக்ர ஸ்வரூபத்தைக் கண்டு மூன்றுலோகமும் நடுங்குகின்றன. (௬௦) ப்ரவ்யதிதம் நடுங்கிருக்கிறது. (௨௦)

அமீ ஹி த்வாம் ஸுரஸங்கா விஶந்தி
கேசித் பீதா: ப்ராஞ்ஜலயோ க்ருணந்தி|
ஸ்வஸ்தீத்யுக்த்வா மஹர்ஷிஸித்தஸங்கா:
ஸ்துவந்தி த்வாம் ஸ்துதிபி: புஷ்கலாபி:|| ௨௧||

(ப-ம்) அமீ-இந்த, த்வாம்-உம்மை, ஸுரஸங்கா:-தேவஸமூஹங்கள், விசந்தி-பிரவேசிக்கின்றனவல்லவா; கேசித்-சிலர், பீதா:-பயந்தவர்களாய், ப்ராஞ்ஜலய:-கைகூப்பிக்கொண்டு, க்ருணந்தி-தோத்திரம் செய்கிறார்கள், மஹர்ஷி ஸித்தஸங்கா: - மஹருஷிகணங்களும் சித்தகணங்களும், ஸ்வஸ்தி-இதி உக்த்வா - "ஸ்வஸ்தி" என்று சொல்லி, புஷ்கலாபி:-ஸம்பூர்ணமான, ஸ்துதிபி:-தோத்திரங்களால், த்வாம்-உன்னை, ஸ்துவந்தி - தோத்திரஞ்செய்கின்றனர். (௨௧)

(தா-ம்) இந்த தேவக்கூட்டங்கள் உம்மிடத்திற் பிரவேசிக்கின்றனர். இவர்களுள் சிலர் நுங்கள் உக்கிரஸ்வரூபத்தைக்கண்டு பயந்து அஞ்ஜலி பத்தர்களாய்த் துதிக்கின்றனர். மகரிஷிகளும், சித்தர்களும் மங்களமுண்டாகக் கடவதென்று பகவத்குணங்களை ஸ்தோத்திர ரூபமாய் முழங்குகின்றனர். (௨௧)

ருத்ராதித்யா வஸவோ யே ச ஸாத்யா
விஶ்வேऽஶ்விநௌ மருதஶ்சோஷ்மபாஶ்ச|
கந்தர்வயக்ஷாஸுரஸித்தஸங்கா:
வீக்ஷந்தே த்வாம் விஸ்மிதாஶ்சைவ ஸர்வே|| ௨௨||

(ப-ம்) ருத்ரஆதித்யா:-பதினொரு ருத்திரர்களும் பன்னிரண்டு சூரியர்களும், வஸவ:-வசுக்கள், ஸாத்யா:யே-ஸாத்தியர்கள் எவர்களோ, தேச-அவர்களும், விஸ்வே-விசுவேதேவரும், அஸ்வினௌ-அஸ்வனீதேவர்களும், மருத:ச-மருத்துக்களும், உஷ்மபா:ச-பித்ருக்களும், கந்தர்வயக்ஷாஸுரஸித்தஸங்கா:-ஹாஹா ஹூஹூ, முதலானகந்த்ருவர் இயக்கர் அசுரர்சித்தர்களின் கூட்டங்களும், ஸர்வே ச ஏவ-எல்லாருமே, விஸ்மிதா:- ஆச்சரியமுற்றவர்களாய், த்வாம்-உன்னை, வீக்ஷந்தே-பார்க்கிறார்கள். (௨௨)

(தா-ம்) உமது அத்புதஸ்வரூபத்தை உருத்திரர்களும், ஆதித்தியர்களும், வஸுக்களும், ஸர்த்தியர்களும், விஸ்வேதேவர்களும், அஸ்விநீதேவதைகளும், மருத்துக்களும், பித்ருதேவதைகளும், கெந்தர்வர்களும், யக்ஷர்களும், அசுரர்களும், சித்தர்களுங் கூடிப்பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். (ஸ) கந்தர்வயக்ஷாஸுரஸித்தஸங்கா:- ஹாஹாஹூஹூ முதலியகந்தர்வ ஸமூகங்களும், குபேரன் முதலிய யக்ஷர்களும், விரோசனுதி அசுரர்களும், கபிலர் முதலிய சித்தர்களும் உன்னைபார்க்கிறார்கள். (௨௨)

ரூபம் மஹத்தே பஹுவக்த்ரநேத்ரம்
மஹாபாஹோ பஹுபாஹூருபாதம்।
பஹூதரம் பஹுதம்ஷ்ட்ராகராலம்
த்ருஷ்ட்வா லோகா: ப்ரவ்யதிதாஸ்ததாஹம்॥ ௨௩॥

(ப-ம்) ஹேமஹாபாஹோ-ஓபெருந்தோளுடைய ஓக்ருஷ்ணு! பஹுவக்த்ர நேத்ரம் - பலமுகமும் கண்களுமுடையதும், பஹுபாஹூருபாதம்-பல தோள்களும் தொடைகளும் பாதங்களுமுடையதும், பஹூதரம்-பலவயிறுகளுடையதும், பஹுதம்ஷ்ட்ராகராளம்-பல கோரப்பற்களாலே விகாரமானதும், மஹத்-பெரியதுமான, தே-உனக்கு, ரூபம்-உருவத்தை, த்ருஷ்ட்வா-பார்த்து, லோகா:-உலகத்தார், ப்ரவ்யதிதா:-அஞ்சுகிறார்கள், அஹம் (ச)-நானும், ததா-அப்படியே அஞ்சுகின்றேன். (௨௩)

(தா-ம்) மஹாபாஹோ! உமது அனேகநேத்திரங்களையும் பற்பல முகங்களையும், கைகளையும், புசங்களையும் கால்களையும், உதரங்களையும், சிங்கப்பற்களையும், பயங்கரமான ரூபத்தையுங்கண்டு எல்லா உலகங்களும், யானும் பீதியடைகின்றோம். (௨௩)

நப:ஸ்ப்ருஸம் தீப்தமநேகவர்ணம்
வ்யாத்தாநநம் தீப்தவிஸாலநேத்ரம்।
த்ருஷ்ட்வா ஹி த்வாம் ப்ரவ்யதிதாந்தராத்மா
த்ருதிம் ந விந்தாமி ஸமம் ச விஷ்ணோ॥ ௨௪॥

(ப-ம்) (ஹே) விஷ்ணோ-ஓவிஷ்ணுவே! நபஸ்ப்ருஸம்-ஆகாசத்தைத்தொட்டு, தீப்தம்-பிரகாசித்து, அநேகவர்ணம்-பல வர்ணங்களுடையவனும், வ்யாத்தாநநம்-திறந்தவாயுடையவனும், தீப்தவிசால நேத்ரம்-பிரகாசமும் விசாலமுமான கண்களுடையனுமான, த்வாம்-உன்னை, த்ருஷ்ட்வா-பார்த்து, ப்ரவ்யதிதாந்தராத்மா-சலித்தமனமு

டையனாய், த்ருதிம்-தைரியத்தையும், சமம் ச-சாந்தியையும், நவிந்தாமி-அடையாமலிருக்கிறேன். (௨௪)

(தா-ம்) ஓ கிருஷ்ணா! ஆகாசம் வரையில் வியாபித்து ஜ்வலித்துப் பற்பல காந்தியோடு நிறைந்துகொண்டு பிரகாசிக்கின்ற விசால நேத்திரமுடைய உங்களைக் கண்டு நடுங்கிய மனதுடன் கூடிய யான் தேகத்தைத் தரிக்கவில்லை, மனதிற்கும், இந்திரியங்கட்கும் உபசாந்தியு முண்டாகவில்லை. (ஶம்) ஶமஞ்ச-உள்ள கிளர்ச்சியையும். (௨௪)

𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌕𑌰𑌾𑌲𑌾𑌨𑌿 𑌚 𑌤𑍇 𑌮𑍁𑌖𑌾𑌨𑌿
𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑍈𑌵 𑌕𑌾𑌲𑌾𑌨𑌲𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌾𑌨𑌿।
𑌦𑌿𑌶𑍋 𑌨 𑌜𑌾𑌨𑍇 𑌨 𑌲𑌭𑍇 𑌚 𑌶𑌰𑍍𑌮
𑌪𑍍𑌰𑌸𑍀𑌦 𑌦𑍇𑌵𑍇𑌶 𑌜𑌗𑌨𑍍𑌨𑌿𑌵𑌾𑌸॥ ௨௫॥

(ப-ம்) தம்ஷ்ட்ராகராளாநி-கோரைப்பற்களால் விகாரமுற்று, காலாநல ஸந்நிபாநிச- காலாக்கினிக்குச் சமமாயிருக்கும், தே-உன்னுடைய, முகாநிச-முகங்களை, த்ருஷ்ட்வைவ-பார்த்தே, திச:-திசைகளை, நஜாநே-அறியகிலேன், சர்ம ச-சுகத்தையும், நலபே-அடைகில்லேன், (ஹே) தேவேச-ஓ தேவநாத, (ஹே) ஜகந்நிவாஸ-ஓ ஜகத்துக்கு வாஸஸ்த்தான மானவரே, ப்ரஸீத - அனுக்கிரஹித்தருள வேண்டும். (௨௫)

(தா-ம்) ஓதேவேசா!ஓ ஜகந்நிவாஸா! கோரப்பற்களால்பயங்கரமாயும் பிரளயகாலாக்னிக்குச சமதையாயுமுள்ள உமது முகத்தைப்பார்த்த உடனே திக்பிரமை யுண்டான வனாகிறேன். சாந்தியடையவில்லை. (ஆதலால் அனுக்கிரகக்கவேண்டும்.) (௨௫)

𑌅𑌮𑍀 𑌚 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌃
𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑌹𑍈𑌵𑌾𑌵𑌨𑌿𑌪𑌾𑌲𑌸𑌙𑍍𑌘𑍈𑌃।
𑌭𑍀𑌷𑍍𑌮𑍋 𑌦𑍍𑌰𑍋𑌣𑌃 𑌸𑍂𑌤𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌤𑌥𑌾𑌸𑍌
𑌸𑌹𑌾𑌸𑍍𑌮𑌦𑍀𑌯𑍈𑌰𑌪𑌿 𑌯𑍋𑌧𑌮𑍁𑌖𑍍𑌯𑍈𑌃॥ ௨௬॥
𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌤𑍇 𑌤𑍍𑌵𑌰𑌮𑌾𑌣𑌾 𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿
𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌕𑌰𑌾𑌲𑌾𑌨𑌿 𑌭𑌯𑌾𑌨𑌕𑌾𑌨𑌿।
𑌕𑍇𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌲𑌗𑍍𑌨𑌾 𑌦𑌶𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑍇𑌷𑍁
𑌸𑌨𑍍𑌦𑍃𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌚𑍂𑌰𑍍𑌣𑌿𑌤𑍈𑌰𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌙𑍍𑌗𑍈𑌃॥ ௨௭॥

(ப-ம்) அமீ-இந்த, ஸர்வே-ஸகலருமான, த்ருதராஷ்ட்ரஸ்ய-திருதராஷ்டிரர்களின், புத்ரா:-புத்திரர்களும், ததா-அப்படியே, பீஷ்ம:-

பீஷ்மரும்,த்ரோணஃ-துரோணரும், ததா-அப்படியே,அஸௌ-இந்த;
ஸூதபுத்ரஃ-ஸூதபுத்திரனும், ஸர்வைஃ-ஸகலமான, அவநிபாலஸங்
கைஃஸஹ-ராஜாக்களின் கூட்டங்களுடனுங்கூட, அஸ்மதீயைஃ-எம்
மவர்களான, யோதமுக்யைஃ ஸஹ-வீரஶ்ரேஷ்டர்களோடுங்கூட, தம்
ஷ்ட்ராகராளானி-கோரப்பற்களால் விகாரமாயும், பயாநகானி-பயங்கர
மாயுமிருக்கிற,தே-உன்னுடைய,வக்த்ராணி-முகங்களை;த்வரமாணாஃ-
வேகமாய், விசந்தி-பிரவேசிக்கிறார்கள், கேசித்-சிலர், தசநாந்தரே
ஷு-பல் இடுக்குகளில், விலக்நாஃ-ஒட்டிக்கொண்டு, சூர்ணிதைஃ-
பொடிபண்ணப்பட்ட,உத்தமாங்கைஃ-சிரங்களுடன், ஸந்த்ருச்யந்தே-
காணப்படுகிறார்கள். (உசு-உஎ)

(தா-ம்) அனேக வீரப்ரதாபர்களான அரசர்களோடு இந்ததிரு
தராஷ்டிரபுத்திரர்களும், பீஷ்மரும்,துரோணரும், கர்ணனும் கூடிக்
கொண்டு சிங்கபற்களால் விகாரங்களாயும், பயங்கரங்களாயுமிருக்
கிற நுங்கள் முகங்களில் சிலர் வேகமாய்பிரவேசிக்கின்றார்கள். சிற்
சிலர் உடைபட்டசிரசோடு பற்களினது தவாரத்திலகப்பட்டுக்
கொண்டு பொடிபொடியானதாய்க் காணப்படுகின்றனர். ()

யதா நதீநாம் பஹவோம்புவேகா:
ஸமுத்ரமேவாபிமுகா த்ரவந்தி |
ததா தவாமீ நரலோகவீரா
விசந்தி வக்த்ராண்யபிவிஜ்வலந்தி || உஅ ||

(ப-ம்) யதா-எப்படி,நதீநாம்-ஆறுகளின்,பஹவஃ-பலவாறான,அ
ம்புவேகாஃ-நீர்வெள்ளங்கள், ஸமுத்ரம்ஏவ-சமுத்திரத்தையே, அபி
முகாஃ-எதிர்நோக்கி த்ரவந்தி-ஓடுகின்றனவோ, ததா-அப்படி, அமீ-
இந்த, நரலோகவீராஃ-மனுஷ்யலோகவீரர்கள், அபிவிஜ்வலந்தி-நாற்
புறமும், ஜ்வலிக்கின்ற, தவ-உன்னுடைய, வக்த்ராணி-முகங்களில்,
விசந்தி-புகுகின்றார்கள். (உஅ)

(தா-ம்) எவ்வண்ணம் எல்லா நதிகளுடைய பிரவாகங்களும்
சமுத்திரத்தைக்குறித்துச் சொல்லுகின்றனவோ, அவ்வண்ணமே
இந்த இராஜவீரர்களெல்லவரும் ஜ்வலித்துக்கொண்டிருக்கிற உமது
முகத்திலேயே வந்து விழுகிறார்கள், (உஅ)

யதா ப்ரதீப்தம் ஜ்வலநம் பதங்கா
விசந்தி நாசாய ஸம்ருத்தவேகா: |
ததைவ நாசாய விசந்தி லோகா
ஸ்தவாபி வக்த்ராணி ஸம்ருத்தவேகா: || உகூ ||

(ப-ம்) யதா-எப்படி, பதங்கா:-பக்ஷிகள், ப்ரதீப்தம்-நன்றாய் ஜ்வலிக்கின்ற, ஜ்வலநம்-அக்னியை(க்குறித்து), ஸம்ருத்தவேகா:-மிகுந்தவேகத்தோடு, நாசாய-நாசத்தின்பொருட்டு, விசந்தி-ப்ரவேசிக்கின்றனவோ, லோகா:அபி-(இந்த) லோகங்களும், ததாஏவ-அப்படியே, தவ-உன்னுடைய, வக்த்ராணி-முகங்களை(க்குறித்து), ஸம்ருத்தவேகா:-மிகுந்தவேகத்தோடு, நாசாய-நாசத்தின்பொருட்டு, விசந்தி-பிரவேசிக்கின்றன. (௨௯)

(தா-ப்) எவ்வாறு ஜ்வலித்துக்கொண்டிருக்கிற அக்கினியில் சலபங்கள் (விளக்குப்பூச்சி) தாம் நசிப்பதற்கு அதிக வேகத்தினுடன் விழுகின்றனவோ, அவ்வாறே இந்த அரசவீரர்களும் அதிகவேகத்தோடு தாம் நாசமடைவதற்கு உமது முகத்தில் பிரவேசிக்கிறார்கள். (௨௯)

லேலிஹ்யஸே க்ரஸமாந: ஸமந்தாத்
லோகாந் ஸமக்ராந் வதநைர்ஜ்வலத்பி: |
தேஜோபிராபூர்ய ஜகத்ஸமக்ரம்
பாஸஸ்தவோக்ரா: ப்ரதபந்தி விஷ்ணோ || ௩௰ ||

(ப-ம்) ஸமக்ராந்-ஸம்பூர்ணமான, லோகாந்-ஜனங்களையும், ஜ்வலத்பி:-ஜ்வலிக்கின்ற, வதநை:-வாய்களாலே, க்ரஸமாந:-விழுங்குகிறவனாய், ஸமந்தாத்-நாலுபக்கமும், லேலிஹ்யஸே-(அடிக்கடி) உதட்டை நக்குகிறாய், தேஜோபி:-தேஜஸ்ஸுக்களாலே, ஸமக்ரம்-எல்லா, ஜகத்-ஜகத்தையும், ஆபூர்ய-நிறைத்து, (ஹே) விஷ்ணோ-மஹாவிஷ்ணுவே, தவ-உன்னுடைய, உக்ரா:-உக்கிரமான, பாஸ:-கிரணங்கள், ப்ரதபந்தி-தவிக்கின்றன. (௩௰)

(தா-ம்) கேசவா! நான்குதிசைகளிலுள்ள ஸமஸ்த அரசர்களையும் பிரகாசிக்கின்ற முகத்தால் புஜித்துவிட்டு மீண்டும் வாயைத்திறக்கின்றீர். உக்கிரமான உமது கிரணங்களுடையபிரகாசம் எங்கும் வ்யாபித்து ஸமஸ்த உலகத்தையும் தபிக்கச்செய்கின்றது.()

ஆக்யாஹி மே கோ பவாநுக்ரரூபோ
நமோஸ்து தே தேவவர ப்ரஸீத |
விஜ்ஞாதுமிச்சாமி பவந்தமாத்யம்
ந ஹி ப்ரஜாநாமி தவ ப்ரவ்ருத்திம் || ௩௧ ||

(ப-ம்) மே-எனக்கு, ஆக்யாஹி-சொல்லும்; உக்ரரூப:-குரூரரூபியான, பவாந்-நீர் க:-யார்? தே உமக்கு, நம:-நமஸ்காரம், அஸ்து-

உண்டாகட்டும்; (ஹே) தேவவர-ஓதேவச்ரேஷ்ட, ப்ரஸீத-அனுக்கிரஹியும், ஆத்யம்-ஆதியரான, பவந்தம்-உம்மை, விஜ்ஞாதும்-தெரிந்துக்கொள்ள, இச்சாமி-விரும்புகிறேன், தவ-உன்னுடைய, ப்ரவ்ருத்திம்-விருத்தாந்தத்தை, நப்ரஜாநாமிஹி-அறியகில்லேனென்றே.()

(தா-ம்) இத்தகைய உக்ரஸ்வரூபமுடைய நீங்களார்? (என்பதால் நுங்கள் அத்புதஸ்வரூபத்தைப பார்ப்பதற்குக் கருதிய எனக்கு நீங்களிப்படிப்பட்ட கோரரூபத்தைக் காண்பிப்பதெதற்கு?) அதை எனக்கு அறிவித்தல் வேண்டும், உமக்குவந்தனம். தேவேசா! அநுக்கிரகஞ் செய்யவேண்டும், ஆதிபுருஷனை உண்மை தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நீயிற்செய்யப்போகிற காரியம் எனக்குத் தெரியவில்லை. (௩௧)

ஸ்ரீ கிருஷ்ணவாக்கியம்.

காலோ(அ)ஸ்மி லோகக்ஷயக்ருத் ப்ரவ்ருத்தோ
லோகாந் ஸமாஹர்த்துமிஹ ப்ரவ்ருத்த꞉ |
ருதே(அ)பி த்வாம் ந பவிஷ்யந்தி ஸர்வே
யே(அ)வஸ்திதா꞉ ப்ரத்யநீகேஷு யோதா꞉ || ௩௨ ||

(ப-ம்) லோகக்ஷயக்ருத் - லோகங்களை க்ஷயிக்கபண்ணுவதும், ப்ரவ்ருத்த꞉-விருத்தியடைந்ததும், இஹ-இங்கே, லோகாந்-உலகங்களை, ஸமாஹர்த்தும் - ஸம்ஹரிக்க, ப்ரவ்ருத்த꞉ - பிரவர்த்தித்ததுமான, கால꞉ அஸ்மி-காலமாகிறேன், யே-எந்த, யோதா꞉-வீரர்கள், ப்ரத்யநீகேஷு - எதிர்சேனைகளில, அவஸ்திதா꞉ - இருக்கிறார்களோ, தே ஸர்வே - அவர்களெல்லாம், த்வாம்ருதேபி - உன்னைத்தவிர்த்தும், நபவிஷ்யந்தி-ஜீவிக்கமாட்டார்கள். (௩௨)

(தா-ம்) யான் இந்த இராஜ ஸமூகங்களை நாசப்படுத்துவதற்கு விர்த்தியடைந்தகாலனாகின்றேன். இவ்வுலகத்தைச்சம்கரிப்பதற்குப் பிரவர்த்தித்திருக்கிறேன். உனக்குப் பகையாளியாய் நிற்கின்ற யுத்தவீரர்க்கெல்லாம் நீவெருமையிருந்தாலும் ஜீவிக்க மாட்டார்கள். (ஸ0) ப்ரவ்ருத்த꞉-எங்கும் பரிபூரணமாயிருக்கிற; (௩௨)

தஸ்மாத் த்வமுத்திஷ்ட யஶோ லபஸ்வ
ஜித்வா ஶத்ரூந் புங்க்ஷ்வ ராஜ்யம் ஸம்ருத்தம் |
மயைவைதே நிஹதா꞉ பூர்வமேவ
நிமித்தமாத்ரம் பவ ஸவ்யஸாசிந் || ௩௩ ||

(ப-ம்) தஸ்மாத்-ஆகையால், த்வம்-நீ, உத்திஷ்ட-எழுந்திரு; யச:-கீர்த்தியை, லபஸ்வ-அடைவாயாக; சத்ரூந்-சத்துருக்களை, ஜித்வா-ஜெயித்து, ஸம்ருத்தம்-பரிபூர்ண, ராஜ்யம்-ராஜ்ஜியத்தையும், புங்க்ஷ்வ-அனுபவி. ஏதே-இவர்கள், மயா ஏவ-என்னாலேயே, பூர்வம் ஏவ-முன்னமே, நிஹதா:-கொல்லப்பட்டார்கள், (ஹே) ஸவ்யஸாசின்-ஓ ஸவ்யஸாசியே, த்வம்-நீ, நிமித்தமாத்ரம்-நிமித்தமாத்திரமாக, பவ-ஆகு. (௩௩)

(தா-ம்) அர்ஜுனா! ஆகலால் நீ, பிரயத்தினப்பட்டு வைரிகளை வென்று புகழ்பெறுவாயாக, அகண்டராஜ்ஜியத்தை யநுபவித்துக் கொண்டிரு. இவர்களெல்லவரும் முன்னமேயே என்னால் கொல்லப் பட்டார்கள். நீகாரணனாய் பாத்திரமிரு. (௩௩)

𑌦𑍍𑌰𑍋𑌣𑌂 𑌚 𑌭𑍀𑌷𑍍𑌮𑌂 𑌚 𑌜𑌯𑌦𑍍𑌰𑌥𑌂 𑌚
𑌕𑌰𑍍𑌣𑌂 𑌤𑌥𑌾𑌨𑍍𑌯𑌾𑌨𑌪𑌿 𑌯𑍋𑌧𑌵𑍀𑌰𑌾𑌨𑍍 ।
𑌮𑌯𑌾 𑌹𑌤𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌜𑌹𑌿 𑌮𑌾 𑌵𑍍𑌯𑌥𑌿𑌷𑍍𑌠𑌾
𑌯𑍁𑌧𑍍𑌯𑌸𑍍𑌵 𑌜𑍇𑌤𑌾𑌸𑌿 𑌰𑌣𑍇 𑌸𑌪𑌤𑍍𑌨𑌾𑌨𑍍 ॥ ௩௪ ॥

(ப-ம்) மயா-என்னால், ஹதாம்-கொல்லப்பட்ட, த்ரோணஞ்ச-துரோணரையும், பீஷ்மஞ்ச-பீஷ்மரையும், ஜயத்ரதஞ்ச-ஜயத்திரதனையும், கர்ணஞ்ச-கர்ணனையும், ததா-அப்படி, ஹதாம்-கொல்லப்பட்ட, அந்யாந்-இதரமான, யோதவீராந் அபி-யுத்தவீரர்களையும், த்வம்-நீ; ஜஹி-கொல்வாயாக, மாவ்யதிஷ்டா:-வேதனைப்படாதே, யுத்யஸ்வ-போர்செய், ரணே-யுத்தத்தில், ஸபத்நாந்-பகைவரை, ஜேதாஸி-ஜயிப்பாய், (௩௪)

(தா-ம்) நீ, இப்பொழுது என்னால் சொல்லப்பட்ட துரோணரையும், கர்ணனையும், இன்னுமுள்ள யுத்தவீரர்களையும், நாசஞ்செய்வாயாக. விசனம்வேண்டாம் - போர்புரி யுத்தத்தில் சத்ருக்களை ஜெயிப்பாய். (௩௪)

ஸஞ்ஜயர் சொல்லுகிறார்.

𑌏𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌵𑌚𑌨𑌂 𑌕𑍇𑌶𑌵𑌸𑍍𑌯
𑌕𑍃𑌤𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌰𑍍𑌵𑍇𑌪𑌮𑌾𑌨𑌃 𑌕𑌿𑌰𑍀𑌟𑍀 ।
𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌭𑍂𑌯 𑌏𑌵𑌾𑌹 𑌕𑍃𑌷𑍍𑌣𑌂
𑌸𑌗𑌦𑍍𑌗𑌦𑌂 𑌭𑍀𑌤𑌭𑍀𑌤𑌃 𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 ॥ ௩௫ ॥

(ப-ம்) கிரீடீ-அர்ச்சுனன், கேசவஸ்ய-கிருஷ்ணனுடைய, ஏதத் வசநம்-இந்தவார்த்தையை, ஶ்ருத்வா-கேட்டு, க்ருதஅஞ்ஜலி:-கூப்பியகையுடன், வேபமாந:-நடுங்கிக்கொண்டு, நமஸ்க்ருத்வா-நமஸ்காரஞ்செய்து, பீதபீத:-பயந்து பயந்து, ப்ரணம்ய-வணங்கி, பூய:ஏவ-மறுபடியும், ஸகத்கதம்-கத்கதஸ்வரத்தோடு, க்ருஷ்ணம் - கிருஷ்ணனை (க்குறித்து), ஆஹ-சொல்லுகிறார். (௩௫)

(தா-ம்) கிருஷ்ணனது இம்மொழிகளைக்கேட்டு அஞ்சலிசெய்து நடுநடுங்கினவனாய் வணங்கி மிகப்பயந்து மீண்டும் வணங்கி ஹீனஸ்வரத்தோடு கிருஷ்ணனைப்பார்த்து கீழ் வருமாறு கூறுகின்றான். (௩௫)

அர்ஜுனன் சொல்லுகிறான்.

ஸ்தாநே ஹ்ருஷீகேஶ தவ ப்ரகீர்த்யா
ஜகத்ப்ரஹ்ருஷ்யத்யநுரஜ்யதே ச।
ரக்ஷாம்ஸி பீதாநி திஶோ த்ரவந்தி
ஸர்வே நமஸ்யந்தி ச ஸித்தஸங்கா:॥ ௩௬॥

(ப-ம்) ஸ்தாநே-யுக்தம், (ஹே) ஹ்ருஷீகேச-ஓ இருடீகேச! தவ-உன்னுடைய, ப்ரகீர்த்யா-கீர்த்தியால், ஜகத்-ஜகத்தானது, ப்ரஹ்ருஷ்யதி-மிகவும்சந்தோஷிக்கின்றது, அநுரஜ்யதேச-அனுராகத்தையுமுறுகின்றது; ரக்ஷாம்ஸி-ராக்ஷஸர்கள், பீதாநி-பயந்து, திச:-திசைகளை(நோக்கி), த்ரவந்தி-ஓடுகின்றார்கள், ஸர்வே-ஸமஸ்தமான, ஸித்தஸங்கா:-சித்தக்கணங்களும், நமஸ்யந்தி-வணங்குகின்றன. (௩௬)

(தா-ம்) ஓ ஹ்ருஷீகேசா! உமது கீர்த்தியினால் பிரபஞ்சம் சந்தோஷிக்கின்றன. உம்மிடத்தி லன்புண்டாயிருக்கிறது. இராக்கதர் திக்குகளிற பயந்தோடுகிறார்கள். ஸித்தவித்யாதரர்முதலிய வானவர்களெல்லவரு மொருங்காய்ச்சேர்ந்து வணங்குகின்றார்க ளென்பது நியாயமேதான். (சிறந்தவர்க்கெல்லாம் சிறந்தவராயும், ப்ரம்மனைப் படைத்தவராயு மிருக்கிற நுங்களை எவர்தான் வணங்கார்?) (௩௬)

கஸ்மாச்ச தே ந நமேரந்மஹாத்மந்
கரீயஸே ப்ரஹ்மணோऽப்யாதிகர்த்ரே।
அநந்த தேவேஶ ஜகந்நிவாஸ
த்வமக்ஷரம் ஸதஸத்தத்பரம் யத்॥ ௩௭॥

(ப-ம்) (ஹே) மஹாத்மந்-ஓ மஹாத்துமாவே! கரீயஸே-பெரியவனுய், ப்ரம்ஹண꞉ அபி-பிரமனுக்கும், ஆதிகர்த்ரே-ஆதிகர்த்தாவான, தே-உமக்கு, கஸ்மாத்-ஏன், நநமேரந், நமஸ்கரியார்கள். அநந்த-அந்தமில்லாதவனே, தேவேச-தேவர்களுக்கிறையாய், ஜகந்நிவாஸ-லோகங்களுக்கு உறைவிடமான, த்வம்-நீரே, அக்ஷரம்-ஜீவாத்மதத்துவம்; ஸத்அஸத்ச-பிரகிருதிதத்துவமும், த்வம ஏவ-நீரே; தத்பரம்-அவையிரண்டைப் பார்க்கிலும் வேறான முக்தாத்துமாவோ அவையெல்லாவற்றிலும், அந்தர்யாமியாயிருப்பவன், யத் - எதுவோ (அந்தமுக்தஸ்வரூபமும்), (த்வம்)-நீரே. (௩௭)

(தா-ம்) ஓ மஹாத்மா! அநந்தகல்யாண குணங்களால் மிக்கச்சிறப்புடைத்தாயும், ப்ரம்மதேவனுக்கு ஆதிகர்த்தருமான நுங்களுக்கு ப்ரம்மன் முதலிய தேவர்கள் ஏன் நமஸ்கரிக்கமாட்டார்கள்? ஓ அநந்தா! தேவேசா! ஜகந்நிவாஸா! அக்ஷரமெனப்படும் ஜீவாத்மஸ்வரூபம் நீங்களே. காரியகாரணரூபமான ப்ரகிருதிதத்துவமும் நீங்களே. இவ்விரண்டிற்கும் வேறாயும், பிரகிருதிஸம்பந்தமற்றுமிருக்கிற ஆத்ம தத்துவமும் நீங்களே. (ம)மஹாத்மந் - பூர்ணமான ஆத்மா. (௩௭)

𑌤𑍍𑌵𑌮𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑍁𑌰𑌾𑌣𑌃
𑌤𑍍𑌵𑌮𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑌰𑌂 𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌵𑍇𑌤𑍍𑌤𑌾𑌸𑌿 𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌚 𑌪𑌰𑌂 𑌚 𑌧𑌾𑌮
𑌤𑍍𑌵𑌯𑌾 𑌤𑌤𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌨𑌨𑍍𑌤𑌰𑍂𑌪 ॥ ௩௮ ॥

(ப-ம்) த்வம்-நீரே, ஆதிதேவ꞉-ஆதிதேவன், புருஷ꞉-புருஷன், புராண꞉-புராணன், அஸ்ய விஸ்வஸ்ய-இந்தப்பிரபஞ்சத்துக்கு, பரம்-மேலான, நிதாநம்-ஆதாரமானவனும், த்வம்-நீர்தான். வேத்தா அஸி-அறிந்தவன் ஆகிறாய்; வேத்யம்ச - அறியத்தகுந்தவன்; பரம்தாமச-பெருஞ்ஸ்தானமும், அஸி-ஆகிறீர்; (ஹே) அநந்தரூப-ஓ அனந்தரூபனே! விஸ்வம்-பிரபஞ்சம், த்வயா உன்னால், ததம்-வியாபிக்கப்பட்டது. (௩௮)

(தா-ம்) நீங்களே ஆதிபுருஷனாயும், புராணபுருஷனாயும். இவ்வுலகத்திற்கு முக்கியகாரணனாயும், வேத்தாவாயும், (அறிந்தவன்) வேத்யனாயும் (அறியற்பாலன்) அடையத்தக்கவனாயுமிருக்கிறீர் ஓ அநந்தரூபா! (அபரிச்சின்னாகாரா) இவ்வுலகமெல்லாம் உம்மாலேயே வ்யாபிக்கப்பட்டிருக்கிறது. (௩௮)

𑌵𑌾𑌯𑍁𑌰𑍍𑌯𑌮𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌰𑍁𑌣𑌃 𑌶𑌶𑌾𑌙𑍍𑌕𑌃
𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌶𑍍𑌚 ।

நமோ நமஸ்தே(அ)ஸ்து ஸஹஸ்ரக்ருத்வ꞉
புநஶ்ச பூயோ(அ)பி நமோ நமஸ்தே|| ௩௯||

(ப-ம்) த்வம்-நீர், வாயு꞉-வாயு; யம꞉-இயமன்; அக்நி꞉-அக்கினி; வருண꞉-வருணன்; ஶஶாங்க꞉-சந்திரன்; பிதாமஹ꞉-பிரஜாபதியும், ப்ரபிதாமஹ꞉ச-பிரஜாபதிக்கு தகப்பனும், (பவஸி) - ஆகிறீர். தே-உமக்கு, நம꞉ அஸ்து - நமஸ்காரமுண்டாகுக; ஸஹஸ்ரக்ருத்வ꞉-ஆயிரந்தடவை, நம꞉(அஸ்து)-நமஸ்காரமுண்டாகுக; புந꞉ச-மறுபடியும், நம꞉ (அஸ்து) - நமஸ்காரமுண்டாகுக, பூய꞉ அபி-மறுபடியும், தே-உமக்கு, நம꞉-நமஸ்காரம். (௩௯)

(தா-ம்) நீவிர்காற்றும், எமனும், அக்கினியாயும், வருணனும், சந்திரனும், பிதாமஹனும், (ப்ரம்மன்) பிதாமஹனுக்கு (ப்ரம்மனுக்கு) தந்தையாயுமிருக்கின்றீர். ஆயிரம்வந்தனம். மீண்டும் பற்பல வந்தனம்! வந்தனம்!! வந்தனம்!!! (ஸம்) பூயோபிபுநஶ்ச- அனேகந்தடவை. (௩௯)

நம꞉ புரஸ்தாதத ப்ருஷ்டதஸ்தே
நமோ(அ)ஸ்து தே ஸர்வத ஏவ ஸர்வ|
அனந்தவீர்யாமிதவிக்ரமஸ்த்வம்
ஸர்வம் ஸமாப்நோஷி ததோ(அ)ஸி ஸர்வ꞉ ௪௰||

(ப-ம்) புரஸ்தாத்-எதிரில், நம꞉-நமஸ்காரம்; அத-இனிமேல் ப்ருஷ்டத꞉- பின்புறத்தில், தே-உமக்கு, நம꞉-நமஸ்காரம்; (ஹே) ஸர்வ-ஓ ஸர்வரூப! ஸர்வத ஏவ-எப்புறத்திலும், தே-உமக்கு, நம꞉-நமஸ்காரம், அஸ்து-உண்டாகட்டும். (ஹே) அநந்தவீர்ய-அந்தமில்லாத வீரியமுடையோய்! த்வம்-நீர், அமிதவிக்ரம꞉ - அளவிடப்படாத பராக்கிரமமுடையீர்; ஸர்வம்-எல்லாவற்றையும், ஸமாப்நோஷி-வ்யாபித்திருக்கிறீர், தத꞉-ஆகையால், ஸர்வ꞉ அஸி-ஸர்வஸ்வரூபனாக வாகின்றீர். (௪௰)

(தா-ம்) ஓ ஸ்வரூபி! உமது முன்பாகத்திற்கு நமஸ்காரம்! பின்பாகத்திற்கு நமஸ்காரம்! நான்குதிக்குகளுக்கும் நமஸ்காரம்! ஓ அபரிமிதசக்தியுடைய மகானுபவா! நீவிர் அபரிமிதபராக்கிரமமுடையவராயும், எல்லா வஸ்துக்களிலும் வியாபித்து மிருக்கின்றீராதலால் ஸர்வமும் நீங்களே. (௪௰)

ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம்
ஹே க்ருஷ்ண ஹே யாதவ ஹே ஸகேதி।
அஜாநதா மஹிமாநம் தவேதம்
மயா ப்ரமாதாத் ப்ரணயேந வாபி॥ ௪௧॥

யச்சாவஹாஸார்த்தமஸத்க்ருதோஸி
விஹாரஶய்யாஸநபோஜநேஷு।
ஏகோऽதவாப்யச்யுத தத்ஸமக்ஷம்
தத்க்ஷாமயே த்வாமஹமப்ரமேயம்॥ ௪௨॥

(ப-ம்) தவ-உன்னுடைய, இமம் மஹிமாநம்-இம்மஹிமையை, அஜாநதா-அறியாத, மயா-என்னால், ப்ரமாதாத்-அஜ்ஞானத்தாலோ; ப்ரணயேந வாபி-(அல்லது) ஸ்நேகத்தாலோ, ஸகா இதி-தோழன் என்று, மத்வா-நினைத்து, ஹே க்ருஷ்ண-"ஓ கிருஷ்ணா! ஹே யாதவ-ஓ யாதவ! ஹே ஸகே-ஓ தோழ!" இதி-என்று, ப்ரஸபம்-நயமின்றி, யத்உக்தம்-எது சொல்லப்பட்டதோ, அச்யுத-ஓ அச்சுத! விஹார சய்யா-ஸஞ்சரிப்பதிலும், படுக்கையிலும், ஆஸநபோஜநேஷு-இருக்கையிலும் புசிக்கையிலும், ஏகஹ்-ஏகாந்தமாயோ, அதவா-இல்லாவிடில், ஸமக்ஷம்-உம் முன்னிலையிலோ, அவஹாஸார்த்தம்-வேடிக்கைக்காக, அஸத்க்ருதோஸி இதி யத்-பூஜிக்கப்படவில்லை யென்கிறது யாதொன்றுண்டோ, தத் அபி-அதையும், அப்ரமேயம்-அறிவரியனான, த்வாம்-உம்மை(க்கொண்டு), அஹம்-நான், க்ஷாமயே-க்ஷமிக்கவேண்டுமென்று, ப்ரார்த்திக்கிறேன். (௪௧-௪௨)

(தா-ம்) இப்படிப்பட்ட நுங்கள் மஹிமையை யுணராது அஞ்ஞானத்தினாலாவது, சிநேகபரியத்தினாலாவது, மித்திரனென்றெண்ணி வினயமின்றி ஓ கிருஷ்ணா! ஓ யாதவா! ஓ சிநேகிதனே! என்று பலமுறைகள் அழைத்திருக்கிறேன். அவைகளையும் அச்சுதா! பரிகாசமாய் விளையாடும்போதும், படுக்கும்போதும், புசிக்கும்போதும், ஏகாந்தத்திலும், ஜனஸமூகங்களிலும், மட்டுமரியாதையில்லாமல் வசனித்தேனோ என்னமோ அறிகிலம். அப்படியிருப்பின் அவைகளைத் தாங்கள க்ஷமிக்கவேண்டுமென்று வினயத்துடன்பிரார்த்திக்கின்றேன். (௪௧-௪௨)

பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய
த்வமஸ்ய பூஜ்யஶ்ச குருர்கரீயாந்।
ந த்வத்ஸமோஸ்த்யப்யதிக: குதோந்யோ
லோகத்ரயேப்யப்ரதிமப்ரபாவ॥ ௪௩॥

(ப-ம்) ஹே அப்ரதிமப்ரபாவ-ஒப்பில்லாத பிரபாவமுடையவரே! த்வம்-நீர், சராசரஸ்ய-ஜங்கமாஜங்கமரூபமான, அஸ்ய-இந்த, லோகஸ்ய-பிராணிஸமூஹத்துக்கு, பிதா-பிதாவும், பூஜ்ய:-பூஜ்யனும், குரு:-குருவும், கரீயாந்ச-பெரியவரும், அஸி-ஆகிறீர், லோகத்ரயேபி-உலகமூன்றிலும், த்வத்ஸம:-உமக்குஈடு, நாஸ்தி-இல்லை, அப்யதிக:-அதிகனான, அந்ய: ஒருவன், குத:-எந்தஹேதுவினால் (உண்டாவான்). (௪௩)

(தா-ம்) ஸமானமில்லாப் பிரபாவமுடையவனே! நீவிர் ஜங்கமஸ்தாவரரூபமான இப்பிரபஞ்சத்திற்குத் தந்தையாயும், எல்லாவற்றிற்கும் பூஜ்ஜியனாயு மிருக்கிறீராதலால் எல்லாவற்றிலும் சிறந்தவர் உமக்குச் சமதையானவரும். (௪௩)

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 𑌪𑍍𑌰𑌣𑌿𑌧𑌾𑌯 𑌕𑌾𑌯𑌂
𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌯𑍇 𑌤𑍍𑌵𑌾𑌮𑌹𑌮𑍀𑌶𑌮𑍀𑌡𑍍𑌯𑌮𑍍।
𑌪𑌿𑌤𑍇𑌵 𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑌖𑍇𑌵 𑌸𑌖𑍍𑌯𑍁𑌃
𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌯𑌾𑌰𑍍𑌹𑌸𑌿 𑌦𑍇𑌵 𑌸𑍋𑌢𑍁𑌮𑍍॥ ௪௪॥

(ப-ம்) தஸ்மாத் ஆகையால், ப்ரணம்ய-நமஸ்கரி, காயம்-சரீரத்தை, ப்ரணிதாய-(பூமியில்) ஊன்றி, ஈசம்-ஈசுவரனாய், ஈட்யம்-ஸ்தோத்திரார்ஹனான, த்வாம்-உம்மை, அஹம்-நான், ப்ரஸாதயே-பிரஸன்னமாக்கிக்கொள்ளுகிறேன், (ஹே) தேவ-ஓ தேவனே! புத்ரஸ்ய-புத்திரனுக்கு, பிதாஇவ-பிதாவைப்போலவும், ப்ரிய:-இஷ்டனை(நீர்)ப்ரியாய-இஷ்டனான,(மே)-எனக்காக, ஸோடும்-பொறுக்க, அர்ஹஸி-தகுந்தவனாகிறாய். (௪௪)

(தா-ம்) தேவா! ஆகையால் நமஸ்கரித்து மிகுந்த வினயத்தோடு ஈசனாயும், ஸ்தோத்திரார்கனாயுமிருக்கிற உன்னை பிரார்த்திக்கிறேன். புத்திரனிடத்தில் தகப்பன் எப்படியிருப்பானோ, நேசனிடத்தில் சிநேகிதனெவ்வாறிருப்பானோ, அவ்வாறே உனக்கிஷ்டனான என்னிடத்தில் எனக்கிஷ்டனான நீ எல்லாவற்றிலும் க்ஷமிப்பதற்குரியவனாகிறாய், (௪௪)

𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌹𑍃𑌷𑌿𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾
𑌭𑌯𑍇𑌨 𑌚 𑌪𑍍𑌰𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌂 𑌮𑌨𑍋 𑌮𑍇।
𑌤𑌦𑍇𑌵 𑌮𑍇 𑌦𑌰𑍍𑌶𑌯 𑌦𑍇𑌵 𑌰𑍂𑌪𑌂
𑌪𑍍𑌰𑌸𑍀𑌦 𑌦𑍇𑌵𑍇𑌶 𑌜𑌗𑌨𑍍𑌨𑌿𑌵𑌾𑌸॥ ௪௫।

(ப-ம்) அத்ருஷ்டபூர்வம்-முன்பார்த்திராததை, த்ருஷ்ட்வா-

பார்த்து, ஹ்ருஷிதம்-ஸந்தோஷமடைந்தவனாக, அஸ்மி-ஆகிறேன். மே-என்னுடைய, மநஃச-மனமும், பயேந-பயத்தால், ப்ரவ்யதிதம்-பீடிக்கப்பட்டிருக்கிறது-(ஹே), தேவ-ஓ தேவனே! தத்ரூபம் ஏவ-அந்தரூபத்தையே, மே-எனக்கு, தர்சய-காட்டும், (ஹே) ஜகந்நிவாஸ-ஓ உலகத்துக்குறைவிடமே! (ஹே) தேவேச-ஓதேவனாத! ப்ரஸீத-அனுக்கிரஹியும். (௪௫)

(தா-ம்) தேவா! இதுவரையிலும் காணப்பெறாத உன் உக்கிர ரூபத்தைக்கண்டு களித்தேன். ஆயினும் என்மனம் பீதியினால் பீடிக்கப்பட்டதாயிற்று. ஆதலால் ஓ ஜகந்நிவாஸா! என்னிடத்திலன்பு வைத்து இரக்ஷிப்பீராக. (௪௫)

𑌕𑌿𑌰𑍀𑌟𑌿𑌨𑌂 𑌗𑌦𑌿𑌨𑌂 𑌚𑌕𑍍𑌰𑌹𑌸𑍍𑌤
𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌹𑌂 𑌤𑌥𑍈𑌵 |
𑌤𑍇𑌨𑍈𑌵 𑌰𑍂𑌪𑍇𑌣 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑍇𑌨
𑌸𑌹𑌸𑍍𑌰𑌬𑌾𑌹𑍋 𑌭𑌵 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑍂𑌰𑍍𑌤𑍇 || ௪௬ ||

(ப-ம்) ததைவ-அப்படியே, கிரீடிநம்-கிரீடமுடையராய், கதிநம்-கதையுடையராய், சக்ரஹஸ்தம் - சக்கிரக்கையராகிய, த்வாம்-உன்னை, த்ரஷ்டும்-பார்க்க, அஹம்-நான், இச்சாமி-விரும்புகிறேன், (ஹே) ஸஹஸ்ரபாஹோ-ஓ ஆயிரந்தோளாய்! (ஹே) விச்வமூர்தே-ஓஸர்வஸ்வரூப! சதுர்புஜேந-நான்குதோளுடைய, தேநரூபேணைவ-அவ்வுருவத்தோடேயே, பவ-ஆகுவீர். (௪௬)

(தா-ம்) ஓ ஸஹஸ்ரபாஹோ! விச்வரூபா! கிரீடம் கதை இவைகளைத்தரித்தவராயும், வச்ராயுதத்தை ஹஸ்தத்தி லுடையவராயுமிருக்கிற உம்மை அரூபியாய்ப் பார்ப்பதற்கு விரும்புகின்றேன். நான்கு புஜமுடைய அந்த சரீரத்துட னிருக்கவேண்டும். (௪௬)

ஸ்ரீகிருஷ்ண வாக்கியம்.

𑌮𑌯𑌾 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑍇𑌨 𑌤𑌵𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑍇𑌦𑌂
𑌰𑍂𑌪𑌂 𑌪𑌰𑌂 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌯𑍋𑌗𑌾𑌤𑍍 |
𑌤𑍇𑌜𑍋𑌮𑌯𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌨𑌨𑍍𑌤𑌮𑌾𑌦𑍍𑌯𑌂
𑌯𑌨𑍍𑌮𑍇 𑌤𑍍𑌵𑌦𑌨𑍍𑌯𑍇𑌨 𑌨 𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍍 || ௪௭ ||

(ப-ம்) ஹே அர்ஜுந-ஓ அருச்சுனா! ப்ரஸந்நேந - பிரஸன்னனான, மயா-என்னால், தேஜோமயம்-தேஜஸ்வரூபமும், அநந்தம்-அந்தமற்றதும், ஆத்யம்-முதலானதும், பரம்-மேலானதுமான, இதம்-இந்த, விச்வரூபம் - விஸ்வரூபமானது, ஆத்மயோகாத் எனது

யோகத்தால், தவ-உனக்கு, தர்சிதம்-காட்டப்பட்டது, மே-எனது, யத்-எந்த(இந்தரூபமானது); த்வத்-உன்னைத்தவிர, அந்யேந-மற்றவனுல், த்ருஷ்டபூர்வம்-முன்பார்க்கப்பட்டது, ந-அல்ல. (௪௭)

(தா-ம்) அர்ஜுநா! உன்னைத்தவிர வேறொருவராலும் முன் பார்த்திராததாயும் தேஜோரூபமாயும், முடிவில்லாததாயும், முதன்மையாயும், சிறப்புடையதாயுமுள்ள இந்த என் விஸ்வரூபத்தை உனக்கநுக்கிரகிக்கவேண்டுமென்ற கருத்தோடு என் சங்கற்பத்தினுல் உனக்குக் காண்பித்தேன். (௪௭)

𑌨𑌵𑍇𑌦𑌯𑌜𑍍𑌞𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑍈𑌰𑍍𑌨𑌦𑌾𑌨𑍈𑌰𑍍
𑌨𑌚𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌭𑌿𑌰𑍍𑌨𑌤𑌪𑍋𑌭𑌿𑌰𑍁𑌗𑍍𑌰𑍈𑌃 ।
𑌏𑌵𑌂𑌰𑍂𑌪𑌃𑌶𑌕𑍍𑌯𑌅𑌹𑌂𑌨𑍃𑌲𑍋𑌕𑍇
𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂𑌤𑍍𑌵𑌦𑌨𑍍𑌯𑍇𑌨𑌕𑍁𑌰𑍁𑌪𑍍𑌰𑌵𑍀𑌰 ॥ ௪௮ ॥

(ப-ம்) (ஹே) குருப்ரவீர - ஓ குருச்சிரேஷ்ட, ஏவம்ரூப꞉-இப்படிப்பட்ட ரூபமுள்ள, அஹம் - நான், ந்ருலோகே - மானிடலோகத்தில், த்வத் - உன்னைத்தவிர, அந்யேந - வேறொருவனுல், வேதயஜ்ஞ அத்யயநை꞉ - வேதத்தினுலும் யாகத்தினுலும், அத்யயனத்தாலும், த்ரஷ்டும்-பார்க்க, நசக்ய꞉ - ஸத்தியமானவனன்று, தானை꞉ - தானங்களால், ந-அல்ல; க்ரியாபி꞉ - கிரியைகளாலும், ந - அல்ல; உக்ரை꞉ - பயங்கரமான, தபோபி꞉ - தவங்களால், ந- அல்ல.(௪௮)

(தா-ம்) குருஸ்ரேஷ்டா! வேதங்களாலும், யக்ஞங்களாலும், அத்யயனங்களாலும், தானங்களாலும், கர்மங்களாலும், உக்கிரமான தவங்களாலும், உன்னைத்தவிர வேறெவருக்கும் மானிடசரீரத்திலிருந்து இந்த ரூபத்தோடு என்னைப்பார்ப்பதற்கு முடியாது. (௪௮)

𑌮𑌾𑌤𑍇𑌵𑍍𑌯𑌥𑌾𑌮𑌾𑌚𑌵𑌿𑌮𑍂𑌢𑌭𑌾𑌵𑍋𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌰𑍂𑌪𑌂𑌘𑍋𑌰
𑌮𑍀𑌦𑍃𑌙𑍍𑌮𑌮𑍇𑌦𑌮𑍍 । 𑌵𑍍𑌯𑌪𑍇𑌤𑌭𑍀𑌃𑌪𑍍𑌰𑍀𑌤𑌮𑌨𑌾𑌃𑌪𑍁𑌨𑌸𑍍𑌤𑍍𑌵𑌂𑌤𑌦𑍇𑌵
𑌮𑍇𑌰𑍂𑌪𑌮𑌿𑌦𑌂𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯 ॥ ௪௯ ॥

(ப-ம்) மம - என்னுடைய, கோரம் - கோரமான, ஈத்ருக்-இப்படிப்பட்ட, இதம் - இந்த, ரூபம் - ரூபத்தை, த்ருஷ்ட்வா - பார்த்து, தே - உனக்கு, வ்யதா - துன்பம், மா(பூத்) - வேண்டாம்; விமூடபாவ꞉ - முசித்துக்கிடக்கையும், மா - வேண்டாம், த்வம் - நீ, வ்யபேதபீ꞉ - பயம்நீங்கினவனும், ப்ரீத மநா꞉சஸந் - பிரீதியுற்றமனமுமாய், மே - என்னுடைய, தத் இதம் - அந்த இந்த, ரூபம் ஏவ- ரூபத்தையே, புந꞉ - மறுபடியும், ப்ரபச்ய - பார். (௪௯)

(தா-ம்) இப்படிப்பட்ட கோரரூபத்தைப் பார்த்து உனக்கு பீதியும், மோகமும் உண்டாகவேண்டாம். நிர்பயனாய் சந்தோஷத்துடன் என் முன்னிருந்த சாந்தஸ்வரூபத்தையே நீ இப்போ பார்மின்! (௪௯)

ஸஞ்ஜயவாக்கியம்.

𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌜𑍁𑌨𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌤𑌥𑍋𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌕𑌂 𑌰𑍂𑌪𑌂
𑌦𑌰𑍍𑌶𑌯𑌾𑌮𑌾𑌸 𑌭𑍂𑌯𑌃 | 𑌆𑌶𑍍𑌵𑌾𑌸𑌯𑌾𑌮𑌾𑌸 𑌚 𑌭𑍀𑌤𑌮𑍇𑌨𑌂
𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌨𑌃 𑌸𑍌𑌮𑍍𑌯𑌵𑌪𑍁𑌰𑍍𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾 || ௫௰||

(ப-ம்) வாஸுதேவ: - வாசுதேவன், அர்ஜுநம்ப்ரதி - அர்ச்சுனனைக்குறித்து, இதிஉக்த்வா - இப்படிசொல்லி, ததா - அப்படி, ஸ்வகம் - தனதான, ரூபம் - ரூபத்தை, பூய: - மறுபடியும், தர்சயாமாஸ - காட்டினார், மஹாத்மா - மஹாத்மாவான (கண்ணன்), புந: - மறுபடி, ஸௌம்யவபு: - சவும்மியமான சரீரமுடையவராக, பூத்வா - ஆகி, பீதம் - பயந்த, ஏநம் - இவனை, ஆச்வாஸயாமாஸ - தேற்றினார். (௫௰)

(தா-ம்) வாசுதேவனிவ்வண்ணம் அர்ஜ்ஜுனனைக் குறித்துக் கூறியபிறகு மீண்டும் தனதுஸ்வரூபத்தைக் காண்பித்தனர். அந்த மஹாத்மா அப்பிறகு சாந்தரூபனாய் பீதியடைந்திருக்கிற அர்ஜ்ஜுனனை சமாதானப்படுத்தினார். (௫௰)

அர்ஜுனவாக்கியம்.

𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑍇𑌦𑌂 𑌮𑌾𑌨𑍁𑌷𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌤𑌵 𑌸𑍌𑌮𑍍𑌯𑌂 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 |
𑌇𑌦𑌾𑌨𑍀𑌮𑌸𑍍𑌮𑌿 𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 𑌸𑌚𑍇𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌗𑌤𑌃 ||௫௧||

(ப-ம்) (ஹே)ஜநார்தந - ஓ கிருஷ்ணா! தவ - உம்முடைய, ஸௌம்யம் - ஸவும்மியமான, இதம் - இந்த, மாநுஷம் - மானிட, ரூபம் - உருவத்தை, த்ருஷ்ட்வா-கண்டு, இதாநீம் - இப்பொழுது, ஸசேதா: - நினைவுடன் கூடியவனாய், ஸம்வ்ருத்த: - அஸ்மி ஆனேன், ப்ரக்ருதிம் - சுபாவத்தை, கத: - அடைந்தேன். (௫௧)

(தா-ம்) ஏ ஜநார்த்தனா! உமது சாந்தமான இந்த மானிட சரீரத்தைப்பார்த்து யான் இப்பொழுது பயமற்ற மனதுடையவனாய் ஸ்வபாவத்தை யடைந்தவனாகின்றேன். (௫௧)

ஸ்ரீகிருஷ்ணவாக்கியம்.

𑌸𑍁𑌦𑍁𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑌮𑌿𑌦𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌾𑌨𑌸𑌿 𑌯𑌨𑍍𑌮𑌮 |
𑌦𑍇𑌵𑌾 𑌅𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌣𑌃 || ௫௨||

(ப-ம்) மம - எனது, யத் இதம் - எந்த இந்த, ரூபம் - ரூபத்தை, த்ருஷ்டவாந் - (நீ) பார்த்தவனாக, அஸி - ஆகிறாயோ, தத்- அந்த, இதம் - இது, ஸுதுர்தர்சம் - மிகவும் வருத்தத்தால் காணக் கூடியது, தேவா:அபி - தேவர்களும், நித்யம் - எப்போதும், அஸ்ய - இந்த, ரூபஸ்ய - ரூபத்தை, தர்சநகாங்க்ஷிண: - காண விரும்பினார்களாய், (பவந்தி) - ஆகிறார்கள். (௫௨)

(தா-ம்) அர்ஜுனா! நீ பார்த்த இந்த என்ரூபத்தை தர்சிப்பது மிகக்கடினமானது. இந்திரன் முதலிய தேவர்கள் கூட இந்த விஸ்வரூபத்தைக் காண்பதற்கு தினந்தோறும் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி ப்ரார்த்தித்தும் இந்த விஸ்வரூபத்தைப் பார்த்தவர்களாகவில்லை. (௫௨)

𑌨𑌾𑌹𑌂𑌵𑍇𑌦𑍈𑌰𑍍𑌨𑌤𑌪𑌸𑌾𑌨𑌦𑌾𑌨𑍇𑌨𑌨𑌚𑍇𑌜𑍍𑌯𑌯𑌾।
𑌶𑌕𑍍𑌯𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑍋𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌾𑌨𑌸𑌿𑌮𑌾𑌂𑌯𑌥𑌾॥௫௩॥

(ப-ம்) மாம் - என்னை, யதா - எப்படி, த்ருஷ்டவாந்-பார்த்தவன், அஸி - ஆகிறாயோ, ஏவம் வித: - இந்தவிதமான, அஹம்- நான், வேதை: - வேதங்களால், த்ரஷ்டும் - காண, சக்ய:ந - கூடியவனல்ல, தபஸா - தவத்தால், ந - அல்ல; தாநேந - தானத்தால், ந - அல்ல; இஜ்யயாச - யாகத்தால், ந - அல்ல. (௫௩)

(தா-ம்) வேதங்களாலும், தவத்தினாலும், தானத்தினாலும், யக்ஞங்களாலும், எனது உண்மையான ஸ்வரூபத்தை நீ இப்பொழுது பார்த்ததுபோல் பார்ப்பதற்குச் சாத்தியமன்று. (௫௩)

𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌨𑌨𑍍𑌯𑌯𑌾𑌶𑌕𑍍𑌯 𑌅𑌹𑌮𑍇𑌵𑌂𑌵𑌿𑌧𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨।
𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌂𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂𑌚𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨𑌪𑍍𑌰𑌵𑍇𑌷𑍍𑌟𑍁𑌂𑌚𑌪𑌰𑌂𑌤𑌪॥௫௪॥

(ப-ம்) பரந்தப - பகைவரைத்தபிக்கும், (ஹே) அர்ஜுந - ஓ அர்ச்சுனா! ஏவம் விதம் - இந்தவிதமான, அஹம் - நான், அநந்யயா - மற்றொன்றையும் நாடாத, பக்த்யா - பக்தியினால், ஜ்ஞாதும்- அறியவும், தத்வேந - உள்ளபடியே, த்ரஷ்டும்ச - காணவும், ப்ரவேஷ்டும்ச - ப்ரவேசிப்பதவும், சக்ய: - கூடியவன். (௫௪)

(தா-ம்) அர்ஜுனா! ஓ பரந்தபா! வேறு பக்தியினால் (பலத்தைவிரும்பிய பக்தியினால்) எனது இப்படிப்பட்ட ரூபத்தை உண்மையாய்க்கண்டு தெளிவதற்கும், தர்சிப்பதற்கும், ஐக்கியத்தையடைவதற்கு முடியாது. (௫௪)

𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌨𑍍𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑍋𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌃𑌸𑌙𑍍𑌗𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃।

நிர்வைர꞉ ஸர்வபூதேஷு ய꞉ ஸ மாமேதி பாண்டவ ॥ ௫௫ ॥

(ப-ம்) மத் கர்ம க்ருத் - எனக்காகக்கருமத்தைச் செய்பவனும், மத்பரம꞉ - யானேகதியாயிருப்பவனும், மத்பக்த꞉ - என்னிடத்தில் பக்தியுடையனும், ஸங்கவர்ஜித꞉ - பற்றொழித்தவனும், ஸர்வபூதேஷு - எல்லாப்பூதங்களிலும், நிர்வைர꞉ - வைரமற்றவனும், ய꞉- எவனோ, ஸ꞉ - அவன், (ஹே)பாண்டவ - ஓ பாண்டுபுத்திர! மாம்- என்னை, ஏதி - அடைகின்றான். (௫௫)

(தா-ம்) பாண்டவா! எவர் எல்லா கர்மங்களையும், எனது ஆராதனரூபமாய்ச் செய்கிறார்களோ, எந்தன்றிருவடிகளையே அடைய வேணுமென்றெண்ணி எந்தனிடத்தில் பக்தியுண்டாகி வேறு வஸ்துக்களில் ஆசையில்லாதவர்களாய் ஸர்வப் பிராணிகளிடத்திலும் த்வேஷமில்லாதவர்களாக விருக்கிறார்களோ, அப்படிப்பட்ட புண்ணியபுருடர்கள் என் றிருவடிகளையடைவார்கள். (௫௫)

ஸ்ரீகீதாஸு விஶ்வரூபஸந்தர்ஶநயோகமென்னும்
பதினோராவது அத்தியாயம் முற்றிற்று.

பனிரண்டாவது அத்தியாயம்.

பக்தியோக꞉.

அர்ச்சுன வாக்கியம்.

ஏவம் ஸததயுக்தா யே பக்தாஸ்த்வாம் பர்யுபாஸதே ।
யே சாப்யக்ஷரமவ்யக்தம் தேஷாம் கே யோகவித்தமா꞉ ॥ ௧ ॥

(ப-ம்) ஏவம் - இப்படி, ஸததயுக்தா꞉ - எப்போதும் விருப்பமுள்ளவளாய், யேபக்தா꞉ - எந்த பக்தர்கள், த்வாம் - உன்னை, பர்யுபாஸதே - உபாஸிக்கிறார்களோ, யேச - (பின்னும்) எவர்கள், அவ்யக்தம் - (இந்திரியத்துக்கு) விஷயப்படாத, அக்ஷரம் - அக்ஷரத்தை, உபாஸதே - உபாஸிக்கிறார்களோ, தேஷாம் - அவர்களுள், கே - யார், யோகவித்தமா꞉ - நன்றாய் யோகத்தையறிந்தவர்கள். (௧)

(தா-ம்) இவ்வண்ணம் சிலர், எக்காலும் உங்களிடத்தில் பக்தியுண்டாகி எங்களை யுபாசிக்கின்றனர்கள். சிலர், இந்திரியங்களின் வழியைநாடி ஜீவான்ம ஸ்வரூபத்தை யுபாசிக்கின்றனர்களே, இவ்விருதரத்தாருளெவர்கள் யோகத்தை நன்குணர்ந்தவர்கள்? (௧)

ஸ்ரீகிருஷ்ணவாக்கியம்.

𑌮𑌯𑍍𑌯𑌾𑌵𑍇𑌶𑍍𑌯𑌮𑌨𑍋𑌯𑍇𑌮𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌉𑌪𑌾𑌸𑌤𑍇|
𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌪𑌰𑌯𑍋𑌪𑍇𑌤𑌾𑌸𑍍𑌤𑍇𑌮𑍇𑌯𑍁𑌕𑍍𑌤𑌤𑌮𑌾𑌮𑌤𑌾𑌃||௨||

(ப-ம்) யே - எவர்கள், மயி - என்னிடத்தில், மந: - மனதை, ஆவேச்ய - வைத்து, பரயா - பெரிதான ச்ரத்தயா - சிரத்தையுடன், உபேதா: - கூடி, நித்ய யுக்தா: - நித்தியமும் யோகமுற்றவர்களோ, தே - அவர்கள், யுக்ததமா: - மிகவும் யோகத்தில் தேறினவராய், மே - எனக்கு, மதா: - எண்ணப்பட்டார்கள். (௨)

(தா-ம்) எவர்கள், என்னிடத்தில் நித்தியவஸ்துவைக்கருதி மனதை நிலைநிறுத்தி என்னை யுபாசிக்கிறார்களோ, அவர்களே சிறந்த யோகிகளென்று என்னுடைய வபிப்பிராயம். (௨)

𑌯𑍇𑌤𑍍𑌵𑌕𑍍𑌷𑌰𑌮𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍍𑌯𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇|
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌗𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌂𑌚𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑌮𑌚𑌲𑌂𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍|| ௩||
𑌸𑌂𑌨𑌿𑌯𑌮𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍍𑌰𑌾𑌮𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌸𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌯𑌃|
𑌤𑍇𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌮𑍇𑌵𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌹𑌿𑌤𑍇𑌰𑌤𑌾𑌃|௪||

(ப-ம்) அக்ஷரம் - ஆத்மாவை, அநிர்தேச்யம் - குறிக்கத்தகாததாயும், அவ்யக்தம் - தெரியப்படாததாயும், ஸர்வத்ரகம் - தேவர்கள் முதலான எல்லாச் சரீரங்களிலும் இருப்பதாயும், அசிந்த்யம்- சிந்திக்கவரியதாயும், கூடஸ்த்தம் - ஸர்வஸாதாரணமாயும், அசலம் - சலிப்புறாததாயும், த்ருவம்ச - நித்தியமானதாயும், இந்த்ரியக்ராமம் - இந்த்ரிய கூட்டத்தை ஸந்நியம்ய - அடக்கி, ஸர்வத்ர - எங்கும், ஸமபுத்தய: - ஸமபுத்திகளாய், ஸர்வபூதஹிதே - ஸகலப்பிராணிகளுடைய இதத்திலும், ரதா: - ஆஸக்தியுடையராய், (யே)- எவர்கள், பர்யுபாஸதே - உபாஸிக்கிறார்களோ, தே - அவர்களும், மாம்-என்னை, ப்ராப்நுவந்திஏவ- அடையவே அடைகின்றனர். (௩-௪)

(தா-ம்) எந்தமகான்கள், இந்திரிய சமூகங்களை நன்குள்ளடக்கி ஸமஸ்தவஸ்துக்களிலும் சமபுத்திவைத்து அகில ஜீவன்களுக்கும் நன்மையைக்கருதுகிறதுடன், வாக்குக் கெட்டாததாயும், கட்புலனுக் ககப்படாததாயும், மநோவிருத்திக் கதீதமாயும், பிரபஞ்சத்திற் காதாரணமாயும், அசைவற்றதாயும், நித்தியமாயும், எங்கும் பரிபூரணமாயுள்ள பரப்பிரமத்தை யுபாசிக்கின்றனர்களோ, அம்மகான்கள், உன்னையே யடைகின்றனர்கள். (௩-௪)

க்லேசோऽதிகதரஸ்தேஷாமவ்யக்தாஸக்தசேதஸாம்|
அவ்யக்தா ஹி கதிர்து:கம் தேஹவத்பிரவாப்யதே||

(ப-ம்) அவ்யக்த ஆஸக்த சேதஸாம் - அவியக்தத்தில் ஆஸக்தியுடையமனங்கொண்ட, தேஷாம் - அவர்களுக்கு, அதிகதர:-மிகவும் அதிகமான; க்லேச: - வருத்தம்; அவ்யக்தா - அவ்வியக்த ஸம்மந்தமான, கதி: - கதியானது, தேஹவத்பி: - சரீரமுடையோரால், து:கம் வருத்தமாய், அவாப்யதே ஹி - அடையப்படுகிறதன்றோ? (௫)

(தா-ம்) ஆனால் ஐம்புலாதிகளுக்கு அகோசரமான ஜீவான்மஸ்வரூபத்தில் மனம் நாட்டினோருக்குப் பிரயாசை மிகவும்வதிகந்தான். சரீரமுள்ளவர்களுக்கு இந்திரியங்கட்குப் புலப்படாதபொருளையடைவது கடினமல்லவா. (௫)

யே து ஸர்வாணி கர்மாணி மயி ஸந்ந்யஸ்ய மத்பரா:|
அநந்யேநைவ யோகேந மாம் த்யாயந்த உபாஸதே|| ௬ ||
தேஷாமஹம் ஸமுத்தர்தா ம்ருத்யுஸம்ஸாரஸாகராத்|
பவாமி நசிராத்பார்த்த மய்யாவேசிதசேதஸாம்|| ௭ ||

(ப-ம்) ஹேபார்த்த - ஓ அர்ச்சுன! யேது - எவர்களானால், ஸர்வாணி - ஸகலமான, கர்மாணி - கருமங்களையும், மயி - என்னிடத்தில், ஸந்யஸ்ய - வைத்து, மத்பரா: - என்னையே ப்ரதானவனாக நினைத்துக்கொண்டு, அநந்யேந - மற்றொன்றையுநாடாத, யோகேந - யோகத்தால், மாம்ஏவ - என்னையே, த்யாயந்த: - தியானிப்பார்களால் உபாஸதே உபாஸிக்கிறார்கள் ஹே பார்த்தா ஓ அர்ச்சுனா மயி - என்னிடத்தில், ஆவேசிதசேதஸாம் - வைக்கப்பட்ட மனமுடைய, தேஷாம் - அவர்களுக்கு, அஹம் - நான், ம்ருத்யுஸம்ஸார ஸாகராத் - மிருத்தியுவுடன்கூடின ஸம்ஸாரஸாகரத்தினின்றும், நசிராத் - சீக்கிரமாகவே, ஸமுத்த்ர்தா - கரையேற்றுகிறவனாக, பவாமி - ஆகிறேன். (௬-௭)

(தா-ம்) அர்ஜ்ஜுன! எவர்கள், ஸர்வகர்மங்களையும் எனக்கொப்பிவித்து என்னையே முக்கியவஸ்துவாகவெண்ணி பிரயோஜனத்தைக் கோருதமனதுடன் தியானமுதலியவற்றுலென்னை பக்திசெய்கிருர்களோ, அப்படிப்பட்ட சாதுக்களை, மிருத்யுஸ்வரூபமான ஸம்சார ஸமுத்திரத்தினின்றும் யானே கரையேறச்செய்கிறேன். (ஸ௦) மத்பரா:-யானேசிறந்தவனெனக் கருதினவர்கள். (௬-௭)

மய்யேவ மந ஆதத்ஸ்வ மயி புத்திம் நிவேசய|
நிவஸிஷ்யஸி மய்யேவ அத ஊர்த்வம் ந ஸம்ஶய:||அ||

(ப-ம்) மய்யேவ - என்னிடத்தில்தானே, மந: - மனதை, ஆதத்ஸ்வ - வைக்கககடவாய் புத்திம் - புத்தியை, மயி - என்னிடத்தில், நிவேசய - வை; அத: - இதற்கு, ஊர்த்வம் - மேல், மய்யேவ- என்னிடத்திலேயே, நிவஸிஷ்யஸி - வஸிப்பாய் ஸம்சய: ந - இந்தவிஷயத்தில் ஸந்தேஹமில்லை. (அ)

(தா-ம்) ஆகையால், எப்பொழுதும் என்னிடத்திலேயே மனதைநிறுத்து, என்னிடத்திலேயே புத்தியைச்செலுத்து, என்னிடத்திலேயே குடிகொண்டிருப்பாயென்பதில் சந்தேகமில்லை. (அ)

அத சித்தம் ஸமாதாதும் ந ஶக்நோஷி மயி ஸ்திரம்|
அப்யாஸயோகேந ததோ மாமிச்சாப்தும் தநஞ்ஜய||௯||

(ப-ம்.) அத - இனி, மயி - என்னிடத்து, சித்தம் - சித்தத்தை, ஸ்திரம் - ஸ்திரமாய், ஸமாதாதும் - வைப்பதற்கு, நசக்நோஷி - ஆகமாட்டா, (ஹே) தநஞ்ஜய - அர்ச்சுன? தத: - அதற்குப்பின் - அப்யாஸயோகேந-அப்பியாஸயோகத்தால், மாம் - என்னை, ஆப்தும் அடைய, இச்ச - கோருகிறேன். (௯)

(தா-ம்) ஓ அர்ஜ்ஜுனா! நின்மனதை என்னிடத்தில் நின்பெற நிறுத்த வல்லவனல்லாமற் போனவையேயாகில் அப்பியாசஞ்செய்தாவது என்னையடைவதற்கு முயல்வாயாக. (௯)

அப்யாஸேப்யஸமர்தோஸி மத்கர்மபரமோ பவ|
மதர்த்தமபி கர்மாணி குர்வந் ஸித்திமவாப்ஸ்யஸி||௰||

(ப-ம்.) அப்யாஸே அபி - அப்பியாஸந்திலும், அஸமர்த்தோஸி-அஸமர்த்தனுகில் மத்கர்மபரம: - என்னைக்குறித்த கர்மங்களையே முக்கியமாகவுடையவனாய், பவ - ஆகு, மதர்த்தம் - என்பொருட்டு, கர்மாணி - கைங்கரியரூப கர்மங்களை, குர்வந் அபி - செய்துவந்தாலும், ஸித்திம் - ஸித்தியை, அவாப்ஸ்யஸி - அடைவாய். (௰)

(தா-ம்) அவ்வாறு அப்பியாசஞ்செய்கிற விஷயத்திலுனக்குச் சத்தியில்லாவிடின் பகவத்கைங்கர்யரூபமான கன்மத்தையே பிரதானமாகச்செய் எந்நிமித்தமான கர்மத்தைச்செய்தாலும் ஸித்தியைப் பெருவாய். ௱௦. ஸித்தம்-மனோநிக்கிரகமென்றும் சித்தியை. (௰)

அதைததப்யஶக்தோஸி கர்தும் மத்யோகமாஶ்ரித:|
ஸர்வகர்மபலத்யாகம் தத: குரு யதாத்மவாந்||௧௧||

(ப-ம்.) அத - பிறகு, ஏதத் - இதை, கர்தும்அபி - செய்யவும், அசக்த: அஸி - சக்தனுகாதபக்ஷத்தில். தத: - பிறகு, மத்யோகம்-எனது யோகத்தை

ஆச்ரிதஃ - ஆச்ரயித்தவனாய், யதாத்மவாந் - அடக்கப்பட்ட அந்தக்கரணத்துடன், ஸர்வகர்மபலத்யாகம் - எல்லாக்கருமபலனையும் விடுவதை, குரு - செய்.

(தா-ம்) அவ்வண்ணம் என்னிடத்தில் மனதைசெலுத்தி கன்மத்தைச்செய்ய முடியாமற் போகுங்கால் சுத்தசித்தத்தோடு எல்லா கர்மங்களுடைய பலத்தையும் நீக்கிவிடு. (௧௧)

𑌶𑍍𑌰𑍇𑌯𑍋 𑌹𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ।
𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌤𑍍𑌯𑌾𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌗𑌾𑌚𑍍𑌛𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑌨𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 ॥ ௧௨ ॥

𑌅𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌾 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌮𑍈𑌤𑍍𑌰𑌃 𑌕𑌰𑍁𑌣 𑌏𑌵 𑌚 ।
𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑍋 𑌨𑌿𑌰𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌃 𑌸𑌮𑌦𑍁𑌃𑌖𑌸𑍁𑌖𑌃 𑌕𑍍𑌷𑌮𑍀 ॥ ௧௩ ॥

𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌃 𑌸𑌤𑌤𑌂 𑌯𑍋𑌗𑍀 𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌦𑍃𑌢𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃 ।
𑌮𑌯𑍍𑌯𑌰𑍍𑌪𑌿𑌤𑌮𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌯𑍋 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌃 𑌸 𑌮𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 ॥ ௧௪ ॥

(ப-ம்.) ஜ்ஞாநம் - ஞானம் - அப்யாஸாத் - அப்பியாஸத்தைவிட, ச்ரேயோ ஹி - சிறந்ததல்லவா? ஜ்ஞாநாத் - ஞானத்தைக்காட்டிலும், த்யாநம் - தியானம் விசிஷ்யதே - விசேஷமாகிறது, த்யாநாத் - தியானத்தைவிட, கர்மபலத்யாகஃ - கருமப்பயனைவிடுவது, (தரம்) த்யாகாத் - தியாகத்திற்கு, அநந்தரம் - உடனே, சாந்திஃ - சாந்தி, பவதி - உண்டாகும். ஸர்வபூதாநாம் - எல்லாப்பிராணிகளுக்கும், அத்வேஷ்டா - பகைவனல்லாதவனும், மைத்ரஃ - மித்திரனும், கருணஏவச - கருணையுடையனும், நிர்மமஃ - மமகாரமற்றவனும், நிரஹங்காரஃ அஹங்காரமற்றவனும், ஸமதுஃகஸுகஃ - துக்கமும் சுகமும் ஸமமாயிருப்பவனும், க்ஷமீ - பொறுமையுடையனும், ஸததம் - எப்பொழுதும், ஸந்துஷ்டஃ - ஸந்துஷ்டியடைந்தவனுமான, யோகீ - யோகியும், யதாத்மா - நியமிக்கப்பட்ட மனமுடையனும், த்ருடநிச்சயஃ - திடமான நிச்சயமுடையனும், மயி - என்னிடத்தில், அர்பிதமநோபுத்திஃ - வைக்கப்பட்ட மனமும் புத்தியுமுடையனும், மத்பக்தஃ - என்னிடத்தில் பக்தியுடையவனும், யஃ - எவனோ, ஸஃ - அவன், மே - எனக்கு, ப்ரியஃ - இஷ்டன். (௧௨-௧௩-௧௪-)

(தா-ம்) அப்பியாசத்தைவிட ஞானமேலானது, ஞானத்தைவிட தியானம் சிறந்தது. தியானத்தைவிட பயனைக்கருதாதகர்மம் மேலானது. கர்மபலத்தியாகத்தால் தாமசமின்றி சித்தம் சாந்தியையடைகிறது. எவன் ஸமஸ்தப்பிராணிகளிடத்திலும் துவேஷமில்லாமலும், அகிலஜீவன்களிடத்திலும் மித்திரத்துவம்வைத்தும் ஸர்வபூதங்களிடத்திலும் தயைநிறைந்தும், தேஹேந்திரியங்களி லன்பில்லாமலும், அகங்கார மின்றியும், சுகதுக்கத்தைச் சமமாய்பாவித்தும், பொருமை வகித்தும், நித்தியதிருப்தியும், எப்பொழுதும் ஆத்மாநுஸந்தானஞ் செய்துக்கொண்டும், சித்தவிருத்தியைத் தடுத்

தும், மனோநிச்சயத்துடனுங் கூடினவனுய் என்னிடத்தில் மனதை யும், மதியையும் நாட்டி பக்திபண்ணுகிருனே, அவன்தான் எனக்கு பிரியன். (கஉ-கங-கச)

யஸ்மாந்நோத்விஜதே லோகோ லோகாந்நோத்விஜதே சய꞉|
ஹர்ஷாமர்ஷபயோத்வேகைர்முக்தோ ய꞉ ஸ ச மே ப்ரிய꞉॥

(ப-ம்.) லோக꞉ - உலகம், யஸ்மாத் - எவனிடத்தினின்றும், நோத்விஜதே - பயப்படானே, ய꞉ - எவன், ஹர்ஷ அமர்ஷபய உத்வேகை꞉ - ஸந்தோஷம் கோபம் பயம் உத்வேகங்களால், முக்த꞉ - விடுபட்டானே, ஸ꞉ ச - அவனும், மே - எனக்கு, ப்ரிய꞉ - இஷ்டன். (கரு)

(தா-ம்) எவனிடத்திலிருந் துலகத்தார் பீதியடையாரோ, உலகத்தாரிடத்திலெவன் பயமடையவில்லையோ, சந்தோஷத்தாலும், கோபத்தாலும், பயத்தாலும், மனக்கலக்கத்தாலும், எவன் விடப்பட்டானே, அவனுமெனக்குப்பிரியனே. (கரு)

அனபேக்ஷ꞉ ஶுசிர்தக்ஷ உதாஸீனோ கதவ்யத꞉|
ஸர்வாரம்பபரித்யாகீ யோ மத்பக்த꞉ ஸ மே ப்ரிய꞉॥ கசு॥

(ப-ம்.) அநபேக்ஷ꞉ - ஆத்மா தவிர மற்றவைக ளெல்லாவற்றிலும் விருப்பமில்லாதவனுய், சுசி꞉ - பரிசுத்தனுய், தக்ஷ꞉ - ஸமர்த்தனுய், உதாஸீந꞉-உதாஸீனனுய், கதவ்யத꞉ - பாதையற்றவனுய், ஸர்வ ஆரம்ப பரித்யாகீ - எல்லா ஆரம்பத்தையும்விட்டு, மத்பக்த꞉ - என்னுடையபக்தனுய், ய꞉-எவன் (இருக்கிருனே), ஸ꞉ - அவன், மே - எனக்கு, ப்ரிய꞉ - இஷ்டன். (கசு)

(தா-ம்) ஆத்மாவுக் கந்நியவஸ்துக்களில் விருப்பமற்றவனுயும், மாம்ஸபக்ஷணமுதலிய தாமசாஹாரத்தை நீக்கி சாஸ்திரசம்மதமான ஆகாரத்தையுட்கொண்டதால் பரிசுத்தனுயும், வல்லவனுயும், சத்துருமித்திரர்களில்லாதவனுயும், சாஸ்திரோக்த சர்மாநுஷ்டானத்தில் சிரம மில்லாதவனுயும், சாஸ்திரவிருத்தமான வேறுகர்மந்துலைத்து என்னிடத்திலேயே பக்திபுள்ளவனே, அவனே எனக்கன்பன். (ஶ0) கதவ்யத꞉-பயமற்றவன். (கசு)

யோ ந ஹ்ருஷ்யதி ந த்வேஷ்டி ந ஶோசதி ந காங்க்ஷதி |
ஶுபாஶுபபரித்யாகீ பக்திமான்ய꞉ ஸ மே ப்ரிய꞉॥ கஎ॥

(ப-ம்.) ய꞉ - எவன், நஹ்ருஷ்யதி-ஸந்தோஷியானே,(ய꞉)-எவன்,நத்வேஷ்டி - அநிஷ்டங்களுண்டானபோது த்வேஷிக்கமாட்டானே, (ய꞉)-எவன், நசோசயதி - துக்கிக்கானே, நகாங்க்ஷதி - (எவன்) கோருனே, சுபாசுபபரித்

யாகீ - சுபாசுபங்கள் துறந்த, பக்திமாந் - பக்திமான், (ய:) எவனோ, ஸ: - அவன், மே - எனக்கு, ப்ரிய: - இஷ்டன். (௧௭)

(தா-ம்.) எவன் சந்தோஷிக்கானோ, பொறாமையடையானோ, துக்கப்படானோ ஆசைப்படானோ, புண்ணியபாபங்களிரண்டையும் பக்திபண்ணுகிறானோ, அவனே எனக்கிஷ்டன். (௧௭)

𑌸𑌮𑌶𑍍𑌶𑌤𑍍𑌰𑍌 𑌚 𑌮𑌿𑌤𑍍𑌰𑍇 𑌚 𑌤𑌥𑌾 𑌮𑌾𑌨𑌾𑌪𑌮𑌾𑌨𑌯𑍋𑌃 ।
𑌶𑍀𑌤𑍋𑌷𑍍𑌣𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑍇𑌷𑍁 𑌸𑌮𑌸𑍍𑌸𑌙𑍍𑌗𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 ॥ ௧௮ ॥

𑌤𑍁𑌲𑍍𑌯𑌨𑌿𑌨𑍍𑌦𑌾𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌰𑍍𑌮𑍌𑌨𑍀 𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑍋 𑌯𑍇𑌨 𑌕𑍇𑌨𑌚𑌿𑌤𑍍 ।
𑌅𑌨𑌿𑌕𑍇𑌤𑌃 𑌸𑍍𑌥𑌿𑌰𑌮𑌤𑌿𑌰𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌨𑍍𑌮𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌨𑌰𑌃 ॥ ௧௯ ॥

(ப-ம்.) சத்ரௌச - சத்துருவினிடத்தும், மித்ரேச - மித்திரனிடத்தும், ஸம:-ஸமனாய், ததா-அப்படி, மாநாபமாநயோ: - மானாவமானங்களிலும், சீதஉஷ்ணசுகது:கேஷு - சீதோஷ்ணங்களினிடத்திலும், சுகதுக்கங்களினிடத்திலும், ஸம:-ஸமனாய, ஸங்கவிவர்ஜித:-மனைவிமக்கள் முதலானவர்களிடத்தில் விருப்பமில்லாதவனாய், துல்யநிந்தாஸ்துதி:-நிந்தித்தாலும் துதித்தாலும் சமமாய், மௌநீ-மவுனமுடையவனாய், யேநகேநசித் - எதினாலாவது, ஸந்துஷ்ட:-ஸந்தோஷித்தவனாய், அநிகேத: - ஸ்தானமில்லாதவனாய், ஸ்திரமதி:-ஸ்திரமானபுத்தியாய், பக்திமாந்-பக்தியுடையனான, நர: - மனிதன், மேப்ரிய:-எனக்கு இஷ்டன். (௧௮-௧௯)

(தா-ம்.) வைரியிடத்திலும், மித்திரனிடத்திலும், மானாவமானங்களிலும், சீதோஷ்ணங்களிலும், இன்ப துன்பங்களிலும், சமசித்தமுடையவனும், எவ்வித வஸ்துவிலும் பற்றில்லாதவனும், நிந்தாஸ்துதிகளில் ஸமதிருஷ்டியுள்ளவனும், மௌனியாயும், எந்த வஸ்துவினாலும் திருப்தி யடைந்தவனும், ஆன்ம ஸ்வரூபத்துக் கந்நியமானதை ஆஸ்ரயிக்காமலும், ஸ்திரபக்தியுள்ளவனே எனக்கிஷ்டன். (௧௮-௧௯)

𑌯𑍇 𑌤𑍁 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌮𑌿𑌦𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌾 𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑌾 𑌭𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑍇𑌽𑌤𑍀𑌵 𑌮𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 ॥ ௨௦ ॥

(ப-ம்.) யேது-எவர்கள், ஸ்ரத்ததாநா: - சிரத்தையுடையவரும், மத்பரமா:-என்னை முக்கியமாயுடையவருமாய், யதோக்தம்-பின்சொல்லப்பட்ட, தர்ம்யம்ருதம்-தருமத்தினின்றும் நீங்காதும் அமிருதமு

மான, இதம்-இதை, பர்யுபாஸதே - உபாஸிக்கின்றார்களோ, தே-அந்த, பக்தா:-பக்தர்கள், மே-எனக்கு, அதீவ - மிகவும், ப்ரியா: - இஷ்டர்கள். (உ௰)

(தா-ம்.) எவர்கள், தர்மரூபமாகிய அமுதுபோன்ற இப்பக்தி யோகத்தைச் சிரத்தையுடன் மேற்கூறியவண்ணை மநுஷ்டிக்கிறார்களோ, அப்படிப்பட்ட பக்தர்களே யெனக்குச் சிறந்தவேயர்கள். ()

ஸ்ரீகீதாஸு பக்தியோகமென்னும்
பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

பதிமூன்றாவது அத்தியாயம்.

அர்ஜுனவாக்கியம்.

𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞 𑌵𑌿𑌭𑌾𑌗𑌯𑍋𑌗𑌃.

𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂𑌪𑍁𑌰𑍁𑌷𑌂𑌚𑍈𑌵𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌮𑍇𑌵𑌚|
𑌏𑌤𑌦𑍍𑌵𑍇𑌦𑌿𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂𑌜𑍍𑌞𑍇𑌯𑌂𑌚𑌕𑍇𑌶𑌵‖ ௧‖

(ப-ம்.) ஹேகேசவா! ஓகேசவனே! ப்ரக்ருதிம் - ப்ரக்ருதியையும், புருஷம்சஏவ-பரமாத்மஸ்வரூபத்தையும் புருஷனையும், க்ஷேத்ரம்-க்ஷேத்திரத்தையும், க்ஷேத்ரஜ்ஞம்ஏவச - க்ஷேத்திரஜ்ஞனென்னுமவன் ஸ்வரூபத்தையும், ஜ்ஞாநம் - ஜ்ஞானஸ்வரூபத்தையும், ஜ்ஞேயம்ச-அறியவேண்டியவஸ்துவின் ஸ்வரூபத்தையும், ஏதத் - இவைகளை, வேதிதும், தெரிந்துகொள்ள, இச்சாமி-நிச்சயித்திருக்கிறேன். (௧)

(தா-ம்.) கேசவா! பிரகிருதிபுருஷன், க்ஷேத்திரன் க்ஷேத்திரஞ்ஞன், ஞானம்ஞேயம், இவைகளைத் தெரிந்துக்கொள்ள விரும்புகின்றேன். (௧)

𑌇𑌦𑌂𑌶𑌰𑍀𑌰𑌂𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌮𑌿𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇|
𑌏𑌤𑌦𑍍𑌯𑍋𑌵𑍇𑌤𑍍𑌤𑌿𑌤𑌂𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌃𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌇𑌤𑌿𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃‖ ௨‖

(ப-ம்.) ஹே கௌந்தேய - ஓகுந்தியின்மைந்த, இதம் சரீரம்-இந்த சரீரம், க்ஷேத்ரம்இதி-க்ஷேத்திரமென்று, அபிதீயதே - சொல்லப்படுகிறது, ஏதத்- இதை, ய:-எவன், வேத்தி-அறிகிறானோ, தம்-

அவனை, தத்விதஃ-அதையறிந்தவர், க்ஷேத்ரஜ்ஞஇதி-க்ஷேத்திரஜ்ஞனென்று, ப்ராஹுஃ-பகர்கின்றனர். (௨)

(தா-ம்.) ஓ அர்ஜுனா! இச்சரீரம ஆத்மாவுக்குபோகஸ்தானமானக்ஷேத்திரமெனப்படுகிறது. க்ஷேத்திரமான சரீரத்தையறிகினவனெவனோ, அவனே க்ஷேத்திரஜ்ஞனென்று ஆத்மஸ்வரூபத்தையுணர்ந்தவர்கள் சொல்லுவார்கள். (௨)

க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத।
க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோர்ஜ்ஞானம் யத்தஜ்ஜ்ஞானம் மதம் மம॥ ௩॥

(ப-ம்.) ஹே! பாரத - ஓபரதவம்சத்தானே! ஸர்வக்ஷேத்ரேஷு-எல்லாசரீரங்களிலும், க்ஷேத்ரஜ்ஞம்ச அபி - ஜீவனையும், மாம்-என்னையாக, வித்தி-அறி, க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோஃ(இப்படி)-சரீர ஆத்மாக்களை, ஜ்ஞானம்-அறிவதானது, யத்-எதுவோ, தத்-அதுதான், ஜ்ஞானம்-ஞானமென்று, மம-எனது, மதம்-ஸித்தாந்தம். (௩)

(தா-ம்.) பாரதா! க்ஷேத்திரமொன்றும் எல்லாசரீரங்களிலும் வசிக்கின்ற க்ஷேத்திரஜ்ஞனென்னும் ஆன்மாயானென்கிற யுணர்க இப்படி சரீரத்தையும் ஆன்மாவையுந் தெரிந்துகொள்வதே ஞானமென்றெந்தன் கருத்து. (௩)

தத்க்ஷேத்ரம் யச்ச யாத்ருக்ச யத்விகாரி யதஶ்ச யத்।
ஸ ச யோ யத்ப்ரபாவஶ்ச தத்ஸமாஸேன மே ஶ்ருணு॥ ௪॥

(ப-ம்.) தத்-அந்த, க்ஷேத்ரம்-சரீரம், யத்ச-எந்தஸ்வரூபமோ, யாத்ருக்ச-எப்படிப்பட்டதோ, யத்விகாரி - எந்தவிகாரமுடையதோ, யதஃச-எதினாலு(ண்டானதோ), யத்-எதுவோ, ஸச-அந்த (க்ஷேத்திரஜ்ஞனும்), யஃ-எவனோ, யத்ப்ரபாவஃச - என்னப்பிரபாவமுடையனோ, தத்-அதை, ஸமாஸேந-சங்க்ரஹமாய், மே - என்னிடத்தில், ஶ்ருணு-கேள். (௪)

(தா-ம்) க்ஷேத்திரமென்பது யாது? எப்படிப்பட்டது எந்தவிகாரமுடையது? யாதுகாரணத்தாற் பிறந்தது? எவ்விதரூபத்துடனிருக்கின்றது? க்ஷேத்திரஜ்ஞனென்பவனெவன்? எப்படிப்பட்டசக்திபெற்றவன்? இதுகளையெல்லாம் சுருக்கமாக என்னிடத்தில் கேட்டுணர்க. (ஶ்ரீ) யத்ப்ரபாவச்ச-எப்படிப்பட்ட உபாதிக்ருதமான சக்திகளையுடையவனே. (௪)

𑌋𑌷𑌿𑌭𑌿𑌰𑍍𑌬𑌹𑍁𑌧𑌾 𑌗𑍀𑌤𑌂 𑌛𑌨𑍍𑌦𑍋𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑍈𑌃 𑌪𑍃𑌥𑌕𑍍 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍂𑌤𑍍𑌰𑌪𑌦𑍈𑌶𑍍𑌚𑍈𑌵 𑌹𑍇𑌤𑍁𑌮𑌦𑍍𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍈𑌃 ॥

(ப-ம்.) ருஷிபிஃ-ரிஷிகளாலே, பஹுதா-அநேகவிதங்களாக, கீதம்-சொல்லப்பட்டது, விவிதைஃ-நாநாவிதங்களான வேதங்களால் சந்தோபிஃ-மந்திரங்களால், ப்ருதக்-பிரத்தியேகமாய், (கீதம்)-சொல்லப்பட்டது; ஹேதுமத்பிஃ - ஹேதுக்களுடையனவாய்க் கொண்டு, விநிச்சிதைஃ-நிச்சயிக்கப்பட்ட, ப்ரம்மஸூத்ரபதைஃசைவ - பிரம்மஸூத்திரங்களாலும், (கீதம்)-சொல்லப்பட்டது. (ரு)

(தா-ம்.) இவ்விஷயம் க்ஷேத்திரக்ஷேத்திரக்ஞவிஷயம் ரிஷிகளினாலும், ஒவ்வொன்றையும்பற்பலவிதங்களாலறிவிக்கும் நான்கு வேதங்களிலும், நியாயயுக்தமாயும்சித்தாந்த முடிவாயுமுள்ள பிரம்ம சூத்திர வாக்கியங்களினாலும், அநேகவிதங்களாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. (ரு)

𑌮𑌹𑌾𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌯𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑍇𑌵 𑌚 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌦𑌶𑍈𑌕𑌂 𑌚 𑌪𑌞𑍍𑌚 𑌚𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍋𑌚𑌰𑌾𑌃 ॥ கூ ॥

𑌇𑌚𑍍𑌛𑌾 𑌦𑍍𑌵𑍇𑌷𑌃 𑌸𑍁𑌖𑌂 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌸𑌙𑍍𑌘𑌾𑌤𑌶𑍍𑌚𑍇𑌤𑌨𑌾 𑌧𑍃𑌤𑌿𑌃 ।
𑌏𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌸𑌮𑌾𑌸𑍇𑌨 𑌸𑌵𑌿𑌕𑌾𑌰𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ॥ எ ॥

(ப-ம்.) மஹாபூதாநி-பஞ்சபூதங்களும், அஹங்காரஃ - அஹங்காரதத்துவமும், புத்திஃ புத்தியும், அவ்யக்தமேவச-மூலப்பிரகிருதியும், இந்த்ரியாணி-இந்திரியங்கள், தசைகஞ்ச-பதினொன்றும், இந்த்ரியகோசராஃ-இந்திரியங்களுக்கு விஷயமான, பஞ்சச-ஐந்தும்,இச்சா-இச்சையும், த்வேஷஃ-துவேஷமும், ஸுகம்-சுகமும், துஃகம்-துன்பமும் என்று, ஸங்காதஃ-ஸமுதாயமாய்க்கொண்டு, சேதநத்ருதிஃ-பிராணிகளுக்கு ஆதாரமாயிருக்கும்; ஏதத்-இந்த, க்ஷேத்ரம்-க்ஷேத்திரமானது, ஸவிகாரம் - விகாரங்களுடன்கூட, ஸமாஸேந-சுருக்கமாய், உதாஹ்ருதம்-சொல்லப்பட்டது. (கூ-எ)

(தா-ம்.) பிருதிவி, அப்பு, தேஜஸ், வாய்வு, ஆகாசமென்னும் பஞ்சபூதங்கள், அகங்காரம், புத்தி, பிரகிருதி, கர்மேந்திரியமைந்து, ஞானேந்திரியமைந்து, மனமொன்றுஆக பதினொன்று இந்திரியங்கள், சப்த, ஸ்பர்ச,ரூப, ரஸ, கந்தமென்னும் ஐந்து இந்திரியார்த்தங்கள், இச்சை, துவேஷம், சுகம், துக்கம். ஜீவான்மாவுக்கு ஆதார

மான் ஸங்காதமென்னும் மகாபூதங்கள் முதலியவைகளுடைய சேர்க்கை, இதுகளை பரிணாமத்துடன் க்ஷேத்திரமென்று சங்கிரஹமாகக் கூறப்பட்டிருக்கிறது. (௬-௭)

அமாநித்வமதம்பித்வமஹிம்ஸா க்ஷாந்திரார்ஜவம்|
ஆசார்யோபாஸநம் ஶௌசம் ஸ்தைர்யமாத்மவிநிக்ரஹ:||
இந்த்ரியார்தேஷு வைராக்யமநஹங்கார ஏவ ச|
ஜந்மம்ருத்யுஜராவ்யாதிது:கதோஷாநுதர்ஶநம்|| ௯||
அஸக்திரநபிஷ்வங்க: புத்ரதாரக்ருஹாதிஷு|
நித்யம் ச ஸமசித்தத்வமிஷ்டாநிஷ்டோபபத்திஷு|| ௧௦||
மயி சாநந்யயோகேந பக்திரவ்யபிசாரிணீ|
விவிக்ததேஶஸேவித்வமரதிர்ஜநஸம்ஸதி|| ௧௧||
அத்யாத்மஜ்ஞாநநித்யத்வம் தத்த்வஜ்ஞாநார்ததர்ஶநம்|
ஏதஜ்ஜ்ஞாநமிதி ப்ரோக்தமஜ்ஞாநம் யததோऽந்யதா|| ௧௨||

(ப-ம்.) அமாநித்வம்-பெரியோர்களை அவமதிக்காமின்மை அதம்பித்வம் - டம்பமின்மை, அஹிம்ஸா - ஹிம்ஸியாதொழிகை, க்ஷாந்தி:-பொறுமை, ஆர்ஜவம்-நேர்மை, ஆசார்ய உபாஸநம்-ஆசாரியனைகுறித்து நமஸ்காரம், சௌசம்-அந்தஜ்ஞானத்துக்கும் அதின் சாதநத்துக்கும் தகுந்த மநோவாக்காயங்களுண்டாகை, ஸ்தைர்யம்-நிலையுடைமை, ஆத்மவிநிக்ரஹ:-மநோநிக்ரஹம், இந்த்ரிய அர்த்தேஷு-புலன்விஷயங்களில், வைராக்யம்-விரக்தி, அநஹங்கார: ஏவ ச-ஆங்காரமின்மை, ஜந்மம்ருத்யுஜராவ்யாதி துக்கதோஷ அநுதர்சநம்-பிறப்புஇறப்பு மூப்புநோய்துன்பம் தோஷம் இவைகளை தெரிந்துக்கொள்கை, அஸக்தி:-ஆத்மாவைப்பார்க்கிலும் அந்நியமானவைகளில் ஸங்கமில்லாதிருத்தல், புத்ரதாரக்ருஹாதிஷு - பிள்ளை பெண்டீர் இல்லமுதலியவற்றில், அநபிஷ்வங்க:-மிகுந்தபற்றின்மை இஷ்டாநிஷ்டஉபபத்திஷு-இஷ்டாநிஷ்டங்கள் சேர்ந்தபோது, நித்யம் ச-எப்போதும், ஸமசித்தத்வம்-ஒருமனமாயிருக்கை, மயி ச-என்னிடத்தில், அநந்யயோகேந-இதரசம்பந்தமில்லாதிருக்கும்படி, அவ்யபிசாரிணீ-இடைவிடாத, பக்தி:-பக்தி, விவிக்ததேச ஸேவித்வம்-நிர்ஜநதேசத்தில்வாஸம், ஜநஸம்ஸதி-ஜனக்கூட்டத்தில், அரதி:-ஆதரமின்மை, அத்யாத்மஜ்ஞாநநித்யத்வம் - ஆத்மஞானத்தோடு எப்பொழுதுங் கூடியிருக்கை, தத்வஜ்ஞாநார்த்தசிந்தநம்-தத்துவ ஞா

ஞார்த்தமான சிந்தை ஆகிய, ஏதத்-இது, ஜ்ஞாநம்-ஆத்மஜ்ஞாநஸாதநம், இதி-என்று, ப்ரோக்தம்-சொல்லப்பட்டது, அத:-ஜ்ஞாநத்தைக்காட்டிலும், அந்யதா-வேறுபடியாய், யத்-எது இருக்கிறதோ தத்-அது, அஜ்ஞாநம்-அஜ்ஞானத்திற்குவிரோதமானது. (அ-மு-௧௨)

(தா-ம்.) கெர்வமின்றியிருத்தல், டம்பமில்லாமலிருத்தல், அஹிம்ஸைபொறுமை, சத்தியம், குருபக்தி, மனோவாக்காயசுத்தி, சாஸ்திரார்த்தப்படி ஸ்திரமாகநிற்றல், மனக்கட்டு, சப்த ஸ்பர்ச, ரூப ரச, கந்தங்களென்னும் இந்திரியார்த்தங்களில் வைராக்கியமுண்டாகுதல், சரீரத்தை ஆன்மாவாகவெண்ணாதிருத்தல், பிறப்பு, இறப்பு கிழத்தனம், வியாதி, துக்கம், இதுகள் தேகத்தினதுதோஷமென்றாலோசித்தல், ஆத்மாவுக்கந்நிய வஸ்துகளிடத்தில் மனப்பெருக்கையொழித்தல், புத்திரன், களத்திரம், வீடுமுதலானவற்றி லபிமானமின்றியிருத்தல், இஷ்டாநிஷ்டங்களி லெப்காலும் மனம்மாறாமலிருத்தல், என்னிடத்திற் பயனை விரும்பாமல் பக்திபண்ணுதல், நிர்ஜனப்பிரதேசத்தில்வசித்தல், ஜனஸமூகங்களிலன்பற்றல் ஆன்மஞானத்தில் ஸ்திரத்வம், தத்துவஞானபோதியான சாஸ்திரார்த்தங்களைவிசாரித்தல், இதுகளே தன் ஆத்மசாதன ஞானமென்று கூறப்பட்டிருக்கிறது. இதற்குவேறுபாடானதெல்லாம் அஞ்ஞானமென்றறிக. ஸ௦. அதம் பித்வம்-தன்னுடையதர்மத்தைபிரகாசிப்பது. (அ-௧௨)

𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌯𑌤𑍍𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾𑌽𑌮𑍃𑌤𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇।
𑌅𑌨𑌾𑌦𑌿𑌮𑌤𑍍𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌨 𑌸𑌤𑍍𑌤𑌨𑍍𑌨𑌾𑌸𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇॥ ௧௩॥

(ப-ம்.) ஜ்ஞேயம்-அறியவேண்டுவது, யத்-எதுவோ, தத்-அதை, ப்ரவக்ஷ்யாமி-சொல்லுகிறேன், யத்-எதை, ஜ்ஞாத்வா-அறிந்து, அம்ருதம்-மோக்ஷத்தை, அச்நுதே-அடைவனோ, அநாதி-அநாதியாய், மத்பரம்-என்பரமான, தத்-அது:—(பிரத்யகாத்மா), ப்ரம்ஹ-க்ஷேத்ரஜ்ஞாநத்மமான ஜீவவஸ்து, (தத்)-அது, ஸத்-ஸத்(என்றுவது) அஸத்-அஸத் என்றுவது, நஉச்யதே-சொல்லப்படுகிறதில்லை. (௧௩)

(தா-ம்.) எதையறிந்தபின் ஜனனம் மரணம். கிழத்தனமுதலிய பிரகிருதி தர்மமில்லாததாயும், அம்ருதஸ்வரூபமாயுமுள்ள ஆத்மா லபிக்கின்றதோ அப்படிப்பட்ட ஜீவாத்மஸ்வரூபத்தை யுந்தனுக்குரைக்கிறேன். அதற்காதியில்லை. என்தனையே முக்கியமாயுடையது அதுபெரிது, ஆதிகாரியமெனவும், காரணமெனவுங்கூறப்படா. (

𑌸𑌰𑍍𑌵𑌤𑌃𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑌂 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌤𑍋𑌽𑌕𑍍𑌷𑌿𑌶𑌿𑌰𑍋𑌮𑍁𑌖𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌤𑌃𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌮𑌲𑍍𑌲𑍋𑌕𑍇 𑌸𑌰𑍍𑌵𑌮𑌾𑌵𑍃𑌤𑍍𑌯 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ॥ ௧௪ ॥

(ப-ம்) தத் - அந்தபரிசுத்தமான ஆத்மஸ்வரூபம், ஸர்வத꞉-எல்லாவற்றிலும், பாணிபாதம்-கைகால்களுடையது, ஸர்வத꞉ - எல்லாவற்றிலும், அக்ஷிசிரோமுகம் - கண்தலைமுக (முடையாது), ஸர்வத꞉ - எல்லாவற்றிலும், ஶ்ருதிமத் - காதுடையது, லோகே - உலகத்தில், ஸர்வம - எல்லாவற்றையும், ஆவ்ருத்ய- சூழ்ந்துகொண்டு, திஷ்டதி - இருக்கிறது. (௧௪)

(தா-ப்) நான்கு பக்கங்களிலும் கால் கை யுடையது, எல்லா திக்குகளிலும் கண், சிரசு, முகம், இவைகளையுடையது, நான்குபக்கங்களிலும் செவியுண்டாகி இந்த உலகத்தில் ஸமஸ்தத்திலும் வியாபித்திருக்கிறது "என்பதால் பிரகிருதிசம்பந்தமற்ற ஆத்மஸ்வரூபம் பகவத் ஸாயுஜ்யத்தை யடைந்து அகண்டமாயும், ஸர்வவியாபியாயும், ஸர்வஞ்ஞத்வமாயு மிருக்கிறதென்று கருத்து." (௧௪)

𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍁𑌣𑌾𑌭𑌾𑌸𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 ।
𑌅𑌸𑌕𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍃𑌚𑍍𑌚𑍈𑌵 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌂 𑌗𑍁𑌣𑌭𑍋𑌕𑍍𑌤𑍃 𑌚 ॥ ௧௫ ॥
𑌬𑌹𑌿𑌰𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌚𑌰𑌂 𑌚𑌰𑌮𑍇𑌵 𑌚 ।
𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌤𑌦𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌦𑍂𑌰𑌸𑍍𑌥𑌂 𑌚𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑍇 𑌚 𑌤𑌤𑍍 ॥ ௧௬ ॥
𑌅𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌂 𑌚 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌮𑌿𑌵 𑌚 𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ।
𑌭𑍂𑌤𑌭𑌰𑍍𑌤𑍃 𑌚 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌗𑍍𑌰𑌸𑌿𑌷𑍍𑌣𑍁 𑌪𑍍𑌰𑌭𑌵𑌿𑌷𑍍𑌣𑍁 𑌚 ॥ ௧௭ ॥
𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌾𑌮𑌪𑌿 𑌤𑌜𑍍𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌸𑍍𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌗𑌮𑍍𑌯𑌂 𑌹𑍃𑌦𑌿 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌵𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌮𑍍 ॥ ௧௮ ॥

(ப-ம்) ஸர்வ இந்திரிய குணாபாஸம் - ஸகலமான இந்திரிய வியாபாரத்தாலும் பிரகாசிப்பது, ஸர்வ இந்திரிய விவர்ஜிதம் - ஸகல இந்திரியங்களையும் ஒழித்தது, அஸக்தம் - தேவாதிசரீரத்தைப்பற்றில்லாததும், ஸர்வப்ருத்சைவ - எல்லாவற்றையும் பரிப்பது, நிர்குணம் - குணஹீனமானது, குணபோக்த்ருச - குணங்களை யநுபவிக்கவல்லதுமாகிய பரிசுத்தமான ஆத்மதத்வம். பூதாநாம் - ப்ருதிவிமுதலான பூதங்களை, பஹி꞉ - வெளியும், அந்தச - உள்ளும் (இருக்கும்) அசரம் - ஸஞ்சரியாதது, சரம்ஏவச-ஸஞ்சரிக்குமதும், தத் - அது, ஸூக்ஷ்மத்வாத் - ஸூக்ஷ்மமாகையால, அவிஜ்ஞேயம்-அறியஸாத்தியப்படாதது, தூரஸ்த்தம்ச-தூரத்திலிருக்கும், அந்திகேச - ஸமீபத்திலும், தத் - அது (இருக்கும்). பூதேஷு-பிராணி

களில், ஸ்திரம் - இருக்கும் (ஆத்மாவானது), அவிபக்தம் - பிரிக்கப்படாததா யிருக்கச்செய்தே, விபக்தம்இவச - பிரிக்கப்பட்டதுபோலும், பூதபர்த்ரு - பூதங்களைப்பரிக்கின்றதாய், தத்-அது, ஜ்ஞேயம்-அறியத்தக்கது, க்ரஸிஷ்ணு - விழுங்குவதாயும், ப்ரபவிஷ்ணுச - உண்டாகுவதாயும் (அறியத்தக்கது). தத்-அது, ஜ்யோதிஷாம் அபி-ஜோதிகளுக்கெல்லாம், ஜ்யோதிஃ - சோதி, தமஸஃ-இருளுக்கு, பரம்-மேலென்று, உச்யதே - சொல்லப்படுகின்றது, ஜ்ஞாநம் - ஞானஸ்வரூபமாய், ஜ்ஞேயம் - அறியப்படுமது, ஜ்ஞாநகம்யம் - ஞான (ஸாதனத்தாலே அடையத்தக்கது), ஸர்வஸ்ய - எல்லாவற்றினுடைய,ஹ்ருதி - உள்ளத்திலும், விஷ்டிதம்-இருப்புற்றது. (கரு-கசு-கஎ-கஅ).

(தா-ம்) அந்தப் பரம்பொருளானது, ஸமஸ்த இந்திரியங்களுடைய வியாபாரங்களினால் விஷயங்களை கிரகிப்பதாயும், ஸர்வேந்திரியங்களி வில்லாததாயும, எந்ததேகத்திலும் ஸம்பந்தப்படாததாயும், எல்லாதேகத்தையும் பரிக்கிறதாயும், ஸத்துவ, ரஜஸ், தமோகுணங்களில்லாததாயும் அந்த முக்குணங்களை யனுபவிப்பதாயும், பிராணிகளுடைய வெளியிலும், உள்ளிலும் ஸ்தாவரமாயும், ஜங்கமமாயும், சூக்ஷ்மமாயு மிருப்பதா லறியக்கூடாததா யிருக்கிற அந்த பரப்ருமமானது "அஞ்ஞானிகளுக்கு" வெகுதூரமாயும், "ஞானிகளுக்கு" சமீபத்திலிருப்பதாயும், ஸ்தாவரஜங்கமங்களி லதுபிரியாததாயும், பிரிந்திருப்பதுபோற் றோற்றுவதாயும், பூதங்களை இரக்ஷிப்பதாயும், எல்லாவற்றையும், விழுங்குகிறதாயும், ஸமஸ்தத்தையுமுண்டுபண்ணுவதாயும், பிரகாசங்களுக்கு அஃது, பிரகாசத்தைத்தருகிறதாயும், அஞ்ஞானத்திற் கந்நியமாயும், ஞானவடிவாயும், அறியத்தக்கதாயும், அறிவிற்குப் புலப்படுவதாயும், அகிலப்பிராணிகளுடைய மனதிலும் வீற்றிருப்பதாயும் கூறப்படுகிறது. (௱௦) ஸர்வேந்திரியகுணபாயம் - இந்திரியமற்றது. (கரு-கசு-கஎ-கஅ).

இதி க்ஷேத்ரம் ததா ஜ்ஞாநம் ஜ்ஞேயம் சோக்தம் ஸமாஸத꞉ ।
மத்பக்த ஏதத்விஜ்ஞாய மத்பாவாயோபபத்யதே ॥ கக ॥

(ப-ம்) இதி - இந்தப்பிரகாரம், க்ஷேத்ரம் - க்ஷேத்திரமும், ததா-அப்படியே, ஜ்ஞாநம் - ஞானமும், ஜ்ஞேயம்ச - ஞேயமும், ஸமாஸதஃ - சுருக்கமாய், உக்தம்-சொல்லப்பட்டது, மத்பக்தஃ-எனதுபக்தனுனவன், ஏதத்-இதை, விஜ்ஞாய- அறிந்துகொண்டு, மத்பாவாய-எனதுசுபாவத்திற்கு, உபபத்யதே - தக்கவனுகிறுன். (கக)

(தா-ம்) இவ்வாறு க்ஷேத்திரமும், ஞானசாதனமும், ஞேயமான ஆத்மஸ்வரூபமும் சொல்லப்பட்டன. எந்தனிடத்தில் பக்தியுள்ளவன் இதையுணர்ந்து எந்தன் தன்மையை யடைவதற்குரியவனாகிறான். (ஶ௦) மத்பாவாய - மோக்ஷத்திற்கு. (௧௯)

ப்ரக்ருதிம் புருஷஞ்சைவ வித்த்யநாதீ உபாவபி |
விகாராம்ஶ்ச குணாம்ஶ்சைவ வித்தி ப்ரக்ருதிஸம்பவாந் || ௨௦ |

(ப-ம்) ப்ரக்ருதிம் - பிரகிருதியையும், புருஷம்ச - புருஷனையும், உபௌ அபி - இரண்டையும், அநாதீஏவ - ஆதியற்றவையென்று, வித்தி-அறி; விகாராம்ச-விகாரங்களையும், குணாம்ச்ச-குணங்களையும், ப்ரக்ருதிஸம்பவாந் - பிரகிருதியினின்று முண்டானவைகளாக, வித்தி-அறி. (௨௰)

(தா-ம்) பிரகிருதி, புருஷன் (என்றால் ஆன்மா) இந்த இரண்டும் அநாதியென்றுணர்க. இப்புருடனுக்கு இசைவு, துவேஷமுதலிய ஸம்ஸாரஹேதுக்களான விகாரங்களும், கெர்வமின்றிருத்தல் முதலியவைகளான மோக்ஷசாதன குணங்களும், பிரகிருதியினாலேயே சம்பவிக்கிறதென்றறிக. (௨௰)

கார்யகாரணகர்த்ருத்வே ஹேது: ப்ரக்ருதிருச்யதே |
புருஷ: ஸுகது:காநாம் போக்த்ருத்வே ஹேதுருச்யதே ||

(ப-ம்) ப்ரக்ருதி:-பிரகிருதியானது, கார்யகாரணகர்த்ருத்வே-காரியகாரணங்களின் கர்த்திருத்வத்தில், ஹேது:-ஏது(வென்று) உச்யதே - சொல்லப்படும்; ஸுகது:காநாம் - இன்பதுன்பங்களினது, போக்த்ருத்வே-புசிக்குந்திறத்தில், புருஷ:-புருஷன், ஹேது:-ஏது (வென்று), உச்யதே-சொல்லப்படும். (௨௧)

(தா-ம்) தேகேந்திரியாதிகளை யுண்டுபண்ணுகிற விஷயத்தில்மாயை காரணமாகச் சொல்லப்படுகிறது பிரகிருதியுடன் சம்பந்தப்பட்ட ஜீவன் இன்பதுன்பங்களை யனுபவிப்பதில் காரணமாகச் சொல்லப்படுகிறான். (௨௧)

புருஷ: ப்ரக்ருதிஸ்தோ ஹி புங்க்தே ப்ரக்ருதிஜாந் குணாந் |
காரணம் குணஸங்கோஸ்ய ஸதஸத்யோநிஜந்மஸு || ௨௨ ||

(ப-ம்) புருஷ:-புருஷன், ப்ரக்ருதிஸ்த:-பிரகிருதியிலிருந்தவனாய், ப்ரக்ருதிஜாந் - பிரகிருதியிலுண்டான, குணாந் - குணங்களை,

புங்தே ஹி-அநுபவிக்கிறானன்றோ? அஸ்ய-இவனுக்கு, குணஸங்க:-குணங்களோடு ஸம்பந்தம், ஸதஸத்யோநி ஜந்மஸு - நன்றுந்தீது மான யோனிப்பிறவிகளில், காரணம்-காரணம். (உஉ)

(தா-ம்) புருடன் பிரகிருதிவிஷயத்திற் சம்பந்தப்பட்டு அப்பிரகிருதிகுண விசேடத்தாற்சம்பவித்த இன்பதுன்பங்களை யனுபவிக்கிறான். புருடனுக்கு ஸத்துவ ரஜஸ்தமோ குணமயமான இன்பதுன்ப புண்யபாப முதலானவற்றில் ஆஸக்தியும், நல்லயோனியிலும், கெட்டயோனியிலும் ஜனிப்பதற்குக் காரணமுமாகும். (உஉ)

உபத்ரஷ்டாநுமந்தா ச பர்த்தா போக்தா மஹேச்வர:।
பரமாத்மேதி சாப்யுக்தோ தேஹேஸ்மிந் புருஷ: பர: ॥

(ப-ம்) அஸ்மிந்-இந்த, தேஹே-தேகத்தில், (ஸ்திதம்)-இருக்கும் பர:-சிரேஷ்டனான, புருஷ:-புருஷன், உபத்ரஷ்டா-ஸமீபத்திலிருந்துபார்ப்பவன்; அநுமந்தா-அங்கீகரிப்பவன்; பர்த்தா - போஷிப்பவன்; போக்தா-அனுபவிப்பவன்; மஹேச்வர: - மஹேசுவரன்; பரமாத்மா-பரமாத்துமா; இதிசாபி-என்றும், உக்தம்-சொல்லப்படுவன்.

(தா-ம்) இந்த புருஷன் சரீரத்தைப் பார்ப்பவனும், அந்தந்த தொழில்களிற் பிரவேசிக்கச் சம்மதித்தவனும், தேகத்தை பரிப்பவனும், இந்த துன்பத்தை யனுபவிப்பவனுமாயிருக்கிறான். இச்சரீரத்தில் தேகவிலக்ஷணனை இப்புருடன் முக்கிய நியாமகனும், பரமாத்மாவாகவும் கூறப்படுகிறான். (உ௩)

ய ஏவம் வேத்தி புருஷம் ப்ரக்ருதிம் ச குணை: ஸஹ।
ஸர்வதா வர்த்தமாநோபி ந ஸ பூயோபிஜாயதே॥ உ௪॥

(ப-ம்) ஏநம்-இந்த, புருஷம்-புருஷனையும், ப்ராக்ருதிம்ச-பிரகிருதியையும், குணை:ஸஹ-குணங்களுடன்கூட, ய:-எவன், வேத்தி-அறிகிறானோ, ஸ:-அவன், ஸர்வதா - எல்லாவிதங்களிலும், வர்தமாந:அபி - இருந்தபோதிலும், பூய:-மறுபடி, ந அபிஜாயதே-பிறக்கமாட்டான். (உ௪)

(தா-ம்) எவனிவ்வண்ணம் இப்புருடனையும், பிரகிருதியையும், அதனதுகுணத்துட னறிந்துகொள்கிறானோ, அவன் எந்தப் பிரகாரம்நடந்தபோதிலும் மீண்டும் இக்கன்மபூமியிற் பிறவான். (உ௪)

த்யாநேநாத்மநி பஶ்யந்தி கேசிதாத்மாநமாத்மநா।
அந்யே ஸாங்க்யேந யோகேந கர்மயோகேந சாபரே ॥

(ப-ம்) கேசித்-சிலர், த்யாநேந-தியானத்தாலே, ஆத்மநி சரீரத்தில், ஆத்மநா-மனதினால், ஆத்மாநம்-ஆத்மாவை, பச்யந்தி-பார்க்கின்றனர், அந்யே ச-பின்னுஞ்சிலர், ஸாங்க்யேந யோகேந-ஞானயோகத்தாலே, பச்யந்தி-பார்க்கின்றனர், அபரே ச-பின்னுஞ்சிலர், கர்மயோகேந-கருமயோகத்தாலே (பார்க்கிறார்கள்). (௨௫)

(தா-ம்) யோகத்திற் தேற்சியடைந்த சிலர், தேகத்திலுள்ள ஆன்மாவை மனதினாலே தியானித்து தரிசிக்கின்றனர்கள், யோகசமாப்தியடைந்த வேறுசிலர், ஆன்மாவினிடத்து மனதிற்குச் சம்பந்தமுண்டாகும்படியான ஞானயோகத்தால், தரிசிக்கின்றனர்கள். ஆன்மா ஞானயோகத்தி லதிகாரமற்றவர்களும், இருந்தும் இன்பத்துக்குறிய வுபாயத்தைக் கருதுகிறமற்றுஞ்சிலர், ஞானகர்ப்பமான கர்மயோக நிட்டையாற்கண்டு களிக்கின்றனர்கள். (௨௫)

அந்யே த்வேவமஜாநந்த꞉ ச்ருத்வாந்யேப்ய உபாஸதே ।
தே(அ)பி சாதிதரந்த்யேவ ம்ருத்யும் ச்ருதிபராயணா꞉ ॥ ௨௬ ॥

(ப-ம்) அந்யே து-மிகுந்தவர்களோ, ஏவம் - இப்படி, அஜாநந்த꞉-அறியாதவர்களாய், அந்யேப்ய꞉-பிறரிடத்தினின்றும், ச்ருத்வா-கேட்டு, உபாஸதே-உபாஸிக்கின்றனர்; ச்ருதிபராயணா꞉-கேள்வியில் ஆஸக்தரான, தே(அ)பி ச-அவர்களும், ம்ருத்யும்-மிருத்தியுவை, அதிதரந்த்யேவ-தாண்டுகின்றார்களே. (௨௬)

(தா-ம்) சர்வயோகாதிகாரமில்லாத மற்றுஞ்சிலர், வேறு ஞானிகளாலுணரப்பெற்று பிரமத்தையுபாசிக்கின்றனர்கள். இதன் றிசிரவணஞ் செய்கிறவர்களும், அவர்களை ஆச்ரயித்தவர்களும் சமசாரபந்தத்தை யதிக்கிரமிக்கின்றார்கள். (௨௬)

யாவத்ஸஞ்ஜாயதே கிஞ்சித் ஸத்த்வம் ஸ்தாவரஜங்கமம் ।
க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞஸம்யோகாத் தத்வித்தி பரதர்ஷப ॥ ௨௭ ॥

(ப-ம்) ஹே பரதர்ஷப-ஓ பரதரிஷப! ஸ்தாவரஜங்கமம்-தாவரஜங்கமரூபமாய், யாவத்கிஞ்சித்-யாதேனும் சிறிது, ஸத்வம்-பிராணியானது, ஸஞ்ஜாயதே-(எதெது) உண்டாகின்றதோ, தத் - அது, க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞஸம்யோகாத்-க்ஷேத்திரக்ஷேத்திரஜ்ஞசேர்க்கையால், வித்தி-(உண்டானதாய்) அறி. (௨௭)

(தா-ம்) ஓ அர்ஜ்ஜுனா! எதுவரையிலும் ஸ்தாவரரூபமாயாவது ஜங்கமரூபமாயாவது ஓர் பொருளுதிக்கின்றதோ, அதுவரையி

லும் சரீரம், ஆன்மா, இவைகளுடைய சேர்க்கையினாலேயே உதிக்கின்றதென்றறிக. (உஎ)

ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேச்வரம் |
விநச்யத்ஸ்வவிநச்யந்தம் ய: பச்யதி ஸ பச்யதி || உஅ ||

(ப-ம்) ஸர்வேஷு-பூதேஷு - எல்லாபூதங்களிலும், பரமேச்வரம்-பரமேசுவரனாய், திஷ்டந்தம்-இருக்கு(மாத்மாவை), ஸமம்-ஸமானனென்றும், விநச்யத்ஸு-நசிக்கும்பொழுது, அவிநச்யந்தம்-நசியாமலிருப்பவனென்றும், ய:-எவன், பச்யதி-பார்க்கிறானோ, ஸ:-அவன், பச்யதி-பார்க்கிறான். (க)

(தா-ம்) எல்லாப்பிராணிகளிடத்திலும் பேதபுத்தியின்றி தேகம், இந்திரியம், மனமுதலானவைகளுக்குப் பிரதானியாமகனும், த்ருசியஜால முற்றுமழிந்தாலும், தான் அழிவற்றவனுமுள்ள பரமாத்மாவை எவன் காண்கிறானோ, அவன்தான் ஞானியாகிறான். ()

ஸமம் பச்யந்ஹி ஸர்வத்ர ஸமவஸ்திதமீச்வரம் |
ந ஹிநஸ்த்யாத்மநாத்மாநம் ததோ யாதி பராம் கதிம் || உகூ ||

(ப-ம்) ஸர்வத்ர-எங்கும்; ஸமவஸ்திதம்-இருக்கும், ஈச்வரம்-ஈசுவரனை(ஆத்மாவை), ஸமம்-ஸமமாக, பச்யந் - பார்ப்பவன், ஆத்மநா-மனதால், ஆத்மாநம்-ஆத்மாவை, நஹிநஸ்தி-ரக்ஷிக்கிறான்; தத:-அதனால், பராம்கதிம்-பரமகதியை, யாதி-அடைகின்றான். (உகூ)

(தா-ம்) ஸமஸ்த சரீரத்திலுமுள்ள ஆன்மாவைச்சமதிருஷ்டியாய்ப் பார்ப்போன் தன்மனதினால் தனது ஆன்மாவை ஹிம்ஸிக்கான்; "என்பதால் இரக்ஷிப்பான், பின்பு முக்கியமாயடையவேண்டிய சுத்தாத்ம ஸ்வரூபமென்னும் பரகதியைப்பெறுகிறான். (உகூ)

ப்ரக்ருத்யைவ ச கர்மாணி க்ரியமாணாநி ஸர்வச: |
ய: பச்யதி ததாத்மாநமகர்தாரம் ஸ பச்யதி || ௩0 ||

(ப-ம்) கர்மாணி-கருமங்கள், ஸர்வச:-எல்லாம், ப்ரக்ருத்யாஏவ பிரகிருதியாலேயே, க்ரியமாணாநி - செய்யப்படுவதாய், ய:-எவன், பச்யதி-பார்க்கிறானோ, ததா-அப்படியே, ஆத்மாநம்-ஆத்மாவை, அகர்தாரம்ச-கர்த்தாவல்லவென்றும் (பார்க்கிறானோ), ஸ:-அவன், பச்யதி-பார்க்கிறான். (௩0)

(தா-ம்) எவன் யெல்லாநதொழில்களையும் பிரகிருதியாற் செய்

யப்படுகின்றதெனவும், ஆன்மா கர்த்தனன்றெனவு முணருகின்றானோ, அவனே ஆன்மஸ்வரூபத்தை யறிகிறான். (௩௰)

யதா பூதப்ருதக்பாவமேகஸ்தமனுபஶ்யதி |

தத ஏவ ச விஸ்தாரம் ப்ரஹ்ம ஸம்பத்யதே ததா || ௩௧ ||

(ப-ம்) யதா-எப்பொழுது, பூதப்ருதக்பாவம்-பூதங்களின்வேற்றுமையை, ஏகஸ்த்தம்-ஒன்றிலிருப்பதாகவும், தத꞉ஏவச-அதினின்றுமே, விஸ்தாரம்-விஸ்தரிப்பதாகவும், அநுபச்யதி-பார்க்கிறானோ, ததா-அப்பொழுது, ப்ரம்ஹ - பிரம்மத்தை, ஸம்பத்யதே - அடைகின்றான். (௩௧)

(தா-ம்.) எவன் வஸ்துபேதங்களை ஒரு வஸ்துவினிடத்தில் "பிரகிருதியினிடத்தில்" இருப்பதாய்ப் பார்க்கின்றானோ, அப்பிரகிருதியினிடத்திலேயே அளவற்றப்பிரபஞ்ச விஸ்தீரணத்தைக் காண்கின்றானோ, அவன் ஆன்மாவை யடைகின்றான்! (௩௧)

அநாதித்வாந்நிர்குணத்வாத்பரமாத்மாயமவ்யய꞉ |

ஶரீரஸ்தோऽபி கௌந்தேய ந கரோதி ந லிப்யதே || ௩௨ ||

(ப-ம்) ஹே கௌந்தேய-ஓ குந்திபுத்திர, அயம்-இந்த, பரமாத்மா-பரமாத்துமா, சரீரஸ்த꞉அபி-சரீரத்திலிருந்தாலும், அநாதித்வாத்-ஆரம்பிக்கப்படாமையால், அவ்யய꞉-நாசமற்றவன்; நிர்குணத்வாத்-குணஹீனனானகையாலே, நகரோதி-செய்கிறதில்லை, நலிப்யதே ஒட்டப்படுகிறதில்லை. (௩௨)

(தா-ம்) ஓ அர்ஜுனா! இந்த முக்கியமான ஆத்மா ஆதியல்லாததா லழிவில்லாதது ஸத்துவரஜஸ் தமோகுணங்களில்லாமையால் சரீரத்திலிருந்தும் தான் ஒன்றையும் செய்யவில்லை ஆதலால் ஆன்மா சரீரஸ்வபாவத்தால் மறைக்கப்படாது. (௩௨)

யதா ஸர்வகதம் ஸௌக்ஷ்ம்யாதாகாஶம் நோபலிப்யதே |

ஸர்வத்ராவஸ்திதோ தேஹே ததாத்மா நோபலிப்யதே ||

(ப-ம்) எப்படி, ஆகாசம்-ஆகாயமானது, ஸர்வகதம்அபி - எங்கும்வியாபித்திருந்தபோதிலும், ஸௌக்ஷ்ம்யாத் - சூக்ஷ்மமாயிருக்கையாலே, நஉபலிப்யதே-ஒட்டுகிறதில்லையோ, ததா-அப்படி, ஆத்மா-ஆத்மாவானது, ஸர்வத்ர-எல்லா, தேஹே-தேஹத்திலும், அவஸ்திதோபி-இருந்தாலும், நஉபலிப்யதே-ஒட்டுகிறதில்லை. (௩௩

(தா-ம்) எவ்வண்ணம் ஆகாயம் எங்கும் வியாபித்திருந்தும், சூட்சுமமாகவிருப்பதா விதரவஸ்துகளுடைய ஸ்வபாவத்தால் மறைக்கப்படாதோ, அவ்வண்ணம் ஆன்மாதேகமெங்கும் வியாபித்திருந்தாலும் தேகஸ்வபாவத்தால் மறைக்கப்படாது. (௩௩)

யதா ப்ரகாஶயத்யேக: க்ருத்ஸ்நம் லோகமிமம் ரவி:।
க்ஷேத்ரம் க்ஷேத்ரீ ததா க்ருத்ஸ்நம் ப்ரகாஶயதி பாரத॥ ௩௪॥

(ப-ம்) ஹேபாரத-ஓபரதவம்சத்தானே! ஏக:-ஒரு, ரவி:-சூரியன், இமம், இந்த, க்ருத்ஸ்நம்-எல்லா, லோகம் - உலகத்தையும், யதா-எப்படி, ப்ரகாசயதி-பிரகாசிப்பிக்கிறனோ, ததா-அப்படி, க்ஷேத்ரீ-ஆத்மாவானவன், க்ருத்ஸ்நம்-எல்லா, க்ஷேத்ரம-சரீரத்தையும், ப்ரகாசயதி-பிரகாசிப்பிக்கிறன். (௩௪)

(தா-ம்) ஓ பாரதா! எவ்வாறு ஒரு சூரியன் இவ்வுலகத்தையெல்லாம் பிரகாசப்படுத்துகிறனோ, அவவாறே இந்த ஆன்மா ஸமஸ்த சரீரத்தையும் பிரகாசப்படுத்துகிறது. (௩௪)

க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோரேவமந்தரம் ஜ்ஞானசக்ஷுஷா ।
பூதப்ரக்ருதிமோக்ஷம் ச யே விதுர்யாந்தி தே பரம்॥

(ப-ம்) ஏவம்-இப்படி, க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோ:-சரீரஆத்மாக்களின், அந்தரம்-விசேஷத்தையும், பூதப்ரக்ருதிமோக்ஷம்ச-பூதப்பிரகிருதிமோக்ஷத்தையும், ஜ்ஞாநசக்ஷுஷா-ஞானக்கண்ணல், யே-எவர்ள், விதுஃ-அறிவார்களோ, தே-அவர்கள், பரம்-மேலானதை, யாந்தி-அடைகின்றார்கள். (௩௫)

(தா-ம்) இவ்வண்ணம் தேகத்துக்கும், ஆன்மாவுக்குமுள்ளபேதங்களையும், பூதரூபமான பிரகுருதிமோக்ஷத்தையும், என்பதால்பிரகிருதியைவிலக்குவதற்குச் சாதனங்களான செளவமில்லாமைமுதலியகுணங்களை எவர்களறிபுகிறர்களோ, அவர்கள் ஆன்மாவையடைகிறர்கள். (௩௫)

ஸ்ரீகீதாஸா பக்தியோகமென்னும்
பதிமூன்றுவது அத்தியாயம் முற்றிற்று.

பதினான்காவது அத்தியாயம்.

𑌗𑍁𑌣𑌤𑍍𑌰𑌯𑌵𑌿𑌭𑌾𑌗𑌯𑍋𑌗𑌃.

ஸ்ரீகிருஷ்ண வாக்கியம்.

𑌪𑌰𑌂 𑌭𑍂𑌯𑌃 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌨𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑌰𑌾𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌿𑌤𑍋 𑌗𑌤𑌾𑌃 ॥ ௧ ॥

(ப-ம்.) ஜ்ஞாநாநாம்-ஞானங்களுள், உத்தமா-உத்தமமான, பரம்-மற்றொரு-ஜ்ஞாநம்-ஸத்வாதிகுணங்களைக்குறித்தஞ்ஞானத்தை, பூய:-மறுபடியும், ப்ரவக்ஷ்யாமி-சொல்லுகிறேன்; யத்-எதை, ஜ்ஞாத்வா-தெரிந்துகொண்டு, ஸர்வே-எல்லா, முநய:-முனிகளும், இத:-இந்தஸம்ஸாரமண்டலத்தைப்பார்க்கிலும், பராம்-மேலான, ஸித்திம்-ஸித்தியை, கதா:-அடைந்தார்களோ. (௧)

(தா-ர்.) ரிஷிகளானவருள், எந்த ஞானத்தையறிந்து இச்சம்சாரபந்தத்தில் நின்றும் சித்தியைப்பெற்றனர்களோ. அத்தகைய ஞானங்களுக்குட்சிறந்த வேறொரு ஞானத்தையுனக்கு மீண்டும் கூறுகின்றேன். (௧)

𑌇𑌦𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌮𑌮 𑌸𑌾𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌮𑌾𑌗𑌤𑌾𑌃 ।
𑌸𑌰𑍍𑌗𑍇𑌽𑌪𑌿 𑌨𑍋𑌪𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌲𑌯𑍇 𑌨 𑌵𑍍𑌯𑌥𑌨𑍍𑌤𑌿 𑌚 ॥ ௨ ॥

(ப-ம்.) இதம்-இந்த, ஜ்ஞாநம்-ஞானத்தை, உபாச்ரித்ய-ஆச்ரயித்து, மம-என்னுடைய, ஸாதர்ம்யம்-ஸமானத்தன்மையை, ஆகதா:-அடைந்தவர்கள், ஸர்கேபி-சிருஷ்டியிலும், நஉபஜாயந்தே-ஜநிக்கமாட்டார்கள், ப்ரளயே-பிரளயத்திலும், நவ்யதந்திச-ஸம்ஹரிக்கப்படமாட்டார்கள். (௨)

(தா-ர்) இவ்வறியஞானத்தை ஆச்ரயித்து எனக்குச்சமதையான தன்மையையடைகிறவர்கள் பிரபஞ்சசிருஷ்டியிற்பிறவார்கள் பிரளயகாலத்திலும் லயமடையார்கள். (௨)

𑌮𑌮 𑌯𑍋𑌨𑌿𑌰𑍍𑌮𑌹𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌗𑌰𑍍𑌭𑌂 𑌦𑌧𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ।
𑌸𑌂𑌭𑌵𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌤𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ॥ ௩ ॥

(ப-ம்.) யோநி:-(ஸர்வ)காரணமான, மம-என்னால், மஹத்ப்ரம்ஹ-பெரும்பிரம்மம் (எதுவோ), தஸ்மிந்-அதில், அஹம்-நான், கர்ப்பம்-கர்ப்பத்தை, ததாமி-வைக்கிறேன், தத:-அதனால், ஹே பார

த!-ஓ பாரத!, ஸர்வபூதாநாம்-எல்லாப்பிராணிகளுக்கும், ஸம்பவ:-பிறப்பு, பவதி-உண்டாகிறது. (௩.)

(தா-ம்) ஓ அர்ஜுநனே! எங்கும் வியாபித்திருக்கின்ற பிரகிருதியானது எந்தனுக்குகர்பத்தைவைக்கிற விடமாகவிருக்கிறது அதனிடத்தில் யான் கர்பத்தைவைக்கிறேன். அதனாற்றான் பிரமன்முதலிய சகலபிராணிகளுடைய வுற்பத்தியுமுண்டாகின்றது. (௩.)

ஸர்வயோநிஷு கௌந்தேய மூர்த்தய: ஸம்பவந்தி யா: |
தாஸாம் ப்ரஹ்ம மஹத்யோநிரஹம் பீஜப்ரத: பிதா || ௪ ||

(ப-ம்.) (ஹே) கௌந்தேய-ஓ குந்திபுத்திர, ஸர்வயோநிஷு-எல்லா யோனிகளிலும், யா:-எந்த, மூர்தய:-சரீரங்கள், ஸம்பவந்தி உண்டாகின்றனவோ, தாஸாம்-அவைகளுக்கு, ப்ரம்ஹ - பிரகிருதியானது, மஹத்-பெரிய, யோநி:-காரணம்; அஹம்-நான், பீஜப்ரத:-அவர்கள் கர்மாநுசாரமாகச் சேதநர்களைச்சேர்க்கிறவனாகிய, பிதா-தகப்பன். (௪)

(தா-ம்) ஓ அர்சுனனே! தேர், மனிதர்முதலிய நாலுசாதிகளிடத்தில் எங்கெங்கு சரீரங்களுண்டாகின்றதோ, அதுகளெல்லாவற்றிற்கும் மஹத்தான பிரகிருதியே காரணமாகிறது ஆதலால், யான், அவைகளுக்கு விதைபோடுகிற தந்தையாகின்றேன். (௪)

ஸத்த்வம் ரஜஸ்தம இதி குணா: ப்ரக்ருதிஸம்பவா: |
நிபத்நந்தி மஹாபாஹோ தேஹே தேஹிநமவ்யயம் || ௫ ||

(ப-ம்.) (ஹே) மஹாபாஹோ-ஓ பெருந்தோளாய், அவ்யயம்-அழிவற்ற, தேஹிநம்-ஆத்மாவை; தேஹே-சரீரத்தில், நிபத்நந்தி-(அவை) கட்டுப்படுத்துகின்றன. (௫)

(தா-ம்) ஓ மஹாபாஹோ! ஸத்துவ, ரஜஸ், தமஸ்என்கிறபிரகிருதிசம்பந்தமான முக்குணங்கள், சரீரத்திற்பற்றிய ஆன்மாவை, பிரகிருதிசம்மந்தமானதேவர், மனிதர். பசு, பக்ஷிமுதலிய சரீரசம்பந்தவசமா யநுசரிக்குங்கால் கட்டுகின்றது. (௫)

தத்ர ஸத்த்வம் நிர்மலத்வாத்ப்ரகாசகமநாமயம் |
ஸுகஸங்கேந பத்நாதி ஜ்ஞாநஸங்கேந சாநக || ௬ ||

(ப-ம்.) ஹே அநக-ஓ குற்றமற்றவனே, தத்ர-அவற்றுள், ஸத்வம்-ஸத்துவகுணமானது, நிர்மலத்வாத் - தெளிவாயிருக்கையால், ப்ரகாசகம்-பிரகாசத்தைத்தருமது; அநாமயம் - ஆரோக்கியத்தைச்

செய்வது, ஸுகஸங்கேந-ஸுகத்தோடு சேர்ப்பதினாலும், ஜ்ஞாநஸங்கேந-ஞானப்பற்றாலும், பத்நாதி-கட்டுகிறது. (௬)

(தா-ம்.) ஓ பாபமற்ற அர்ஜ்ஜுனனே! மேற்கூறிய ஸத்துவாதி முக்குணங்களுள் சத்துவகுணம் நிர்மலமாயும், பிரகாசமாயும், சாந்தமாயுமிருப்பதால், அஃது, இன்பத்திலும், ஞானத்திலும் ஆஸக்தியையுண்டுபண்ணி அவைகளை யநுபவிப்பதற்குச் சிறந்தயோனிகளில் ஜனிக்கும்படிசெய்து புருடனை நிர்பந்திக்கின்றது. (௬)

ரஜோ ராகாத்மகம் வித்தி த்ருஷ்ணாஸங்கஸமுத்பவம் |
தந்நிபத்நாதி கௌந்தேய கர்மஸங்கேந தேஹிநம் || ௭ ||

(ப-ம்.) ஹே கௌந்தேய-ஓ குந்திபுத்திர! ரஜ: - ரஜோகுணமானது, ராகாத்மகம்-ஸ்த்ரீபுருஷர்களுக்கு அந்யோந்யமிருக்கிறப்ரீதிக்குக்காரணமானதும், த்ருஷ்ணாஸங்கஸமுத்பவம்-திருஷ்ணையுடன் சேர்க்கைக்குக் காரணமுமென்று, வித்தி-அறி, தத் - அது, கர்மஸங்கேந-கருமப்பற்றால், தேஹிநம்-ஆத்மாவை, நிபத்நாதி - கட்டுகிறது. (௭)

(தா-ம்.) ஓ குந்திசுதனே! இரஜோகுணம் பெண்களிடத்தில் மோஹத்தைத்தரத்தக்க காமரூபமானது. சப்தாதிவிஷயங்களில் விருப்பங்கொள்வதற்கும், புத்திரமித்திராதிகளிடத்தில் விசேஷ அன்பை யுண்டுபண்ணுவதற்குக் காரணமாகவும், அவைகட்கு ஆதாரங்களான கர்மங்களிலாசையை கற்பித்து ஆன்மாவை பந்திக்கின்றது.

தமஸ்த்வஜ்ஞாநஜம் வித்தி மோஹநம் ஸர்வதேஹிநாம் |
ப்ரமாதாலஸ்யநித்ராபிஸ் தந்நிபத்நாதி பாரத || அ ||

(ப-ம்.) அஜ்ஞாநஜம்-அஞ்ஞானத்தாலுண்டான, தமஃது-தமோகுணமோ, ஸர்வதேஹிநாம் - எல்லாப் பிராணிகளுக்கும், மோஹநம்-மோஹகர(மென்று), வித்தி-அறி; தத்-அது, பாரத-ஓபாரத!, ப்ரமாதாலஸ்ய நித்ராபி:-பிரமாதம் ஆலஸ்யம் நித்திரை (இவைகளால்), நிபத்நாதி-கட்டுகின்றது. (அ)

(தா-ம்.) ஓ அர்ஜ்ஜுனா! தமோகுணம் அஞ்ஞானத்தாலுதிக்கின்றது. அது, அகிலப்பிராணிகளையும் விவேகமின்றிச் செய்வதற்குக்காரணமென்றுணர்க. இன்னும் அத்தமோகுணம், செய்யவேண்டிய கன்மத்தைவிட்டு வேறுகர்மத்தைச்செய்வதற்கு ஏதுவான அஜாக்கிரதையையும், சோம்பலையும், உறக்கத்தையுமுண்டுபண்ணி புருஷனை நிர்பந்திக்கும். (அ)

𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑍁𑌖𑍇 𑌸𑌞𑍍𑌜𑌯𑌤𑌿 𑌰𑌜𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌵𑍃𑌤𑍍𑌯 𑌤𑍁 𑌤𑌮𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑍇 𑌸𑌞𑍍𑌜𑌯𑌤𑍍𑌯𑍁𑌤 ॥ ௯॥

(ப-ம்.) ஹே பாரத-ஓ பாரத!, ஸத்வம்-ஸத்துவகுணமானது, ஸுகே-சுகத்தில், ஸஞ்ஜயதி - ஸங்கத்தையுண்டாக்குகின்றன, ரஜஃ-ரஜோகுணம், கர்மணி-கருமத்தில்; தமஃது-தமஸ்ஸோ, உத - மற்றபடி, ஜ்ஞாநம்-ஞானத்தை, ஆவ்ருத்ய-மறைத்து, ப்ரமாதே-விபரீதத்தில், ஸஞ்ஜயதி-ஸங்கத்தை யுண்டாகின்றது. (௯)

(தா-ம்.) ஓ பாரத! சத்துவகுணம், இன்பத்தால் புருடனை நிர்பந்திக்கின்றது. இரஜோகுணம், கன்மத்தால்பந்திக்கின்றது. தமோகுணம், ஞானத்திற்கு வேறுபாடான விபரீதஞானத்தை விளைவித்து துர்வியாபாரத்திற் பிரவேசிக்கச்செய்கிறது. (௯)

𑌰𑌜𑌸𑍍𑌤𑌮𑌶𑍍𑌚𑌾𑌭𑌿𑌭𑍂𑌯 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌰𑌜𑌸𑍍𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌤𑌮𑌶𑍍𑌚𑍈𑌵 𑌤𑌮𑌸𑍍𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌰𑌜𑌸𑍍𑌤𑌥𑌾 ॥ ௧௦॥

(ப-ம்.) (ஹே) பாரத-ஓ பாரதனே!, ரஜஃ - ரஜோகுணத்தையும், தமஃச-தமோகுணத்தையும், அபிபூய - திரஸ்கரித்து, ஸத்வம்-ஸத்துவகுணம், பவதி-தலையெடுக்கும்; ரஜஃ - ரஜஸையும், ஸத்வம்-ஸத்துவத்தையும்(அடக்கி) தமஃசஏவ-தமோகுணம் (தலையெடுக்கும்)ததா-அப்படி, தமஃ-தமஸ்ஸையும், ஸத்வம்-ஸத்துவத்தையும் (அடக்கி), ரஜஃ-ரஜோகுணம் (தலையெடுக்கும்). (௧௦)

(தா-ம்.) ஓ அர்ஜ்ஜுநா! ஸத்துவகுணம், இரஜோகுணத்தையும், தமோகுணத்தையும், திரஸ்கரித்துவிட்டு பிரகாசிக்கும். இரஜோகுணம், ஸத்துவ; தமோகுணங்களை யதிட்டித்து பிரகாசிக்கும் அவ்வாறேதான் தமோகுணமும், ஸத்துவ ரஜோகுணங்களை திரஸ்கரிக்கின்றது. (௧௦)

𑌸𑌰𑍍𑌵𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌷𑍁 𑌦𑍇𑌹𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶 𑌉𑌪𑌜𑌾𑌯𑌤𑍇 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌯𑌦𑌾 𑌤𑌦𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌤 ॥ ௧௧॥

(ப-ம்) அஸ்மிந் - இந்த, தேஹே - தேஹத்தில், ஸர்வத்வாரேஷு-எல்லாத்துவாரங்களிலும், ப்ரகாசே-வஸ்துக்களின் நிஜஸ்வரூபத்தைத்தெரிந்துக் கொள்ளுகிறவிஷயமாய், யதா - எப்பொழுது, ஜ்ஞாநம்-ஞானம், உபஜாயதே-உண்டாகின்றதோ, ததா - அப்பொழுது, ஸத்வம்-ஸத்துவகுணம், விவ்ருத்தம்-தலையெடுத்தது, இதிஉத-என்று, வித்யாத்-நினைக்கக்கடவன். (௧௧)

(தா-ம்.) இச்சரீரத்தினது கண், செவிமுதலிய விந்திரியரூபமானஞானமார்க்கங்களில் எப்பொழுது வஸ்துக்களுடைய நிஜஸ்வரூ

பத்தைத் தெறிவிக்கும்படியான தத்துவஞானமுண்டாகின்றதோ, அப்பொழுது சத்துவகுணமே விருத்தியடைந்திருக்கிறதென் றறிதல்வேண்டும். (௧௧)

லோப⁴꞉ ப்ரவ்ருத்திராரம்ப⁴꞉ கர்மணாமஶம꞉ ஸ்ப்ருஹா |
ரஜஸ்யேதானி ஜாயந்தே விவ்ருத்³தே⁴ ப⁴ரதர்ஷப⁴ || ௧௨ ||

(ப-ம்) ஹே பரதர்ஷப-ஓ பரதச்ரேஷ்டனே! ரஜஸி-ரஜோகுணமானது, விவ்ருத்தே-விருத்தியானபொழுது, லோப꞉-லோபம், ப்ரவ்ருத்தி꞉-பிரவிருத்தி, கர்மணாம்-கருமங்களுடைய, ஆரம்ப꞉-ஆரம்பம், அஶம꞉-இந்திரியங்கள் வெளியாமை, ஸ்ப்ருஹா-விஷயஇச்சை(இவை), ஜாயந்தே-உண்டாகின்றன. (௧௨)

(தா-ம்) ஓ அர்ஜுனா! உலோபம், என்றால் பொருள்செலவிடாமல் பத்திரப்படுத்துதல். வியாபாரம், "என்றால் பிரயோஜனமின்றிச் சஞ்சரித்தல்" பலத்தைக்கருதி கன்மத்தை ஆரம்பித்தல், அசாந்தி, என்றால் இந்திரியங்களுக்கு ஓய்வில்லாமலிருத்தல். பிருஹா, என்றால் சப்தாதிவிஷயங்களில் விருப்பம் இவைகள் இரஜோகுணம் விருத்தியடைந்தபொழுதுண்டாகும். (ஸா)ப்ரவ்ருத்தி-காரியங்களில்ப்ரவ்ருத்தி. (௧௨)

அப்ரகாஶோ(அ)ப்ரவ்ருத்திஶ்ச ப்ரமாதோ³ மோஹ ஏவ ச |
தமஸ்யேதானி ஜாயந்தே விவ்ருத்³தே⁴ குருநந்த³ன || ௧௩ ||

(ப-ம்) (ஹே) குருநந்தன-ஓ குருநந்தனு! அப்ரகாஶ꞉- அப்பிரகாசமும், அப்ரவ்ருத்திச-அப்பிரவர்த்தியும், ப்ரமாத꞉-தான் செய்யவேண்டியதைப்பார்க்கிலும் இதரமானவைகளில் ப்ரவர்த்திக்கச்செய்தல், மோஹஏவச-மயக்கமும், ஏதானி-இவை, தமஸி-தமோகுணம், விவ்ருத்தே-விருத்தியடைந்தபோது, ஜாயந்தே-உண்டாகும்.

(தா-ம்.) ஓ பார்த்தா! அப்பிரகாசம், "என்றால்; ஞானமுதிக்காமலிருத்தல்" ஆலச்யம், "என்றால் கர்மத்தை ஆரம்பிக்காமலிருத்தல்" பிரமாதம், "என்றால் அஜாக்கிரதை" மோஹம், "என்றால் விபரீதஞானம்" இவைகள் தமோகுணம் மேம்பட்டபோதுண்டாகும். (௧௩)

யதா³ ஸத்த்வே ப்ரவ்ருத்³தே⁴ து ப்ரலயம் யாதி தே³ஹப்⁴ருத் |
ததோ³த்தமவிதா³ம் லோகானமலான் ப்ரதிபத்³யதே || ௧௪ ||

(ப-ம்) யதா-எப்பொழுது, தேஹப்ருத்-மனிதன், ஸத்வே - ஸத்துவம், ப்ரவ்ருத்தேது - தலையெடுத்திருக்கும்பொழுது, ப்ரளயம்-

மரணத்தை, யாதி-அடைகின்றானோ; ததா - அப்பொழுது, உத்தம
விதாம்-உத்தமமறிந்தவர்களின், அமலாந் - நிர்மலமான, லோகாந்-
லோகங்களை, ப்ரதிபத்யதே-அடைகின்றான். (௧௪)

(தா-ம்.) எப்பொழுது புருடன் சத்துவகுணம் விருத்தியடை
யும்போது மரணமடையுகிறானோ, அப்பொழுதுதான் உத்தமமான
ஆத்மஸ்வரூபத்தையடைந்த ஞானியினது நிர்மலவம்சத்தில் ஜன்ம
மெடுக்கிறான். (௧௪)

𑌰𑌜𑌸𑌿𑌪𑍍𑌰𑌲𑌯𑌂𑌗𑌤𑍍𑌵𑌾𑌕𑌰𑍍𑌮𑌸𑌙𑍍𑌗𑌿𑌷𑍁𑌜𑌾𑌯𑌤𑍇।
𑌤𑌥𑌾𑌪𑍍𑌰𑌲𑍀𑌨𑌸𑍍𑌤𑌮𑌸𑌿𑌮𑍂𑌢𑌯𑍋𑌨𑌿𑌷𑍁𑌜𑌾𑌯𑌤𑍇॥ ௧௫॥

(ப-ம்.) ரஜஸி-ரஜோகுணத்தில், ப்ரளயம்-மரணம், கத்வா-அ
டைந்து, கர்மஸங்கிஷு-கருமஞ்செய்வோரிடத்தில், ஜாயதே பிறக்
கிறான், ததா-அப்படி, தமஸி-தமோகுணத்தில்,ப்ரலீநஃ-இறந்தவன்,
மூடயோநிஷு-மூடயோனிகளில், ஜாயதே-பிறக்கிறான். (௧௫)

(தா-ம்.) இரஜோகுணம் மேம்பட்டபோது மரணமடைந்தவன்
ஸ்வர்க்காதி போகங்களை விரும்பி பர்மத்தைச்செய்தவர்களுடைய கு
லத்தில் ஜனிக்கிறான். தமோகுணம் மேலிட்டபொழுது மரணமடை
ந்தவன் நாய், பன்றி, புழுகு முதலிய மூடயோனியிற்பிறக்கின்றான்.

𑌕𑌰𑍍𑌮𑌣𑌃𑌸𑍁𑌕𑍃𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑍁𑌃𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌂𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌂𑌫𑌲𑌮𑍍।
𑌰𑌜𑌸𑌸𑍍𑌤𑍁𑌫𑌲𑌂𑌦𑍁𑌃𑌖𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌂𑌤𑌮𑌸𑌃𑌫𑌲𑌮𑍍॥ ௧௬॥

(ப-ம்.) ஸுக்ருதஸ்ய - சுகிருதமான, கர்மணஃ-கருமத்துக்கு
ஸாத்விகம்-ஸாத்துவிகமும், நிர்மலம்-நிர்மலமுமான, பலம்-பலமாக,
ஆஹுஃ-சொல்வார்கள்; ரஜஸஃது-ரஜோகுணத்துக்கோ, துஃகம்-துக்
கம், பலம்-பயன்(என்பார்கள்); தமஸஃ-தமோகுணத்துக்கு, அஜ்ஞா
நம்-அக்ஞானம், பலம்-பலமாகச் சொல்லுவார்கள். (௧௬)

(தா-ம்.) சத்துவகுணத்தோடு பலத்தைக்கோராமல் பகவதா
ராதனரூபமாய்ச்செய்யப்படுகிற கன்மத்திற்குப்பயன் துக்கலேசமில்
லாத சுகமெனவும், இரஜோகுணத்துடன் செய்யப்படுகிற கர்மத்திற்
குப்பயன் துக்கமெனவும் தமோகுணத்துடன் செய்யப்படுகிறகர்ம
த்திற்குப்பயன் அஞ்ஞானமெனவும் கூறப்படும். (௧௬)

𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌸𑌂𑌜𑌾𑌯𑌤𑍇𑌜𑍍𑌞𑌾𑌨𑌂𑌰𑌜𑌸𑍋𑌲𑍋𑌭𑌏𑌵𑌚।
𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌮𑍋𑌹𑍌𑌤𑌮𑌸𑍋𑌭𑌵𑌤𑍋𑌽𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍇𑌵𑌚॥ ௧௭॥

(ப-ம்.) ஸத்வாத்-ஸத்துவகுணத்தால், ஜ்ஞாநம்-ஞானம், ஸஞ்ஜாயதே-பிறக்கும்; ரஜஸ:-ரஜோகுணத்தால், லோபஏவச - லோபமே, (ஸஞ்ஜாயதே)-பிறக்கும்; தமஸ:-தமஸால், ப்ரமாதமோஹௌ அநவதானமோஹங்கள், பவத:-உண்டாகின்றன; அஜ்ஞாநம்ஏவச-அக்ஞானமும் (உண்டாம்). (கஎ)

(தா-ம்.) சத்துவகுணத்தால் மெஞ்ஞான விளக்கமும், இரஜோகுணத்தால் ஸ்வர்க்காதிபோகங்களும், தமோகுணத்தால் மதிமயக்கமும், விபரீதஞானமும் அஜாக்கிறதையுமுண்டாகும். (கஎ)

ஊர்த்வம்கச்சந்தி ஸத்வஸ்தா மத்யே திஷ்டந்தி ராஜஸா:|
ஜகந்யகுணவ்ருத்திஸ்தா அதோகச்சந்தி தாமஸா:|| கஅ||

(ப-ம்.) ஸ்த்வஸ்த்தா:-ஸத்துவத்தினின்றவர், ஊர்த்வம்-ஸம்ஸார பந்தத்தைவிட்டு மேலேபோவார்கள், கச்சந்தி-போகிறார்கள், ராஜஸா:-ரஜஸிலின்றவர்கள், மத்யே-மத்யபோகத்தில் பிறந்தும் இறந்தும்திஷ்டந்தி-நிற்கிறார்கள்; ஜகந்யகுண வ்ருத்திஸ்தா:-இழிவானகுணத்தின் விருத்தியினிற்பவர்களான, தாமஸா:-தாமதர்கள், அதோகச்சந்தி-சண்டாளத்வத்தையும் திர்யகாதி ஜந்மத்தையும்அடைவார்கள். (கஅ)

(தா-ம்.) சத்துவகுண நிலைமையிலிருப்போர் மேன்மையடைகிறார்கள், "என்பதால் சம்சாரபந்தத்திலிருந்து மோக்ஷமடைகின்றார்கள்" இரஜோகுண நிலைமையிலிருப்போர் மத்தியத்திலிருக்கின்றனர்கள். தேவமனுஷ்யாதி ஜன்மங்களில் பிரவேசிக்கின்றனர்கள். தமோகுணநிலைமையிலிருப்போர்முறையே பரமநிக்ருஷ்டகுணங்களையும், கிரியைகளையும், அநுசரித்து அதோகதியை யடைகின்றனர் ஈனஜன்மத்தையடைகின்றனர்களென்று கருத்து. (கஅ)

நாந்யம் குணேப்ய: கர்த்தாரம் யதா த்ரஷ்டாநுபஶ்யதி|
குணேப்யஶ்ச பரம் வேத்தி மத்பாவம் ஸோதிகச்சதி|| ககூ||

(ப-ம்.) த்ரஷ்டா-பார்ப்பவன், குணேப்ய: - குணங்களைக்காட்டிலும், அந்யம்-வேறு; கர்த்தாரம்-கர்த்தாவை, யதா - எப்பொழுது, நஅநுபஶ்யதி-பார்க்கிறதில்லையோ, (கிம்)ச-பின்னும், குணேப்ய:-குணங்களைக்காட்டிலும், பரம்-மேலானவனை, வேத்தி-அறிகின்றானோ ஸ:-அவன், மத்பாவம்-என்னைநிகர்த்தவனுதலை; (ததா - அப்பொழுது), அதிகச்சதி-அடைகின்றான். (ககூ)

(தா-ம்.) ஞானமுடையோன் எப்பொழுது ஸத்துவராஜஸ்தமோகுணங்களைவிட வேறுகர்த்தனைபுணராது இக்குணங்களெல்லாவற்றிற்கும் விலக்ஷணமாய்ப் பிரகாசிக்கின்ற பரப்பிரம்மமென்னும்பரமாத்மனை உய்த்துணருகின்றானோ, அப்பொழுதுதான் என்தன்மையையடைகிறான். (கக)

குணாநேதாநதீத்ய த்ரீந் தேஹீ தேஹஸமுத்பவாந் |
ஜந்மம்ருத்யுஜராது:கைர்விமுக்தோऽம்ருதமச்நுதே || உ0 ||

(ப-ம்.) தேஹீ-தேகமெடுத்தவன், தேஹஸமுத்பவாந்-தேகத்திலுண்டான, ஏதாந்-இந்த, த்ரீந்-மூன்று, குணாந் - குணங்களையும், அதீத்ய-கடந்து, ஜந்மம்ருத்யுஜராது:கை: - பிறப்பு இறப்பு மூப்பு துன்பங்களினின்று, விமுக்த:-விடுபட்டவனாய், அம்ருதம்-அமுதத்தை, அச்நுதே-அடைகிறான். (உ0)

(தா-ம்) இந்த தேஹியான ஆத்மா, தேகத்திலுண்டான இம்முக்குணங்களென்னும் பிரகிருதியை அதிக்கிரமித்து என்றால் "இதற்கு விலக்ஷணமான சித்தாத்மஸ்வரூபத்தையறிந்து ஜனனம், மரணம், கிழத்தன்மை, துக்கமுதலிய துன்பத்தில் நின்றும் விடுபட்டவனாய் ஆத்மாநந்தாநுபவத்தையடைவான். (ஸ0) அம்ருதம் - என்னுடைய ஸ்வரூபமாயிருத்தலை. (உ0)

கைர்லிங்கைஸ்த்ரீந்குணாநேதாநதீதோ பவதி ப்ரபோ |
கிமாசார: கதம் சைதாம்ஸ்த்ரீந்குணாநதிவர்ததே || உக ||

(ப-ம்.) (ஹே) ப்ரபோ-ஓ பிரபுவே! ஏதாந்-இந்த, த்ரிகுணாந்-முக்குணங்களையும், அதீத:-கடந்தவன், கை:-எந்த, லிங்கை:-அடையாளங்களோடு, (வசிஷ்ட:)-கூடியவனாய், பவதி - ஆகிறான்? (கிமாசார:-எந்த ஆசாரமுடையவன்?) ஏதாந்-இந்த, த்ரீந்-மூன்று, குணாந்-குணங்களையும், கதம்ச-எப்படி, அதிவர்ததே-அதிக்ரமிக்கிறான். ()

(தா-ம்.) ஓ முகுந்தா! மேற்கூறிய முக்குணங்களையும் அதிக்கிரமித்தவனெத்தன்மயத்தனாகவிருப்பன்? அவனெத்தகையவாசாரமுடையன்? எவ்விதவுபாயத்தாற் புருடன் முக்குணங்களைக்கடந்திருப்பன்? (உக)

ப்ரகாசம் ச ப்ரவ்ருத்திம் ச மோஹமேவ ச பாண்டவ |
ந த்வேஷ்டி ஸம்ப்ரவ்ருத்தாநி ந நிவ்ருத்தாநி காங்க்ஷதி || உஉ ||

உதாஸீநவதாஸீநோ குணைர்யோ ந விசால்யதே |
குணா வர்த்தந்த இத்யேவ யோऽவதிஷ்டதி நேங்கதே || ௨௩ ||

ஸமது:கஸுக: ஸ்வஸ்த: ஸமலோஷ்டாஸ்மகாஞ்சந: |
துல்யப்ரியாப்ரியோ தீரஸ்துல்யநிந்தாத்மஸம்ஸ்துதி: || ௨௪ ||

மாநாவமாநயோஸ்துல்யஸ்துல்யோ மித்ராரிபக்ஷயோ: |
ஸர்வாரம்பபரித்யாகீ குணாதீத: ஸ உச்யதே || ௨௫ ||

(ப-ம்.) (ஹே) பாண்டவ-ஓ பாண்டுபுத்திர! ஸம்ப்ரவ்ருத்தாநி-பிரவர்த்திக்க, ப்ரகாசம் ச - பிரகாசத்தையும், ப்ரவ்ருத்திம் ச-பிரவிருத்தியையும், மோஹம் ஏவ ச - மோஹத்தையும், ந த்வேஷ்டி - பகைக்கமாட்டான், நிவ்ருத்தாநி-நிவிருத்திக்கப்பட்டவைகளை, ந காங்க்ஷதி - விரும்பமாட்டான், ய: - எவன், உதாஸீநவத் - உதாஸீனமாய், ஆஸீந: - இருந்து, குணை: - குணங்களால், ந விசால்யதே-சலிப்புறுனோ, ய:-எவன், குணா: ஏவ-குணங்களே, வர்த்தந்தே-இருக்கின்றன, இதி - என்று, அவதிஷ்டதி இருக்கிறனோ, (ஸ:) - அவன், ந இங்கதே - சலிக்கமாட்டான், ஸமது:கஸுக: - இன்பதுன்பங்கள் ஸமமாய், ஸ்வஸ்த: - ஸ்வஸ்தனாய், ஸமலோஷ்டாச்மகாஞ்சந: - மண்கட்டி கல் பொன் (இவை) ஸமமாய், துல்யப்ரியாப்ரிய: - பிரியமும் அப்பிரியமும் துல்யமாய், தீர: - ப்ரக்ருதியையும் ஆத்மாவையும் ஏற்படுத்துவதில் சதுரனும், துல்யநிந்தாத்மஸம்ஸ்துதி: - நிந்தையும் தன்னைத்துதிப்பதும் துல்யமாய், மாநாவமாநயோ: - மானவமானங்கள், துல்ய: - ஸமசித்தமுள்ளவனாய் மித்ராரிபக்ஷயோ: - மித்திரசத்ருபக்ஷங்களில், துல்ய:-துல்யமாய், ஸர்வாரம்பபரித்யாகீ-எல்லா ஆரம்பத்தையும் விட்டவன் (யாவன்) ஸ: - அவன், குணாதீத: - குணங்களைக்கடந்தவன், உச்யதே சொல்லப்படுவான். (௨௨-௨௩-௨௪-௨௫)

(தா-ம்.) ஓ பாண்டவா! தனக்கு விருப்பமில்லாத வேறுவஸ்துவினிடத்தில் பிரவர்த்திக்க ஸத்துவகுணத்தின் செழிப்பும், பிரகாசமென்னும் இரஜோகுணத்தின் வியாபாரமென்னும் தமோகுணத்தின் இஷ்ட மோஹ வியாபாரங்களடங்கினவனையும் விரும்பா. இஷ்டவஸ்துவினிடத்தில் பிரேமையிருப்பது மில்லாததும், ஆகிய இவைகளைக்கருதானெனக் கருத்துபெற்றும். எவன் நடுநிலைத்தீயிலுள்ளவனைப்போல் இராகத்துவேஷமின்றியும், ஸத்துவாதி முக்குணங்களாலும் பிடிக்கப்படவில்லையோ. இன்னும் எவன், அந்தகுணத்தின்

